

தமிழ்நாடு அரசு

பத்தாம் வகுப்பு

தமிழ்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

10th_Tamil_Unit 1.indd 1 29/02/2024 17:13:55

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – 2019
திருத்திய பதிப்பு – 2020, 2021, 2022, 2023, 2024

(புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in

10th_Tamil_Unit 1.indd 2 29/02/2024 17:13:56

முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்.

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

10th_Tamil_Unit 1.indd 3 29/02/2024 17:13:57

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!




10th_Tamil_Unit 1.indd 4 29/02/2024 17:13:57

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

10th_Tamil_Unit 1.indd 5 29/02/2024 17:13:58



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும் சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

10th_Tamil_Unit 1.indd 6 29/02/2024 17:14:02

உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை
இன்றைய இளம்தலைமுறைக்கு
அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவியாக இப்பாடநூல்.



பொருண்மைக்கு ஏற்ப
இயலின் தொடக்கத்தில்
கற்றல் நோக்கங்கள்...



ஒவ்வோர் இயலையும் ஆர்வத்துடன்
அணுக **உரைநடைஉலகம்,**
கவிதைப்பேழை, விரிவானம்,
கற்கண்டு
ஆகிய தலைப்புகளாக . . . . .



பாடப்பகுதிகளின்
கருத்தை விளக்க அரிய,
புதிய செய்திகளை
அறிந்து கொள்ளத்
தெரிந்து தெளிவோம்,
யார் இவர்? தெரியுமா? . . . .



அலைகடல் தாண்டி, மலை பல கடந்து,
எத்திசையிலும் பரவிய தமிழினத்தின்,
தமிழின் புகழ்மணப் பதிவுகளாக
எத்திசையும் புகழ் மணக்க...



காலத்தின் பாய்ச்சலுக்கு
ஈடுகொடுப்பனவாக
இணையவழி உரலிகள் . . .



தொன்று தொட்டு இன்று வரை நின்று
நிலவும் ஊர்கள், தொன்மைத் தமிழ்
நாகரிகத்தின் வேர்கள்! ...
முன்தோன்றிய மூத்தகுடியாக...

ஆளுமை மிக்க
ஆசிரியர்களுக்கும்
ஆற்றல் நிறை
மாணவர்களுக்கும்...



படிப்பின்
அகலமும் ஆழமும் தொடர
அறிவை விரிவு செய் . . .



பயின்ற பாடங்கள் குறித்துச்
சிந்திக்க, கற்றல்
செயல்பாடுகளாகக்
கற்பவை கற்றபின் . . .



இயலின் இறுதியில்
விழுமியப் பக்கமாக
நிற்க அதற்குத் தக. . .



உயர்சிந்தனைத் திறன்பெற,
படைப்பாக்கத்தின்வழி
வாழ்வைத் தன்னம்பிக்கையுடன்
எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க
மொழிவிளையாட்டு . . . .



இலக்கியச்சுவை உணர்ந்து
நுட்பங்களை உள்வாங்கி
மொழியை ஆற்றலுடன்
பயன்படுத்த
மொழியை ஆள்வோம் . . . .



மாணவர்தம்
அடைவை அளவிடத்
திறன் அறிவோம் . . . .

மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில,
கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்..... புதிய வடிவம், பொலிவான
உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்...

10th_Tamil_Unit 1.indd 7 29/02/2024 17:14:02

பொருளடக்கம்

வ.எண்	பொருண்மை/இயல்	பாடத்தலைப்புகள்	ப. எண்	மாதம்
1	மொழி	அன்னை மொழியே*	2	
		தமிழ்ச்சொல் வளம்	4	
	அமுதஊற்று	இரட்டுற மொழிதல்	9	ஜூன்
		உரைநடையின் அணிநலன்கள்	11	
		எழுத்து, சொல்	16	
2	இயற்கை, சுற்றுச்சூழல்	கேட்கிறதா என்குரல்!	26	
		காற்றே வா!	31	
	உயிரின் ஓசை	முல்லைப்பாட்டு*	33	ஜூன்
		புயலிலே ஒரு தோணி	36	
		தொகைநிலைத் தொடர்கள்	40	
3	பண்பாடு	விருந்து போற்றுதும்!	50	
		காசிக்காண்டம்*	54	
	கூட்டாஞ்சோறு	மலைபடுகடாம்	56	ஜூலை
		கோபல்லபுரத்து மக்கள்	58	
		தொகாநிலைத் தொடர்கள்	63	
		திருக்குறள்*	70	
4	அறிவியல், தொழில்நுட்பம்	செயற்கை நுண்ணறிவு	76	
		பெருமாள் திருமொழி*	82	
	நான்காம் தமிழ்	பரிபாடல்	83	ஜூலை
		விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை	85	
		இலக்கணம் – பொது	90	
5	கல்வி	மொழிபெயர்ப்புக் கல்வி	100	
		நீதி வெண்பா*	106	
	மணற்கேணி	திருவிளையாடற் புராணம்*	107	ஆகஸ்ட்
		புதிய நம்பிக்கை	111	
		வினா, விடை வகைகள், பொருள்கோள்	117	

10th_Tamil_Unit 1.indd 8 29/02/2024 17:14:02

வ.எண்	பொருண்மை/இயல்	பாடத்தலைப்புகள்	ப. எண்	மாதம்
6	கலை, அழகியல், புதுமைகள்	பன்முகக் கலைஞர்	128	
		பூத்தொடுத்தல்	133	
		முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்*	134	
	நிலா முற்றம்	கம்பராமாயணம்*	136	ஆகஸ்ட்
		பாய்ச்சல்	139	
		அகப்பொருள் இலக்கணம்	144	
		திருக்குறள்*	154	
7	நாகரிகம், நாடு, சமூகம்	சிற்றகல் ஒளி (தன்வரலாறு)	160	
		ஏர் புதிதா?	165	
		மெய்க்கீர்த்தி	166	அக்டோபர்
	விதைநெல்	சிலப்பதிகாரம்*	168	
		மங்கையராய்ப் பிறப்பதற்கே...	171	
		புறப்பொருள் இலக்கணம்	176	
8	அறம், தத்துவம், சிந்தனை	சங்க இலக்கியத்தில் அறம்	184	
		ஞானம்	188	
	பெருவழி	காலக்கணிதம்*	189	அக்டோபர்
		இராமானுசர் (நாடகம்)	191	
		பா – வகை, அலகிடுதல்	195	
9	மனிதம், ஆளுமை	ஜெயகாந்தம் (நினைவு இதழ்)	204	
		சித்தாளு	211	
		தேம்பாவணி*	212	நவம்பர் டிசம்பர்
	அன்பின் மொழி	ஒருவன் இருக்கிறான்	216	
		அணி	221	
		திருக்குறள்	230	

(*) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதிகள்

NX0YS

மின் நூல்

ND8UB

மதிப்பீடு

10th_Tamil_Unit 1.indd 9 29/02/2024 17:14:03

பத்தாம் வகுப்பு

தமிழ்

10th_Tamil_Unit 1.indd 10 29/02/2024 17:14:03

இயல் ஒன்று

மொழி

அழுதவூற்று



தமிழ் எழுத்துகளில் ஊர்ப் பெயர்கள் பொறிக்கப்பட்ட பண்டைய காசுகள்.

கற்றல் நோக்கங்கள்

- தமிழ்மொழியின் செழுமை குறித்து ஆற்றலுடன் உரையாற்றுதல்.
- மொழியிலுள்ள வகைப்படுத்தப்பட்ட சொல்வளங்களைச் சொற்களின் வாயிலாகப் பேச்சிலும் எழுத்திலும் இடமறிந்து கையாளுதல்.
- உரைநடையிலுள்ள அணிநலன்களை உள்வாங்கிக்கொண்டு நயமிகு தொடர்களை உருவாக்கி வெளிப்படுத்துதல்.
- மொழி தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரும் நுட்பத்தை அறிந்து பயன்படுத்துதல்.
- சொல்லாக்க விதிமுறைகளை அறிந்து புதிய சொற்களை உருவாக்குதல்.

10th_Tamil_Unit 1.indd 1 29/02/2024 17:14:05

கவிதைப் பேழை

மொழி

க


அன்னை மொழியே

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

G9082

நுழையும்முன்

சின்னக் குழந்தையின் சிரிப்பும் ஆனவள்; பழுத்த நரையின் பட்டறிவும் ஆனவள்; வானத்திற்கும் வையத்திற்கும் இடைப்பட்ட யாவற்றையும் கவிதையாகக் கொண்டவள்; உணர்ந்து கற்றால் கல்போன்ற மனத்தையும் கற்கண்டாக்குபவள்; அறிவைப் பெருக்குபவள்; அன்பை வயப்படுத்துபவள்; செப்புதற்கரிய அவள் பெருமையைப் போற்றுவோம் .



அழகார்ந்த செந்தமிழே!

*அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! *

செப்பரிய நின்பெருமை

செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்

உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!

– கனிச்சாறு

10th_Tamil_Unit 1.indd 2 29/02/2024 17:14:14

பாடலின் பொருள்

அன்னை மொழியே! அழகு நிறைந்த செழுந்தமிழே! பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே! பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகின்றோம்.

செழுமை மிக்க தமிழே! எமக்குயிரே! சொல்லுதற்கரிய நின் பெருமைதனை என்னுடைய தமிழ் நாக்கு எவ்வாறுதான் விரித்துரைக்கும்? பழம்பெருமையும் தனக்கெனத் தனிச் சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே! வியக்கத்தக்க உன்னுடைய நீண்ட நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் உன்னைப் பற்றி உரைத்த புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன. எம் தனித்தமிழே! வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்றன்
சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்

க. சச்சிதானந்தன்

நூல் வெளி



பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி 1) தொகுப்பிலிருந்து இருவேறு தலைப்பில் உள்ள பாடல்கள் (தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்) எடுத்தாளப்பட்டுள்ளன. தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பியவர் துரை. மாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்ட பெருஞ்சித்திரனார்.

இவர் உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலிய நூல்களைப் படைத்துள்ளார். இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை, தமிழுக்குக் கருவூலமாய் அமைந்துள்ளது. இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.



கற்பவை கற்றபின்...

1. "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை"

இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.

2. "எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்" என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்துநிமிட உரை நிகழ்த்துக.

10th_Tamil_Unit 1.indd 3 29/02/2024 17:14:15

மொழி

க

தமிழ்ச்சொல் வளம்

– தேவநேயப் பாவாணர்

நுழையும்முன்

'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்கிறார் மகாகவி பாரதியார். காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ். என்ன வளம் இல்லை என்று எண்ணி வியக்கத்தக்கவாறு பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு இலங்குகிறது நம் செந்தமிழ் மொழி. அனைத்து வளமும் உண்டென்று விடை பகர்கிறது, தமிழ்ச்சொல் வளம்.





சொல் வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ்மட்டும் அதில் தலைசிறந்ததாகும்.

"தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத்தெளிவாகத் தோன்றும். தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில்உள" என்கிறார் கால்டுவெல் (திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்).

தமிழ்ச்சொல் வளத்தைப் பலதுறைகளிலும் காணலாமேனும், இங்குப் பயிர்வகைச் சொற்கள் மட்டும் சிறப்பாக எடுத்துக்காட்டப்பெறும்.

அடி வகை

ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்.

தாள் : நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி
தண்டு : கீரை,வாழை முதலியவற்றின் அடி
கோல் : நெட்டி,மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடி
தூறு : குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி



10th_Tamil_Unit 1.indd 4 29/02/2024 17:14:19

தட்டு அல்லது தட்டை : கம்பு, சோளம் முதலியவற்றின் அடி
கழி : கரும்பின் அடி
கழை : மூங்கிலின் அடி
அடி : புளி, வேம்பு முதலியவற்றின் அடி.

கிளைப்பிரிவுகள்

தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்கள்.

கவை: அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை; கொம்பு அல்லது கொப்பு: கவையின் பிரிவு; கிளை: கொம்பின் பிரிவு; சினை: கிளையின் பிரிவு; போத்து: சினையின் பிரிவு; குச்சு: போத்தின் பிரிவு; இணுக்கு: குச்சியின் பிரிவு.

காய்ந்த அடியும் கிளையும் பெயர்பெறுதல்

காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்கள்.

சுள்ளி: காய்ந்த குச்சு (குச்சி); விறகு: காய்ந்த சிறுகிளை; வெங்கழி: காய்ந்த கழி; கட்டை: காய்ந்த கொம்பும் கவையும் அடியும்.

இலை வகை

தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள்.

இலை: புளி, வேம்பு முதலியவற்றின் இலை; தாள்: நெல்,புல் முதலியவற்றின் இலை; தோகை: சோளம், கரும்பு முதலியவற்றின் இலை; ஓலை: தென்னை, பனை முதலியவற்றின் இலை; சண்டு: காய்ந்த தாளும் தோகையும்; சருகு: காய்ந்த இலை.

கொழுந்து வகை.

தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்.

துளிர் அல்லது தளிர்: நெல், புல் முதலியவற்றின் கொழுந்து; முறி அல்லது கொழுந்து: புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து; குருத்து: சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து; கொழுந்தாடை: கரும்பின் நுனிப்பகுதி.

பூவின் நிலைகள்

பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள்.

அரும்பு: பூவின் தோற்றநிலை; போது: பூ விரியத் தொடங்கும் நிலை; மலர்(அலர்): பூவின் மலர்ந்த நிலை; வீ: மரஞ்செடியினின்று பூ கீழேவிழுந்த நிலை; செம்மல்: பூ வாடின நிலை.

யார் இவர்?



தமிழாசிரியர்; நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்தவர்; சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள அல்லூரில் "திருவள்ளுவர் தவச்சாலை" ஒன்றை அமைத்தவர்; பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர்; தமிழகம் முழுவதும் திருக்குறள் சொற்பொழிவுகளை வழங்கியவர்; தமிழ்வழித் திருமணங்களை நடத்தியவர்.

விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்துவிடக்கூடாது என்று எண்ணியவர்; அதற்காக, தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்; இறுதிவரை இவ்வாறே எழுதித் தமிழுக்குத் தனிப்பெரும் புகழை நல்கியவர்.

பற்பல நூல்களை எழுதியிருப்பினும் இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பருங்கலம் உரை, புறத்திரட்டு உரை, திருக்குறள் தமிழ் மரபுரை, காக்கைப் பாடினிய உரை, தேவநேயம் முதலியன இவர்தம் தமிழ்ப் பணியைத் தரமுயர்த்திய நல்முத்துகள். அவர்தான் உலகப் பெருந்தமிழர் தமிழ்த்திரு இரா.இளங்குமரனார்.

10th_Tamil_Unit 1.indd 5 29/02/2024 17:14:19

பிஞ்சு வகை

தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்கள்.

பூம்பிஞ்சு: பூவோடு கூடிய இளம்பிஞ்சு; பிஞ்சு: இளம் காய்; வடு: மாம்பிஞ்சு; மூசு: பலாப்பிஞ்சு; கவ்வை: எள்பிஞ்சு; குரும்பை: தென்னை, பனை முதலியவற்றின் இளம் பிஞ்சு; முட்டுக் குரும்பை: சிறு குரும்பை; இளநீர்: முற்றாத தேங்காய்; நுழாய்: இளம்பாக்கு; கருக்கல்: இளநெல்; கச்சல்: வாழைப்பிஞ்சு.

குலை வகை

தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான (காய்களையோ கனிகளையோ) சொற்கள்:

கொத்து: அவரை, துவரை முதலியவற்றின் குலை; குலை: கொடி முந்திரி போன்றவற்றின் குலை; தாறு: வாழைக் குலை; கதிர்: கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர்; அலகு அல்லது குரல்: நெல், தினை முதலியவற்றின் கதிர்; சீப்பு: வாழைத்தாற்றின் பகுதி.

கெட்டுப்போன காய்கனி வகை

கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் சொற்கள்:

சூம்பல்: நுனியில் சுருங்கிய காய்; சிவியல்: சுருங்கிய பழம்; சொத்தை: புழுபூச்சி அரித்த காய் அல்லது கனி; வெம்பல்: சூட்டினால் பழுத்த பிஞ்சு; அளியல்: குளுகுளுத்த பழம்; அழுகல்: குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்; சொண்டு: பதராய்ப் போன மிளகாய்.

கோட்டான் காய் அல்லது கூகைக்காய்: கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய்; தேரைக்காய்: தேரை அமர்ந்ததினால் கெட்டகாய்; அல்லிக்காய்: தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்; ஒல்லிக்காய்: தென்னையில் கெட்ட காய்.

பழத்தோல் வகை

பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்கள்:

தொலி: மிக மெல்லியது; தோல்: திண்ணமானது; தோடு: வன்மையானது; ஓடு: மிக வன்மையானது; குடுக்கை: சுரையின் ஓடு; மட்டை: தேங்காய் நெற்றின் மேற்பகுதி; உமி: நெல்,கம்பு முதலியவற்றின் மூடி; கொம்மை: வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி.

மணிவகை

தானியங்களுக்கு வழங்கும் சொற்கள்:

கூலம்: நெல்,புல் (கம்பு) முதலிய தானியங்கள் ; பயறு: அவரை, உளுந்து முதலியவை; கடலை: வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை; விதை: கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து; காழ்: புளி, காஞ்சிரை (நச்சு மரம்) முதலியவற்றின் வித்து; முத்து: வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து; கொட்டை: மா, பனை முதலியவற்றின் வித்து; தேங்காய்: தென்னையின் வித்து; முதிரை: அவரை, துவரை முதலிய பயறுகள்.

இளம் பயிர் வகை

தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்கள்:

நாற்று: நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை; கன்று: மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை; குருத்து: வாழையின் இளநிலை; பிள்ளை: தென்னையின் இளநிலை;



10th_Tamil_Unit 1.indd 6 29/02/2024 17:14:19

குட்டி: விளாவின் இளநிலை; மடலி அல்லது வடலி: பனையின் இளநிலை; பைங்கூழ்: நெல், சோளம் முதலியவற்றின் பசும் பயிர்.

இதுகாறுங் கூறியவற்றால் தமிழ், சொல் வளமுடையதென்றும் தமிழ்நாடு பொருள் வளமுடையதென்றும் தெள்ளிதின் விளங்கும்.

ஒரு மொழி, பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க *Leaf* என ஒரேசொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப்பொதுமக்களைப் போல வன்மை மென்மைபற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது முன்னர்க் காட்டப்பெற்றது.

தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிறநாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கோதுமையை எடுத்துக்கொள்ளின் அதில் சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை முதலிய சிலவகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா,மட்டை,கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. இவற்றோடு வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை. தமிழ்நாட்டுள்ளும் தென்னாட்டிலேயே அவை விளைகின்றன. பழங்காலத்தில் விளைந்த அளவு பொன்னும் மணியும் முத்தும் பவளமும் இன்று விளையாவிடினும் அருமையான கூலங்களும் சிறு கூலங்களும் இன்றும் தென்றமிழ் நாட்டில் விளைந்து வருவது கண்கூடு.

ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ்மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர் என அறிக.

திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும். பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக்கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்.

தெரியுமா?

உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே.

பன்மொழிப் புலவர் க.அப்பாத்துரையார்

10th_Tamil_Unit 1.indd 7 29/02/2024 17:14:20

பாவாணர், தமிழ்ச்சொல்வளம் கட்டுரையில் வித்துவகை, வேர்வகை, அரிதாள் வகை, காய்ந்த இலைவகை, இலைக்காம்பு வகை, பூமடல் வகை, அரும்பு வகை, பூக்காம்பு வகை, இதழ்வகை, காய்வகை, கனி வகை, உள்ளீட்டு வகை, தாவரக் கழிவு வகை, விதைத்தோல் வகை, பதர் வகை, பயிர் வகை, கொடி வகை, மர வகை, கரும்பு வகை, காய்ந்த பயிர் வகை, வெட்டிய விறகுத்துண்டு வகை, மரப்பட்டை வகை, பயிர்ச்செறிவு வகை, நிலத்தின் தொகுப்பு வகை, செய் வகை, நில வகை, நன்செய் வகை, வேலி வகை, காட்டு வகை ஆகியவற்றின் சொல்வளங்களையும் விளக்கியுள்ளார்.

நூல் வெளி



மொழிஞாயிறு என்றழைக்கப்படும் தேவநேயப் பாவாணரின் "சொல்லாய்வுக் கட்டுரைகள்" நூலில் உள்ள தமிழ்ச்சொல் வளம் என்னும் கட்டுரையின் சுருக்கம் பாடமாக இடம்பெற்றுள்ளது. இக்கட்டுரையில் சில விளக்கக் குறிப்புகள் மாணவர்களின் புரிதலுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளன.



பல்வேறு இலக்கணக் கட்டுரைகளையும் மொழியாராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதிய பாவாணர், தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டஇயக்குநராகப் பணியாற்றியவர்; உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.

அலைகடல் தாண்டி, மலை பல கடந்து, எத்திசையிலும் பரவிய தமிழினத்தின்,
தமிழின் புகழ்மணப் பதிவுகளை நுகர்வோமா!...



எத்திசையும் புகழ் மணக்க...

கடல்கடந்து முதலில் அச்சேறிய தமிழ்

போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில், 1554இல் கார்டிலா என்னும் நூல் முதன் முதலாகத் தமிழ்மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூல் ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது. ரோமன் எழுத்துருவில் வெளிவந்த இதன் முழுப்பெயர் Carthila de lingoa Tamul e Portugues. இது அன்றைய காலத்திலேயே இரு வண்ணங்களில் (கறுப்பு, சிவப்பு) மாறிமாறி நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது. இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது தமிழ்தான்.

செய்தி- ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்



கற்பவை கற்றபின்...

1. *பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க.*

   தரிசு, சிவல், கரிசல், முரம்பு, புறம்போக்கு, சுவல், அவல்.

2. *ஒரு பொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக.*

   எ.கா. *சொல்லுதல் – பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறல், இயம்பல், மொழிதல்....*

அ. .....

10th_Tamil_Unit 1.indd 8 29/02/2024 17:14:20

கவிதைப் பேழை

மொழி

க


இரட்டுற மொழிதல்

– சந்தக்கவிமணி தமிழழகனார்

நுழையும்முன்

விண்ணோடும் முகிலோடும் உடுக்களோடும் கதிரவனோடும் கடலோடும் தமிழ் இணைத்துப் பேசப்படுகிறது. இவற்றுக்குள்ள ஆற்றலும் விரிவும் ஆழமும் பயனும் தமிழுக்கும் உண்டு எனப் போற்றப்படுகிறது. தமிழ் கடலோடு ஒத்திருத்தலை இரட்டுற மொழிவதன் மூலம் அறிகையில் அதன் பெருமை ஆழப்படுகிறது; விரிவுபடுகிறது.





ஆழிக்கு இணை

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் –நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு

– தனிப்பாடல் திரட்டு

சொல்லும் பொருளும்

துய்ப்பது – கற்பது, தருதல்

மேவலால் – பொருந்துதலால், பெறுதலால்

பாடலின் பொருள்

தமிழ்: தமிழ், இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது; முதல் இடை கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது; ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது; சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

கடல்: கடல், முத்தினைத் தருகிறது; வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது; மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது; தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது.

10th_Tamil_Unit 1.indd 9 29/02/2024 17:14:21

பாடல்	தமிழுக்கு	கடலுக்கு
முத்தமிழ்	இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்	முத்தினைஅமிழ்ந்து எடுத்தல்
முச்சங்கம்	முதல், இடை,கடை ஆகிய முச்சங்கம்	மூன்று வகையான சங்குகள் தருதல்
மெத்த வணிகலன் (மெத்த + அணிகலன்)	ஐம்பெரும் காப்பியங்கள்	மிகுதியான வணிகக் கப்பல்கள்
சங்கத்தவர் காக்க	சங்கப் பலகையிலிருந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை	நீரலையைத் தடுத்து நிறுத்தி, சங்கினைக் காத்தல்



தெரிந்து தெளிவோம்

இரட்டுற மொழிதல்

ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும். இதனைச் சிலேடை அணி என்றும் அழைப்பர். செய்யுளிலும் உரைநடையிலும் மேடைப்பேச்சிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

நூல் வெளி



புலவர் பலரின் பாடல்களின் தொகுப்பான தனிப்பாடல் திரட்டு (ஐந்தாம் பகுதி – கழகப் பதிப்பு) என்னும் நூலிலிருந்து இந்தப்பாடல் எடுத்தாளப்பட்டுள்ளது. இப்பாடலைப் படைத்தவர் தமிழழகனார்.

சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் சண்முகசுந்தரம். இலக்கணப் புலமையும் இளம்வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்ற இவர் பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.



கற்பவை கற்றபின்...

1. அ) காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன். அவரை மாலையிட்டு வரவேற்றனர். அப்போது கி.வா.ஜ., "அடடே! காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே!" என்றார். எல்லோரும் அந்தச் சொல்லின் சிலேடைச் சிறப்பை மிகவும் சுவைத்தனர்.

   ஆ) இசை விமரிசகர் சுப்புடுவின் விமரிசனங்களில் நயமான சிலேடைகள் காணப்படும். ஒரு முறை ஒரு பெரிய வித்துவானுடைய இசைநிகழ்ச்சியை விமரிசனம் செய்யும் போது அவர் குறிப்பிட்டது: "அன்று கச்சேரியில் அவருடைய காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்."

   இ) தமிழறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதம் பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தபோது "இவர் பல்துறை வித்தகர்" என்று குறிப்பிட்டார்!

   இவைபோன்ற பல சிலேடைப் பேச்சுகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவற்றைத் தொகுத்துச் சொல்நயங்களைப் பதிவு செய்து கலந்துரையாடுக.

2. மொழியின் சிறப்புகளைப் பாடும் கவிதைகளுள் உங்களுக்குப் பிடித்தவற்றை வகுப்பறையில் படித்துக்காட்டுக .

10th_Tamil_Unit 1.indd 10 29/02/2024 17:14:21

விரிவானம்

மொழி

க

உரைநடையின் அணிநலன்கள்

– எழில்முதல்வன்

நுழையும்முன்

சங்க இலக்கியம் நம் பாட்டனார் தோப்பு; இடைக்கால இலக்கியம் நம் தந்தையார் தோட்டம்; இக்கால இலக்கியம் நம் பூங்கா. தோப்பு ஈந்த பயன்களையும் தோட்டம் தந்த நயங்களையும் பூங்காவின் அழகினையும் ஒன்று சேர்த்து உரைநடையின் அணிநலன்களாகக் காண்போமா?...

O5ZR3

கற்பனை உரையாடல்

பங்கு பெறுவோர் – இணையத் தமிழன், சங்கப் புலவர்

சங்கப் புலவர் ஒருவர் இயற்கைசூழ் இடமொன்றில் எழுத்தாணி கொண்டு ஓலைச் சுவடியில் எழுதிக்கொண்டிருக்கிறார். அப்போது அவர்முன் சிறிய காலஇயந்திரம் ஒன்று தோன்றுகிறது.



அதிலிருந்து இன்றைய மனிதர் ஒருவர் இறங்கி, புலவரை நோக்கி நடந்து வருகிறார். அச்சமும் அதைவிட வியப்பும் மேலோங்கப் பார்த்துக்கொண்டிருந்த புலவரின் கையைப் பற்றிக் குலுக்குகிறார்.

இணையத் தமிழன்: வணக்கம், ஐயா! நான் இணையத்தமிழன் வந்திருக்கிறேன்.

சங்கப் புலவர்: இணையத்தமிழனா?! வியப்பு! உங்கள் வருகையை என் தோழர் குன்றூர்க் கிழாரிடம் கூறவேண்டும்! அவர் உங்களையும் உங்கள் ஊர்தியையும் குறித்து ஓர் ஆசிரியப்பா இயற்றிவிடுவார்.

இணையத் தமிழன்: இருக்கட்டும் ஐயா! அவரை இன்னொரு வாய்ப்பில் பார்த்துக்கொள்ளலாம். என்னால் உங்களுடன் இங்கு ஒரு மணிநேரம் மட்டுமே இருக்க முடியும். அதற்குள் உங்களோடு இலக்கியம் பற்றிச் சிறிதுநேரம் பேச விரும்புகிறேன்.

சங்கப் புலவர்: கபிலரின் குறிஞ்சிப் பாட்டுப் பற்றியா? எம் போன்ற புலவரின் தனிச் செய்யுள்கள் பற்றியா? யாது குறித்து?

இணையத் தமிழன்: புலவரே! உங்கள் காலத்துப் பாடல்களையெல்லாம் பிற்காலத்தில் சங்கப் பாடல்கள் என்று தொகுத்து

10th_Tamil_Unit 1.indd 11 29/02/2024 17:14:22

வைத்திருக்கிறார்கள். அவையெல்லாம் பாட்டும் தொகையுமாக நூல் விற்பனை நிலையங்களிலும் இணையத்திலும் கிடைக்கின்றன.

சங்கப் புலவர்: இணையமா?

இணையத் தமிழன்: புலவரே! எங்கள் காலத்து அறிவியல் கண்டுபிடிப்புகளைக்காண உங்களை என்னுடன் பின்னர் ஒருமுறை அழைத்துப் போகிறேன். இப்போது இலக்கியம் குறித்துப் பேசலாம்.

சங்கப் புலவர்: நீரும் பாக்கள் இயற்றுவீரோ? அகமா? புறமா? அகத்துள் உவமை, மெய்ப்பாடு ஆகியன வைத்திருக்கிறீரா? நும் பாக்கள் ஆசிரியமா?

இணையத் தமிழன்: ஆசிரியப்பாவா!... அதையும் எழுத எங்களில் கொஞ்சம் பேர் இருக்கிறார்கள். எங்கள் காலத்தில் புதுப்புது இலக்கிய வடிவங்கள் தோன்றியிருக்கின்றன. சங்கப் பாடல்களுக்குப் பின், தமிழ் இலக்கியம் அறஇலக்கியங்களாகி, காப்பியங்களாகி, சிற்றிலக்கியங்களாகி, சந்தக் கவிதைகளாகி, புதுக்கவிதைகளாகி... இப்போது நவீன கவிதைகளில் வந்து நிற்கிறது. உரைநடையின் வளர்ச்சியோ அளவற்றது! சிறுகதை, கட்டுரை, புதினம்... இவையெல்லாம் எங்கள் கால இலக்கிய வடிவங்கள்!

சங்கப் புலவர்: உரைநடையா! தொல்காப்பியர் கூறுகிறாரே!.....

இணையத் தமிழன்: அதேதான்! நீங்களும் நானும் பேசுகிறோமே! அதுதான் உரைநடை! பேசினால் உரையாடல்; எழுதினால் உரைநடை. பெரும்பாலும் உரைநடை வடிவில்தான் நாங்கள் இலக்கியம் படைக்கிறோம்.

சங்கப் புலவர்: எம்முடைய பாக்களின் உத்திகளை நீவிர் பயன்படுத்துவீரோ?

இணையத் தமிழன்: என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்! நீங்கள் தந்த உத்திகளில் சிலவற்றை நீங்கள் தந்த பெயரிலும் சிலவற்றை நாங்கள் வைத்த பெயரிலும் பயன்படுத்துகிறோம்.

சங்கப் புலவர்: மகிழ்ச்சி! உணர்ச்சிகளைக் காட்ட உவமை கொண்ட மொழிநடையே ஏற்ற கருவி. இவற்றை நீவிர் எப்படிப் பயன்படுத்துவீர்?

இணையத் தமிழன்: "திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக்கண்ணாடிகளைப்போல் வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள்" என்று குறிஞ்சிமலர் என்னும் நூலில் நா.பார்த்தசாரதி உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.

சங்கப் புலவர்: அருமையான உவமையைக் கூறினீர்! அடுத்து...

இணையத் தமிழன்: இன்னும் உண்டே! உங்களுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு வந்த 'தண்டி' என்பவர், உருவகத்தைப் பற்றி 'உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்' என்று எழுதியிருக்கிறார். எங்கள் இலக்கியங்களில் உவமையை விட உருவகமே உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுகின்றது.



தெரியுமா?

முதல் தமிழ்க் கணினி

தமிழ் மறையான திருக்குறளைத் தந்த "திருவள்ளுவர்" பெயரில் முதல் தமிழ்க் கணினி 1983 செப்டம்பரில் டி.சி.எம். டேட்டா புரொடக்ட்ஸ் என்னும் தனியார் நிறுவனம் உருவாக்கி விற்பனைக்குக் கொண்டுவந்தது. இக்கணினியில் முதல் முறையாகத் தமிழ் மொழியிலேயே விவரங்களை (Data) உள்ளீடாகச் செலுத்தி நமக்குத் தேவையான தகவல்களை வெளியீடாகக் கணினியிலிருந்து பெறமுடிந்தது. இந்தக் கணினி தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளையும் கையாளக்கூடியதாக அமைந்தது. சென்னை தேனாம்பேட்டையில் இருந்த புள்ளிவிவரத் துறை அலுவலகத்திற்கும் தலைமைச் செயலகத்துக்கும் கோப்புகளையும் செய்திகளையும் பறிமாறிக்கொண்ட முதல் நேர்வழிக் கணினியும் "திருவள்ளுவரே"!

10th_Tamil_Unit 1.indd 12 29/02/2024 17:14:22

'முகநிலவில் வியர்வைமுத்துகள் துளிர்த்தன' என்று உருவகமாக எழுதுகிறார்கள்.

"களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைதான் அதற்குச் சான்று" – இது எங்கள் காலத்தில் வாழ்ந்த அறிஞர் அண்ணா அவர்களின் உரைநடை!

சங்கப் புலவர்: அட! என்னே அவரது கற்பனை! மேலும் கேட்கப் பெருவிழைவு கொள்கிறேன்...

இணையத் தமிழன்: விதவிதமான உவமைகளை நீங்கள் பயன்படுத்தியிருக்கிறீர்கள். அவற்றுக்கெல்லாம் பிற்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்களில் பெயர் வைத்திருக்கிறார்கள். உவம உருபு மறைந்து வந்தால், அதற்கு எடுத்துக்காட்டு உவமை அணி என்று பெயர்.

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப் படும்"

இந்தத் திருக்குறளில் உவம உருபு இல்லை. இதை நாங்கள் உரைநடையிலும் பயன்படுத்துகிறோம். எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்துகையில் 'இணை ஒப்பு' (analogy) என்கிறோம்.

"ஊர் கூடிச் செக்குத் தள்ள முடியுமா? என்று கேட்கிறார்கள், ஊர் கூடின பிறகுதான் செக்குத் தள்ள வேண்டும் என்று காத்திருப்பவர்களின் காரியம் கைகூடாது, புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை" என்று எழுத்தாளர் வ.ராமசாமி 'மழையும் புயலும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சங்கப் புலவர்: என்னே செறிவு!

இணையத் தமிழன்: அஃறிணைப் பொருள்களையும் உயர்திணையாகக் கருதிக் கற்பனை செய்து எழுதுவோம்.

சங்கப் புலவர்: இலக்கணத்தில் இது உண்டே! தொல்காப்பியர், "ஞாயிறு, திங்கள், நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்கள், சொல்லுந போலவும், கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும்" (செய்யுளியல், 192) என்று எழுதும் திறத்தைக் குறிப்பிட்டிருக்கின்றார். உயிர் இல்லாத பொருள்களை உயிர் உள்ளன போலவும், உணர்வு இல்லாத பொருள்களை உணர்வுடையன போலவும் கற்பனை செய்வதுண்டு என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இணையத் தமிழன்: நீங்கள் குறிப்பிட்ட இரண்டையும் நாங்கள் 'இலக்கணை' என்கிறோம்.

"சோலையில் புகுவேன்; மரங்கள் கூப்பிடும்; விருந்து வைக்கும், ஆலமர நிழலில் அமர்வேன்; ஆல்,'என் விழுதைப் பார். அந்த அரசுக்கு இஃது உண்டா?' என்னும். அரசு கண்ணிற்படும். 'யான் விழுதின்றி வானுற ஓங்கிநிற்கிறேன், என்னை மக்கள் சுற்றிச் செல்கிறார்கள், காண்' என்னும். 'வேம்பு, என்நிழல் நலஞ்செய்யும். என் பூவின் குணங்களைச் சொல்கிறேன் வா' என்னும். அத்தி, நாகை, விளா, மா, வில்வம் முதலிய மரங்கள் விளியாமலிருக்குமோ? சிந்தனையில் அவைகளின் நுட்பங்கள் விளங்கும். மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது இவர்வேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்"

எங்கள் காலத் தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் இப்படி எழுதியிருக்கிறார்.

சங்கப் புலவர்: மோனையும் எதுகையும் செய்யுளில் வருமாயின் இனிய ஓசையின்பம் விளையும். இவற்றினை நீவிர் உரைநடையில் பயன்படுத்துவீரோ?

இணையத் தமிழன்: ஆம். இதோ!

"தென்றல் அசைந்துவரும் தென்தமிழ் நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே, கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்; குரவமும் முல்லையும்

10th_Tamil_Unit 1.indd 13 29/02/2024 17:14:22

நறுமணங் கமழும்! கோலமாமயில் தோகை விரித்தாடும்; தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும்; இத்தகைய மலையினின்று விரைந்து வழிந்திறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும்பொழுது சிதறும் நீர்த் திவலைகள் பாலாவிபோற் பரந்தெழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும்"

என்று சொல்லின் செல்வர் இரா.பி.சே., தமிழின்பம் என்னும் நூலில் எழுதியுள்ளார்.

சங்கப் புலவர்: அருமை! உணர்வு வெளிப்பாட்டிற்கும் சொல்லப்படும் கருத்திற்கு அழுத்தம் தரவும் நீவிர் உரைநடையில் வேறு என்ன உத்திகளைப் பயன்படுத்துவீர்?

இணையத் தமிழன்: இதற்காகச் சொல்லையோ கருத்தையோ திரும்பத் திரும்பச் சொல்வதுண்டு! சொற்களை அளவாகப் பயன்படுத்தி உரைநடையை அழகு செய்ய மு.வரதராசனார், தம் நாட்டுப்பற்று என்னும் கட்டுரைத் தொகுப்பில்,

"வாழ்க்கை நடத்துவதற்குப் பொருள்கள்பல வேண்டும். அரிசி, காய், கனி முதலியவை வேண்டும். உடை, வீடு முதலியவை வேண்டும். காசும் காகித நோட்டும் வேண்டும், இன்னும் பல வேண்டும். இவற்றை ஆளும் அறிவும் வேண்டும்" என்று எழுதியிருக்கிறார்.

சங்கப் புலவர்: மிகச் சுவையாக உள்ளது! இன்னும் வேறென்ன உத்திகள்?

இணையத் தமிழன்: இருக்கின்றனவே! படிப்பவருக்கு முரண்படுவதுபோல இருக்கும்; உண்மையில் முரண்படாத – மெய்ம்மையைச் சொல்லுவது 'முரண்படு மெய்ம்மை' (paradox).

இதோ! அதற்கும் ஓர் எடுத்துக்காட்டு

'இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்கு நாம் பயப்படவேண்டும்?'

சங்கப் புலவர்: மேலும்...

இணையத் தமிழன்: முரண்பட்ட சொற்களைச் சேர்த்து எழுதுவார்கள்... *'கலப்பில்லாத பொய்'*... இதைச் சொல்முரண் (Oxymoron) என்கிறோம். சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதுவோம்... இதனை எதிரிணை இசைவு (Antithesis) என்கிறோம்.

"குடிசைகள் ஒரு பக்கம்; கோபுரங்கள் மறுபக்கம்; பசித்த வயிறுகள் ஒருபக்கம்; புளிச்சேப்பக்காரர்கள் மறுபக்கம்: மெலிந்த எலும்புக்கூடுகள் ஒருபக்கம்; பருத்த தொந்திகள் மறுபக்கம்; கேடுகெட்ட இந்தச் சமுதாயத்திற்கு என்றைக்கு விமோசனம்? தோழர்களே, சிந்தியுங்கள்!" என்று தோழர் ப.ஜீவானந்தம் எழுதியிருப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டு!

சங்கப் புலவர்: கேட்கும்போதிலே சிலிர்ப்பு உண்டாகிறதே!

இணையத் தமிழன்: புலவரே! இதையும் கேளுங்கள்! விடைதரவேண்டிய தேவை இல்லாமல் கேள்வியிலேயே பதில் இருப்பதைப் போலவும் எழுதுவோம்! அது உணர்ச்சி வெளிப்பாட்டுக்கு உதவக்கூடியது!

"அவர் (பெரியார் ஈ.வெ.ரா) பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத பழமை உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார்? எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பெறாதது?... எனவேதான், பெரியாருடைய பெரும் பணியை நான் ஒரு தனிமனிதனின் வரலாறு என்றல்ல ஒரு சகாப்தம் – ஒரு கால கட்டம் – ஒரு திருப்பம் – என்று கூறுகிறேன்."

இது பெரியாரைப் பற்றி அறிஞர் அண்ணா பேசியது.

எப்படி இருக்கிறது ஐயா?

சங்கப் புலவர்: உணர்ச்சிப் பெருவெள்ளம்! இதன் உச்சநிலை (climax) என்ன?

இணையத் தமிழன்: உச்சநிலைதானே? இருக்கிறதே! சொல்லையோ கருத்தையோ அடுத்தடுத்து வைக்கும் முறையிலே உள்ள சிறப்புதான் அது.

10th_Tamil_Unit 1.indd 14 29/02/2024 17:14:23

"இந்தியாதான் என்னுடைய மோட்சம்; இந்தியாவின் நன்மைதான் என் நன்மை. இந்தியாதான் என் இளமையின் மெத்தை; என் யௌவனத்தின் நந்தவனம்; என் கிழக்காலத்தின் காசி" என்று பாரதி என்னும் தமிழ்க்கவிஞர் நம் நாட்டை உயர்த்திக் கூறுகிறார்.

சங்கப் புலவர்: மிக்க மகிழ்ச்சி! நீர் தமிழ் உரைநடைச் செழுமை பற்றிக் கூறக் கூற மேலும் அவற்றைப் படித்து இன்புற அவாவுறுகிறேன்!

இணையத் தமிழன்: அதற்கென்ன புலவரே! அடுத்த முறை வரும்போது என்னுடைய மடிக்கணினியில் சேமித்து வைத்துள்ள பல்வேறு இலக்கியங்களை உங்களுக்குத் தருகிறேன்! பயன்படுத்திக்கொள்ளுங்கள்! நேரமாகிவிட்டது. போய்வருகிறேன் புலவரே!

சங்கப் புலவர்: போய் வாரும்!... மடிக்கணினி என்று ஏதோ கூறினார்! அப்படியென்றால் என்னவென்று கேட்பதற்குள் பறந்துவிட்டாரே!

நூல்வெளி



எழில்முதல்வன் எழுதிய 'புதிய உரைநடை' என்னும் நூலிலுள்ள உரைநடையின் அணிநலன்கள் என்னும் கட்டுரையின் சுருக்கம், இங்கு உரையாடல் வடிவமாக மாற்றித் தரப்பட்டுள்ளது.

மா.இராமலிங்கம் (எ) எழில்முதல்வன் மாநிலக் கல்லூரியில் பயின்று அங்கேயே பேராசிரியர் பணியைத் தொடர்ந்தவர். குடந்தை அரசு ஆடவர் கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணிசெய்தவர். மரபுக் கவிதை, புதுக்கவிதை படைப்பதிலும் வல்லவர். இனிக்கும் நினைவுகள், எங்கெங்கு காணினும், யாதுமாகி நின்றாய் முதலிய நூல்களை இயற்றிய பெருமைக்குரியவர். 'புதிய உரைநடை' என்னும் நூலுக்காக சாகித்திய அகாதெமி விருதுபெற்றவர்.

தொன்று தொட்டு இன்றுவரை நின்று நிலவும் ஊர்கள்,
தொன்மைத் தமிழ் நாகரிகத்தின் வேர்கள்! இலக்கியத்தின் சீர்களில்...

முன்தோன்றிய மூத்தகுடி



"வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்
மாவும் பலாவும் சூழ்அடுத்து ஓங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்"

சிலப்பதிகாரம், காடுகாண் காதை: 53–55

திண்டுக்கல் மாவட்டத்தின் சிறுமலை



கற்பவை கற்றபின்...

1. நீங்கள் படித்தவற்றுள் நினைவில் நீங்கா இடம்பெற்ற இலக்கியத் தொடர்கள், நயங்களை எழுதுக.

இலக்கியத் தொடர்	இடம்பெற்றுள்ள நயம்
உள்ளங்கை நெல்லிக்கனி போல	உவமை

2. கொடுத்த தலைப்பில் பேசுவோம்.

தலைப்பு – நேரம் தவிர்க்க வேண்டிய சொல் – கடிகாரம்

குறிப்பு – ஒரு நிமிடம் பேச வேண்டும். தமிழ்ச்சொற்களை மட்டும் பயன்படுத்த வேண்டும். ஐந்து வினாடிகளுக்குமேல் இடைவெளி இருத்தல் கூடாது.
இது போன்று வேறு வேறு தலைப்புகளில் வகுப்பறையில் பேசிப் பழகுக.

10th_Tamil_Unit 1.indd 15 29/02/2024 17:14:24

கற்கண்டு

மொழி

க

எழுத்து, சொல்

மொழியைத் தெளிவுறப் பேசவும் எழுதவும் உதவுவது இலக்கணம்.
மொழியின் சிறப்புகளை அறியவும் இலக்கணம் துணை செய்யும்.

எழுத்து

சார்பெழுத்து

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய பத்தும் சார்பெழுத்துகள் ஆகும். அவற்றுள் உயிரளபெடை, ஒற்றளபெடை ஆகிய இரண்டு அளபெடைகள் குறித்து இங்குக் காண்போம்.

அளபெடுத்தல் – நீண்டு ஒலித்தல்.

பேச்சு வழக்கில் சொற்களை நீட்டி ஒலித்துப் பேசுவோம். அவ்வாறு பேசும்போது உணர்வுக்கும் இனிய ஓசைக்கும் அளபெடுத்தல் பயன்படுகிறது.

எ. கா. அம்மாஅ, தம்பீஇ

1. உயிரளபெடை

செய்யுளில் மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகள் தத்தம் அளவில் நீண்டு ஒலிக்கும்போது அதைக் குறிக்க நெட்டெழுத்துகளின் இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வரும். இவ்வாறு வருவது **உயிரளபெடை** எனப்படும்.

உயிரளபெடை மூன்று வகைப்படும்.

அ) செய்யுளிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய, நெட்டெழுத்துகள் அளபெடுத்தலைச் செய்யுளிசை அளபெடை என்போம். இதனை **இசைநிறை அளபெடை** என்றும் கூறுவர்.

ஓஒதல் வேண்டும் – மொழி முதல்
உறாஅர்க் குறுநோய் – மொழியிடை
நல்ல படாஅ பறை – மொழியிறுதி

ஆ) இன்னிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது **இன்னிசை அளபெடை** ஆகும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

இ) சொல்லிசை அளபெடை

செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது **சொல்லிசை அளபெடை** ஆகும்.

உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்.

நசை – விருப்பம்; விரும்பி என்னும் பொருள் தருவதற்காக நசைஇ என அளபெடுத்தது. பெயர்ச்சொல், வினை எச்சமாக மாறியது.

2. ஒற்றளபெடை

செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவுசெய்ய மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும், ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது **ஒற்றளபெடை** ஆகும்.

எங்ங்கிறைவன்

எஃஃகிலங்கிய கையராய் இன்னுயிர்

10th_Tamil_Unit 1.indd 16 29/02/2024 17:14:24

சொல்

'பூ மலர்ந்தது.'

'மாடு புல் தின்றது.'

ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் ஆகும். அது,

அ) இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்.

ஆ) மூவகை இடங்களிலும் வரும்.

இ) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.

ஈ) வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளங்கும்.

மூவகை மொழி

தனி மொழி, தொடர்மொழி, பொதுமொழி என மொழி மூன்று வகையாக அமையும்.

> ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி
> பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன.
> (நன்னூல் – 260)

தனிமொழி

ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது **தனிமொழி** எனப்படும்.

எ. கா. கண், படி – பகாப்பதம்
கண்ணன், படித்தான் – பகுபதம்

தொடர்மொழி

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது **தொடர்மொழி** ஆகும்.

எ. கா. கண்ணன் வந்தான்.
மலர் வீட்டுக்குச் சென்றாள்.

பொதுமொழி

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது **பொதுமொழி** எனப்படும்.

எ. கா.

எட்டு – எட்டு என்ற எண்ணைக் குறிக்கும்.

வேங்கை – வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும்.

இவையே எள் + து எனவும் வேம் + கை எனவும் தொடர்மொழிகளாகப் பிரிந்து நின்று எள்ளை உண், வேகின்ற கை எனவும் பொருள் தரும். இவை இருபொருள்களுக்கும் பொதுவாய் அமைவதால் பொது மொழியாகவும் இருக்கிறது.

தொழிற்பெயர்

ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும்.

எ. கா. ஈதல், நடத்தல்

விகுதி பெற்ற தொழிற்பெயர்கள்

வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் **விகுதி பெற்ற தொழிற்பெயர்** ஆகும்.

வினையடி	விகுதி	தொழிற்பெயர்
நட	தல்	நடத்தல்
வாழ்	கை	வாழ்க்கை
ஆள்	அல்	ஆளல்

ஒரே வினையடி பல விகுதிகளையும் ஏற்கும்.

எ. கா. நட என்பது வினையடி

நடை, நடத்தல்

எதிர்மறைத் தொழிற்பெயர்

எதிர்மறைப் பொருளில் வருவது **எதிர்மறைத் தொழிற்பெயர்** ஆகும்.

எ. கா. நடவாமை, கொல்லாமை

10th_Tamil_Unit 1.indd 17 29/02/2024 17:14:24

முதனிலைத் தொழிற்பெயர்

விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் முதனிலைத் தொழிற்பெயராகும்.

எ. கா. தட்டு, உரை, அடி

இச்சொற்கள் முறையே தட்டுதல், உரைத்தல், அடித்தல் என்று பொருள்படும்போது முதனிலைத் தொழிற்பெயர்களாகின்றன.

முதனிலை திரிந்த தொழிற்பெயர்

விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வரும் தொழிற்பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஆகும்.

எ. கா. பேறு

தொழிற்பெயர்	முதனிலை	முதனிலை திரிந்த தொழிற்பெயர்
கெடுதல்	கெடு	கேடு
சுடுதல்	சுடு	சூடு

வினையாலணையும் பெயர்

ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும். அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.

எ. கா. வந்தவர் அவர்தான்.
பொறுத்தார் பூமியாள்வார்.

தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடு

தொழிற்பெயர்	வினையாலணையும் பெயர்
வினை, பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும்	தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும்
காலம் காட்டாது	காலம் காட்டும்
படர்க்கைக்கே உரியது	மூவிடத்திற்கும் உரியது
எ. கா. பாடுதல், படித்தல்	**எ. கா.** பாடியவள், படித்தவர்



கற்பவை கற்றபின்...

1. தேன், நூல், பை, மலர், வா – இத் தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.
2. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.
   காண், சிரி, படி, தடு
   எ.கா. காட்சி, காணுதல், காணல், காணாமை
3. தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.
   அண்ணன் : எங்கே செல்கிறாய்? (தொடர்மொழி)
   தம்பி : _____ (தனிமொழி)
   அண்ணன் : _____ _____ வாங்குகிறாய்? (தொடர்மொழி)
   தம்பி : _____ (தொடர்மொழி)
   அண்ணன் : _____(தனிமொழி)
   தம்பி : _____ (தொடர்மொழி)
   அண்ணன் :
   தம்பி :
4. மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன் ; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்.'
   இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.
5. கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, பாடுதல் – இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.

10th_Tamil_Unit 1.indd 18 29/02/2024 17:14:25

திறன் அறிவோம்

பலவுள் தெரிக.

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது–

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது –

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் –

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை –

அ) குலை வகை ஆ) மணி வகை

இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

குறுவினா

1. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

2. "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

10th_Tamil_Unit 1.indd 19 29/02/2024 17:14:25

3. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

4. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்" – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

5. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

சிறுவினா

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

2. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'

இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

3. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும்.

இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

4. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

நெடுவினா

1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

2. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

3. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.
சூழல் – வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

10th_Tamil_Unit 1.indd 20 29/02/2024 17:14:25

மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

பாடலில், மரம் என்னும் சொல், இடத்திற்கேற்பப் பொருள் தருவதாய் 11 இடங்களில் இடம்பெற்றுள்ளது. பொருள்களைப் பொருத்திப் படித்துச் சுவைக்க.

"மரமது[1] மரத்தில்[2] ஏறி
மரமதைத்[3] தோளில் வைத்து
மரமது[4] மரத்தைக்[5] கண்டு
மரத்தி[6]னால் மரத்தைக்[7] குத்தி
மரமது[8] வழியே சென்று
வளமனைக் கேகும் போது
மரமது[9] கண்ட மாதர்
மரமுடன்[10] மரம்[11] எடுத்தார்"



தனிப்பாடல் திரட்டு – சுந்தரகவிராசர்

1	2	3	4, 9	5, 7	6	8	10	11
அரசன் (அரசமரம்)	மா– குதிரை (மாமரம்)	வேல் (கருவேலம்)	அரசன்	புலி (வேங்கை)	வேல்	காட்டு வழி	ஆல் (ஆலமரம்)	அத்தி (அத்தி மரம்) ஆல் +அத்தி = ஆரத்தி

மொழிபெயர்ப்பு

1. *If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart* – **Nelson Mandela**
2. *Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going* – **Rita Mae Brown**

சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.

"தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே"

கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

(குவியல், குலை, மந்தை, கட்டு)

சொல்	கூட்டப்பெயர்	சொல்	கூட்டப்பெயர்
கல்		புல்	
பழம்		ஆடு	

10th_Tamil_Unit 1.indd 21 29/02/2024 17:14:26

வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.

1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
2. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
4. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

எ.கா. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.

தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.

1. உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர்.
2. வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தனது தலையைக் கொடுத்து மங்காப் புகழ் பெற்றான்.
3. நளனும் அவனது துணைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழைமுகில் கண்ட மஞ்ஞை போலக் களி கொண்டனர்.
4. சோலையிற் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.
5. பசுப்போல் சாந்தமும் புலிபோல் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

கட்டுரை எழுதுக.

குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

நயம் பாராட்டுக.

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே

கா.நமச்சிவாயர்

10th_Tamil_Unit 1.indd 22 29/02/2024 17:14:26

மொழியோடு விளையாடு

சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

எ.கா. பூமணி

குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.

குறிப்புகள்

குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்

எ.கா. குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?


எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.

செய்யுள் அடி	எண்ணுப்பெயர்	தமிழ் எண்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை	நான்கு	ச
எறும்புந்தன் கையால் எண்சாண்		
ஐந்துசால்பு ஊன்றிய தூண்		
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி		
ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி		

அகராதியில் காண்க.

அடவி ,அவல், சுவல், செறு, பழனம், புறவு

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



செயல் திட்டம்

நீங்கள் வாழும் பகுதியிலுள்ள எவையேனும் ஐந்து பயிர்வகைச் சொற்களுக்கான படத்தொகுப்பை உருவாக்குக.

10th_Tamil_Unit 1.indd 23 29/02/2024 17:14:26

நிற்க அதற்குத் தக...

இன்சொல் வழி	தீய சொல் வழி
பிறர் மனம் மகிழும்	பிறர் மனம் வாடும்
அறம் வளரும்	அறம் தேயும்
புகழ் பெருகும்	இகழ் பெருகும்
நல்ல நண்பர்கள் சேருவர்	நல்ல நண்பர்கள் விலகுவர்
அன்பு நிறையும்	பகைமை நிறையும்

இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக்குக் காட்டும் வழி யாது?

கலைச்சொல் அறிவோம்

Vowel	–	உயிரெழுத்து	*Monolingual*	–	ஒரு மொழி
Consonant	–	மெய்யெழுத்து	*Conversation*	–	உரையாடல்
Homograph	–	ஒப்பெழுத்து	*Discussion*	–	கலந்துரையாடல்


அறிவை விரிவு செய்

நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் – முனைவர் சேதுமணி மணியன்

தவறின்றித் தமிழ் எழுதுவோம் – மா. நன்னன்

பச்சை நிழல் – உதயசங்கர்







இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/library/nationalized/html/naauthor-58.htm

http://www.tamilvu.org/library/lA460/html/lA460ind.htm

https://www.vikatan.com/news/tamilnadu/115717-devaneya-pavanar-birth-anniversary.html

10th_Tamil_Unit 1.indd 24 29/02/2024 17:14:27

இயல் இரண்டு

இயற்கை,
சுற்றுச்சூழல்

உயிரின் ஓசை



கற்றல் நோக்கங்கள்

- காற்று மாசுபாடு குறித்துக் கலந்துரையாடி விழிப்புணர்வு பெறுதல்.
- இயற்கை ஆற்றல்களை அனுபவித்துப் போற்றும் உணர்வு பெறுதல்.
- குளிர்கால வாழ்வு செய்யுளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நுட்பத்தினையும் அதன் மொழிப் பயன்பாட்டுத் திறத்தினையும் படித்துச் சுவைத்தல்.
- கதை நிகழ்வுகளைச் சுவையுடன் படிக்கவும் அது போன்ற படைப்புகளை உருவாக்கவும் முனைதல்.
- தொகைநிலைகளின் தன்மைக்கேற்பத் தொடர்களைப் புரிந்துகொண்டு பயன்படுத்துதல்.
- எண்ணங்களை விவரித்தும் வருணித்தும் எழுதுதல்.

10th_Tamil_Unit 2.indd 25 2/14/2023 6:40:50 PM

இயற்கை

உ

கேட்கிறதா என் குரல்!

நுழையும்முன்

உயிரின வாழ்வின் அடிப்படை இயற்கை! நாம் நம்பியிருப்பதும் நம்மில் இருப்பதும் இயற்கையே. மூச்சுக்குக் காற்று, தாகத்திற்கு நீர், உறைவதற்கு நிலம், ஒளிக்குக் கதிரவன் போன்றவை உயிரினங்களின் முதன்மைத் தேவை. இயற்கையின் கூறுகளில் காற்றின் பங்கு கூடுதலானது; காற்றே எங்கும் நிறைந்திருக்கிறது; மெல்லத் தொட்டுச் சென்றால் தென்றல்; தூக்கிச் சென்றால் புயல்! உயிரை உள்ளிருத்தும் காற்று, ஓர் உருவம் கொண்டு நம்மிடம் பேசினால்...



மனிதா! மனிதா! அழைப்பது கேட்கிறதா? எங்குப் பார்க்கிறாய்? யாரைத் தேடுகிறாய்? உன் மூச்சை உள்ளே இழு, வெளியே விடு. உன் மூச்சின் உள் சென்று வெளிவரும் நான்தான் பேசுகிறேன். வாழும் உயிர்களின் உயிர்மூச்சு நான். என்னைக் கண்களால் காணமுடியாது; மெய்யால் உணரமுடியும். என்னால் மழை; என்னால் பருவமாற்றம்; என்னால் இசை; என்னாலும் இலக்கியம்; இன்னும் என்னை யாரென்று தெரியவில்லையா? நான்தான் காற்று.

தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார். அவற்றுள் என்னையும் ஒன்றாய்ச் சேர்த்தது எனக்குப் பெருமையே!

உயிராக நான்

உங்களின் இயக்கத்தையும் உலக உயிர்களின் இயக்கத்தையும் தீர்மானிப்பது என் இயக்கம்தானே! அதனால்தான் திருமூலர் தம் திருமந்திரத்தில் மூச்சுப்பயிற்சியே உடலைப்

10th_Tamil_Unit 2.indd 26 2/14/2023 6:40:51 PM

பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியுள்ளார். பிற்கால ஔவையார் தம் குறளில் வாயுதாரணை எனும் அதிகாரத்தில்,

வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
ஆயுள் பெருக்கம்உண் டாம்

– ஔவை குறள், 49

என்று என்னைச் சிறப்பித்துள்ளார்.

பல பெயர்களில் நான்

உங்களின் பெயருடன் ஒரே ஒரு செல்லப்பெயரும் உங்களுக்கு இருக்கலாம். ஆனால் எனக்கோ இந்தப் பூவுலகில் பல பெயர்கள் உண்டு. காற்று, வளி, தென்றல், புயல், சூறாவளி எனப் பல்வேறு பெயர்களால் நான் அழைக்கப்படுகிறேன். பருவநிலை, சூழல், வீசும் வேகம் ஆகியவற்றிற்கேற்பத் தென்றல்காற்று, பூங்காற்று, கடல்காற்று, பனிக்காற்று, வாடைக்காற்று, மேல்காற்று, கீழ்க்காற்று, மென்காற்று, இளந்தென்றல், புழுதிக்காற்று, ஆடிக்காற்று, கடுங்காற்று, புயல்காற்று, பேய்க்காற்று, சுழல்காற்று, சூறாவளிக்காற்று எனப் பல்வேறு பெயர்களால் நான் அழைக்கப்படுகிறேன்.

நான்கு திசையிலும் நான்

நான் வீசுகின்ற திசையைக் கொண்டும் தமிழர்கள் எனக்குப் பெயர் சூட்டியுள்ளனர்.

கிழக்கு என்பதற்குக் குணக்கு என்னும் பெயருமுண்டு. கிழக்கிலிருந்து வீசும்போது நான் கொண்டல் எனப்படுகிறேன். கொண்டலாக நான் குளிர்ச்சி தருகிறேன்; இன்பத்தைத் தருகிறேன்; மழையைத் தருகிறேன்; கடல் பகுதிக்கு மேலுள்ள மழைமேகங்களைச் சுமந்து வருவதால் மழைக்காற்று எனப்படுகிறேன்.

மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயருமுண்டு. மேற்கிலிருந்து வீசும்போது நான் கோடை எனப்படுகிறேன்; மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுகிறேன்; வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக்காற்றாகிறேன்.

வடக்கு என்பதற்கு வாடை என்னும் பெயருமுண்டு. வடக்கிலிருந்து வீசும்போது நான் வாடைக்காற்று எனப்படுகிறேன். நான் பனிப்பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளர்ச்சியான ஊதைக்காற்று எனவும் அழைக்கப்படுகிறேன்.

தெற்கிலிருந்து வீசும்போது நான் தென்றல் காற்று எனப்படுகிறேன்; மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமான இயல்பு கொள்கிறேன்.

இலக்கியத்தில் நான்

தென்றலாகிய நான், பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளி வரும்பொழுது கூடவே வண்டுகளையும் அழைத்து வருவதால், இளங்கோவடிகள் என்னை,

"வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்"

– சிலம்பு 2: 24

என நயம்பட உரைக்கிறார்.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் எழுதிய பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது என்னும் சிற்றிலக்கியத்தில் பெண்ணொருத்தி,

"நந்தமிழும் தண்பொருநை நன்னதியும்
சேர் பொருப்பிற்
செந்தமிழின் பின்னுதித்த தென்றலே"

எனத் தூது செல்ல என்னை அன்போடு அழைக்கிறாள். அது மட்டுமல்ல,

"நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே"

எனப் பலவாறாக இன்றளவும் இலக்கியப் படைப்புகளிலும், திரையிசைப் பாடல்களிலும் நான் நீங்கா இடம் பிடித்திருக்கிறேன்.

முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்

பழங்காலத்தில் கடல்கடந்த பயணங்கள் அனைத்தும் காற்றாகிய என்னால் இயக்கப்பட்ட பாய்மரக் கப்பல்களால்தான் நிகழ்ந்தன.

"நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!
களிஇயல் யானைக் கரிகால் வளவ!"

– புறம். 66

10th_Tamil_Unit 2.indd 27 2/14/2023 6:40:52 PM



தெரியுமா?

ஹிப்பாலஸ் பருவக்காற்று

கி.பி. (பொ. ஆ.) முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸ் என்னும் பெயர்கொண்ட கிரேக்க மாலுமி, பருவக் காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு நேரே விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தார். அதுமுதல், யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்துசென்றன. அந்தப் பருவக் காற்றுக்கு யவனர், அதைக் கண்டுபிடித்தவர் பெயராகிய ஹிப்பாலஸ் என்பதையே சூட்டினார்கள். ஹிப்பாலஸ் பருவக்காற்றின் வழியில் யவனக் கடல் வணிகம் பெருகிற்று.

எனக் கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடிய பாடலில், சங்ககாலப் பெண் புலவர் வெண்ணிக்குயத்தியார் 'வளி' எனக் குறிப்பிட்டுச் சிறப்புச் செய்திருப்பது என்னையே!

கிரேக்க அறிஞர் "ஹிப்பாலஸ்" (*Hippalus*) என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார் என்பது வரலாறு. அதற்கும் முன்னரே என் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!

மழை தருவேன் நான்

நான் பருவ காலங்களில் மேகத்தைக் கொண்டுவந்து மழையைத் தருகிறேன்; தென்மேற்குப் பருவக்காற்றாக, வடகிழக்குப் பருவக்காற்றாக உலா வந்து மேகத்தைக் குளிர்வித்து மழையாகத் தருகின்றேன். கதிரவனின் வெப்பத்தால் சூடாகி, அடர்த்தி குறைந்து மேலே செல்லும் நான், அங்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பியும் பருவக்காற்றாக மாறுகின்றேன்; ஜூன்முதல் செப்டம்பர்வரை தென்மேற்குப் பருவக்காற்றாகவும் அக்டோபர்முதல் டிசம்பர்வரை வடகிழக்குப் பருவக்காற்றாகவும் வீசுகின்றேன்; இவ்வாறாக மழைப்பொழிவைத் தருகின்றேன். இந்தியாவின் முதுகெலும்பு வேளாண்மைதானே! இவ்வேளாண்மை சிறப்பதிலும் நாடு தன்னிறைவு பெறுவதிலும் நான் பங்கெடுக்கின்றேன். இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையளவினைத் தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கின்றேன்.

தடம் பதிப்பேன் நான்

வடகிழக்குப் பருவ காலங்களில், தாழ்வுமண்டலமாய்த் தவழ்ந்து புயலாய் மாறிப் புறப்படுவேன். ஆற்றலுடன் வீறுகொண்டு பயணிக்கத் தொடங்கினால் என்னைத் தடுக்க யாராலும் இயலாது; மழையாகப் புயலாகத் தடம் பதிப்பேன் நான்.

என் ஆற்றலை, *வளி மிகின் வலி இல்லை (புறம். 51)* என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார். இதுபோன்றே மதுரை இளநாகனார் (புறம். 55) கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று என் வேகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஆற்றலாக நான்

நான் உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கின்றேன்; தாவரங்களின் ஒளிச்சேர்க்கையில் உணவு உற்பத்திக்கு உதவுகின்றேன்; விதைகளை எடுத்துச் சென்று பல இடங்களிலும் தூவுகின்றேன். பூவின், தேனின், கனியின், தாவரத்தின், உயிரினத்தின் மணத்தை என்னில் சுமந்து, புவியின் உயிர்ச் சங்கிலித்தொடர் அறுபடாதிருக்க உதவுகின்றேன். இவை மட்டுமல்ல, உங்கள் நவீன தொலைத்தொடர்பின் மையமாகவும் நானே உள்ளேன்.

'காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக்கொள்' எனும் புதுமொழிக்கு வித்தாகிறேன். புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் வளமான என்னைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும்போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிமவளங்கள் பாதுகாக்கப்படக் காரணமாகிறேன். உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடம்பெற்றுள்ளது என்பதும் இந்தியாவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்பதும் எனக்குப் பெருமையே. ஆனால், என்னை

10th_Tamil_Unit 2.indd 28 2/14/2023 6:40:52 PM

தெரிந்து தெளிவோம்

ஒருகாலத்தில் குழாயிலிருந்து அப்படியே தண்ணீர் குடித்த நாம், நீர் மாசுபாடு அடைந்ததன் காரணமாக அதனைத் தூய்மைப்படுத்தியும் விலைக்கு வாங்கியும் குடிக்கும் நிலையில் இருக்கிறோம். இப்போது காற்றும் மாசுபாடு அடைந்துவருகிறது. தண்ணீரைப் புட்டியில் அடைத்து விற்பது போன்று, உயிர்வளியையும் (ஆக்சிஜன்) விற்கும் நிலையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஒரு புட்டியின் விலை 1000 ரூபாய்க்கும் அதிகமாகும்.

உலகிலேயே அதிகளவு மாசுபடுத்தும் நாடுகளில் இரண்டாம் இடம் இந்தியாவுக்கு என்பதை அறியும்போது எனக்குப் பெருந்துயரே.

மனிதனால் மாசடையும் நான்

நீங்கள் உணவின்றி ஐந்து வாரம் உயிர்வாழ முடியும்; நீரின்றி ஐந்து நாள் உயிர் வாழ முடியும்; ஆனால் நானின்றி ஐந்து நிமிடம் கூட உங்களால் உயிர் வாழ முடியாது. இந்த உண்மையை நீங்கள் உணர்ந்தும் என்னை நேசிப்பதில்லை. ஒவ்வொரு விநாடியும் நான் உங்களால் மாசுபடுகிறேன். குப்பைகள், நெகிழிப் பைகள், மெதுஉருளைகள் (tyres) போன்றவற்றை எரிப்பது, குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டப்பட்ட அறை ஆகியவற்றை மிகுதியாகப் பயன்படுத்துவது, மிகுதியாகப் பட்டாசுகளை வெடிப்பது, புகை வடிகட்டி இல்லாமல் தொழிற்சாலைகளை இயக்குவது, பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தாத தனிமனிதரின் மிகுதியான ஊர்திப்பயன்பாடு, வானூர்திகள் வெளிவிடும் புகை என உங்களின் அத்தனை செயல்பாடுகளாலும் என்னைப் பாழாக்குகிறீர்கள். இதனால் கண் எரிச்சல், தலைவலி, தொண்டைக்கட்டு, காய்ச்சல், நுரையீரல் புற்றுநோய், இளைப்பு நோய் எனப் பல நோய்களால் துன்பமடைகிறீர்கள். இந்தியாவில் மிகுந்த உயிரிழப்பைத் தரும் காரணங்களில் ஐந்தாம் இடம் பெறுவது காற்று மாசுபாடே என்பது தெரியுமா உங்களுக்கு?

நான் மாசுபடுவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைவதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) தெரிவித்துள்ளது.

என்னுடைய மேலடுக்கில் உள்ள ஓசோன் படலத்தின்மூலம் கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்களைத் தடுக்கும் அரணாக விளங்குகின்றேன். புவியை ஒரு போர்வை போலச் சுற்றிக்கிடந்து பரிதியின் கதிர்ச்சூட்டைக் குறைத்துக் கொடுக்கின்றேன். உங்கள் வசதிக்காக என்னை வைத்து குளோரோ புளோரோ கார்பன் என்னும் நச்சுக்காற்றை வெளிவிடும் இயந்திரங்களான குளிர்பதனப் பெட்டி முதலானவற்றை உருவாக்கியிருக்கிறீர்கள்! அந்த நச்சு, ஓசோன் படலத்தை ஓட்டையிடுகின்றது; இதனால் புறஊதாக் கதிர்கள் நேரடியாக உங்களைத் தாக்குகின்றன. இதனால் ஓரறிவு முதல் ஆறறிவுவரை உள்ள அனைத்து உயிர்களும் துன்பம் அடைகின்றன. உங்கள் கண்களும் தோலும் பாதிப்படைகின்றன. இதைக் குறைக்கும் விதமாக ஹைட்ரோ கார்பன் (HC) என்னும் குளிர்பதனியை இப்போது பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றீர்கள்.

உங்கள் நடவடிக்கைகளால் எனக்குள் கலந்துவிடும் கந்தக டை ஆக்சைடு, நைட்ரஜன் டை ஆக்சைடு ஆகியவை மழை பெய்யும்போது நீரில் கரைந்துவிடுவதால் அமிலமழை பெய்கிறது. இதனால் மண், நீர், கட்டடங்கள், காடுகள், நீர்வாழ் உயிரினங்கள் ஆகியவை துன்பத்துக்குள்ளாகின்றன. இதனால் நான் மிக வருந்துகிறேன். உங்கள் விழிப்புணர்வாலும் காற்றைத் தூய்மையாக்கும் உங்கள் நடவடிக்கைகளாலும் மட்டுமே நான் வருந்தாமல் இருக்க இயலும்.

10th_Tamil_Unit 2.indd 29 2/14/2023 6:40:52 PM

மரம் தரும் வரம் நான்

ஒரு மணித்துளிக்கு 12 முதல் 18 முறை மூச்சுக்காற்றாய் நீங்கள் வெளிவிடும் கார்பன் டை ஆக்சைடை எடுத்துக்கொண்டு உங்கள் நுரையீரலுக்குத் தேவையான உயிர்வளியைத் (ஆக்சிஜன்) தரும் என் தோழர்களான மரங்களை வளருங்கள். மேம்பட்ட குப்பை மேலாண்மையை மேற்கொள்ளுங்கள்; பொதுப்போக்குவரத்துக்கு முன்னுரிமை தாருங்கள்; மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளை மிகுதியாகப் பயன்படுத்துங்கள்; கச்சா எண்ணெய், நிலக்கரி முதலிய புதைவடிவ எரிபொருள்களைத் தவிருங்கள்; வீட்டுச் சமையலுக்கு விறகுகளைப் பயன்படுத்துவதைக் கைவிடுங்கள்.

நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறீர்கள். என்னை, ஒருநாள் மட்டும் கொண்டாடினால் போதாது. நீங்கள் ஒவ்வொரு நாளும் கொண்டாட வேண்டும். ஆம், என்னைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இதுவே என் ஆசையாகும். இதுவே உங்களின் எதிர்கால நலனும் ஆகும்.



தெரியுமா?

குளோரோ புளோரோ கார்பனின் ஒரு மூலக்கூறு, ஒரு இலட்சம் ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்துவிடும்.

பின் வருத்தங்கள்

மென்துகிலாய் உடல்வருடி
வாஞ்சையுடன் மனம்வருடி
பகலெரிச்சல் பணக்கவலை
பயக் குழப்பம்
மொட்டை மாடித்தனியிரவில்
நட்சத்திரக் கணக்கெடுப்பில்
மறுபடியும் தவறவிட்ட
தாளாத தன்னிரக்கம்
இவை எல்லாமே
எளிதாகக் கரைந்து போகும்
மாயங்கள் செய்கின்ற
பூங்காற்றே!
இத்தனை நாள்
உனைப் பாடாதிருந்து விட்டேன்
புதுக் கவிதையில் சிக்கிப் போனேன்.

தேவகோட்டை வா.மூர்த்தி



எத்திசையும் புகழ் மணக்க.....

தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழா

தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் திருவெம்பாவை, திருப்பாவை பாடல்களைத் தாய் மொழியில் எழுதிவைத்துப் பாடுகின்றனர்.

– தனிநாயக அடிகள்(ஒன்றே உலகம்)



கற்பவை கற்றபின்...

1. காற்று பேசியதைப் போல, நிலம் பேசுவதாக எண்ணிக்கொண்டு பேசுக.
2. 17ஆம் நூற்றாண்டில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு இன்றும் உலக விந்தையாகத் திகழும் தாஜ்மகால், இன்றளவில் மஞ்சள், பழுப்பு என நிறம் மாறிக் காட்சியளிப்பதன் காரணங்களையும் தீர்வுகளையும் கலந்துரையாடுக.

10th_Tamil_Unit 2.indd 30 2/14/2023 6:40:52 PM

கவிதைப் பேழை

இயற்கை

உ

காற்றே வா!

– பாரதியார்

நுழையும்முன்

நம்மை எப்போதும் சூழ்ந்திருக்கும் இயற்கையை நாம் என்றேனும் உற்றுப் பார்க்கிறோமா? இருளில் நடந்தாலும் வானத்து விண்மீன்களையும் நம்முடனேயே நடந்துவரும் நிலவையும் கண்டு மகிழ்கிறோமா? காடு, மலை, அருவி, கதிரவன் இவற்றோடு இயைந்ததே இயற்கை வாழ்வு. 'நீரின்றி அமையாது உலகு' என்றாற் போல 'காற்றின்றி அமையாது உலக உயிரியக்கம்' என்பதையே வெவ்வேறு கோணங்களில் காலந்தோறும் கவிஞர்கள் பலரும் பாடிவருகிறார்கள்.



காற்றே, வா.
மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா;
இலைகளின்மீதும், நீரலைகளின்மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண – ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு.

காற்றே, வா.
எமது உயிர் – நெருப்பை நீடித்துநின்று நல்லொளி தருமாறு
நன்றாக வீசு.

சக்தி குறைந்துபோய், அதனை அவித்துவிடாதே.
பேய்போல வீசி அதனை மடித்துவிடாதே.
மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம்
நின்று வீசிக் கொண்டிரு.
உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்.

உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்.
உன்னை வழிபடுகின்றோம்.

பாரதியார் கவிதைகள்

சொல்லும் பொருளும்:

மயலுறுத்து – மயங்கச்செய்
ப்ராண – ரஸம் – உயிர்வளி
லயத்துடன் – சீராக

10th_Tamil_Unit 2.indd 31 2/14/2023 6:40:53 PM

நூல் வெளி

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா', 'சிந்துக்குத் தந்தை' என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர்; எட்டயபுர ஏந்தலாக அறியப்பட்டவர்; கவிஞர்; கட்டுரையாளர்; கேலிச்சித்திரம்–கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர்; சிறுகதை ஆசிரியர்; இதழாளர்; சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும், பெண்ணடிமைத்தனத்தையும் தன் பாடல்களில் எதிர்த்து எழுதியவர்; குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய காவியங்களையும் கண்ணன் பாட்டையும் பாப்பா பாட்டு, புதிய ஆத்திசூடி என, குழந்தைகளுக்கான நீதிகளையும் பாடல்களில் தந்தவர்; இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர். பாட்டுக்கொரு புலவன் எனப் பாராட்டப்பட்டவர் பாரதியார்; இவருடைய கவிதைத் தொகுப்பிலுள்ள காற்று என்னும் தலைப்பிலான வசனகவிதையின் ஒரு பகுதியே பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

தெரிந்து தெளிவோம்

உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது. ஆங்கிலத்தில் Prose Poetry (Free verse) என்றழைக்கப்படும் இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. உணர்ச்சி பொங்கக் கவிதை படைக்கும் இடங்களில் யாப்பு, தடையாக இருப்பதை உணர்ந்த பாரதியார் இவ்வடிவத்தை இலகுவாகக் கையாண்டுள்ளார். இவ்வசன கவிதையே புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணமாயிற்று..

கற்பவை கற்றபின்...

1. இவ்வசன கவிதையில் இடம்பெற்றுள்ள வேண்டுகோள் சொற்களும் கட்டளைச் சொற்களும் (வாசனையுடன் வா, அவித்து விடாதே.....) கவிதையின் உட்பொருளை வெளிப்படுத்தத் துணைநிற்பது குறித்துப் பேசுக.

2. "திக்குகள் எட்டும் சிதறி – தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
பக்க மலைகள் உடைந்து வெள்ளம்
பாயுது பாயுது பாயுது – தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம் – அண்டம்
சாயுது சாயுது சாயுது – பேய்கொண்டு
தக்கை யடிக்குது காற்று – தக்கத்
தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட" –பாரதியார்

இது போன்ற இயற்கையொலிகளை உணர்வுடன் வெளிப்படுத்தும் கவிதைகளைத் திரட்டி வந்து வகுப்பறையில் படித்துக்காட்டுக.

10th_Tamil_Unit 2.indd 32 2/14/2023 6:40:53 PM

கவிதைப் பேழை

இயற்கை

உ

முல்லைப்பாட்டு

– நப்பூதனார்

நுழையும்முன்

இயற்கைச் சூழல் நமக்குள் இனிய உணர்வுகளைத் தூண்டுகிறது. தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வைக் கொண்டிருந்தனர். மழைக்காலத்தில் அவர்கள் வாழ்வை எதிர்கொள்கிற இயல்பு இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மழையின் சீற்றம் இயல்பு வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்களைச் சங்க இலக்கியம் படம்பிடித்துக் காட்டுகிறது.



நல்லோர் விரிச்சி கேட்டல்

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை,
அருங்கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ்இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப
**சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
*நன்னர் நன்மொழி கேட்டனம் **

அடி : 1–17

10th_Tamil_Unit 2.indd 33 2/14/2023 6:40:56 PM

சொல்லும் பொருளும்

நனந்தலை உலகம் – அகன்ற உலகம்
நேமி – சக்கரம்
கோடு – மலை
கொடுஞ்செலவு – விரைவாகச் செல்லுதல்
நறுவீ – நறுமணமுடைய மலர்கள்
தூஉய் – தூவி
விரிச்சி – நற்சொல்
சுவல் – தோள்

பாடலின் பொருள்

அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. வலம்புரிச்சங்கு பொறித்த கைகளையுடைய திருமால், குறுகிய வடிவம் கொண்டு மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்பொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம். அம்மேகம், ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்டு, வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிகிறது.

துன்பத்தைச் செய்கின்ற அம்மாலைப்பொழுதில், முதிய பெண்கள் மிகுந்த காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர். யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள்; அந்த மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டு வந்த நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின்முன் தூவினர். பிறகு தெய்வத்தைத் தொழுது, தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

அங்கு, சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக்கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள். குளிர்தாங்காமல் கைகளைக் கட்டியபடி நின்ற அவள், "புல்லை மேய்ந்து உன் தாய்மார் வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் ஓட்டிவர இப்போது வந்துவிடுவர், வருந்தாதே" என்றாள். இது நல்ல சொல் எனக்கொண்டு முதுபெண்கள் தலைவியிடம் நற்சொல்லை நாங்கள் கேட்டோம் என்று கூறினர். இவ்வாறு தலைவன் வருகை குறித்து முதுபெண்டிர் விரிச்சி கேட்டு நின்றனர்.

நின் தலைவன் பகைவரை வென்று திறைப்பொருளோடு வருவது உறுதி. தலைவியே! மனத்தடுமாற்றம் கொள்ளாதே! என ஆற்றுப்படுத்தினர் முதுபெண்டிர்.

இலக்கணக்குறிப்பு

மூதூர் – பண்புத்தொகை
உறுதுயர் – வினைத்தொகை
கைதொழுது – மூன்றாம் வேற்றுமைத் தொகை
தடக்கை – உரிச்சொல் தொடர்

பகுபத உறுப்பிலக்கணம்

பொறித்த – பொறி + த் + த் +அ
பொறி – பகுதி
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி


தெரிந்து தெளிவோம்

விரிச்சி

ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள், மக்கள் நடமாட்டம் குறைவாக இருக்கும் ஊர்ப்பக்கத்தில் போய், தெய்வத்தைத் தொழுது நின்று அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர்; அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்மையில் முடியும் என்றும் தீய மொழியைக் கூறின் தீதாய் முடியும் என்றும் கொள்வர்.

10th_Tamil_Unit 2.indd 34 2/14/2023 6:40:56 PM

பாடப்பகுதிப் பாடலில் இடம்பெற்றுள்ள முதல் கரு உரிப்பொருள்கள்



நூல் வெளி

முல்லைப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இது 103 அடிகளைக் கொண்டது. இப்பாடலின் 1– 17அடிகள் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன. முல்லைப்பாட்டு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது; முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது; பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் இது. இதைப் படைத்தவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்.

கற்பவை கற்றபின்...

1. *முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலை உணர முடிகிறதா? உங்களின் கருத்துகளைப் பதிவு செய்க.*

2. *குறிப்புகளைக் கொண்டு ஆர்வமூட்டும் வகையில் கதை/நிகழ்வை எழுதுக.*

   அமைதி – வனம் – மனத்தைத் தொட்டது – கொஞ்சம் அச்சம் – ஆனால் பிடித்திருந்தது – இரவில் வீட்டின் அமைதியை விட – வனத்தின் அமைதி – புதுமை – கால்கள் தரையில் – இலைகளின் சலசலப்பு – பறவைகள் மரங்களின் மேல் – சிறகடிப்பு – அருகில் திரும்பியவுடன் – திடீரென ஆரவார ஓசை – தண்ணீரின் ஓட்டம் – அழகான ஆறு – உருண்ட சிறுகூழாங்கற்கள் –இயற்கையின் கண்காட்சி

10th_Tamil_Unit 2.indd 35 2/14/2023 6:40:56 PM

விரிவானம்

இயற்கை

உ


புயலிலே ஒரு தோணி

– ப.சிங்காரம்

நுழையும்முன்

இயற்கையின் அசைவுகள் அனைத்தும் அழகிய நாட்டியமாய் அமையும்போது இனிமையும் மகிழ்வும் ஒருங்கே பெறுகிறோம். அதே இயற்கையின் அசைவு சீற்றமாய், ஊழித் தாண்டவமாக மாறுகையில் எதிர்நிற்க இயலாது தோற்றுத்தான் போகிறோம். சுற்றியுள்ள இயற்கை நம்மைச் சுருட்டிச் செல்ல எத்தனிக்கும்போது, புயலின் பெருங்காட்சி உயிரை உறையவைக்கிறது. அதில் கிடைக்கும் பட்டறிவு அனைவருக்கும் பயன்படும் இலக்கியமாகிறது. இந்த நெடுங்கதையின் சில பக்கங்களும் அப்படித்தான்... புயலின் சீற்றத்தைக் கண்முன் விவரிக்கின்றன , புயல் மழை தெறிக்கும் அக்காட்சி...

[பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தெற்காசிய நாடுகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் குடியேறினர். அவ்வாறு குடியேறிய இனங்களில் தமிழினமும் ஒன்று. தமிழ்க்குடிகள் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசிய நாடுகளில் நெடுங்காலமாக வாழ்ந்துவருகின்றனர். நூலாசிரியர் அவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒருவர். அவர் இந்தோனேசியாவில் மெபின் நகரில் இருந்தபோது இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்தது. ஆசிரியரின் நேரடி அனுபவங்களோடு கற்பனையும் கலந்த கதைதான் **புயலிலே ஒரு தோணி** என்னும் புதினம். கடற்பயணத்தில் கண்ட காட்சிகளும், அதன் தொடர்ச்சியாக நடைபெறும் நிகழ்வுகளும்தான் இக்கதைப்பகுதி]



கலக்கும் காற்று கலங்கும் கப்பல்

கொளுத்திக்கொண்டிருந்த வெயில் இமைநேரத்தில் மறைந்துவிட்டது; புழுங்கிற்று. பாண்டியன் எழுந்து போய் அண்ணாந்து பார்த்தான். மேகப் பொதிகள் பரந்து திரண்டொன்றிக் கும்மிருட்டாய் இறுகி நின்றன. அலைகள் எண்ணெய் பூசியவை போல் மொழுமொழுவென நெளிந்தன. காற்றையே காணோம். ஒரே இறுக்கம். எதிர்க்கோடியில் வானையும் கடலையும் மாறிமாறிப் பார்த்தவாறு *கப்பித்தானுடன் பரபரப்பாகப் பேசிக்கொண்டிருந்த மாலுமிகள் திடுமெனப் பாய்மரத்தை நோக்கி ஓடிச்சென்று கட்டுக் கயிறுகளை இறுக்குகிறார்கள். விவரிக்க இயலாத ஓர் உறுத்தல் ஒவ்வோர் உணர்விலும்பட்டது. எல்லோரும் எழுந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து மிரண்டு விழித்தனர்.

கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன. அதே சமயம் மதிப்பிட முடியாத விரைவும் பளுவும் கொண்ட

10th_Tamil_Unit 2.indd 36 2/14/2023 6:40:57 PM

மோதல் *தொங்கானையும் அதிலிருந்து நடப்பன கிடப்பனவற்றையும் உலுக்கிற்று. வானம் உடைந்து கொட்டுகொட்டென்று வெள்ளம் கொட்டியது. சூறாவளி மாரியும் காற்றும் கூடிக்கலந்து ஆடிக் குதித்துக் கெக்கலித்தன. அலையோட்டம் தெரியவில்லை – வானுடன் கடல் கலந்துவிட்டது. மழை தெரியவில்லை – வளியுடன் இணைந்துவிட்டது. தொங்கான் அப்படியும் இப்படியுமாய்த் தாவிக்குதித்து விழுந்து திணறித் தத்தளிக்கிறது. எலும்புகள் முறிவதுபோல் நொறுநொறு நொறுங்கல் ஒலி. தலைக்கு மேல் கடல்... இருளிருட்டு, இருட்டிருட்டு, கடல் மழை புயல் வானம்... எங்கிருந்தோ தொங்கிய வடக்கயிற்றை வலக்கையால் பற்றிக் கிடந்தான். அருவியருவி, உப்பருவி, கடலருவி. மற்றவர்கள் எங்கேயெங்கே? மின்னொளி, கப்பித்தான் பொந்து, தாவும் பேயுருவங்கள். சுறாமீன், ரம்பப்பல், காற்றோலக் கடல், சீற்ற மழை. உடலயர்வுப் புலன் மயக்கம்.

திடுமென அமைதி பாய்ந்து வந்து மிரட்டியது. வானும் கடலும் பிரிந்து தனித்துத் தென்பட்டன.

பலகை அடைப்புக்குள்ளிருந்து கப்பித்தான் கத்துகிறான்:

"ஓடி வாருங்கள்! இங்கே ஓடி வாருங்கள்! லெக்காஸ், லெக்காஸ்!"

பாண்டியன் எழுந்தான். எங்கெங்கோ இடுக்குகளில் முடங்கிக் கிடந்த உருவங்கள் தலை தூக்கின. தொங்கான் தள்ளாடுகிறது – அலைகள் – மலைத்தொடர் போன்ற அலைகள் மோதித் தாக்குகின்றன. தட்டுத் தடுமாறி நடந்தோடினர்.

வானும் கடலும் வளியும் மழையும் மீண்டும் ஒன்று கூடிக் கொந்தளிக்கின்றன. வானம் பிளந்து தீ கக்கியது. மழை வெள்ளம் கொட்டுகிறது. வளி முட்டிப் புரட்டுகிறது. கடல், வெறிக் கூத்தாடுகிறது. தொங்கான் நடுநடுங்கித் தாவித் தாவிக் குதிகுதித்து விழுவிழுந்து நொறுநொறு நொறுங்குகிறது.

* கப்பித்தான் – தலைமை மாலுமி (கேப்டன்)

* தொங்கான் – கப்பல்

தெரியுமா?



புயலுக்குப் பெயர் சூட்டல் ஏன்?

- புயலுக்கு முன்பு பேரழிவு பற்றிய விழிப்புணர்வு, தயாரிப்பு, பேரிடர் மேலாண்மை, பாதிப்புக் குறைப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்வதற்குப் புயலின் பெயர்கள் உதவும்.
- வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை 2000ஆம் ஆண்டில் தொடங்கியது.
- புதுதில்லியில் உள்ள உலக வானிலை அமைப்பின் மண்டலச் சிறப்பு வானிலை ஆய்வு மையம் 2004 செப்டம்பரில் இருந்து புயல்களுக்குப் பெயர் வைக்க 64 பெயர்களைப் பட்டியலிட்டுள்ளது.
- வங்கதேசம், இந்தியா, மாலத்தீவுகள், மியான்மர், ஓமன், பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகள் இந்தப் பெயர்களை வழங்கியுள்ளன.
- இதில் இந்தியா கொடுத்து ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட பெயர்கள் அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல் (நான்கு பூதங்கள்), கடைசியாக லெஹர் (அலை). இன்னும் வரவிருப்பவை மேக், சாஹர், வாயு. 'கஜா' புயலின் பெயர் இலங்கை தந்தது. அடுத்து வந்த 'பெய்ட்டி' புயல் பெயர் தாய்லாந்து தந்தது.

முகத்தில் வெள்ளம். உடலில் வெள்ளம். கால் கையில் வெள்ளம். உடை, உடலை இறுக்கியிறுக்கி ரம்பமாய் அறுக்கிறது. மரத்தூண், கல்தூண், இரும்புத்தூண், உயிர்த்தூண். தொங்கான் தாவி விழுந்து சுழல்கிறது. மூழ்கி நீந்துகிறது. தாவி நீந்துகிறது. இருட்டிருட்டு, கும்மிருட்டு, குருட்டிருட்டு. சிலுசிலு மரமரப்பு. நொய்ங் புய்ங் நொய்ங் புய்ங் நொய்ங் புய்ங். இடி முழக்கச் சீனப் பிசாசுகள் தாவி வீசுகின்றன. மூடைகள் சிப்பங்கள் நீந்தியோடி மறைகின்றன. தொங்கான் குதித்து விழுந்து நொறுநொறு

10th_Tamil_Unit 2.indd 37 2/14/2023 6:40:57 PM

நொறுங்குகிறது. சுழன்று கிறுகிறுத்துக் கூத்தாடுகிறது. கடலலை அடிக்கிறது...

என்னயிது! சூரிய வெளிச்சம்! சூரியன் சூரியன் சூரியன் ... தொங்கானில் நீர் நெளிகிறது. பாய்மரம் ஒடிந்து கிடக்கிறது. பொத்துக் கொப்புளிக்கும் பவ்வ நீரை மாலுமிகள் இறைத்து ஊற்றுகின்றனர். ஓட்டையை அடைக்கிறார்கள். ஆப்பு அடிக்கிறார்கள். மரம் வெட்டுகிறார்கள், செதுக்குகிறார்கள்...

தொங்கானின் இருபுறமும், பின்னேயும் தேயிலைப் பெட்டிகளும் புகையிலைச் சிப்பங்களும் மிதந்து வருகின்றன.

பாண்டியன் நாற்புறமும் கடலைப் பார்த்து மலைத்து நின்றான்.

கடற்கூத்து எவ்வளவு நேரம் நீடித்ததென்று கணக்கிட முடியவில்லை. தொடங்கியபோதோ, முடிந்தபோதோ, முடிந்து வெகுநேரம் வரையிலோ யாரும் கடிகாரத்தைப் பார்க்கவில்லை. பார்த்தபோது எல்லாக் கடிகாரங்களும் நின்றுபோயிருந்தன.

தொங்கான் தன்வசமின்றித் தடுமாறிச் செல்கிறது. கடற்கூத்தின்போது மாலுமிகளால் தூக்கி எறியப்பட்ட பெட்டிகளும் சிப்பங்களும் மூடைகளும் மிதந்து உடன் வந்தன. புயல் மயக்கத்திலிருந்து யாரும் இன்னும் முற்றாகத் தெளிச்சி பெறவில்லை. பினாங்கு எவ்வளவு தொலைவில் இருக்கிறது, எப்போது போய்ச் சேரலாம்? பதில் சொல்வார் யாருமில்லை.

இரவில் மேல் தட்டுக்கு வந்து கப்பித்தான் வானையும் கடலையும் ஒரு சுற்றுப் பார்த்துவிட்டுத் தலையைச் சொறியலானான். பாண்டியன் நெருங்கிச் சென்று நிலவரத்தைக் கேட்டான். கப்பித்தான் சீனமும் மலாயும் கலந்த மொழியில் சொன்னான்.

"இனிமேல் பயமில்லை. இரண்டு நாளில் கரையைப் பார்க்கலாம்."

அன்றிரவு யாரும் உண்ணவில்லை; பேச்சாடவில்லை.

**

மறுநாள் காலையில் சூரியன் உதித்தான். கடல் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாய், முந்தியதைத் தொடர்ந்த பிந்தியதாய் வந்து மொத்து மொத்தென்று தொங்கானை மோதின. பறவை – மீன்கள் இருபுறமும் கூட்டம் கூட்டமாய்ப் பறந்து விளையாடின.

தொங்கான் மிதந்து சென்றது, கடலின் இழுவைக்கிணங்கி.

பகல் இரவாகி பகலாகி இரவாகியது. பிறைமதி வெளிச்சம் சிந்திற்று. கருநீலவானில் விண்மீன்கள் வெகு ஒளியுடன் கண் சிமிட்டி நின்றன. உப்பங்காற்று உடலை வருடியது. அவுலியா மீன்கள் கூட்டம் கூட்டமாய், கண்மாயில் முதுகு தெரிய மூழ்கி நீந்தும் எருமைகளென

பறவை மீன், அவுலியா மீன் – மீன் வகை
பிலவான் – இந்தோனேசியாவிலுள்ள இடம்

தெரிந்து தெளிவோம்

இடம்புரிப் புயலும் வலம்புரிப் புயலும்

மேட்டிலிருந்து தாழ்வுக்குப் பாயும் தண்ணீர்போல, காற்றழுத்தம் அதிகமான இடத்திலிருந்து, குறைவான இடத்துக்குக் காற்று வீசும். இப்படி வீசும் காற்றின் போக்கை, புவி தனது அச்சில் மேற்கிலிருந்து கிழக்காகச் சுழல்கையில் மாற்றும். நிலநடுக்கோட்டின் வடக்குப் பகுதியில் வீசும் காற்றை வலப்புறமாகத் திருப்பும். தெற்குப் பகுதியில் வீசும் காற்றை இடப்புறமாகத் திருப்பும். காற்றின் வேகம் கூடினால் இந்த விலக்கமும் கூடும். வங்கக் கடலில் வீசும் புயலும், அமெரிக்காவை, ஜப்பானை, சீனாவைத் தாக்கும் புயல்களும் இடம்புரிப் புயல்கள்! ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரை, ஹவாய் தீவுகளைத் தாக்கும் புயல்கள் வலம்புரிப் புயல்கள்! பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த கணித வல்லுநர் காஸ்பார்ட் குஸ்டாவ் கொரியாலிஸ் இந்த விளைவை 1835இல் கண்டுபிடித்தார். புயலின் இந்த இருவகைச் சுழற்சிக்குக் கொரியாலிஸ் விளைவு என்று பெயர்.

10th_Tamil_Unit 2.indd 38 2/14/2023 6:40:57 PM

முனகல் ஒலியோடு பின் தொடர்ந்தன. அலைகள் நெளிந்தோடின.

கடற்கூத்துக்குப் பின் ஐந்தாம் நாள் மாலையில் வானோடு வானாய்க் கடலோடு கடலாய் மரப்பச்சை தெரிவது போலிருந்தது. சுமார் அரைமணி நேரத்துக்குப் பின் மீன்பிடி படகு விளக்குகள் தென்பட்டன.

கரை! கரை! கரை!

அடுத்தநாள் முற்பகலில் பினாங்குத் துறைமுகத்தை அணுகினார்கள். மணிக்கூண்டு தெரிகிறது. வெல்ட்கீ கட்டட வரிசை. தெருவில் திரியும் வண்டிகள், ஆட்கள்...

தொங்கான் கரையை நெருங்கிப் போய் நின்றது. தொலைதூர நாவாய்கள் கரையை மொய்த்திருந்தன. ஒவ்வொன்றிலிருந்தும் கேள்வி எழுந்தது.

"எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கிருந்து வருகிறீர்கள்?"

"பிலவான்... பிலவான்."

சுமத்ரா பிரயாணிகள் துடுப்புப் படகில் இறங்கிப் போய் நடைபாலத்தில் ஏறி நடந்து சுங்க அலுவலகத்திற்குச் சென்று பிரயாண அனுமதிச் சீட்டுகளை நீட்டினர்.

"தமிரோ?" ஜப்பானிய அதிகாரி உறுமினார்.

"யா, மஸ்தா." தமிழர்கள்தாம் என்று தலைகுனிந்து வணங்கித் தெரிவித்தனர்.

பிரயாணிகளைச் சில விநாடிகள் நோட்டமிட்ட அதிகாரி, சீட்டுகளில் முத்திரை வைத்துத் திருப்பிக் கொடுத்தார்.

நூல் வெளி



புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய முதல் புதினம், புயலிலே ஒரு தோணி. இந்நூலாசிரியர் ப.சிங்காரம் (1920 – 1997). இந்தோனேசியாவில் இருந்தபோது, தென்கிழக்காசியப் போர் மூண்டது. அச்சூழலில், மலேசியா, இந்தோனேசியா பகுதிகளில் நிகழ்வதாக உள்ள கற்பனைப் படைப்பு இப்புதினம். அதில் கடற்கூத்து என்னும் அத்தியாயத்தின் சுருக்கப்பட்ட பகுதி இங்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

ப.சிங்காரம் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியைச் சேர்ந்தவர். வேலைக்காக இந்தோனேசியா சென்றார். மீண்டும் இந்தியா வந்து தினத்தந்தி நாளிதழில் பணியாற்றினார். இவர் அன்றைய சூழலில் அவருடைய சேமிப்பான ஏழரை இலட்சம் ரூபாயை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கினார்.

முன்தோன்றிய மூத்தகுடி

"பல் பழப் பலவின் பயங்கெழு கொல்லி"

அகநானூறு 208 : 22

நாமக்கல் மாவட்டத்தின் கொல்லிமலை

கற்பவை கற்றபின்...

1. கடலில் புயலின் தாக்கத்தினால் ஏற்பட்ட பதற்றத்தை வெளிப்படுத்த அடுக்குத் தொடர்களும் வருணனைகளும் எவ்வாறெல்லாம் பயன்பட்டுள்ளன என்பது குறித்து வகுப்பில் பேசுக.
2. நீங்கள் எதிர்கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதுக.
(மழை, வெள்ளம், புயல், வறட்சி)

10th_Tamil_Unit 2.indd 39 2/14/2023 6:40:58 PM

கற்கண்டு

இயற்கை

உ

தொகைநிலைத் தொடர்கள்

சொற்றொடர்

சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது "சொற்றொடர்" அல்லது "தொடர்" எனப்படும்.

எ.கா. நீர் பருகினான், வெண்சங்கு ஊதினான்.

தொகைநிலைத் தொடர்

பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் பெயர்ச்சொல்லும் சேரும் தொடரின் இடையில், வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி (மறைந்து) இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் நிற்குமானால் அதனைத் தொகைநிலைத்தொடர் என்று கூறுவர்.

எ.கா. கரும்பு தின்றான்.

மேற்கண்ட தொடர் கரும்பைத் தின்றான் என்னும் பொருளை உணர்த்துகிறது. இத்தொடரில் உள்ள இரண்டு சொற்களுக்கு நடுவில் ஐ என்னும் உருபு மறைந்து நின்று, அப்பொருளைத் தருகிறது. எனவே, இது தொகைநிலைத் தொடர் எனப்படும்.

தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும். அவை வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்பன ஆகும்.

வேற்றுமைத்தொகை

எ.கா. மதுரை சென்றார்

இத்தொடர் மதுரைக்குச் சென்றார் என விரிந்து நின்று பொருள் தருகிறது. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களுக்கு இடையில் "கு" என்னும் வேற்றுமை உருபு இல்லை. அது தொக்கி நின்று பொருளை உணர்த்துகிறது.

இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், கு, இன், அது, கண்) ஆகியவற்றுள் ஒன்று மறைந்து வந்து பொருள் உணர்த்துவது வேற்றுமைத்தொகை எனப்படும்.

உருபும் பயனும் உடன்தொக்க தொகை

எ.கா. தேர்ப்பாகன்

இத்தொடர் "தேரை ஓட்டும் பாகன்" என விரிந்து பொருளை உணர்த்துகிறது. கொடுக்கப்பட்டுள்ள தேர், பாகன் என்னும் சொற்களுக்கிடையில் "ஐ" என்னும் வேற்றுமை உருபும் "ஓட்டும்" என்னும் பொருளை விளக்கும் பயனும் மறைந்து வந்துள்ளன.

இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து மறைந்து வருவது உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும். இதுவும் வேற்றுமைத் தொகையே ஆகும்.

தமிழ்த்தொண்டு (தமிழுக்குச் செய்யும் தொண்டு) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

வினைத்தொகை

காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க, வினைப் பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து ஒரு சொல்லைப் போல் நடப்பது "வினைத்தொகை" எனப்படும். காலம் கரந்த பெயரெச்சமே வினைத்தொகையாகும்.

எ.கா. வீசுதென்றல், கொல்களிறு

10th_Tamil_Unit 2.indd 40 2/14/2023 6:40:58 PM

வீசு, கொல் என்பவை வினைப்பகுதிகள். இவை முறையே தென்றல், களிறு என்னும் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து காலத்தை வெளிப்படுத்தாத பெயரெச்சங்களாயின. மேலும் இவை வீசிய காற்று, வீசுகின்ற காற்று, வீசும் காற்று எனவும் கொன்ற களிறு, கொல்கின்ற களிறு, கொல்லும் களிறு எனவும் முக்காலத்திற்கும் பொருந்தும்படி விரிந்து பொருள் தருகின்றன. காலம்காட்டும் இடைநிலைகள் இப்பெயரெச்சங்களில் தொக்கி இருக்கின்றன.

வினைப்பகுதியும் அடுத்துப் பெயர்ச் சொல்லும் அமைந்த சொற்றொடர்களிலேயே வினைத்தொகை அமையும்.

பண்புத்தொகை

நிறம், வடிவம், சுவை, அளவு முதலான வற்றை உணர்த்தும் பண்புப்பெயருக்கும் அது தழுவிநிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் "மை" என்னும் பண்பு விகுதியும் ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

செங்காந்தள் – செம்மையாகிய காந்தள், வட்டத்தொட்டி – வட்டமான தொட்டி, இன்மொழி – இனிமையான மொழி.

இருபெயரொட்டுப் பண்புத்தொகை

சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு தொக்கி வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும்.

எ.கா. மார்கழித் திங்கள், சாரைப்பாம்பு.

திங்கள், பாம்பு ஆகிய பொதுப் பெயர்களுக்குமுன் மார்கழி, சாரை எனும் சிறப்புப் பெயர்கள் வந்து மார்கழி ஆகிய திங்கள் என்றும் சாரை ஆகிய பாம்பு என்றும் இருபெயரொட்டாக வந்துள்ளன.

உவமைத்தொகை

உவமைக்கும் பொருளுக்கும் (உவமேயம்) இடையில் உவமஉருபு மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும்.



எ.கா. மலர்க்கை (மலர் போன்ற கை)

மலர் – உவமை, கை – உவமேயம் (பொருள்) இடையே 'போன்ற' என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

உம்மைத்தொகை

இருசொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத்தொகையாகும். உம்மைத்தொகை எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும்.

எ.கா. அண்ணன் தம்பி, தாய்சேய்

அண்ணனும் தம்பியும், தாயும் சேயும் என விரிந்து பொருளை உணர்த்துகின்றன.

அன்மொழித்தொகை

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களில் உருபுகளும் அவை அல்லாத வேறு சொற்களும் மறைந்து நின்று பொருள் தருவது அன்மொழித் தொகை எனப்படும்.

எ.கா. சிவப்புச் சட்டை பேசினார்
முறுக்கு மீசை வந்தார்

இவற்றில் சிவப்புச் சட்டை அணிந்தவர் பேசினார், முறுக்கு மீசையை உடையவர் வந்தார் எனத் தொகைநிலைத்தொடர் அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருகின்றன.

10th_Tamil_Unit 2.indd 41 2/14/2023 6:40:59 PM

கற்பவை கற்றபின்...

வண்ணமிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக.

1. அன்புச்செல்வன் திறன்பேசியின் தொடுதிரையில் படித்துக்கொண்டிருந்தார்.
2. அனைவருக்கும் மோர்ப்பானையைத் திறந்து மோர் கொடுக்கவும்.
3. வெண்டைக்காய்ப் பொரியல் மோர்க்குழம்புக்குப் பொருத்தமாக இருக்கும்.
4. தங்கமீன்கள் தண்ணீர்த்தொட்டியில் விளையாடுகின்றன.


இணையச் செயல்பாடுகள்

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்!



படிநிலைகள்

1. கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இணையப் பக்கத்திற்குச் செல்க.
2. திரையில் தமிழ் நூல்களின் பட்டியல்கள் வரிசையாகக் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றில் தமிழ் இலக்கணம் என்னும் தலைப்பின் கீழ் உள்ள இலக்கணம் என்பதைச் சொடுக்கி, இடப்பக்கம் உள்ள சொல் என்பதைத் தேர்வு செய்க.
3. சொல்லின் வகைகள் அவற்றின் விளக்கம் மற்றும் எடுத்துக்காட்டுகளுடன் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றை ஒவ்வொன்றாகச் சொடுக்கி அறிந்து கொள்க.







செயல்பாட்டிற்கான உரலி

https://store.tamillexicon.com

கொடுக்கப்பட்டிருக்கும் படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

10th_Tamil_Unit 2.indd 42 2/14/2023 6:40:59 PM

திறன் அறிவோம்

YU4F3

பலவுள் தெரிக.

1. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

2. செய்தி 1 – ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி 2 – காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
செய்தி 3–காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம்செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!

அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி

இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

3. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

4. பெரிய மீசை சிரித்தார் – வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

5. பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) கொண்டல் – 1. மேற்கு

ஆ) கோடை – 2. தெற்கு

இ) வாடை – 3. கிழக்கு

ஈ) தென்றல் – 4. வடக்கு

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

குறுவினா

1. 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் – மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' – இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.

2. வசன கவிதை – குறிப்பு வரைக.

10th_Tamil_Unit 2.indd 43 2/14/2023 6:40:59 PM

3. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்க.

4. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

5. மாஅல் – பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.

சிறுவினா

1. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்.....முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால்..... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

2. சோலைக்(பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

3. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

   இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.

4. மழைநின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.

   குறிப்பு: இலைகளில் சொட்டும் நீர் – உடலில் ஓடும் மெல்லிய குளிர் – தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் – ஓடும் நீரில் காகிதக் கப்பல்.

நெடுவினா

1. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

2. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

3. மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
   வளரும் விழி வண்ணமே – வந்து
   விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
   விளைந்த கலை அன்னமே
   நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
   நடந்த இளந் தென்றலே – வளர்
   பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
   பொலிந்த தமிழ் மன்றமே

   –கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.

10th_Tamil_Unit 2.indd 44 2/14/2023 6:40:59 PM

மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

அந்த இடம்
காற்றே ! வா
உன்னைப் பாடாமல்
இருக்க முடியாது
ஏனெனில்
பாட்டின் மூல ஊற்றே
நீதான்
……
……
பொய்கையிடம் போனால்
குளிர்ந்து போகிறாய்
பூக்களைத் தொட்டால்
நறுமணத்தோடு வருகிறாய்
புல்லாங்குழலில் புகுந்தால்
இசையாகிவிடுகிறாய்
எங்களிடம்
வந்தால் மட்டுமே
அழுக்காகி விடுகிறாய்
மரங்களின்
ஊமை நாவுகள்
உன்னிடம் மட்டுமே
பேசுகின்றன
கடல் அலைகள்
உன்னோடு மட்டுமே
குதித்துக் கும்மாளமிடுகின்றன
வயலின் பச்சைப் பயிர்கள்
நீ வந்தால் மட்டுமே
ஆனந்த நடனம்
ஆடுகின்றன
நீ என்ன குதூகலமா?
கொண்டாட்டமா?
கோலாகலமா?

நெடுநாட்களாகவே
எனக்கொரு சந்தேகம்

விளக்குகளிலிருந்து
பறிக்கும் சுடர்களை

பூக்களிலிருந்து
திருடும் நறுமணத்தை

வீணையிலிருந்து
கவர்ந்த இசையை

எங்கே கொண்டு போய்
ஒளித்து வைக்கிறாய்?

– அப்துல் ரகுமான்.

தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக.

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்

எ.கா. இன்சொல் – பண்புத்தொகை – இன்சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.

10th_Tamil_Unit 2.indd 45 2/14/2023 6:40:59 PM

செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பூக்களைப் பற்றிய அரிய இலக்கியச் செய்திகள்

பூ உண்டு. ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள்: ஆல மலர்; பலா மலர்.

மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள்: சுள்ளி மலர், பாங்கர் மலர்.

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள்: அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன: நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப் பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை .

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

– கோவை.இளஞ்சேரன்

1. மலர் உண்டு; பெயரும் உண்டு – இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக.
2. அரும்பாகி மொட்டாகிப் பூவாகி.... என்பதை ஒத்து அமைந்துள்ள தொடரைக் கண்டறிக.
3. நீங்கள் அறிந்த இரு பூக்களின் பெயர்களையும் பயன்களையும் எழுதுக.
4. அரிய மலர் – இலக்கணக் குறிப்புத் தருக.
5. தொடரில் பொருந்தாப் பொருள்தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக.
   இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மனத்தை ஏற்றும்.

வாழ்த்துமடல் எழுதுக.

மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

பாரதியின் வசனநடை – சிட்டுக்குருவி

சிறியதானியம் போன்ற மூக்கு; சின்னக்கண்கள்; சின்னத்தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப்போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள்; இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண் மற்றொன்று பெண்.

– இது போன்று உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒன்றைப் பற்றி வசனநடையில் எழுதுக.

10th_Tamil_Unit 2.indd 46 2/14/2023 6:41:00 PM

மொழியோடு விளையாடு

சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.

1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்; நீக்காவிட்டாலும் வாசனை தரும்.
2. பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும்
3. இருக்கும்போது உருவமில்லை – இல்லாமல் உயிரினம் இல்லை.
4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் – கடையிரண்டில் நீந்திச் செல்லும்
5. ஓரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம்
   (காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)

நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.

1. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது.
2. புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது; அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன.
3. சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல்; பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன.
4. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்; மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும்; கசகசத்த உயிரினங்கள்.
5. நின்றுவிட்ட மழை தரும் குளிர்; சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.
6. குயில்களின் கூவலிசை; புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும்; இலைகளின் அசைவுகள்; சூறைக்காற்றின் ஆலோலம்.
   (வனத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம், நீரின் சிலிர்ப்பு)

   எ.கா. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது; வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது.
   தலைப்பு – காற்றின் பாடல்

அகராதியில் காண்க.

அகன்சுடர், ஆர்கலி, கட்புள், கொடுவாய், திருவில்

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



.....

.....

.....

.....

செயல்திட்டம்

தூய்மையான காற்றைப் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.

10th_Tamil_Unit 2.indd 47 2/14/2023 6:41:00 PM

நிற்க அதற்குத் தக

வானொலி அறிவிப்பு

ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புயலின்போது

புயலின்போது வெளியே செல்லவேண்டாம்.	வெளியேற நேர்ந்தால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின்போதே வெளியேறவும்.
தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.	மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியிலேயே தங்கவும்.
வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும்.	காற்று அடிப்பது நின்றாலும் எதிர்த்திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்கவேண்டாம்.
மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும்.	வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மின்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும்.

மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

கலைச்சொல் அறிவோம்

Storm	–	புயல்	*Land Breeze*	–	நிலக்காற்று
Tornado	–	சூறாவளி	*Sea Breeze*	–	கடற்காற்று
Tempest	–	பெருங்காற்று	*Whirlwind*	–	சுழல்காற்று

அறிவை விரிவு செய்

குயில்பாட்டு – பாரதியார்

அதோ அந்தப் பறவை போல – ச. முகமது அலி

உலகின் மிகச்சிறிய தவளை – எஸ்.ராமகிருஷ்ணன்



இணையத்தில் காண்க

1. *https://ta.wikipedia.org/wiki/காற்றுத்_திறன்*
2. *https://ta.wikipedia.org/wiki/வளி_மாசடைதல்*
3. *http://agritech.tnau.ac.in/ta/environment/envi_pollution_intro_air_ta.html*

10th_Tamil_Unit 2.indd 48 2/14/2023 6:41:00 PM

இயல் மூன்று

பண்பாடு

கூட்டாஞ்சோறு



உணவு ஆக்கலும் அளித்தலும் – 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், சிதம்பரம்.

கற்றல் நோக்கங்கள்

- நம் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றான விருந்தோம்பலின் மாண்பை உணர்ந்து பெருமிதத்துடன் பின்பற்றுதல்.
- உணவு வகைகளும் உணவு சமைக்கும் முறைகளும் மொழியில் நயம்படச் சொல்லப்படும் முறைமையைப் படித்துச் சுவைத்து அது போல ஈர்ப்புடன் எழுதப்பழகுதல்.
- உடலை மட்டும் வளர்க்கும் உணவுகளைத் தவிர்த்தல் குறித்தும் உயிரை உணர்வை வளர்க்கும் உணவுகளைக் குறித்தும் செய்திகளை அறிந்து வெளிப்படுத்துதல்.
- சிற்றூர் மக்களின் வாழ்வியல் முறைகளை வட்டார இலக்கியங்களின் நடையில் புரிந்து படித்தல்.
- மொழிப் பயன்பாட்டில் தொகாநிலைத் தொடர்களின் வகைகளை அறிந்து பயன்படுத்துதல்.

10th_Tamil_Unit 3.indd 49 13-02-2023 15:41:46

பண்பாடு

நு

விருந்து போற்றுதும்!

3CN62



முளிதயிர் பிசைந்த சோற்றை உருட்டி அனைவருக்கும் கையில் ஓர் உருண்டை கொடுத்து, உருண்டையின் நடுவில் வைத்த குழியில் புளிக்குழம்பு இட்டு உண்ணச் சொன்ன அன்னையின் அன்பில் தொடங்குகிறது அனைவருடனான பகிர்ந்துண்ணல். சிறு வயதில் மகனுடனோ மகளுடனோ வரும் நண்பர்களுக்கும் சேர்த்து அம்மா தரும் சிற்றுண்டியில் தொடங்குகிறது, தமிழரின் விருந்து போற்றுதல். தமிழர் மரபில் உணவோடு உணர்வையும் குழைத்துச் செய்த சமையல் விருந்தாகிறது.


தம் வீட்டுக்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

அறவுணர்வும் தமிழர் மரபும்

திருவள்ளுவர் இல்லறவியலில் 'விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே' அமைத்திருக்கிறார்; இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்; முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை "மோப்பக் குழையும் அனிச்சம்" என்ற குறளில் எடுத்துரைக்கிறார். விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.

"…… தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

– சிலப்பதிகாரம், 16:72,73



விருந்தோம்பல்
17 ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், சிதம்பரம்.

என்று கண்ணகி வருந்துகிறாள். கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததைவிட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாகக் குறிப்பிடுவதன் மூலம் விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.

கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள், விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

கலிங்கத்துப்பரணியிலும் செயங்கொண்டார் விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியுள்ளார்.

10th_Tamil_Unit 3.indd 50 13-02-2023 15:41:47

"பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால் வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்தும் அன்றி விளைவன யாவையே" – கம்பராமாயணம், 1:2:36	"விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" – கலிங்கத்துப்பரணி, 477

தனித்து உண்ணார்

தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்; அத்தகையோராலும்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை,

"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே……."

– புறநானூறு, 182

என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்.

அல்லில் ஆயினும்

விருந்தோம்பல் என்பது சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு தமிழருக்கு உண்டு. இதை

"அல்லில் ஆயினும் விருந்து வரின்
உவக்கும்"

என்று நற்றிணை (142) குறிப்பிடுகிறது.



தெரியுமா?

ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்

பண்டைத் தமிழர்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும்போது, அவர்களைப் பிரிய மனமின்றி வருந்தினர். மேலும், வழியனுப்பும் பொழுது அவர்கள் செல்லவிருக்கிற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்.

"காலின் ஏழடிப் பின் சென்று"

–பொருநராற்றுப்படை, 166

இன்மையிலும் விருந்தோம்பல்

வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர். தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி. இதனை,

குரல்உணங்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து
சிறிது புறப்பட்டன்றோ இலள்

என்று புறநானூறு (333) காட்சிப்படுத்துகிறது.

நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த தன் பழையவாளைப் பணையம் வைத்தான் தலைவன்; இன்றும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி,

நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்….

– புறநானூறு, 316

என்ற பாடலடிகளில் இடம்பெறுகிறது.

இளையான்குடி மாறநாயனாரின் வீட்டுக்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியமில்லை; எனவே, அன்று விதைத்துவிட்டு வந்த நெல்லை அரித்து வந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது.

நிலத்திற்கேற்ற விருந்து

நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை (அடி:160–163).

10th_Tamil_Unit 3.indd 51 13-02-2023 15:41:47

"இலையை மடிப்பதற்கு முந்தைய
வினாடிக்கு முன்பாக
மறுக்க மறுக்க
பரிமாறப்பட்ட கூடுதல் இட்லியில்
நீண்டு கொண்டிருந்தது
பிரியங்களின் நீள் சரடு"

–அம்சப்பிரியா

விருந்தை எதிர்கொள்ளும் தன்மை

இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை,

"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீ ரோ"

என்ற குறுந்தொகை (118) அடிகள் புலப்படுத்துகின்றன.

"மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்று கொன்றை வேந்தனில் ஔவையார் பாடியுள்ளார். அவர் பாடிய தனிப்பாடலில்,

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரெனவே புளித்த மோரும் – திறமுடனே
புள்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந்து இட்டான்ஈ(து)
எல்லா உலகும் பெறும்"

என்று அவர் கூறுவதிலிருந்து வள்ளல்களால் விருந்தினர் போற்றப்பட்டதை அறியமுடிகிறது.

உற்றாரோடு நின்ற விருந்து . . .

சங்க காலத்திலிருந்தே அரசராயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர். கால மாற்றத்தில் புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவிடுவது குறைந்தது. விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.

புதியவர்களான விருந்தினர்களை ஏற்பது குறைந்துவிட்ட காலத்தில், ஓரளவு தெரிந்தவர்களை மட்டுமே விருந்தினர்களாக ஏற்றனர். படிப்படியாக உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரையே விருந்தினர்களாகப் போற்றும் நிலைக்கு மாறினர்.

விருந்தோம்பல் இன்றும். . .

புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர் முன்னோர். இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை; அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை. இருப்பினும் திருவிழாக் காலங்களில்

தெரிந்து தெளிவோம்

வாழை இலையில் விருந்து

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.

தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர். உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும். ஏனென்றால் வலது கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம். இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள். உண்பவர் மனமறிந்து, அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்.

10th_Tamil_Unit 3.indd 52 13-02-2023 15:41:47

ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.

திருமணத்தை உறுதி செய்தல், திருமணம், வளைகாப்பு, பிறந்தநாள், புதுமனை புகுவிழா போன்றவற்றை இல்ல விழாக்களாகவே கொண்டாடினர். அப்போது மிகுதியான விருந்தினர்களை வரவேற்று உணவளித்து மகிழ்ந்தனர். அந்த இல்லவிழா நாள்களில் அப்பகுதி வாழ் மக்களும் வெளியூர் விருந்தினர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தனர்.

காலப்போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள் திருமணக்கூடங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டன. பண்பாட்டு மாற்றமாக இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும்வரை 'திருமண ஏற்பாட்டாளர்'களே செய்யும் விருந்தோம்பல் நடைபெறுவதைக் காணமுடிகிறது.

பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது. அந்த உயரிய தமிழ்ப் பண்பாடு இன்றைய தமிழர்களிடம் மேற்கூறிய முறைகளில் பின்பற்றப்படுகின்றது. காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் உயர் பண்பான விருந்தோம்பலைப் போற்றிப் பெருமிதம் கொள்வோம்.

எத்திசையும் புகழ் மணக்க.....

அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் 'வாழையிலை விருந்து விழா'வை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது. தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளைக் கொண்டு வாழையிலையில் விருந்து வைக்கின்றனர். முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய்க் கூட்டு, தினைப் பாயசம், அப்பளம் எனச் சுவையாகத் தமிழர் விருந்து கொடுக்கின்றனர். அங்கு வாழும் தமிழர்கள் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர். தொடர்ந்து பல பண்பாட்டு நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றனர்.





கற்பவை கற்றபின்...

1. வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல் – இவைபோன்ற செயல்கள் குறித்து உங்கள் வீட்டிலுள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்து வந்து கலந்துரையாடல் செய்க.
2. "இட்டதோர் தாமரைப்பூ
இதழ்விரித் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள்கூடி
இரையுண்ணும்....." பாரதிதாசனார்
இவ்வாறாகக் கவிதைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பகிர்ந்துண்ணல் குறித்துப் பேசுக.


10th_Tamil_Unit 3.indd 53 13-02-2023 15:41:47

பண்பாடு

நூ

காசிக்காண்டம்

– அதிவீரராம பாண்டியர்



விருந்தோம்பல் முறைகள் வேறுவேறாக இருந்தாலும் எல்லாச் சமூகங்களிலும் இப்பண்பாடு போற்றப்படுகிறது. விருந்தினரை உளமார வரவேற்று விருந்தளிக்கும் முறைபற்றி இலக்கியங்கள் பேசுகின்றன. விருந்தினர் மனம் மகிழக்கூடிய முறைகளில் விருந்தோம்ப வேண்டுமல்லவா? அத்தகைய பாடல் ஒன்று விருந்தோம்பும் நெறியை வரிசைப்படுத்திக் காட்டுகிறது.



*விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே *

இல்லொழுக்கம், (பா எண் : 17)

சொல்லும் பொருளும்

அருகுற – அருகில்
முகமன் – ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொற்கள்

10th_Tamil_Unit 3.indd 54 13-02-2023 15:41:48

பாடலின் பொருள்

விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை வியந்து உரைத்தல், நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல், முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல், 'வீட்டிற்குள் வருக' என்று வரவேற்றல், அவர் எதிரில் நிற்றல், அவர்முன் மனம் மகிழும்படி பேசுதல், அவர் அருகிலேயே அமர்ந்துகொள்ளுதல், அவர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில்வரை பின் தொடர்ந்து செல்லல், அவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகும்.

இலக்கணக்குறிப்பு

நன்மொழி – பண்புத்தொகை

வியத்தல், நோக்கல், எழுதல், உரைத்தல், செப்பல், இருத்தல், வழங்கல் } தொழிற்பெயர்கள்

பகுபத உறுப்பிலக்கணம்

உரைத்த – உரை + த் + த் + அ

உரை – பகுதி
த் – சந்தி
த் – இறந்த காலஇடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

வருக – வா(வரு) + க
வா – பகுதி
வரு எனத் திரிந்தது விகாரம்
க – வியங்கோள் வினைமுற்று விகுதி

"ஒப்புடன் முகம் மலர்ந்தே
உபசரித்து உண்மை பேசி
உப்பிலாக் கூழ் இட்டாலும்
உண்பதே அமிர்தம் ஆகும்
முப்பழமொடு பால் அன்னம்
முகம் கடுத்து இடுவாராயின்
கப்பிய பசியி னோடு
கடும்பசி ஆகும் தானே"

–விவேகசிந்தாமணி. (4)

நூல் வெளி



காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் காசிக்காண்டம். இந்நூல் துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்துள்ளது. 'இல்லொழுக்கங் கூறிய' பகுதியிலுள்ள பதினேழாவது பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர் அதிவீரராம பாண்டியர். தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்த இவர் இயற்றிய நூலே காசிக்காண்டம். இவரின் மற்றொரு நூலான வெற்றி வேற்கை என்றழைக்கப்படும் நறுந்தொகை சிறந்த அறக்கருத்துகளை எடுத்துரைக்கிறது. சீவலமாறன் என்ற பட்டப்பெயரும் இவருக்கு உண்டு. நைடதம், லிங்கபுராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம் ஆகியனவும் இவர் இயற்றிய நூல்கள்.



கற்பவை கற்றபின்...

நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வருகிறார். நீங்கள் அவரை எதிர்கொண்டு விருந்து அளித்த நிகழ்வினை விரிவாக எழுதிப் படித்துக் காட்டுக.

10th_Tamil_Unit 3.indd 55 13-02-2023 15:41:48

பண்பாடு

5

மலைபடுகடாம்

– பெருங்கௌசிகனார்




பண்டைத் தமிழர்கள் பண்பில் மட்டுமன்றி, கலைகளிலும் சிறந்து விளங்கினர். அன்று கூத்தர், பாணர், விறலியர் போன்ற கலைஞர்கள் ஊர் ஊராகச் சென்று தம் கலைத்திறன்களை நிகழ்த்திக்காட்டி மக்களை மகிழ்வித்தனர். அவர்களுக்கு மன்னர்களும் வள்ளல்களும் விருந்தோம்பியும் பரிசளித்தும் போற்றினர். அவ்வகையாக விருந்தோம்பிய தன்மையைக் காட்சிப்படுத்துகிறது தினைச்சோற்று விருந்து.

அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,

அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே,

நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்

அடி : 158 – 169



சொல்லும் பொருளும்

அசைஇ	–	இளைப்பாறி,	அல்கி	–	தங்கி
கடும்பு	–	சுற்றம்,	நரலும்	–	ஒலிக்கும்
ஆரி	–	அருமை,	படுகர்	–	பள்ளம்
வயிரியம்	–	கூத்தர்,	வேவை	–	வெந்தது
இறடி	–	தினை,	பொம்மல்	–	சோறு

பாடலின் பொருள்

நன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரைக் கானவர்களின் வளம் நிறைந்த புதுவருவாயை உடைய சிறிய ஊர்களில் தங்கி உணவு பெறுவதற்கு வழிப்படுத்துதல்.

"பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்; இரவில் சேர்ந்து தங்குங்கள்; எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்துகொள்ளுங்கள்; சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்; அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள். அங்குள்ளவர்களிடம், 'பகைவரைப் பொறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள்' என்று சொல்லுங்கள்.

10th_Tamil_Unit 3.indd 56 13-02-2023 15:41:48

அதன் பிறகு நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள். உறவினர் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர். நீண்ட வழியைக் கடந்துவந்த உங்களின் துன்பம்தீர இனிய சொற்களைக் கூறுவர். அங்கே, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்."

இலக்கணக் குறிப்பு

அசைஇ
கெழீஇ } – சொல்லிசை அளபெடைகள்

பகுபத உறுப்பிலக்கணம்

மலைந்து – மலை + த்(ந்) + த் + உ

மலை – பகுதி

த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி

பொழிந்த – பொழி + த்(ந்) + த் + அ

பொழி – பகுதி

த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம், நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம்பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை.



நூல் வெளி

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று 'மலைபடுகடாம்'. 583 அடிகளைக் கொண்ட இது கூத்தராற்றுப்படை எனவும் அழைக்கப்படுகிறது; மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் இதற்கு மலைபடுகடாம் எனக் கற்பனை நயம் வாய்ந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நன்னன் என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாக் கொண்டு இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாடியது மலைபடுகடாம்.



கற்பவை கற்றபின்...

1. **உணவு, விருந்து குறித்த பழமொழிகளைத் திரட்டி, அவை சார்ந்த நிகழ்வுகளை எடுத்துரைக்க.**

   எ.கா. 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை'

2. **பத்தியைப் படித்து, வார இதழ் ஒன்றிற்கு அனுப்பும் வகையில் சமையல் குறிப்பாக மாற்றுக.**

கம்மங்கூழ்

பொசுக்குகிறது வெயில். ஒரு துளி மழை பட்டால் வறுத்த உளுந்தின் வாசம் பரப்பும் வறண்ட மண். வெடித்த நிலம். செழித்து விளைகிறது கம்மம் பயிர். உரலில் குத்தி, சுளகில் புடைக்க அதன் உமி நீங்கும். நீர் தெளித்துத் தெளித்து, மீண்டும் உரலில் இடிக்க அது ஒன்றுடன் ஒன்று ஒட்டி மாவாகும். உப்புக்கலந்து, உலையில் ஏற்றி, கொதிக்கும் நீரில் கரையவிட்டுக் கிண்ட, கட்டியாகி அது சோறாகும். கம்மஞ் சோற்றை உருட்டிவைத்து, பின் மோர் விட்டுக் கரைத்தால் அது கம்மங்கஞ்சி அல்லது கம்மங்கூழ். மோர்மிளகாய் வற்றல், உப்பில் தோய்த்த பச்சை மிளகாய் அல்லது சின்ன வெங்காயம் கடித்துக் கஞ்சியைக் குடித்தால் உச்சி தொட்டு உள்ளங்கால்வரை தேகம் குளிர்ந்து போகும். அனல் அடங்கும். உயிர் வரும். கம்பு – கறுப்பு நிறக் கரிசல் மண்ணின் இயற்கைத் தங்கம்.

10th_Tamil_Unit 3.indd 57 13-02-2023 15:41:48

விரிவானம்


பண்பாடு

ந

கோபல்லபுரத்து மக்கள்

– கி.ராஜநாராயணன்

N7ZBS



கிராமத்து வெள்ளந்தி மனிதர்கள் காட்டும் விருந்தோம்பல் மனசுக்குள் எப்பவும் பசுமையாக இருக்கும். அவர்களது இயல்பான வரவேற்பும் எளிமையான உணவும் மதிய வேக்காட்டில் நடந்துவந்த களைப்பை மறக்கடிக்கச் செய்யும். பசித்த வேளையில் வந்தவர்களுக்குத் தம்மிடம் இருப்பதையே பகிர்ந்து கொடுக்கிற நேயம் கிராமத்து விருந்தோம்பல். அப்படி நடக்கும் ஒரு நிகழ்வு நம் கண் முன் காட்சியாகிறது.



சுப்பையாவின் புஞ்சையில் அருகு எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அதிகாலை நேரத்தில் ஒரு பாச்சல் அருகு எடுத்து முடித்துவிட்டுக் காலைக் கஞ்சி குடிக்க உட்காரப் போகும் வேளை, யாரோ ஒரு சன்யாசியைக் கூட்டிக்கொண்டு அன்னமய்யா தூரத்தில் வருவது தெரிந்தது. வாயிலிருந்த பல்க்குச்சியை எடுத்துத் துப்பிவிட்டு சுப்பையா கேட்டான், "யாரோ ஒரு சாமியாரை இழுத்துட்டு வாரான்?"

"வரட்டும் வரட்டும்; ஒரு வயித்துக்குக் கஞ்சி ஊத்தி நாமும் குடிப்போம்" என்றார் கொத்தாளி.

அந்தப் புஞ்சை ரோட்டோரத்தில் இருந்ததால் இப்படி தேசாந்திரிகள் வந்து இவர்களிடம் தண்ணீரோ கஞ்சியோ சாப்பிட்டு விட்டுப் போவது வழக்கம்.

அன்னமய்யாவின் கூட வந்தது சன்யாசியோ பரதேசியோ இல்லை. அந்த ஆள் நடக்க முடியாமல் உட்கார்ந்து உட்கார்ந்து

10th_Tamil_Unit 3.indd 58 13-02-2023 15:41:51

எழுந்திருந்து ஆயாசமாக, மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தான். தாடியும் அழுக்கு ஆடையும் அந்தத் தள்ளாட்டமும் ஒரு பார்வைக்கு வயோதிகனாகவும் சாமியாரைப் போலவும் தோணவைத்தது. தற்செயலாக அந்தப் பக்கம் வந்த அன்னமய்யாவின் கண்ணில் இதுபட்டது. கிட்டே போய்ப் பார்த்த பிறகுதான் தெரிந்தது அவன் ஒரு வாலிபன் என்று. கால்களை நீட்டி, புளிய மரத்தில் சாய்ந்து உட்கார்ந்திருந்த அவனை நெருங்கிப் போய்ப் பார்த்தபோது, பசியால் வாடிப் போய்விட்ட அந்த முகத்தில் தெரிந்த கண்களின் தீட்சண்யம், கவனிக்கக் கூடியதாய் இருந்தது. அன்னமய்யாவைப் பார்த்ததும் அவன் ஒரு சிறு புன்னகை காட்டினான். பேசுவதற்கு இஷ்டப்படாதது போலிருந்தது அவன் இருப்பு. அந்த ரோடு வழியாக எத்தனையோ வகை தேசாந்திரிகள் வகைவகையான மொழியில் புரியாதபடி பேசிக்கொண்டு நடந்து வருவார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் லாட சன்யாசிகள். அவர்கள் வேட்டிகட்டிக் கொண்டிருப்பதே ஒரு தினுசு! இடுப்பை மறைத்த வேட்டி அதன் ரண்டு சொருகுநுனிகளும் குறுக்க மறுக்க மார்பின் மேலேறிப் பிடரியில் வந்து முடிச்சாகி இருக்கும். வேட்டியே, வேட்டியும் மேல் வேட்டியுமாக அவர்கள் அப்படி அதை உடுத்தியிருப்பதைப் பார்க்கும் கோபல்லபுரத்துக் குழந்தைகள், அதேபோல் தங்கள் தகப்பனார்களின் மேல்த் துண்டுகளை எடுத்து உடுத்திக்கொண்டு லாட சன்யாசி விளையாட்டு விளையாடியது அன்னமய்யாவுக்கு ஞாபகம் வந்தது.

தன்னைப் பார்த்து ஒரு நேசப் புன்னகை காட்டிய அந்த வாலிப மனிதனிடம் போய் கிட்டே நின்று பார்த்துக் கொண்டே இருந்தான் அன்னமய்யா வாய் திறக்காமல்.

கொஞ்சம் அலுப்புத் தீர்ந்தவுடன், "தம்பி, கொஞ்சம் குடிக்கத் தண்ணி கிடைக்குமா?" என்று தமிழில் அவன் பேசியது இவனுக்கு ரொம்ப ஆச்சரியமாக சந்தோஷமாக இருந்தது. "இந்தா பக்கத்துல அருகெடுத்துக் கிட்டிருக்கிறவங்ககிட்ட நீச்சுத் தண்ணி இருக்கும்; வாங்கிட்டு வரட்டுமா?"

"நீச்சுத் தண்ணி"? என்று தனக்குள் அந்த வாலிபன் சொல்லிப் பார்த்துக் கொள்வது தெரிந்தது. கொஞ்சம் கை அமர்த்திவிட்டு, நாமே அங்கே போய்விடலாமே என்பது போல் அங்கே அவர்களைப் பார்த்தான். எழுந்திருப்பதுக்கு ஒத்தாசனையாக நீட்டிய கையை நன்றியுடன் மறுத்துவிட்டு அவனே சிரமப்பட்டு எழுந்து நின்றான்.

"எங்கிருந்து வர்ரீங்க?"

கேள்விக்குப் பதில், அலுப்புடன் கூடிய ஒரு இதழ் விரியாத சிரிப்பே பதிலாக வந்தது.

சொல்லுகிறேன் என்றும் இப்பவே அது தேவைதானா என்றும் இப்ப அதெல்லாம் எதுக்கு, கொஞ்சம் பொறு என்பது போலெல்லாம் இருந்தது அந்தச் சிரிப்பு.

அன்னமய்யா தனது தோளைப் பிடித்துக் கொண்டு நடந்து வரும்படியாகக் கேட்டபோதும் அந்த ஆள் அதே சிரிப்போடு மறுத்துவிட்டு அவனோடு மெதுவாக நடந்து வந்தான்.

ஒரு வேப்பமரத்தின் அடியில் ஏகப்பட்ட மண் கலயங்கள் இருந்தன. அந்தக் கறுப்புக் கலயங்கள் அந்தக் கரிசல் மண்தரையில் பாதி புதைக்கப்பட்டிருந்தன. தேங்காய்ப் பருமனுள்ள கற்களால் அந்தக் கலயங்களின் வாய் மூடப்பட்டிருந்தது. காகங்கள் வந்து கஞ்சிக் கலயங்களை உருட்டிவிடாமலும் அலகை நுழைத்து அசிங்கப்படுத்திவிடாமலும் இருக்க இந்த ஏற்பாடு என்று அந்த மனிதன் பிறகு கேட்டுத் தெரிந்து கொண்டான்.

அன்னமய்யா ஒரு கலயத்தின்மேல் வைக்கப்பட்ட கல்லை அகற்றினான். ஒரு சிரட்டையில் காணத்துவையலும் ஊறுகாயும் இருந்தது. சிரட்டையே அந்தக் கலயத்தின் வாய்மூடியாகவும் அமைந்திருந்தது. இன்னொரு கலயத்தின் மேலிருந்த கல்லை எடுத்துப் பார்த்தபோது அதேபோல் இருந்த சிரட்டையில் மோர்மிளகாய் மட்டுமே இருந்தது. அதை இந்தச் சிரட்டையில் தட்டினான். சிரட்டையைத் துடைத்துச் சுத்தப்படுத்தினான். அந்தக் கலயத்தைப் பதனமாகத் தனது

10th_Tamil_Unit 3.indd 59 13-02-2023 15:41:51

தெரிந்து தெளிவோம்

கரிசல் இலக்கியம்

கோவில்பட்டியைச் சுற்றிய வட்டாரப் பகுதிகளில் தோன்றிய இலக்கிய வடிவம் கரிசல் இலக்கியம். காய்ந்தும் கெடுக்கிற, பெய்தும் கெடுக்கிற மழையைச் சார்ந்து வாழ்கிற மானாவாரி மனிதர்களின் வாழ்க்கையைச் சொல்லும் இலக்கியங்கள் இவை. கரிசல் மண்ணின் படைப்பாளி கு. அழகிரிசாமி கி.ராஜநாராயணனுக்கு முன் எழுதத் தொடங்கியவர். கரிசல் களத்தையும் அங்குள்ள மக்களையும் மையப்படுத்திக் கரிசல் இலக்கியத்தை நிலைநிறுத்தியவர் கி.ராஜநாராயணன். அந்தக் கரிசல் இலக்கியப் பரம்பரை இன்றளவும் தொடர்கிறது பா.செயப்பிரகாசம், பூமணி, வீரவேலுசாமி, சோ.தர்மன், வேல ராமமூர்த்தி, இன்னும் பலரின் மூலமாக...

வலதுபாதத்தின்மேல் வைத்து, சிரட்டையில் நீத்துபாகத்தை வடித்து அவனிடம் நீட்டினான். கையில் வாங்கியதும் சப்பிக்குடிப்பதா அண்ணாந்து குடிப்பதா என்கிற தயக்கம் வந்தபோது "சும்மா கடிச்சிக் குடிங்க" என்றான். உறிஞ்சும்போது கண்கள் சொருகின. மிடறு தொண்டை வழியாக இறங்குவதன் சொகத்தை முகம் சொல்லியது.'உக்காருங்க. உக்காந்து குடிங்க' என்று உபசரித்தான்.

உட்கார்ந்த பிறகு, ரண்டாவது சிரட்டைக்குக் கலயத்தைப் பாதத்தின் பேரிலேயே வைத்துச் சுற்றி ஆட்டியதும் தெளிவு மறைந்து சோற்றின் மகுளி மேலே வந்ததும் அதை வார்த்துக் கொடுத்தான். அதை உறிஞ்சிக் குடிக்கும் போது "ஹ!" என்கிற அனுபவிப்பின் குரல் அவனிடமிருந்து வந்தது.

கலயத்திலிருந்து சிரட்டை வழியாக மடக்கு மடக்காய் அவனுள் ஜீவஊற்று பொங்கி நிறைந்து வந்தது.

சிரட்டையைக் கையளித்துவிட்டு அப்படியே அந்த வேப்ப மரத்து நிழலே சொர்க்கமாய்ப் படுத்ததும் அவனைத் தென்னல்க் காற்றே தூக்கமாக வந்து அயரச் செய்தது.

வந்தவனுக்கு எப்படி ஒரு நிறைவு ஏற்பட்டதோ அதைவிட மேலான ஒரு நிறைவு அன்னமய்யாவுக்கு ஏற்பட்டது. மார்பில் பால் குடித்துக் கொண்டிருக்கும் போதே வயிறு நிறைந்ததும் அப்படியே தூங்கிவிடும் குழந்தையைப் பார்ப்பதுபோல அவனை ஒரு பிரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான் அன்னமய்யா.

அந்த வரத்துக்காரனின் சிறு தூக்கம் முடியும்வரை அன்னமய்யா காத்திருந்தான். அந்தப் பக்கத்தில் தொகுதி தொகுதியாக அருகு எடுத்துக் கொண்டிருந்தார்கள். கரிசல் காட்டுச் சம்சாரிகளுக்கு அருகு ஒரு அரக்கன். வெட்ட வெட்டத் தலைமுளைப்பது போல அவர்களோடு அது விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தது. கள்ளிக்கு ஒரு வெள்ளபூச்சியைக் கண்டுபிடித்த வெள்ளைக்காரன், அருகை அழிக்க ஒரு மருந்து கண்டுபிடிக்கல்லையே என்கிற கோபம் சம்சாரிகளுக்கு. "அருகு எடுக்கிறதுலேயே நம்ம வாழ்நாள் முக்காவாசி போயிரும் போல" சடைத்துப் புளித்துப் போவார் அன்னமய்யாவின் பாட்டனார்.

அன்னமய்யாவின் புஞ்சைக்குப் பக்கத்துலதான் சுப்பையாவின் புஞ்சையும். அங்கே போனால் சுப்பையாவும் இருப்பான். இவர் எழுந்திரிச்சதும் அங்கே கூட்டிக் கொண்டு போவோம் என்று நினைத்தபோது அந்த ஆளிடம் ஒரு அலுக்கம் தெரிந்தது. சரி; முழிப்பு வந்தாச்சி என்று நினைத்துப் பார்த்தபோது அந்த ஆளிடமிருந்து நன்றி கலந்த புன்னகை வெளிப்பட்டது.

எழுந்திருக்க மனசில்லாமல் படுத்துக்கொண்டே பேசினான் அந்த ஆள். உங்கள் ஊர் பெயரென்ன? என்று கேட்டான். தெரிந்துகொண்டபோது அந்தப் பெயர் அவனுக்கு விநோதமாகத் தெரிந்திருக்க வேண்டும் போலப் பட்டது.

"எங்கருந்து வர்ரீங்க. எங்க போகனும்?"

10th_Tamil_Unit 3.indd 60 13-02-2023 15:41:51

"ரொம்பத் தொலவட்லயிருந்து வர்ரென்; எங்கதெ பெரிசு!" என்றான். தம்பீ ஒம் பெயரென்ன?"

"அன்னமய்யா"

வந்தவன் அந்தப் பேரை மனசுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பார்த்துக் கொண்டான். எவ்வளவு பொருத்தம் என்று நினைத்துக் கொண்டான் போலிருக்கிறது! 'எனக்கு இன்று நீ இடும் அன்னம் தான்'...

பதிலுக்குப் பெயர் என்ன என்று கேட்க வேண்டும் போல் தோன்றியதால் அன்னமய்யா கேட்டான். கொஞ்சம் தயங்கியபின் என்னோட சொந்தப் பெயர் பரமேஸ்வரன். அதை இப்போதைக்கு மறந்துரு. இப்பொப் பேர் மணி. மணின்னே கூப்பிடு. நா எங்கிருந்து வர்றேன்ங்கிறதெல்லாம் சாவகாசமாச் சொல்றேன் என்று சொல்லிவிட்டு, " இப்போ நாம எங்க போகணும் சொல்லு" என்று கேட்டான். "அந்தோ... அங்கெ," என்று கை காட்டினான். "அங்கெ என்னொட பிரண்டு – சுப்பையா ன்னு பேரு – காலேஜ்ல படிக்கான். லீவுக்கு வந்திருக்கான். அவங்க பிஞ்சையிலேயும் அருகெடுக்கிறாங்க, அங்க போவமா?"

"ஓ! போவமே"

அன்னமய்யாவையும் புது ஆளையும் அவர்கள் மந்தகாசத்துடன் வரவேற்றார்கள். புதாளை அவர்கள் தங்களோடு உண்ணும்படி உபசரித்தார்கள். மணி அவர்களோடு வட்டத்தில் சேர்ந்து உட்கார்ந்தார். கையைக் கழுவிக் கொள்ளவேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. ஆனால் அவர்களில் யாருமே சாப்பிடுவதற்கு முன்னால் கையைக் கழுவிக் கொள்வதாகத் தெரியவில்லை! அவர்களுக்கானது நமக்கு என்று அவர் கையை நீட்டினார். ஒரு கால் உருண்டை கம்மஞ்சோற்றை அவருடைய இடதுகையில் வைத்தார்கள். இடது கையிலா என்று தயங்கினார். ஆம் இடது கையில்த் தான் என்று தெரிந்தது. அன்னமய்யாவும் சுப்பையாவும் அப்படித்தான் பெற்றுக்கொண்டார்கள். அவர்களைப் பார்த்து அவரும் இடதுகைச் சோற்றில் ஒரு சிறு பள்ளம் செய்து கொண்டார். அந்தப் பள்ளத்தில் துவையலை வைத்தார்கள். சிறிது சோற்றை எடுத்துத் துவையலில் பட்டதோ படலையோ என்று தொட்டு கழுக் என்று முழுங்கினார்கள். யாரோடும் யாரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. முழுங்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்! அவர்கள் உண்ணுகிற வேகம் ஆர்வம் அனுபவிப்பு இதெல்லாம் பார்த்தபோது இந்த உணவு எவ்வளவு ருசியாக இருக்குமோ என்று பட்டது மணிக்கு. முதலில் கொஞ்சம் வெறும் சோற்றை எடுத்து ருசி பார்த்தார். அந்தச் சோற்றின் நெடி அவரை என்னவோ செய்தது! துவையலோடு சேர்த்துச் சாப்பிட்டால் கொஞ்சம் பரவாயில்லை என்பது போல்ப் பட்டது. அந்தக் கடுமையான பசியிலும் அவரால் அரை உருண்டைக்கு மேல் சாப்பிட முடியவில்லை.

அன்னமய்யாவும் சுப்பையாவும் ஆளுக்கு ஒரு உருண்டைதான் சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடித்து அவர்கள் மண்ணினால் கைகளைச் சுத்தப்படுத்தியதைப் பார்த்து அவரும் அதேபோல் மண்ணை எடுத்து கைகளில்த் தேய்த்துச் சுத்தப்படுத்திக் கொண்டார்.

அவர்கள் சாப்பிட்டு முடிந்ததும் கொஞ்சம் ஓய்வாக உட்கார்ந்து ஊர்க்கதைகள் பேச ஆரம்பித்தார்கள். சுண்ணாம்பு கேட்கவும் தீப்பெட்டி கேட்கவும் சிலர் பக்கத்துத் தொகுதிகளிடம் போனார்கள். மணி திரும்பவும் படுத்து அமைதியாகக் கண்களை மூடிக்கிடந்தார்.

வட்டார வழக்குச் சொற்கள்

பாச்சல்	–	பாத்தி
பதனம்	–	கவனமாக
நீத்துப்பாகம்	–	மேல்கஞ்சி
கடிச்சு குடித்தல்	–	வாய்வைத்துக்குடித்தல்
மகுளி	–	சோற்றுக் கஞ்சி
வரத்துக்காரன்	–	புதியவன்
சடைத்து புளித்து	–	சலிப்பு
அலுக்கம்	–	அழுத்தம் (அணுக்கம்)
தொலவட்டையில்	–	தொலைவில்

10th_Tamil_Unit 3.indd 61 13-02-2023 15:41:51

நூல் வெளி



கோபல்ல கிராமம் என்னும் புதினத்தைத் தொடர்ந்து எழுதப்பட்ட கதையே கோபல்லபுரத்து மக்கள். ஆசிரியர் தன் சொந்தஊரான இடைசெவல் மக்களின் வாழ்வியல் காட்சிகளுடன் கற்பனையையும் புகுத்தி இந்நூலினைப் படைத்துள்ளார். இதன் ஒரு பகுதியே இங்குப் பாடமாக உள்ளது. இந்திய விடுதலைப் போராட்டத்தினைப் பின்னணியாகக் கொண்டது இந்நூல். இது 1991ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றது.

கோபல்லபுரத்து மக்கள் கதையின் ஆசிரியர் கரிசல் எழுத்தாளர் கி.ராஜநாராயணன். இருபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ள இவரின் கதைகள் ஒரு கதைசொல்லியின் கதைப்போக்கில் அமைந்திருக்கும். இவரின் கதைகள் அனைத்தும் கி.ராஜநாராயணன் கதைகள் என்னும் தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளன; இவர் கரிசல் வட்டாரச் சொல்லகராதி ஒன்றை உருவாக்கியுள்ளார். இவர் தொடங்கிய வட்டாரமரபு வாய்மொழிப் புனைகதைகள் 'கரிசல் இலக்கியம்' என்று அழைக்கப்படுகின்றன. எழுத்துலகில் இவர் கி.ரா. என்று குறிப்பிடப்படுகிறார்.



முன்தோன்றிய மூத்தகுடி

"கறங்கு இசை விழவின் உறந்தை....."

அகநானூறு, 4 :14

திருச்சி மாவட்டத்தின் உறையூர்



கற்பவை கற்றபின்...

1. *பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயலையும் விருந்தினருக்கு உணவிடுதல் என்ற பண்பாட்டுச் செயலையும் ஒப்பிட்டுப் பேசுக.*
2. *உங்கள் கற்பனையை இணைத்து நிகழ்வைக் கதையாக்குக.*

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையே சின்னஞ்சிறு சச்சரவுகள் ஏற்பட்டு, இரண்டு பேருமே முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு ஆளுக்கொரு மூலையில் உட்கார்ந்திருக்கும்போது, விருந்தினர் வருகை அவர்களை அன்பான கணவன் மனைவியராக மாற்றிவிடும். அம்மாவின் கெடுபிடியும் அப்பாவின் கீழ்ப்படிதலும் ஆச்சரியமாக இருக்கும். விருந்தாளிகள் அடிக்கடி வர மாட்டார்களா என்று இருக்கும்.

விருந்தினர் தினம் என்பது எப்படி விடியும் தெரியுமா?

காலையிலிருந்தே வீட்டுக்குள்ளிருந்து வாசலுக்கு வந்து வந்து எட்டிப் பார்த்துச் செல்வாள் அம்மா. திண்ணையில் பேப்பர் பார்த்துக் கொண்டிருக்கும் அப்பா கேட்பார். "என்ன விஷயம், இன்னிக்கு யாராவது விருந்தாளி வரப்போறாங்களா என்ன? " "ஏங்க.. . காலையிலேருந்து வேப்ப மரத்துல காக்கா விடாம கத்திக்கிட்டே இருக்கே பார்க்கலியா? நிச்சயம் யாரோ விருந்தாளி வரப் போறாங்க பாருங்க. " "அடடே, ஆமாம் காக்கா கத்துது. யாரு வரப் போறா? இது பலாப்பழ சீசன் ஆச்சே . . உன் தம்பிதான் வருவான், பலாப்பழத்தைத் தூக்கிக்கிட்டு" – நாங்கள் ஓடிப்போய் தெருவில் பார்ப்போம். அப்பா சொன்னதும் சரி, காக்கா கத்தியதும் சரி. தூரத்தில் தெரு முனையில் அறந்தாங்கி மாமா தலையில் பலாப்பழத்துடன் வந்து கொண்டிருப்பார். அம்மாவுக்குக் காக்கை மொழி தெரியும்!

–தஞ்சாவூர்க் கவிராயர்

10th_Tamil_Unit 3.indd 62 13-02-2023 15:41:52

பண்பாடு

நு

தொகாநிலைத் தொடர்கள்



தொகாநிலைத்தொடர்

ஒரு தொடரில் சொற்களுக்கு இடையில் சொல்லோ உருபோ மறைந்து வராமல் வெளிப்படையாகப் பொருளை உணர்த்துவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.

எ.கா காற்று வீசியது
குயில் கூவியது

முதல் தொடரில் "காற்று" என்னும் எழுவாயும் "வீசியது" என்னும் பயனிலையும் தொடர்ந்து நின்று வேறுசொல் வேண்டாது பொருளை உணர்த்துகின்றது.

அதேபோன்று இரண்டாவது தொடரிலும் எழுவாயும் பயனிலையும் தொடர்ந்து நின்று குயில் கூவியது என்னும் பொருளைத் தருகின்றது.

தொகாநிலைத் தொடரின் ஒன்பது வகைகள்

1. எழுவாய்த்தொடர்

எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது எழுவாய்த்தொடர் ஆகும்.

இனியன் கவிஞர் – பெயர்

காவிரி பாய்ந்தது – வினை

பேருந்து வருமா? – வினா

மேற்கண்ட மூன்று தொடர்களிலும் பெயர், வினை, வினா ஆகியவற்றுக்கான பயனிலைகள் வந்து எழுவாய்த் தொடர்கள் அமைந்துள்ளன.

2. விளித்தொடர்

விளியைத் தொடர்ந்து வினை அமைவது விளித்தொடர் ஆகும்.

நண்பா எழுது! – "நண்பா" என்னும் விளிப்பெயர் "எழுது" என்னும் பயனிலையைக்கொண்டு முடிந்துள்ளது.

3. வினைமுற்றுத்தொடர்

தொடரின் இறுதியில் இடம்பெற வேண்டிய வினைமுற்று, தொடரின் முதலில் அமைந்து அறுவகைப் பெயரைக் கொண்டு முடிவது வினைமுற்றுத்தொடர் ஆகும்.

பாடினாள் கண்ணகி

"பாடினாள்" என்னும் வினைமுற்று முதலில் நின்று ஒரு பெயரைக்கொண்டு முடிந்துள்ளது.

4. பெயரெச்சத்தொடர்

முற்றுப் பெறாத வினை, பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது பெயரெச்சத்தொடர் எனப்படும்.

கேட்ட பாடல் – "கேட்ட" என்னும் எச்சவினை "பாடல்" என்னும் பெயரைக்கொண்டு முடிந்துள்ளது.

5. வினையெச்சத்தொடர்

முற்றுப் பெறாத வினை, வினைச்சொல்லைக் கொண்டு முடிவது வினையெச்சத்தொடர் ஆகும்.

பாடி மகிழ்ந்தனர் – "பாடி" என்னும் எச்சவினை "மகிழ்ந்தனர்" என்னும் வினையைக் கொண்டு முடிந்துள்ளது.

6. வேற்றுமைத்தொடர்

வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்கள் ஆகும்.

கட்டுரையைப் படித்தாள்.

இத்தொடரில் ஐ என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துகிறது.

அன்பால் கட்டினார் – (ஆல்) மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

அறிஞருக்குப் பொன்னாடை – (கு) நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்

10th_Tamil_Unit 3.indd 63 13-02-2023 15:41:52

7. இடைச்சொல் தொடர்

இடைச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது இடைச்சொல் தொடர் ஆகும்.

மற்றொன்று – மற்று + ஒன்று. "மற்று" என்னும் இடைச்சொல்லை அடுத்து "ஒன்று" என்னும் சொல் நின்று பொருள் தருகிறது.

8. உரிச்சொல் தொடர்

உரிச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது உரிச்சொல் தொடர் ஆகும்.

சாலச் சிறந்தது – "சால" என்பது உரிச்சொல். அதனைத்தொடர்ந்து "சிறந்தது" என்ற சொல்நின்று மிகச் சிறந்தது என்ற பொருளைத் தருகிறது.

9. அடுக்குத் தொடர்

ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது அடுக்குத் தொடர் ஆகும்.

வருக! வருக! வருக! – ஒரே சொல் உவகையின் காரணமாக மீண்டும் மீண்டும் அடுக்கி வந்துள்ளது.



தெரியுமா?

ஒன்றிற்கு மேற்பட்ட எச்சங்கள் சேர்ந்து பெயரைக்கொண்டு முடியும் கூட்டுநிலைப் பெயரெச்சங்களை இக்காலத்தில் பெருமளவில் பயன்படுத்துகிறோம். வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களை, செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பதன் மூலம் கூட்டுநிலைப் பெயரெச்சங்கள் உருவாகின்றன.

எ.கா.

கேட்க வேண்டிய பாடல், சொல்லத் தக்க செய்தி

தொகாநிலைத் தொடர்





கற்பவை கற்றபின்...

1. இன்று நீங்கள் படித்த செய்தித்தாள்களில் உள்ள தொகாநிலைத் தொடர்களைத் தொகுத்து வருக.
2. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.
   மாடியிலிருந்து இறங்கினார் முகமது. அவர் பாடகர். பாடல்களைப் பாடுவதும் கேட்பதும் அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும் கொண்ட குறுந்தகடுகளை அடுக்கு அடுக்காக வைத்திருப்பார்.
3. வண்ணச் சொற்களின் தொடர்வகைகளை எழுதுக.
   - பழகப் பழகப் பாலும் புளிக்கும்
   - வடித்த கஞ்சியில் சேலையை அலசினேன்
   - மேடையில் நன்றாகப் பேசினான்
   - வந்தார் அண்ணன்
   - அரிய கவிதைகளின் தொகுப்பு இது

10th_Tamil_Unit 3.indd 64 13-02-2023 15:41:53

திறன் அறிவோம்

பலவுள் தெரிக.

1. பின்வருவனவற்றுள் முறையான தொடர் –

   அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

   ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

   இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

   ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

2. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது–

   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

3. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது –

   அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

4. காசிக்காண்டம் என்பது –

   அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

   இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

5. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை –

   அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து

   இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

குறுவினா

1. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

2. 'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

3. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத்தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?

10th_Tamil_Unit 3.indd 65 13-02-2023 15:41:53

4. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

5. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

சிறுவினா

1. 'கண்ணே கண்ணுறங்கு!

காலையில் நீயெழும்பு!

மாமழை பெய்கையிலே

மாம்பூவே கண்ணுறங்கு!

பாடினேன் தாலாட்டு!

ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!' – இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

2. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" – வினவுவது ஏன்?

3. • புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.

• திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.

இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.

4. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

நெடுவினா

1. ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

2. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

3. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

10th_Tamil_Unit 3.indd 66 13-02-2023 15:41:53



மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

சர்க்கரைப் பொங்கல்

இளஞ்சிவப்பாக வறுத்த, பாதி உடைத்த பருப்பும் பச்சை அரிசியும் பானையில் கொப்புளமிட்டுக் கொதிக்க, மென் துணியில் வடிகட்டிய வெல்லக் கரைசல் நார்ப்பாகு பதத்தில் வெந்த பொங்கலுடன் கலக்கின்றது. உலர்ந்த திராட்சைகள் பசு நெய்யில் தங்கமென ஊதி உருண்டு வர, பிறை போன்ற முந்திரிப் பருப்புகள் அதனுள் சேர்ந்து மின்னுகின்றன. காற்றெங்கும் பால் கலந்த இனிப்பின் வாசம். இனி, இடித்த ஏலக்காய் தூவ, எல்லாமும் பொங்கலுடன் இணைந்து குழைய, இந்தச் சர்க்கரைப் பொங்கலின் தித்திப்பு திகட்டாது. நறுக்கிய ஈர வாழையிலையில் ஒரு அகப்பை சுடும் பொங்கலிட, அது விழுந்தெழுப்பும் மணம், அறுவடையின் மகிழ்வு அது! சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை (திருக்குறள் 1031).

மொழிபெயர்க்க.

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

பழமொழிகளை நிறைவு செய்க.

1. உப்பில்லாப் _____.
2. ஒரு பானை _____.
3. உப்பிட்டவரை _____.
4. விருந்தும் _____.
5. அளவுக்கு _____.

பத்தியைப் படித்துக் கருத்தைச் சுருக்கி எழுதுக.

பழையசோறு

பச்சை நெல் வயலைக் கண்கள் முழுதும் சுமந்து, இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து, நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம்வரை சுவைத்தவள் நான். அவித்து, காய்ந்து, குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை, அதன் வழவழப்பை, கடுப்பு மணத்தை, சோறாகு முன் கைநிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன். பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு. இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும். விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழையசோறு அல்லது பழையது. காத்திருந்து, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் கடித்து நீராகாரம்போல் குடிப்பது ஒருவகை. வாழை இலையில் அந்தப் பழைய சோற்றைப் பிழிந்து போட்டால், வடுமாங்காய் அல்லது உப்பு நாரத்தங்காய் அதனுடன் சேர்ந்துகொள்ளத் துடிப்பது இன்னொரு வகை. சுண்டவைத்த முதல்நாள் குழம்பு இன்னும் உச்சம்! நல்ல பழையது மாம்பழ வாசம் வீசுமாம். பழைய சோறு- அது கிராமத்து உன்னதம்.

"மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து" .....முக்கூடற்பள்ளு

கண்ணன், பிரசாந்தி சேகரம் –அடிசில் 2017

10th_Tamil_Unit 3.indd 67 13-02-2023 15:41:53

கதையாக்குக.

மனித வாழ்வில் ஒவ்வொருவரும் நாளும் நாளும் புதுப்புது மனிதர்களைப் பார்க்கிறோம்; புதுப்புதுச் செய்திகள் கிட்டும்! கிட்டுகிற கருப்பொருள்களைத் திரட்டி, கற்பனை நயம் கூட்டிக் கதையாக்குவது ஒரு கலை. அது சிறுகதையாக இருக்கலாம். புதினமாக இருக்கலாம். அன்பை எதிர்பார்த்திருப்பவராக, யாருமற்றவராக.... இருக்கும் ஒருவர் உங்களின் உதவியால் மனம் மகிழ்ந்த நிகழ்வினைக் கதையாக்குக.

கடிதம் எழுதுக

உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

நயம் பாராட்டுக.

"கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் – குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர்அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்"

காளமேகப் புலவர்



மொழியோடு விளையாடு

விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடிக்க.

இ – கு (பறவையிடம் இருப்பது)
கு – தி (சிவப்பு நிறத்தில் இருக்கும்)
வா – (மன்னரிடம் இருப்பது)
அ – கா (தங்கைக்கு மூத்தவள்)
ம – (அறிவின் மறுபெயர்)
பட – (நீரில் செல்வது)

இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

சிலை – சீலை, தொடு – தோடு, மடு – மாடு, மலை – மாலை, வளி – வாளி, விடு – வீடு
எ.கா. சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருக்கிறார்கள்.

அகராதியில் கண்டு பொருள் எழுதுக.

அ) ஊண், ஊன் ஆ) திணை, தினை இ) அண்ணம், அன்னம் ஈ) வெல்லம், வெள்ளம்

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



10th_Tamil_Unit 3.indd 68 13-02-2023 15:41:54

செயல்திட்டம்

உணவு, விருந்து சார்ந்த பழமொழிகளையும் விழிப்புணர்வுத் தொடர்களையும் திரட்டி, அகரவரிசைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

எ.கா. **நொறுங்கத் தின்றால் நூறு வயது**

கலைச்சொல் அறிவோம்

செவ்விலக்கியம்	–	*Classical literature*	வட்டார இலக்கியம்	–	*Regional literature*
காப்பிய இலக்கியம்	–	*Epic literature*	நாட்டுப்புற இலக்கியம்	–	*Folk literature*
பக்தி இலக்கியம்	–	*Devotional literature*	நவீன இலக்கியம்	–	*Modern literature*
பண்டைய இலக்கியம்	–	*Ancient literature*			

நிற்க அதற்குத் தக...

"தம்பி.. உனக்குப் பிடிச்ச காய் சொல்லு?"	–	"கேரட்"
"பிடிச்ச பழம்?"	–	"ஆப்பிள்"
பிடிச்ச காலை உணவு?	–	"நூடுல்ஸ்"
"மத்தியானத்துக்கு"	–	"ஃப்ரைடு ரைஸ்"
"ராத்திரி...?"	–	"பீட்ஸா அல்லது பாஸ்தா"

இது ஏதோ ஆங்கிலப்படத்தின் வசனம் அல்ல." சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர்" என்று என்னிடம் அழைத்து வரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல். ஒட்டுமொத்த இளைய தலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும் சாம்பார் சாதமும் கத்தரிக்காய்ப் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில், 'ஆம், காணாமல் போய்விடும்'! உங்கள் குழந்தைகள், "ஆடு, மாடுகளைத் தவிர மனுஷங்க கூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி? என எதிர்காலத்தில் கேட்கக்கூடும்!

மருத்துவர் கு. சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?

அறிவை விரிவு செய்.

திருக்குறள் தெளிவுரை	–	வ.உ.சிதம்பரனார்
சிறுவர் நாடோடிக் கதைகள்	–	கி.ராஜநாராயணன்
ஆறாம் திணை	–	மருத்துவர் கு.சிவராமன்



இணையத்தில் காண்க.

http://www.muthukamalam.com/essay/literature/p113.html

http://panpattumaiyaminnithazh.blogspot.com/2017/03/blog-post_72.html?m=1

http://www.tamilvu.org/courses/degree/c011/c0113/html/c0113603.htm

10th_Tamil_Unit 3.indd 69 13-02-2023 15:41:54

பண்பாடு

நடை



திருக்குறள்

ENJBO

ஒழுக்கமுடைமை (14)

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

பொருள்: ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பைத் தருவதால் அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகப் பேணிக் காக்க வேண்டும்.

2. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

பொருள்: ஒழுக்கமாக வாழும் எல்லாரும் மேன்மை அடைவர். ஒழுக்கம் தவறுபவர் அடையக்கூடாத பழிகளை அடைவர்.

3. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

பொருள்: உலகத்தோடு ஒத்து வாழக் கல்லாதார், பல நூல்களைக் கற்றாராயினும் அறிவு இல்லாதவரே (எனக் கருதப்படுவார்).

மெய் உணர்தல் (36)

4. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. *

பொருள்: எந்தப் பொருள் எந்த இயல்பினதாகத் தோன்றினாலும் அந்தப் பொருளின் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவாகும்.

5. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

பொருள்: ஆசை, சினம், அறியாமை என்ற மூன்றும் அழிந்தால் அவற்றால் வரும் துன்பமும் அழியும்.

பெரியாரைத் துணைக்கோடல் (45)

6. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பொருள்: கிடைத்தற்கரிய பேறுகளுள் எல்லாம் பெரும்பேறு பெரியோரைப் போற்றித் துணையாக்கிக் கொள்ளுதல் ஆகும்.

10th_Tamil_Unit 3.indd 70 13-02-2023 15:41:54

7. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

பொருள்: குற்றங் கண்டபொழுது இடித்துக் கூறும் பெரியாரைத் துணைக்கொள்ளாத பாதுகாப்பற்ற மன்னன், பகைவர் இன்றியும் தானே கெடுவான்.

8. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். *

பொருள்: தானொருவனாக நின்று பலரோடு பகைமேற்கொள்வதைக் காட்டிலும் பல மடங்கு தீமையைத் தருவது நற்பண்புடையோரின் நட்பைக் கைவிடுதலாகும்.

கொடுங்கோன்மை (56)

9. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு

பொருள்: ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரிவிதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானதாகும்.

அணி: உவமையணி

10. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்

பொருள்: தன் நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னவன், தன் நாட்டை நாள்தோறும் இழக்க நேரிடுவான்.

கண்ணோட்டம் (58)

11. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். *

பொருள்: பாடலோடு பொருந்தவில்லையெனில் இசையால் என்ன பயன்? அது போலவே இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் என்ன பயன்?

அணி: எடுத்துக்காட்டு உவமையணி

12. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு.

பொருள்: நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும்.

13. பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

பொருள்: விரும்பத் தகுந்த இரக்க இயல்பைக் கொண்டவர்கள், பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சைக் கொடுத்தாலும் அதனை உண்ணும் பண்பாளர் ஆவார்.

10th_Tamil_Unit 3.indd 71 13-02-2023 15:41:55

ஆள்வினை உடைமை (62)

14. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். *

பொருள்: ஒரு செயல் முடிப்பதற்கு இயலாதது என்று எண்ணிச் சோர்வு அடையாதிருக்க வேண்டும். அச்செயலை முயற்சியுடன் முடிப்பது பெருமை தரும்.

15. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.

பொருள்: விடாமுயற்சி என்ற உயர்பண்பு கொண்டவர்களால்தான் பிறருக்கு உதவுதல் என்ற உயர்ந்த நிலையை அடைய முடியும்.

16. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். *

பொருள்: முயற்சி செய்தால் ஒருவர்க்குச் செல்வம் பெருகும். முயற்சி இல்லாவிட்டால் அவருக்கு வறுமையே வந்து சேரும்.

17. பொறிஇன்மை யார்க்கும் பழிஅன் றறிவறிந்
தாள்வினை இன்மை பழி.

பொருள்: ஐம்புலன்களில் ஏதேனும் குறையிருப்பினும் அது இழிவன்று. அறிய வேண்டியதை அறிந்து முயற்சி செய்யாததே இழிவாகும்.

18. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

பொருள்: சோர்விலாது முயற்சி செய்வோர் செய்கின்ற செயலுக்கு இடையூறாக வரும் முன்வினையையும் தோற்கடித்து வெற்றியடைவர்.

நன்றிஇல் செல்வம் (101)

19. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்.

பொருள்: பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் இருப்பவர் அடுக்கடுக்காய்ப் பல கோடிப் பொருள்கள் பெற்றிருந்தாலும் அதனால் பயன் இல்லை.

20. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று.


பொருள்: பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம், ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றதாகும்.

அணி: உவமையணி

10th_Tamil_Unit 3.indd 72 13-02-2023 15:41:55

கற்பவை கற்றபின்...

1. படங்கள் உணர்த்தும் குறளின் கருத்தினை மையமிட்டு வகுப்பில் கலந்துரையாடுக.

	
முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.	பண்ஏன்னாம் பாடற்கு இயைபின்றேல்; கண்ஏன்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்.

2. கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.

"சின்னச்சாமி... யாரோ மரத்தோரமா நிற்கிறாங்க.... யாராய் இருக்கும்...." மாட்டு வண்டிய ஓட்டிக்கிட்டே அப்பா கேட்டார்.

"தெரியலப்பா..."

"இறங்கி யாருன்னு பாரு...."

வாட்டசாட்டமாய், கண்ணாடியும் அலைபேசியும் கையுமாய் சாலையோரத்தில் வண்டியுடன் ஒருவர் நின்றிருந்தார். .

"ஐயா..நீங்க..."

"வெளியூருப்பா.. வண்டி நின்னு போச்சு...!"

"அப்படியா... வண்டியத் தூக்கி மாட்டு வண்டியில வச்சுட்டு வாங்க. மழை வர்ற மாதிரியிருக்கு.. ஊரு ரொம்ப தூரம்.. வேற வண்டியும் வராது..."

அவர் உடையையும் உழைத்துக் களைத்த வியர்வை பொங்கிய உடலையும் பார்த்து வரலைன்னுட்டார். மூன்று நான்கு பேர்தான் வண்டியில இருந்தோம்.. சிறிது தூரம் போறதுக்குள்ள மழை கொட்டு கொட்டுன்னு கொட்டிருச்சு... நாங்க வீட்டுக்குப் போயிட்டோம்.

இரவுல தூங்கப் போறப்ப... அப்பா சொன்னார். தம்பி... அந்த சூட்டுக்காரர் மழை தாங்காம நடந்திருக்காரு. தேங்கா விழுந்து மண்ட உடைஞ்சு... வேற யாரோ தூக்கிட்டு வந்திருக்காங்க. நம்ம ஊரு ஆசுபத்திரியில.. கட்டுப் போட்டுக்கிட்டு இருந்தாங்க... பாவம் படிச்சவரா இருக்காரு... சூழ்நிலை புரியாம... வரமாட்டேன்னு சொன்னாரு, இப்ப வேதனைப்பட்டாரே...

அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலா தார்.

ஆ) பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

இ) ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர்.

10th_Tamil_Unit 3.indd 73 13-02-2023 15:41:56

குறுவினா

1. 'நச்சப் படாதவன்' செல்வம் – இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.

2. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல் – இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

3. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.

உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும்.	ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை
ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது.	உயிரினும் ஓம்பப் படும்
ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர்.	நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று

4. எய்துவர் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்

இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

சிறுவினா

1. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு – குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

2. கவிதையைத் தொடர்க.



தண்ணீர் நிறைந்த குளம்
தவித்தபடி வெளிநீட்டும் கை
கரையில் கைபேசி படமெடுத்தபடி
.....
.....
.....
. . .

திருக்குறள் பற்றிய கவிதை:

உரை(றை) ஊற்றி ஊற்றிப்
பார்த்தாலும்
புளிக்காத பால்!
தந்தை தந்த
தாய்ப்பால்
முப்பால்!


– அறிவுமதி

10th_Tamil_Unit 3.indd 74 13-02-2023 15:41:56

இயல் நான்கு

அறிவியல்,
தொழில்நுட்பம்

நான்காம் தமிழ்



கற்றல் நோக்கங்கள்

- வளர்ந்து வருகின்ற தொழில்நுட்பங்கள் நம் மொழியில் திறம்படச் சொல்லப்படும் பாங்கறிந்து மொழித்திறனையும் தொழில்சார் கருத்துகளையும் புதுப்பித்தல்.
- அறிவியல் கருத்துகள் உட்பொதிந்துள்ள செய்யுள்களின் கருத்து வெளிப்பாட்டுத் திறனைப் படித்துணர்ந்து எதிர்வினையாற்றல்.
- உரையாடல் வடிவில் கருத்துகளை வெளிப்படுத்தும் திறன்பெறுதல்.
- இலக்கணப் பிழையற்ற தொடரமைப்புகளைத் தெரிந்துகொண்டு பயன்படுத்துதல்.

10th_Tamil_Unit 4.indd 75 12/2/2022 5:24:19 PM

தொழில்நுட்பம்

சு

செயற்கை நுண்ணறிவு

2G1BC

நுழையும்முன்

உயிரினங்களில் மனிதரை உயர்த்திக்காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே! அந்தச் சிந்தனைக்குத் தொழில்நுட்பமும் துணைசெய்கிறது. மனிதர்கள் செய்யும் வேலைகளான மொழிபெயர்ப்பு, இசையமைப்பு, மகிழுந்து ஓட்டுதல் முதலியவற்றைச் செய்யக் கணினிக் கரங்கள் நீள்கின்றன! கட்டுரை எழுதும் மென்பொருள்கள், கவிதை பாடும் ரோபோக்கள், மனிதரால் இயலாத செயல்களைச் செய்யும் ரோபோக்கள், ஆள்கள் இல்லாமலே நடத்தப்படும் வணிகக் கடைகள் எனப் புதிது புதிதான வழிகளில் மனிதப் பணித்திறனைக் கூட்டுகின்ற இந்தத் தொழில்நுட்பம் பற்றி...



10th_Tamil_Unit 4.indd 76 12/2/2022 5:24:19 PM

ஒரு மின்சுற்றறிக்கை!

"பள்ளி ஆண்டுவிழாவுக்கான கவிதை, கட்டுரைப் போட்டிகள்:

...கலந்துகொள்ளும் மாணவர்கள் 'நான் விரும்பும் தமிழகம்' என்னும் தலைப்பில் ஒருபக்க அளவில் கவிதையும் நான்குபக்க அளவில் கட்டுரையும் எழுதிப் பள்ளி மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். உங்கள் படைப்பு, உங்களின் செயற்கை நுண்ணறிவு உதவியாளரைக் கொண்டு எழுதப்படவில்லை என்று பள்ளியின் செயற்கை நுண்ணறிவு வல்லுநரிடம் சான்று பெற்ற பின்னரே தேர்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்..."

இப்படியான மின்சுற்றறிக்கை எதிர்காலத்தில் மாணவர்களின் திறன்பேசிகளுக்கு வரலாம்!

மின்னணுப் புரட்சி

எந்த ஒரு புதிய தொழில்நுட்பமும் ஒரே நாளில் வந்துவிடுவதில்லை. 1980களில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் (Personal Computers) வளர்ச்சியும், இணையப் பயன்பாட்டின் பிறப்பும் இன்றைய மின்னணுப் புரட்சிக்குக் (Digital Revolution) காரணமாயின. அவற்றுள் இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு.

அறையின் மூலையில் நிறுவப்பட்டிருக்கும் கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறதே, அதனுள் பொதிந்திருப்பது செயற்கை நுண்ணறிவு.

'அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம்; இதுவே சுருக்கமான வழி' என்று நமது திறன்பேசியில் உள்ள வழிகாட்டி வரைபடம் காட்டுகிறதல்லவா? அதற்குக் காரணமாக இருப்பதும் செயற்கை நுண்ணறிவே.

நமது திறன்பேசியோ, கணினியோ நாம் சொல்லச் சொல்லத் தன் அகண்ட தரவுகளில் உள்ள கோடிக்கணக்கான சொற்களுடன் ஒப்பிட்டுச் சரியான சொல்லைக் கால் நொடிக்கும் குறைவான நேரத்தில் தேர்ந்தெடுத்துத் திரையில் காண்பிக்கிறதல்லவா? அங்கு இணைந்திருப்பது செயற்கை நுண்ணறிவுதான்.

செயற்கை நுண்ணறிவைக் கொண்ட இயந்திரம் மனிதர்களுடன் சதுரங்கம் முதலான விளையாட்டுகளை விளையாடுகிறது; கண் அறுவை மருத்துவம் செய்கிறது; சமைக்கிறது; சில புள்ளிகளை வைத்துப் படம் வரைகிறது.

இதழியலில், செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத்தகுந்த மாறுதல்களைச் செய்துவருகிறது. அவற்றுள் விந்தையான ஒன்று, இயல்பான மொழிநடையை உருவாக்குதல் (Natural Language Generation) என்னும் மென்பொருள். அதற்கு வேர்டுஸ்மித் (எழுத்தாளி) என்று பெயர் வைத்திருக்கிறார்கள். தகவல்களைக் கொடுத்தால் போதும், வேர்டுஸ்மித் அழகான கட்டுரையைச் சில நொடிகளில் உருவாக்கிவிடும்.

இணையத்தில் வணிகம் செய்யும் தனியார் நிறுவனம் ஒன்று செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்திப் பெரும்பாலும் ஆளற்ற பல்பொருள் அங்காடிகளை உலகெங்கிலும் திறந்துவருகிறது.

தெரியுமா?



• 2016இல் ஐ.பி.எம்.நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன், சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

• சீனாவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள், இயந்திர மனிதர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளன. அவை அங்கு வரும் நோயாளிகளின் குரலையும் முகத்தையும் அடையாளம் கண்டு அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்கின்றன. சீன மொழியின் வெவ்வேறு வட்டார வழக்குகளையும்கூட அவை புரிந்துகொண்டு பதில் அளிக்கின்றன.

10th_Tamil_Unit 4.indd 77 12/2/2022 5:24:19 PM

செயற்கை நுண்ணறிவு நமக்கு எப்படி அறிமுகமாகிறது?

இவ்வுலகை இதுவரை மென்பொருள் (Software) ஆண்டுகொண்டிருக்கிறது; இனிமேல் செயற்கை நுண்ணறிவுதான் ஆளப்போகிறது. சமூக ஊடகங்கள் வழியாகவும் மின்னணுச் சந்தை மூலமாகவும் செயற்கை நுண்ணறிவு கொஞ்சம் கொஞ்சமாக நம்மிடம் வந்து சேரத் தொடங்கிவிட்டது. சமூக ஊடகங்களில் நீங்கள் பார்க்கிற ஒவ்வொன்றும், தேடுபொறிகளில் தேடிக் கிடைக்கும் விடைகளும் செயற்கை நுண்ணறிவு தீர்மானிப்பதைத்தான்.

தொழில்நுட்ப வரையறைகளின்படி

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு (Computer Program) எனலாம். அது தானாகக் கற்றுக்கொள்ளக்கூடியது. இந்த அறிவைக்கொண்டு தனக்கு வரும் புதியபுதிய சூழ்நிலைகளில் மனிதரைப்போல, தானே முடிவெடுக்கும் திறனுடையது. ஒளிப்படங்கள், எழுத்துகள், காணொலிகள், ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக்கொள்ளும் இயல்புடைய மென்பொருளை ஆராய்ச்சியாளர் வடிவமைக்கிறார். அவ்வாறு கற்றுக்கொண்டதை அந்த இயந்திரம் தேவைப்படும் இடங்களில், தேவைப்படும் நேரங்களில் செயல்படுத்தும்.

செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை; செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும் கேட்கவும் புரிந்துகொள்ளவும் முடியும் என்பதே அதன் சிறப்பு. மனிதனால் முடியும் செயல்களையும் அவன் கடினம் என்று கருதும் செயல்களையும் செய்யக்கூடியது செயற்கை நுண்ணறிவு.

மெய்நிகர் உதவியாளர்

திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள் கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப்போல நம்முடன் உரையாடி, சில உதவிகள் செய்கின்றது. இவை நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசி அழைப்பு விடுக்கும். நாம் திறக்கக் கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும். நாம் கேட்பதை உலாவியில் (browser) தேடும். நாம் விரும்பும் அழகான கவிதையை இணையத்தில் தேடித் தரும்! எந்தக் கடையில் எது விற்கும் என்று சொல்லும். படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும். நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றிக் கருத்துரைக்கும்.

எதிர்காலத்தில் உங்கள் நெருங்கிய நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரை விடவும் இதுபோன்ற மெய்நிகர் உதவியாளர் உங்களை நன்கு அறிந்தவர்களாக இருக்கும்; "*டாக்டர்! திரும்பவும் ஐயாவுக்கு மூச்சுத் திணறல்! டெரிஃப்ளின் ஊசி போட்டுவிடட்டுமா?*" – என்று கேட்கும். இந்த உதவியாளர்களை 'இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்' என்று பாரதியார் மெச்சுவதுபோல் மெச்சிக்கொள்ளலாம்!

ஒளிப்படக்கருவியில் செயற்கை நுண்ணறிவு

தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக்கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச் சொல்லும் கைரேகையும் திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். இது படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக்கொள்கிறது. திறன்பேசிகளில் உள்ள ஒளிப்படக் கருவியில், எடுக்கும் படங்களை மெருகூட்ட இத்தொழில்நுட்பம் உதவுகிறது.

காணொலிகளைத் தொகுக்கும் மென்பொருள்களில் (Video Editing) இன்றைக்குச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பயன்படுகிறது. இதன் மூலம் நேரம் வீணாவது தவிர்க்கப்படுகிறது.

வாடிக்கையாளர் சேவை

இந்தியாவின் பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி, 'இலா' (ELA – Electronic Live Assistant) என்னும் உரையாடு மென்பொருளை (Chatbot) உருவாக்கியிருக்கிறது. ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் அது உரையாடும். வங்கிக்கு வரும்

10th_Tamil_Unit 4.indd 78 12/2/2022 5:24:19 PM

வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் சேவைகளை அது இணையம் மூலம் அளிக்கிறது. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த இந்திய வங்கிகள் ஆயத்தமாகிவருவதற்கு இந்த 'இலா' ஒரு சோறு பதம்!

ஏன் செயற்கை நுண்ணறிவு முதன்மையானது?

நாம் இப்போது செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் இருக்கிறோம். நாம் நினைப்பதை விடவும் வேகமாக இந்தத் தொழில்நுட்பம் நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கிறது. உலகில் உள்ள பெரும்பாலான தொழில்நுட்ப நிறுவனங்கள் இத்தொழில்நுட்பத்தை உருவாக்குவதிலும் பயன்படுத்துவதிலும் விற்பனை செய்வதிலும் கவனம் செலுத்துகின்றன. இத்தொழில்நுட்பம் உலகளாவிய வணிகத்துக்கு உதவுகிறது.

செயற்கை நுண்ணறிவின் மிகுதியான வளர்ச்சியால் தரவு அறிவியலாளர்களின் (*Data Scientists*) தேவை கூடியுள்ளது. இயந்திரக் கற்றல் வல்லுநர்கள் முதலான பல தொழில்நுட்ப வல்லுநர்களின் தேவையும் பெருகிவருகிறது. போட்டி நிறைந்த இவ்வுலகில் செயற்கை நுண்ணறிவை யார் முதலாவதாகவும் சரியாகவும் பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு வணிக வானம் வசப்படும்!

எதிர்காலத்தில்...

வேலை வாய்ப்புகளில் கணிசமான மாற்றங்களைச் செயற்கை நுண்ணறிவு கொண்டுவரப்போகிறது.


எதிர்காலத்தில் 'ரோபோ'விடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக அலுவலகம் செல்லும் பெற்றோர்களை நாம் பார்க்கப்போகிறோம். வயதானவர்களுக்கு

தெரியுமா?



பெப்பர்

ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர். இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ. வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என்று மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன. இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்பச் செயல்படுகின்றன. பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.



10th_Tamil_Unit 4.indd 79 12/2/2022 5:24:22 PM

உதவிகள் செய்தும் அவர்களுக்கு உற்ற தோழனாய்ப் பேச்சுக் கொடுத்தும் பேணும் ரோபோக்களை நாம் பார்க்கப்போகிறோம்!

செயற்கை நுண்ணறிவுள்ள ரோபோக்களால் மனிதர் செய்ய இயலாத, அலுப்புத் தட்டக்கூடிய, கடினமான செயல்களைச் செய்யமுடியும்; மனித முயற்சியில் உயிராபத்தை விளைவிக்கக் கூடியசெயல்களைச் செய்யமுடியும்!

புதிய வணிக வாய்ப்புகளைச் செயற்கை நுண்ணறிவு நல்குகிறது. பெருநிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும் சந்தைப்படுத்தவும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகின்றன.

விடுதிகளில், வங்கிகளில், அலுவலகங்களில் தற்போது மனிதர் அளிக்கும் சேவைகளை ரோபோக்கள் அளிக்கும் – மேலும், நம்முடன் உரையாடுவது, ஆலோசனை வழங்குவது, பயண ஏற்பாடு செய்துதருவது, தண்ணீர் கொண்டு வந்து தருவது, உடன் வந்திருக்கும் குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டுவது எனப் பலவற்றைச் செய்யும்.

எதிர்காலத்தில் நாம் பயணிக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவைக் கொண்டு இயக்கவேண்டியிருக்கும். இத்தகைய ஊர்திகள் ஏற்படுத்தும் விபத்துகள் குறையும்; போக்குவரத்து நெரிசல் இருக்காது. அதன்மூலம் பயண நேரம் குறையும்; எரிபொருள் மிச்சப்படும்.

இத்தகைய மென்பொருள்கள் கவிதைகள், கதைகள், விதவிதமான எழுத்து நடைகள் போன்றவற்றைக் கற்றுக்கொண்டு மனிதர்களுடன் போட்டியிட்டாலும் வியப்பதற்கில்லை!

கல்வித் துறையில் இத்தொழில்நுட்பத்தைப் பலவிதங்களில் பயன்படுத்தும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள்

செயற்கை நுண்ணறிவு நமது வாழ்க்கையையும் வணிகத்தையும் நம்மை அறியாமலேயே வளப்படுத்திக்கொண்டிருக்கின்றது. இந்தத் தொழில்நுட்பத்தைக் கண்டு அச்சப்பட்டவர்களின் அலறல்களை நாம் எதிர்கொள்வதே முதல் அறைகூவல். ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பு அறிமுகமாகும்போதும் பழைய வேலைவாய்ப்புகள் புதிய வடிவில் மாற்றம் பெறுகின்றன. ஆகவே, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் அளிக்கும் வியக்கத்தக்க நன்மைகளைப் புரிந்துகொள்ளவும் வரவேற்கவும் நாம் அணியமாக வேண்டும்.

மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காப்பாற்றவும் உடல்நலத்தைப் பேணவும் கொடிய நோய்களைத் தொடக்கநிலையிலேயே கண்டறியவும் மருத்துவம் செய்யும் முறைகளைப் பட்டறிவு மிக்க மருத்துவரைப் போலப் பரிந்துரை செய்யவும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் ஆராய்ச்சிகள் மும்முரமாக நடந்துவருகின்றன.

கல்வியறிவு என்பது...

ஒருகாலத்தில் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு எழுதப் படிக்கத் தெரிந்த கல்வியறிவே போதுமானதாக இருந்தது. இப்போது கல்வியறிவுடன் மின்னணுக் கல்வியறிவையும் (Digital Literacy) மின்னணுச் சந்தைப்படுத்துதலையும் (Digital Marketing) அறிந்திருப்பது வாழ்க்கையை எளிதாக்கவும் வணிகத்தில் வெற்றியடையவும் உதவுகிறது. ஆனால் எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவும் நான்காவது தொழிற்புரட்சியின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவுமே நம்மை வளப்படுத்த உதவும்.

ஆனாலும் முன்னேற்றமே!

மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை, தீமை என்று இரண்டு பக்கங்கள் இருந்தே வந்திருக்கின்றன. அதற்கேற்ப மனிதர்கள் தங்களை மாற்றிக்கொள்வார்கள்.


இப்போது உலகில் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பயன்பாட்டில் இருக்கின்ற செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், எதிர்காலத்தில் உலகின் ஒவ்வொரு துறையிலும் அளவிடற்கரிய முன்னேற்றத்தைத் தரும்.

10th_Tamil_Unit 4.indd 80 12/2/2022 5:24:22 PM



எத்திசையும் புகழ் மணக்க.....

சீன நாட்டில் தமிழ்க் கல்வெட்டு!



சீன நாட்டில் 'காண்டன்' நகருக்கு 500 கல் வடக்கே சூவன்சௌ என்னும் துறைமுக நகர் உள்ளது. பண்டைய காலத்திலும் இது சிறந்த துறைமுகமாக விளங்கிற்று. அந்தக் காலத்தில் தமிழ் வணிகர்கள் இந்நகருக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர். அதன் காரணமாக சீனாவில் சிவன் கோவில் ஒன்று கட்டப்பட்டது. அது சீனப் பேரரசரான குப்லாய்கானின் ஆணையின் கீழ் கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும் தமிழ்க் கல்வெட்டு இன்றும் இக்கோயிலில் உள்ளது. இக்கோயிலில் சோழர்காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.




கற்பவை கற்றபின்...

1. இன்றைய செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடுகளைச் செய்தித்தாளிலோ இணையத்திலோ கண்டு அட்டவணையாகத் தருக.

2. கொடுக்கப்படுகின்ற எல்லாவற்றையும் உள்ளீடு செய்து, தேவைப்படும் வேளையில் வெளிப்படுத்துவதில், இன்று மூளைக்கு இணையாகத் தொழில்நுட்பமும் முன்னேறியுள்ளது.

   இக்கருத்தையும் படத்தையும் ஒப்புநோக்கிக் கலந்துரையாடுக.



10th_Tamil_Unit 4.indd 81 12/2/2022 5:24:23 PM

கவிதைப் பேழை

தொழில்நுட்பம்

சு


பெருமாள் திருமொழி

– குலசேகராழ்வார்

SB19D

நுழையும்முன்

தமிழர், பண்டைய நாட்களிலிருந்தே அறிவியலை வாழ்வியலோடு இணைத்துக் காணும் இயல்புடையவர்களாக இருக்கிறார்கள். அதன்விளைவாக, சங்க இலக்கியத்தில் அறிவியல் கருத்துகள் நிறைந்துள்ளன. அதற்கு இணையாகப் பக்தி இலக்கியங்களிலும் அறிவியல் கருத்துகள் செறிந்திருக்கின்றன.



*வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. *

பாசுர எண்: 691

பாடலின் பொருள்

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார். வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! அதுபோன்று நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன்.

சொல்லும் பொருளும் சுடினும் – சுட்டாலும், மாளாத–தீராத, மாயம் – விளையாட்டு

வித்துவக்கோடு என்னும் ஊர், கேரள மாநிலத்தில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ளது. குலசேகர ஆழ்வார் அங்குள்ள இறைவனான உய்யவந்த பெருமாளை அன்னையாக உருவகித்துப் பாடுகிறார்.

நூல் வெளி

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரத்தில் 691ஆவது பாசுரம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாம் திருமொழியாக உள்ளது. இதில் 105 பாடல்கள் உள்ளன. இதனைப் பாடியவர் குலசேகராழ்வார். இவரின் காலம் எட்டாம் நூற்றாண்டு.

கற்பவை கற்றபின்...

தமிழர் மருத்துவமுறைக்கும் நவீன மருத்துவமுறைக்கும் உள்ள தொடர்பு குறித்து ஒப்படைவு உருவாக்குக.

10th_Tamil_Unit 4.indd 82 12/2/2022 5:24:24 PM


தொழில்நுட்பம்

சு

கவிதைப் பேழை

பரிபாடல்

– கீரந்தையார்



இலக்கியங்கள் தாம் தோன்றிய சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு மட்டுமல்லாமல் அக்காலகட்டத்தில் நிலவிய அறிவியல் கோட்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் தாங்கி அமைகின்றன. அறிவியல் செழுமை அடைந்திருக்கும் இக்காலத்தின் தொடக்க விதைகளைப் பண்டைய இலக்கியங்களில் நாம் பார்க்கமுடிகிறது. மேனாட்டு அறிவியல் சிந்தனையின் சாயல், துளியும் இல்லாமல் படைக்கப்பட்ட தமிழர் இலக்கியங்களில் துளிர்த்திருக்கும் அறிவியல் கருத்துகள் இன்றளவும் அவற்றோடு ஒத்துப்போவதைக் காண்கையில் பெருவியப்பு மேலிடுகிறது. புவியின் உருவாக்கம் குறித்து இன்றைய அறிவியல் கூறுகிற கருத்தை அன்றே காட்டிய பழங்கவிதை வியப்பிலும் வியப்பே!

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி,
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்

செந்தீச் சுடரிய ஊழியும்; பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும்; அவையிற்று
உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு,
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்...

பா. எண். 2 : 4–12


நெருப்புப் பந்தாய் வந்து குளிர்ந்த பூமி

பாடலின் பொருள்

எதுவுமேயில்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு (பரமாணு) பேரொலியுடன் தோன்றியது. உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதத்தின் ஊழி அது. அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. பிறகு நெருப்புப் பந்துபோலப் புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொடர்ந்தது. பின்னர்ப் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது. மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தால் நிறைந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது. அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியான ஊழிக்காலம் வந்தது.

10th_Tamil_Unit 4.indd 83 12/2/2022 5:24:24 PM

சொல்லும் பொருளும்

விசும்பு – வானம்
ஊழி – யுகம்
ஊழ் – முறை
தண்பெயல் – குளிர்ந்த மழை
ஆர்தருபு – வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த
பீடு – சிறப்பு
ஈண்டி – செறிந்து திரண்டு

இலக்கணக் குறிப்பு

ஊழ்ஊழ் – அடுக்குத் தொடர்
வளர்வானம் – வினைத்தொகை
செந்தீ – பண்புத்தொகை
வாரா (ஒன்றன்)– ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பகுபத உறுப்பிலக்கணம்

கிளர்ந்த – கிளர் + த் (ந்) + த் + அ
கிளர் – பகுதி
த் – சந்தி
த்(ந்) – ந் ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

தெரிந்து தெளிவோம்

இல்நுழைகதிர்

இந்த அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன. வெளியே நின்று பார்த்தோமெனில், சிறுதூசிபோலக் கோடிக்கணக்கான பால்வீதிகள் தூசுகளாகத் தெரியும். அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924இல் நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்தார்.

1300 ஆண்டுகளுக்குமுன் மாணிக்கவாசகர் திருஅண்டப் பகுதியில் இவ்வாறு எழுதுகிறார்...

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்

... ...

சிறிய ஆகப் பெரியோன் தெரியின்" (திருவாசகம் 3 – 1 – 6)

அண்டப் பகுதிகளின் உருண்டை வடிவும், ஒப்பற்ற வளமையான காட்சியும் ஒன்றுக்கு ஒன்று ஈர்ப்புடன் நின்ற அழகினைச் சொல்வது எனின், அவை நூறுகோடிக்கும் மேல் விரிந்து நின்றன. இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக் கற்றையில் தெரியும் தூசுத் துகள்போல அவை நுண்மையாக இருக்கின்றன.

நூல் வெளி



பரிபாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். பாடப்பகுதியிலுள்ள பாடலை எழுதியவர் கீரந்தையார். இந்நூல் "ஓங்கு பரிபாடல்" எனும் புகழுடையது. இது சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல். உரையாசிரியர்கள் இதில் எழுபது பாடல்கள் இருப்பதாகக் கூறியுள்ளனர். இன்று 24 பாடல்களே கிடைத்துள்ளன.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, சமூக உறவு அறிவாற்றல், இயற்கையைப் புரிந்துகொள்ளும் திறன் போன்றவற்றைச் சங்க இலக்கியம் மூலம் நாம் அறிந்துகொள்கிறோம்.

கற்பவை கற்றபின்...

1. *பரிபாடல் இசைப்பாடல் ஆகும். பாடப்பகுதியின் பாடலை இசையுடன் பாடி மகிழ்க.*
2. *பரிபாடல் காட்டும் பெருவெடிப்புக் காட்சியைப் படங்களாக வரைந்து பொருத்தமான செய்திகளுடன் வழங்குக.*

10th_Tamil_Unit 4.indd 84 12/2/2022 5:24:24 PM

விரிவானம்


தொழில்நுட்பம்

ச

விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை



அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது: ஐயங்களை நீக்குகிறது; பழைய தவறான புரிதல்களை நீக்குகிறது; எண்ணங்களை மாற்றுகிறது. அறிவியலால் ஒருகாலத்தில் நிறுவப்பட்டிருந்த கருத்து, பின்னால் மறுக்கப்படுவதும் நேர்கிறது. மீண்டும் புதிய தடங்களைப் பதித்துப் புதிய பாதையிலே அறிவியல் இயங்குகிறது. இயற்கையின் மர்ம முடிச்சுகளை அவிழ்க்கும் அறிவியல் சிந்தனை, போற்றுதலுக்குரியதாக இருக்கிறது. அதிலும் தன்னால் எந்த இயக்கமும் மேற்கொள்ள இயலாத நிலையிலும் அறிவியலின் இயங்கும் தன்மையை அறிந்து புது உண்மைகளைச் சொன்ன ஒருவரை உலகம் போற்றுவதில் வியப்பில்லை.



பள்ளி மாணவர்கள் அறிவியல் சுற்றுலா செல்லத் திட்டமிடுகிறார்கள். ஆசிரியர்கள் அவர்களை ஒருங்கிணைத்துச் சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப வளாகத்திற்கு அழைத்துச் செல்கின்றனர்.

முன்பதிவு செய்திருந்த நேரத்தில் கோளரங்கம் செல்கின்றனர். அவர்களை, கோளரங்க இயக்குநர் வரவேற்று, பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தின் செயல்பாடுகளை அறிமுகம் செய்கிறார்.

இயக்குநர்: பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் 1988ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இங்கு, பத்துக் காட்சிக் கூடங்கள் உள்ளன. பரிணாம வளர்ச்சிப் பூங்கா, புதிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பூங்கா, இயந்திரவியல் பூங்கா முதலியவை இங்கு உள்ளன. மேலும் குழந்தைகள் விளையாடத்தக்க பொம்மைகளைக் கொண்ட பூங்காவும் இங்குள்ளது.

மாணவர்: இங்குள்ள கோளரங்கம் பற்றிக் கூறுங்கள் ஐயா.

10th_Tamil_Unit 4.indd 85 12/2/2022 5:24:25 PM

இயக்குநர்: இந்தக் கோளரங்கம் தனித்துவம் வாய்ந்தது. இந்தியாவிலேயே முதன்முதலாக 360 பாகை அரைவட்ட வானத்திரை இங்குதான் உள்ளது. இது 2009ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. சரி! அனைவரும் உள்ளே சென்று இருக்கையில் அமருங்கள்.

(இயக்குநர் தனக்குரிய இடத்தில் அமர்ந்து கொள்கிறார். கோள வடிவமான அவ்வரங்கின் மேல் உள்ள அரைவட்ட வானத்திரை, செயற்கை வானமாக விரிகிறது.)

விண்வெளியில் உள்ள கோள்களின் இயக்கம் குறித்தான காணொலி சிறிது நேரம் திரையில் வருகிறது.

அண்டவெளியின் காலம் குறித்தான விளக்கம் தொடங்குவதற்கு முன் திரையில், சக்கர நாற்காலியில் அமர்ந்துள்ள ஒருவரின் படம் தெரிகிறது. அரங்கில் முழு அமைதி. இயக்குநரின் கணீரென்ற குரல் பின்னணியில் விளக்கமளிக்கிறது.

இயக்குநர்: இவரை உங்களுக்குத் தெரிகிறதா?

மாணவர்கள் உற்றுப் பார்க்கின்றனர். தலை வலது பக்கம் சாய்ந்திருக்கிறது; கீழிருக்கும் சில பற்கள் மேல் உதட்டை அழுத்தி வெளிவந்து நிற்கின்றன. அவர் அமர்ந்திருப்பது கணிப்பொறியுடன் சேர்ந்த சக்கர நாற்காலி. அவரின் கன்னத்தின் தசைகள் சிறிது அசைகின்றன. அவரது படத்தின் கீழ்,

"மாற்றத்திற்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்ளும் திறனே புத்திக் கூர்மை"

"அறியாமை அறிவாற்றலின் மிகப்பெரிய எதிரியல்ல. அது அறிவின் மாயையே"

என்ற தொடர்கள் ஒவ்வோர் எழுத்தாகத் தோன்றுகின்றன. மாணவர்கள் 'ஸ்டீபன் ஹாக்கிங்', 'ஸ்டீபன் ஹாக்கிங்' என முணுமுணுக்கிறார்கள்.

இயக்குநர்: ஆம்! நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பவர் தற்காலத்தின் ஐன்ஸ்டைன் என்று புகழப்படும் ஸ்டீபன் ஹாக்கிங்தான்.

மாணவர்: (திரையில் ஸ்டீபன் ஹாக்கிங்கின் தோற்றத்தைப் பார்த்து) இவர் ஏன் இவ்வாறு ஆனார்?

இயக்குநர்: இங்கிலாந்தின் மருத்துவமனை ஒன்றில் 1963ஆம் ஆண்டு 21 வயது இளைஞர் அனுமதிக்கப்பட்டார். மருத்துவத்திற்குப் பின் அவர் இன்னும் சில திங்களே உயிர் வாழ்வார் என்றும் விரைவில் இறந்துவிடுவார் என்றும் மருத்துவர்கள் அறிக்கை தந்தனர். பக்கவாதம் (Amyotrophic lateral Scleroses) என்னும் நரம்பு நோய்ப் பாதிப்புடன் அவர், மருத்துவ உலகமே மிரண்டுபோகுமளவு மேலும் 53 ஆண்டுகள் இயங்கினார். 1985இல் மூச்சுக்குழாய்த் தடங்கலால் பேசும் திறனை இழந்தார். இறுதியாக எஞ்சியது கன்னத்தின் தசையசைவும் கண்சிமிட்டலும் மட்டுமே. உடலில் மீதமுள்ள அத்தனை உறுப்புகளும் செயலிழந்துவிட்டன. கன்னத் தசையசைவு மூலம் தன் கருத்தைக் கணினியில் தட்டச்சுசெய்து வெளிப்படுத்தினார். அவரின் ஆய்வுகளுக்குத் துணையாகச் செயற்கை நுண்ணறிவுக் கணினி செயல்பட்டது.

மாணவர்: அவரின் ஆராய்ச்சி முடிவுகள் எவ்வாறு அமைந்தன ஐயா?

தெரிந்து தெளிவோம்

பேரண்டப் பெருவெடிப்பு, கருந்துளைகள் பற்றியான ஸ்டீபன் ஹாக்கிங்கின் ஆராய்ச்சிகள் முக்கியமானவை. இப்பேரண்டம் பெருவெடிப்பினால் (Big Bang Theory) உருவானதே என்பதற்கான சான்றுகளைக் கணிதவியல் அடிப்படையில் விளக்கினார். இப்புவியின் படைப்பில் கடவுள் போன்ற ஒருவர் பின்னணியில் இருந்தார் என்பதை மறுத்தார். பிரபஞ்சத்தை இயக்கும் ஆற்றலாகக் கடவுள் என்ற ஒருவரைக் கட்டமைக்க வேண்டியதில்லை' என்றார்.


10th_Tamil_Unit 4.indd 86 12/2/2022 5:24:25 PM

தெரிந்து தெளிவோம்

கருந்துளை

நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் ஒளிர்கின்றன. அவற்றுள் நம் ஞாயிறும் ஒன்று. ஒரு விண்மீனின் ஆயுள் கால முடிவில் உள்நோக்கிய ஈர்ப்பு விசை கூடுகிறது. அதனால் விண்மீன் சுருங்கத் தொடங்குகிறது. விண்மீன் சுருங்கச் சுருங்க அதன் ஈர்ப்பாற்றல் உயர்ந்துகொண்டே சென்று அளவற்றதாகிறது.

"சில நேரங்களில் உண்மை, புனைவை விடவும் வியப்பூட்டுவதாக அமைந்துவிடுகிறது. அப்படி ஓர் உண்மைதான் கருந்துளைகள் பற்றியதும். புனைவு இலக்கியம் படைப்பவர்களது கற்பனைகளையெல்லாம் மிஞ்சுவதாகவே கருந்துளைகள் பற்றிய உண்மைகள் உள்ளன. அதனை அறிவியல் உலகம் மிக மெதுவாகவே புரிந்துகொள்ள முயல்கிறது" என்று கூறுகிறார், ஸ்டீபன் ஹாக்கிங். அமெரிக்க அறிவியலாளர் ஜான் வீலர் என்பவர்தாம் கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதலில் குறிப்பிட்டவர். சுருங்கிய விண்மீனின் ஈர்ப்பெல்லைக்குள் செல்கிற எதுவும், ஏன் ஒளியும்கூடத் தப்பமுடியாது. உள்ளே ஈர்க்கப்படும். இவ்வாறு உள்சென்ற யாவையும் வெளிவரமுடியாததால் இதனைக் கருந்துளை எனலாம் என்று ஜான் வீலர் கருதினார்.



இயக்குநர்: (1) கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வரமுடியாது. (2) கருந்துளையின் ஈர்ப்பு எல்லையிலிருந்து (Event Horizon) கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. (3) கருந்துளை உண்மையிலேயே கருப்பாக இருப்பதில்லை. கருந்துளையிலிருந்து ஒரு கட்டத்தில் கதிர்வீச்சும் அணுத்துகள்களும் கசியத் தொடங்கி இறுதியில் கருந்துளை வெடித்து மறைந்துவிடும்.

ஸ்டீபன் ஹாக்கிங்கின் இந்த ஆராய்ச்சி முடிவு 'ஹாக்கிங் கதிர்வீச்சு' என்று அழைக்கப்படுகிறது. இது கருந்துளை பற்றிய முந்தைய கருத்துகளைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டது. முன்னர் அண்டவெளியில் காணப்படும் கருந்துளை அழிவு ஆற்றல் என்று கருதப்பட்டது. ஆனால் ஹாக்கிங், கருந்துளை என்பது படைப்பின் ஆற்றல் என்று நிறுவினார்.

மாணவர் : யாரெல்லாம் ஸ்டீபன் ஹாக்கிங்கின் அறிவியல் முன்னோடிகளாக இருந்தனர்?

இயக்குநர் : ஐன்ஸ்டைன், நியூட்டன் முதலானோர் ஸ்டீபன் ஹாக்கிங்கின் முன்னோடிகள். இவர், அவர்களுக்கு நிகராக மதிக்கப்படுகிறார். நியூட்டன், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் வகித்த கணக்கியல் துறையின் 'லூகாசியன் பேராசிரியர்' என்ற மதிப்பு மிகுந்த பதவியை ஸ்டீபன் ஹாக்கிங்கும் வகித்திருக்கிறார். ஐன்ஸ்டைன் ஈர்ப்பலைகள் குறித்த முடிவுகளைக் கணிதச் சமன்பாடுகள் மூலம் கோட்பாடுகளாகச் சொன்னார். அவர் காலத்தில் $E = MC^2$ எனும் கோட்பாட்டை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. 100 ஆண்டுகளுக்குப்பின் ஈர்ப்பலைகள் இருப்பதை உலகம் கண்டுகொண்டது. கருந்துளை குறித்த தன்னுடைய ஆய்வை ஐன்ஸ்டைன் போல, கோட்பாடுகளாக வெளியிடாமல் விண்மீன் இயக்கத்தோடு ஒப்பிட்டு ஸ்டீபன் ஹாக்கிங் விளக்கியதால் உலகம் கருந்துளைக் கோட்பாட்டை எளிதில் புரிந்துகொண்டது.

10th_Tamil_Unit 4.indd 87 12/2/2022 5:24:25 PM

மாணவர் : உலகம் புரிந்துகொண்டது என்கிறீர்களே, பொதுமக்கள் எல்லோரும் அதை விளங்கிக் கொண்டார்களா?

இயக்குநர்: ஆம். பெரும்பாலும் அறிவியல் உண்மைகளை அறிவியல் அறிஞர்கள்தான் புரிந்துகொள்வார்கள். ஆனால் ஸ்டீபன் ஹாக்கிங், தன் கோட்பாடுகளைப் பொதுமக்களுக்கும் புரியும் வகையில் எளிமையாக விளக்கினார்.

மாணவர் : விருதுகளைப் பெருமைப்படுத்திய நாயகர்கள் ஒரு சிலரே! அந்த வகையில் ஸ்டீபன் ஹாக்கிங் என்னென்ன விருதுகளைப் பெற்றார்?

இயக்குநர்: அறிவியல் கோட்பாடுகளை எளிய மக்களுக்கும் புரியும் வண்ணம் சொன்ன அவரின் முயற்சிக்குக் கிடைத்த விருதுகள் பல.

1. அமெரிக்காவின் உயரிய விருதான, அதிபர் விருது (Presidential medal of Freedom)
2. ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் விருது
3. உல்ஃப் விருது (Wolf Foundation Prize)
4. காப்ளி பதக்கம் (Copley Medal)
5. அடிப்படை இயற்பியல் பரிசு (Fundamental Physics Prize)

என அவர் பெற்ற விருதுகள் அவரால் பெருமையடைந்தன.

ஹாக்கிங், கலீலியோவின் நினைவு நாளில் பிறந்து, ஐன்ஸ்டைனின் பிறந்த நாளில் இறந்தது அறிவியலைப் பொறுத்தவரை ஒரு தற்செயல் நிகழ்வாக இருக்கலாம். ஆனால் அந்தத் தற்செயலிலும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. இம்மூன்று அறிவியலாளர்களும் அவரவர் காலத்தில் இந்தப் பேரண்டத்தைப் பற்றி இருந்த புரிதலைப் பலமடங்கு வளர்த்தவர்கள்; பேரண்டத்தைப் பற்றி மனிதஇனம் நம்பியதைப் புரட்டிப் போட்டவர்கள். ஹாக்கிங்குடைய துணிச்சல், உறுதி, அறிவாற்றல், நகைச்சுவை உணர்வு முதலானவை உலக மக்களால் என்றும் நினைவுகூரப்படும்.

தலைவிதிதான் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என நம்புபவர்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புதான் வருகிறது. விதிதான் தீர்மானிக்கிறது என்றால் சாலையைக் கடக்கும்போது ஏன் இருபுறமும் பார்த்துக் கடக்கிறார்கள்?

– ஸ்டீபன் ஹாக்கிங்

மாணவர் : அவரின் வாழ்க்கைப் பயணத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் என்று எவற்றையெல்லாம் கூற முடியும்?

இயக்குநர் : 2012இல் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் "தொடக்க விழா நாயகர்" என்ற சிறப்பைப் பெற்றார். 'அடுத்த தலைமுறை' (The next generation), 'பெருவெடிப்புக் கோட்பாடு' (The Bigbang Theory) உள்ளிட்ட தொலைக்காட்சித் தொடர்களில் பங்கேற்றார். சூடான காற்று நிரம்பிய பலூனில் வானில் பறந்து தனது 60ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். போயிங் 727 என்ற விமானத்தில் பூஜ்ஜிய ஈர்ப்பு விசைப் பயணத்தை மேற்கொண்டு எடையற்ற தன்மையை உணர்ந்தார்.

மாணவர்: ஸ்டீபன் ஹாக்கிங் வியக்கத்தக்க மனிதர் என்பதை அவரின் வாழ்க்கை நிகழ்வுகளும் ஆராய்ச்சிகளும் காட்டுகின்றன. உடலில் ஏற்பட்ட உறுப்பு இழப்போ, ஊனமோ ஒருவருக்குக் குறையாகாது; ஊக்கமும் உழைப்பும் சேர்ந்த ஆளுமைத் தன்மை இல்லாமல் இருப்பதே குறையாகும் என்ற உண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டியவர் ஸ்டீபன்.

இயக்குநர்: அறிவியல் உலகில் மட்டுமன்றி, சமூக உளவியல் அடிப்படையிலும் தன்னம்பிக்கையின் சிகரமாக விளங்கியவர் ஸ்டீபன் ஹாக்கிங். அறிவுத் தேடலில் உடல், உள்ளத் தடைகளைத் தகர்த்த மாமேதை ஸ்டீபன் ஹாக்கிங். அவரைப் பற்றிய குறும்படத்தை இப்போது திரையில் காண்போம்.

(திரையில் விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை குறும்படம் திரையிடப்படுகிறது)

10th_Tamil_Unit 4.indd 88 12/2/2022 5:24:25 PM

ஸ்டீபன் ஹாக்கிங் நூல்கள்

ஸ்டீபன் ஹாக்கிங் எழுதிய நூல்களுள் 'காலத்தின் சுருக்கமான வரலாறு' என்ற நூல் நாற்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

1988ஆம் ஆண்டு வெளிவந்த இந்நூல் பெருவெடிப்பு, கருந்துளை ஆகியவை பற்றிய அரிய உண்மைகளைப் பொதுமக்களிடையே பரப்பி, ஒரு கோடிப் படிகளுக்கு மேல் விற்பனையானது.



முன்தோன்றிய மூத்தகுடி

"கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
திரு மா வியல் நகர்க் கருவூர் முன்துறை"

அகநானூறு, 93 : 20–21

கரூர்
மாவட்டத்தின்
கருவூர் (கரூர்)



கற்பவை கற்றபின்...

1. "அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத் திறன். ஏனெனில் அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்துவிடுகிறது. கற்பனைத் திறனோ இந்த ஒட்டுமொத்தப் பேரண்டத்தையும் அளப்பது. இன்று நாம் அறிந்திருப்பதை மட்டுமன்று; இனி நாம் அறிந்துகொள்ளப்போவதையும் உள்ளடக்கியது" – ஐன்ஸ்டைன்

   "வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வேன். அதன்மூலம் மனித இனம் தொடர வழிவகுப்பேன்" – ஸ்டீபன் ஹாக்கிங்

இவ்விருவரின் கூற்றுகளைப் பாடப்பகுதி உணர்த்தும் கருத்துகளோடு ஒப்பிட்டு உரையாடுக.

2. கருந்துளை சார்ந்த செய்தியை அறிவியல் இதழ் ஒன்றிற்குக் குறுங்கட்டுரையாக எழுதுக

10th_Tamil_Unit 4.indd 89 12/2/2022 5:24:26 PM

தொழில்நுட்பம்

ச

இலக்கணம் – பொது

இருதிணை

ஆறறிவுடைய மக்களை உயர்திணை என்றும் மற்ற உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் அஃறிணை (அல்திணை) என்றும் வழங்குவர்.

ஐம்பால்

பால் என்பது திணையின் உட்பிரிவு ஆகும் (பால்–பகுப்பு, பிரிவு). இஃது ஐந்து வகைப்படும்.

உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று பிரிவுகளை உடையது. அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் என இரு பிரிவுகளை உடையது.

உயர்திணைக்குரிய பால் பகுப்புகள்

வீரன், அண்ணன், மருதன் – ஆண்பால்
மகள், அரசி, தலைவி – பெண்பால்
மக்கள், பெண்கள், ஆடவர் – பலர்பால்

அஃறிணைக்குரிய பால் பகுப்புகள்

அஃறிணையில் ஒன்றனைக் குறிப்பது ஒன்றன்பால் ஆகும்.

எ.கா. யானை, புறா, மலை

அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் ஆகும்.

எ.கா. பசுக்கள், மலைகள்

மூவிடம்:

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும்.

இடம்	பெயர் / வினை	எடுத்துக்காட்டு
தன்மை	தன்மைப் பெயர்கள்	நான், யான், நாம், யாம் ...
	தன்மை வினைகள்	வந்தேன், வந்தோம்
முன்னிலை	முன்னிலைப் பெயர்கள்	நீ, நீர், நீவிர், நீங்கள்
	முன்னிலை வினைகள்	நடந்தாய், வந்தீர், சென்றீர்கள் ...
படர்க்கை	படர்க்கைப் பெயர்கள்	அவன், அவள், அவர், அது, அவை...
	படர்க்கை வினைகள்	வந்தான், சென்றாள், படித்தனர், பேசினார்கள் பறந்தது, பறந்தன...

10th_Tamil_Unit 4.indd 90 12/2/2022 5:24:26 PM

வழு – வழாநிலை – வழுவமைதி

இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.

இலக்கணமுறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்

இரு திணையும் ஐம்பாலும் மூவிடமும் காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும் தொடர்களில் இலக்கணப் பிழைகளுடன் வந்தால் அவையும் வழு எனப்படும். அவ்வாறு இலக்கணப் பிழைகள் இல்லாதிருப்பின் அவை வழாநிலை எனப்படும்.

	வழு	வழாநிலை
திணை	செழியன் வந்தது	செழியன் வந்தான்
பால்	கண்ணகி உண்டான்	கண்ணகி உண்டாள்
இடம்	நீ வந்தேன்	நீ வந்தாய்
காலம்	நேற்று வருவான்	நேற்று வந்தான்
வினா	ஒரு விரலைக் காட்டிச் 'சிறியதோ? பெரியதோ?' என்று கேட்டல்	இரு விரல்களைக் காட்டி 'எது சிறியது? எது பெரியது?' என்று கேட்டல்
விடை	'கண்ணன் எங்கே இருக்கிறார்?' என்ற வினாவிற்குக் கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று விடையளித்தல்	கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் கண்ணன் வீட்டிற்குள் இருக்கிறார் என்று விடையளித்தல்
மரபு	தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம் என்று கூறுதல்	தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோப்பு என்று கூறுதல்

வழுவமைதி

இலக்கணமுறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதியாகும்.

1. திணை வழுவமைதி

"என் அம்மை வந்தாள்" என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது திணைவழுவமைதி ஆகும். இங்கு உவப்பின் காரணமாக அஃறிணை, உயர்திணையாகக் கொள்ளப்பட்டது.

2. பால் வழுவமைதி

"வாடா இராசா, வாடா கண்ணா" என்று தன் மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது பால்வழுவமைதி ஆகும். இங்கு உவப்பின் காரணமாகப் பெண்பால், ஆண்பாலாகக் கொள்ளப்பட்டது.

3. இட வழுவமைதி

மாறன் என்பான் தன்னைப்பற்றிப் பிறரிடம் கூறும்போது,"இந்த மாறன் ஒருநாளும் பொய் கூறமாட்டான்" என, தன்மையினைப் படர்க்கை இடத்தில் கூறுவது இடவழுவமைதி ஆகும்.

4. கால வழுவமைதி

குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்.

இத்தொடர், குடியரசுத் தலைவர் நாளை வருவார் என அமைதல் வேண்டும். அவ்வாறு அமையவில்லை என்றாலும் நாம் பிழையாகக் கருதுவதில்லை. ஏனெனில் அவரது வருகையின் உறுதித்தன்மை நோக்கிக் காலவழுவமைதியாக ஏற்றுக்கொள்கிறோம்.

5. மரபு வழுவமைதி

"கத்துங் குயிலோசை – சற்றே வந்து
காதிற் படவேணும்"– பாரதியார்.

குயில் கூவும் என்பதே மரபு, குயில் கத்தும் என்பது மரபு வழு ஆகும். இங்குக் கவிதையில் இடம்பெற்றிருப்பதால் இது மரபு வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10th_Tamil_Unit 4.indd 91 12/2/2022 5:24:26 PM

கற்பவை கற்றபின்...

1. கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.

அ) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்.

ஆ) "இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர்" என்று கூறினான்.

இ) சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்.

ஈ) செல்வன். இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்திருக்கிறார்.

2. அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.


அ) தந்தை, " மகனே! நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்து வா?" என்று சொன்னார். (ஆண்பாற்பெயர்களைப் பெண்பாலாக மாற்றித் தொடரை எழுதுக.)

ஆ) அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக.)

இ) "இதோ முடித்துவிடுவேன்" என்று செயலை முடிக்கும்முன்பே கூறினார். (வழாநிலையை வழுவமைதியாக மாற்றுக.)

ஈ) அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை. (படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையைத் தன்மையாக, தன்மையைப் படர்க்கையாக மாற்றுக.)

இணையச் செயல்பாடுகள்



தொன்மைகளின் சிறப்பை அறிவோம்!

படிநிலைகள்

1. கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இணையப் பக்கத்திற்குச் செல்க.
2. திரையில் பழங்கால மக்கள் பயன்படுத்திய நாணயங்கள், வரலாற்றுச் சின்னங்கள், அகழாய்வுகள் போன்ற தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும்.
3. அவற்றை ஒவ்வொன்றாகத் தெரிவு செய்து நம் முன்னோர்களின் கலை, பண்பாடு மற்றும் வாழ்வியல் முறைகளை அறிந்துகொள்ளலாம்.







செயல்பாட்டிற்கான உரலி
/http://tagavalaatruppadai.in

(கொடுக்கப்பட்டிருக்கும் படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.)

10th_Tamil_Unit 4.indd 92 12/2/2022 5:24:27 PM

திறன் அறிவோம்

பலவுள் தெரிக.

1. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' – யாரிடம் யார் கூறியது?

   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

2. தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

   தலைப்பு : செயற்கை நுண்ணறிவு

   குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.

   திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.

   அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

   ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

   இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

   ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

3. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

   இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

4. குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார்.

   பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே –

   அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி

   இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி

5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

குறுவினா

1. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

   எ.கா. செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்.

2. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் – இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

3. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

4. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

10th_Tamil_Unit 4.indd 93 12/2/2022 5:24:27 PM

5. "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் – இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

சிறுவினா

1. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

2. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

3. மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனிதகுலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு 'எதிர்காலத் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் எழுதுக.

4. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்" என்றார். "இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, "என்னடா விளையாடவேண்டுமா?" என்று கேட்டேன். என் தங்கையும் அங்கே வந்தாள். அவளிடம், "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.

   இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

நெடுவினா

1. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைகொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

2. நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.

   பேரன்பிற்குரிய அவையோர் அனைவருக்கும் வணக்கம்! இன்று இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழுடன் அறிவியலை நான்காம் தமிழாகக் கூறுகின்றனர். ஆதிகாலந்தொட்டு இயங்கிவரும் தமிழ்மொழியில் அறிவியல் என்பது தமிழர் வாழ்வியலோடு கலந்து கரைந்து வந்துள்ளதை இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். அண்டத்தை அளந்தும், புவியின் தோற்றத்தை ஊகித்தும் கூறும் அறிவியல் செய்திகள் இலக்கியங்களில் உள்ளன. சங்க இலக்கியமான பரிபாடலில்.....

3. "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

10th_Tamil_Unit 4.indd 94 12/2/2022 5:24:27 PM

மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

முகப்புத்தக வலையினிலே

முகந்தெரியா நபரிடையே
இனம்புரியா உறவு முறை
நட்பெனும் சங்கிலிக்குள்
நாடெல்லாம் சங்கமிக்கும்
வாடிக்கை செய்பவரின்
கேளிக்கை கூத்துகளை
வேடிக்கை பார்ப்பதனை
வாழ்க்கையெனக் கொண்ட பலர்
தேடியுமே கிடைக்காத
தேசம் கடந்த உறவுகளை
இணையத்தின் தேடலினால்
நிமிடத்தில் அறியும் சிலர்
பகடிகளின் பகிர்ந்தளிப்பும்
விருப்பத்தின் தெரிவிப்பும்
கருத்துக்களின் பரிமாற்றம்
தினமும் இங்கு இடம்பெறுமே

பலர் அறிந்த பாடல்வரியும்
பகலுணவின் சுவையினையும்
பாட்டி தந்த பரிசினையும்
பறைசாற்றும் வாய்ப்பிதுவே
புகைப்படத்தில் தெரிந்தமுகம்
பார்த்ததுமோர் புன்சிரிப்பு
உரையாடல் செய்கையிலே
அர்த்தமற்ற கலகலப்பு
பரீட்சைக்கு முன்தினமும்
புத்தகத்தைத் திறவாதோர்
பரீட்சையின் நொடிவரைக்கும்
திறந்து வைப்பதிதுவன்றோ
புத்தகத்தின் மத்தியிலே
மயிலிறகை வைத்தவர்கள் –முகப்
புத்தகத்தைத் திறந்தவுடன்
உணர்வுகளை வைப்பதேனோ……

– டெபோரா பர்னாந்து

(இலங்கைத் தமிழ்க் கவிஞர்)

மொழிபெயர்க்க.

Malar: Devi, switch off the lights when you leave the room.

Devi: Yeah. We have to save electricity.

Malar: Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

Devi: Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

Malar: I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

Devi: Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!

வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.

காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?

எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காதுக் கேட்கும்.

பறவைகளுக்கு பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம்.

யுரேகா! யுரேகா! – அறிவியல் வெளியீடு

10th_Tamil_Unit 4.indd 95 12/2/2022 5:24:27 PM

கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

அ) இயற்கை – செயற்கை ஆ) கொடு – கோடு
இ) கொள் – கோள் ஈ) சிறு – சீறு
உ) தான் – தாம் ஊ) விதி – வீதி
எ.கா. இயற்கை – செயற்கை
பாதை தெரியாத இயற்கைக் காடுகளில் பயணிக்கச் செயற்கைக் கருவிகள் பயன்படுகின்றன.

பத்தியைப் படித்துப் பதில் தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

1. பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3. பெய்த மழை – இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
5. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

கட்டுரை எழுதுக.

தலைப்பு – 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்'

நயம் பாராட்டுக.

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ? – பாரதியார்



மொழியோடு விளையாடு

தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் .....
2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை .....
3. கல் சிலை ஆகுமெனில், நெல் ..... ஆகும்.
4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து.....
5. மீன் இருப்பது நீரில்; தேன் இருப்பது .....

(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)

10th_Tamil_Unit 4.indd 96 12/2/2022 5:24:27 PM

குறிப்பைப் பயன்படுத்தி விடைதருக.

குறிப்பு – எதிர்மறையாக மாற்றுக.	
மீளாத் துயர்	மீளும் துயர்
கொடுத்துச் சிவந்த	
மறைத்துக் காட்டு	
அருகில் அமர்க	
பார்த்த படம்	
எழுதாக் கவிதை	

அகராதியில் காண்க.

அவிர்தல், அழல், உவா, கங்குல், கனலி

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



செயல்திட்டம்

செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் வணிக நிறுவனங்கள் சில இயங்கி வருகின்றன. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் ரோபோக்களை உருவாக்கும் நிறுவனங்கள் சில உலகினில் இருக்கின்றன. அவற்றைப் பற்றிய படங்களுடன் குறிப்பு எழுதிவருக.

கலைச்சொல் அறிவோம்

Nanotechnology	–	மீநுண்தொழில்நுட்பம்	*Space Technology*	–	விண்வெளித் தொழில்நுட்பம்
Biotechnology	–	உயிரித் தொழில்நுட்பம்	*Cosmic rays*	–	விண்வெளிக் கதிர்கள்
Ultraviolet rays	–	புற ஊதாக் கதிர்கள்	*Infrared rays*	–	அகச்சிவப்புக் கதிர்கள்


10th_Tamil_Unit 4.indd 97 12/2/2022 5:24:28 PM

அறிவை விரிவு செய்

பஞ்ச பூதங்களின் அறிவியல் கதைகள் – நீலமணி
அன்றாட வாழ்வில் அறிவியல் – ச.தமிழ்ச்செல்வன்
காலம் – ஸ்டீபன் ஹாக்கிங்



நிற்க அதற்குத் தக...



தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக்கொண்டிருக்கும் தம்பி;

திறன்பேசியிலேயே விளையாடிக்கொண்டிருக்கும் தங்கை;

காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்;

எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி

இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்படவைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.

1	
2	
3	
4	

இணையத்தில் காண்க.

https://bit.ly/2NVSG9H
https://bit.ly/2Dha2K9
https://bit.ly/2yMBPfW

10th_Tamil_Unit 4.indd 98 12/2/2022 5:24:28 PM

இயல் ஐந்து

கல்வி

மணற்கேணி



கற்றல் நோக்கங்கள்

- மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையையும் நுட்பத்தையும் உணர்ந்து மொழிபெயர்ப்புப் பகுதிகளைப் படித்தல், புதிய பகுதிகளைத் தேவைக்கேற்ப மொழிபெயர்த்தல்.
- கல்வி சார்ந்த கருத்துகளைச் செய்யுள் வாயிலாக அறியவும், சுவைக்கவும், இன்றைய கல்வியுடன் ஒப்பிடவும் அறிதல்.
- படித்துப் பொருள் உணர்வதுடன் கருத்துகளைத் தொகுத்து வரிசைப்படுத்தி எளிமையாக வழங்கும் திறன் பெறுதல்.
- பொருள்கொள்ளும் முறையறிந்து செய்யுளின் பொருளைப் புரிந்துகொள்ளுதல்.

10th_Tamil_Unit 5.indd 99 13-02-2023 15:42:15

கல்வி


ரு

மொழிபெயர்ப்புக் கல்வி

K9BI3

நுழையும்முன்

ஒவ்வொரு மொழிச் சமூகத்திலும் ஒரு துறையில் இல்லாத செழுமையை ஈடுசெய்ய வேறுதுறைகளில் உச்சங்கள் இருக்கும். மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளை வேற்றுமைகளாகவே நீடிக்கவிடாமல் ஒற்றுமைப்படுத்த உதவுவது மொழிபெயர்ப்பு. கொடுக்கல் வாங்கலாக அறிவனைத்தும் உணர்வனைத்தும் அனைத்து மொழிகளிலும் பரவவேண்டும். நம்மிடம் எல்லாம் உள்ளது என்ற பட்டை கட்டிய பார்வையை ஒழித்து அகன்ற பார்வையைத் தருவது மொழிபெயர்ப்பு.


HYMNOLOGIA DAMULICA
SIVE
EX GERMANICO IN DAMULORUM IDIOMA, OBSERVATIS USQUE ET MELODIIS ET RHYTHMIS ODARUM, TRANSLATORUM
CENTUM ET SEXAGINTA
HYMNORUM SPIRITUALIUM
FASCICULUS :
in
Gratiam Juventutis Damulicæ æque ac Ecclesiæ hujus Gentis, Christo Nomen dantis, exhibita
a
BENJAMIN SCHULTZE
Missionario ad Indos Orientales.
TRANQUEBARIÆ, In littore Coromandelino
Typis & sumptibus Missionis Danicæ
Anno MDCCXXIII.

தேனிஷ் கிறித்துவ நிறுவனத்தால் 1723ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் மொழிபெயர்த்து அச்சுருவாக்கம் பெற்ற தமிழ் நூல்.

"ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் மணவை முஸ்தபா.

"ஒரு மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவுகொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும்; உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்" என்கிறார் மு.கு. ஜகந்நாதர்.

மொழிபெயர்ப்பு – தொடக்கம்

மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் (98) குறிப்பிட்டுள்ளார்.

'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு, சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது. வடமொழியில் வழங்கி

10th_Tamil_Unit 5.indd 100 13-02-2023 15:42:15

வந்த இராமாயண, மகாபாரதத் தொன்மச் செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன. இதுவும் பிறமொழிக் கருத்துகளை, கதைகளைத் தமிழ்ப்படுத்தியமையைப் புலப்படுத்துகிறது. பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சில காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவையே.

மொழிபெயர்ப்பு – தேவை

மொழிபெயர்ப்பு, எல்லாக் காலகட்டங்களிலும் தேவையான ஒன்று. விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின்கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு, மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது; ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிற மொழியில் மொழிபெயர்த்தது; பல்வேறு மாநிலங்களில் இருந்த இருக்கின்ற எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது. இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி, தேசிய புத்தக நிறுவனம் (NBT), தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன.

மொழிபெயர்ப்பின் தேவையை உணர்த்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறார்கள். உலகப் போரின்போது அமெரிக்கா, "சரண் அடையாவிடில் குண்டு வீசப்படும்" என்ற செய்தியை ஜப்பானுக்கு அனுப்பியதாகவும் அதற்கு ஜப்பான், 'மொகு சாஸ்ட்டு' என்று விடை அனுப்பியதாகவும் கூறுவர். அந்தத் தொடரின் பொருள் தெரியாமையால் அமெரிக்கா, ஹீரோஷிமாவில் குண்டுவீசியது என்று சொல்கிறார்கள். அந்தத் தொடருக்குப் பொருள், 'விடைதர அவகாசம் வேண்டும்' என்பதாம். ஆனால் அதற்கு அமெரிக்கர்கள், 'மறுக்கிறோம்' என்று பொருள் கொண்டதாகவும் கூறுவர். இது உண்மை எனில், மொழிபெயர்ப்பு சரியாக அமையாததால் காலத்திற்கும் அழிவு தரும் களங்கம் நேர்ந்தது எனலாம்.

பாரதியின் மொழிபெயர்ப்பு

Exhibition – காட்சி, பொருட்காட்சி

East Indian Railways – இருப்புப் பாதை

Revolution – புரட்சி

Strike – தொழில் நிறுத்தி இருத்தல், தொழில் நிறுத்தம், வேலை நிறுத்தம்

மொழிபெயர்ப்பு – கல்வி

மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்; பல அறிவுத்துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக்கொள்ள முடியும்; மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்தமுடியும்; வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும்; நாடு, இன, மொழி எல்லைகள் கடந்து ஒருலகத்தன்மையைப் பெறமுடியும். நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரகங்கள் நம்நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக்கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இலக்கிய இறக்குமதி

பிறமொழி இலக்கியங்களை அறிந்துகொள்ளவும் அவைபோன்ற புதிய படைப்புகள் உருவாகவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது. இலக்கியம் என்பது தன்

10th_Tamil_Unit 5.indd 101 13-02-2023 15:42:15

அனுபவத்தை எழுதுவது என்றாலும் அது கலைச்சிறப்புடையதாக இருக்கிறபோது அனைவரது அனுபவமாகவும் பொதுநிலை பெறுகிறது. அத்தகைய பொதுநிலை பெற்ற இலக்கியத்தை மொழிவேலி சிறையிடுகிறது. மொழிவேலியை அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது. ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகம் ஆன ஷேக்ஸ்பியர், அந்நாட்டுப் படைப்பாளர் போலவே கொண்டாடப்பட்டார்.

18ஆம் நூற்றாண்டுவரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன. ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கில நூல்களும் ஆங்கிலம் வழியாகப் பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின. இவற்றில் தரமான நூல்கள் என்று பார்த்தால் சிலதான் எஞ்சும். இதே போலத் தமிழ் நூல்களும் பிற மொழிகளுக்கு அறிமுகமாயின. தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால்தான்.

மொழிபெயர்ப்பு இல்லாவிடில் சில படைப்பாளிகளும் கூட உருவாகியிருக்க முடியாது; ஷேக்ஸ்பியர் இருந்திருக்க முடியாது; கம்பன் இருந்திருக்க முடியாது. இரவீந்திரநாத தாகூர் வங்க மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் அவரே மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல்பரிசு கிடைத்தது. மகாகவியான பாரதியின் கவிதைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் உலகஅளவில் உயரிய விருதுகளும் ஏற்பும் கிடைத்திருக்கும். ஒரு நாடு எவ்வளவு மின்னாற்றலைப் பயன்படுத்துகிறது என்பதைக் கொண்டு அதன் தொழில் வளர்ச்சியை மதிப்பிடுவார்கள். அதுபோல, ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள்.

நேரடி மொழிபெயர்ப்பாக பிரஞ்சு, ஜெர்மன், ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா முதலான நாடுகளின் நூல்கள் இன்று கிடைக்கத் தொடங்கியிருப்பது நல்ல பயனை அளிக்கும் என எதிர்பார்க்கலாம்.

மொழிபெயர்ப்பின் மூலம் இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளையும் பெற்றிருக்கிறோம். இன்றுள்ள புதிய

தெரிந்து தெளிவோம்

மொழிபெயர்ப்பு

எங்கோ தொலைதூரத்தில் வாழும் மனிதர்கள் தங்களின் மொழியில் சொன்னவற்றை, எழுதியவற்றை இன்னொரு மொழியில் தமக்குத் தெரிந்த மொழியில் மொழிபெயர்த்து அறிந்து கொள்கிறார்கள். அதுதான் மொழிபெயர்ப்பு.

எப்பொழுது உலகத்தில் நான்கைந்து மொழிகள் உருவாயினவோ அப்பொழுதே மொழி பெயர்ப்பும் வந்துவிட்டது. கருத்துப்பரிமாற்றம், தகவல் பகிர்வு, அறநூல் அறிதல், இலக்கியம், தத்துவம் என்பன எல்லாம் மொழிபெயர்ப்பு வழியாகவே சர்வதேசத்தன்மை பெறுகின்றன.

ராகுல் சாங்கிருத்யாயன் 1942ஆம் ஆண்டு ஹஜிராபாக் மத்திய சிறையிலிருந்தபோது 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலை இந்தி மொழியில் எழுதினார். 1949ஆம் ஆண்டு இந்நூலை கணமுத்தையா என்பவர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இன்றுவரையில் 'வால்காவிலிருந்து கங்கை வரை' ஒவ்வொரு தமிழரும் விரும்பிப் படிக்கும் நூலாக இருக்கிறது. இதுவரையில் பல பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

1949 – கணமுத்தையா மொழி பெயர்ப்பு, 2016 – டாக்டர் என்.ஸ்ரீதர் மொழி பெயர்ப்பு, 2016 – முத்து மீனாட்சி மொழி பெயர்ப்பு, 2018 – யூமா வாசுகி மொழி பெயர்ப்பு.

சா. கந்தசாமி

10th_Tamil_Unit 5.indd 102 13-02-2023 15:42:15

திறனாய்வு முறைகளை எல்லாம் நாம் ஆங்கிலத்தின் வழியாகவே பெற்றிருக்கிறோம்.

பிறமொழி இலக்கியங்கள், இலக்கிய வடிவங்கள் பலவும் தமிழுக்கு அறிமுகமாகி அது போன்ற முயற்சிகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. மொழிபெயர்க்கப்பட்ட நூல்களைத் தமிழ் இலக்கியங்களோடு ஒப்பு நோக்கி சிந்தனை, வடிவம், உத்தி, மையக்கரு, பண்பாடு போன்ற பலவகைக் கூறுகளை எடைபோடவும் வளர்க்கவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

மொழிபெயர்ப்பு – செம்மை

Hundred railsleepers were washed away என்பதை, தொடர்வண்டியில் உறங்கிக் கொண்டிருந்த நூறுபேர், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்கள் என்று ஒரு செய்தித்தாள் வெளியிட்டது. *Railsleeper* என்பது தொடர்வண்டியின் போக்குவரத்துப் பாதையான தண்டவாளத்தில் உள்ள குறுக்குக் கட்டைகளைக் குறிக்கும். அதனை உறங்கிக் கொண்டிருந்தோர் என மொழிபெயர்த்தது பெரும்பிழையே.

Camel என்பதற்கு வடம் (கயிறு), ஒட்டகம் என இருபொருள் உண்டு. ஊசி காதில் வடம் நுழையாது என்னும் வேற்றுமொழித் தொடரை 'ஊசி காதில் ஒட்டகம் நுழையாது' என்று மொழிபெயர்த்துப் பயன்படுத்துகிறோம். இத்தொடரில் வடம் என்பதே பொருத்தமான சொல்லாக அமையும் (அதாவது ஊசி காதில் நூல் நுழையுமே அன்றிக் கயிறு நுழையாது என்பதே). மொழிபெயர்ப்புகள் கழிவின்றி, சிதறலின்றி மூலமொழியின் கருத்துகளை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.

'*Underground drainage* என்ற தொடரை மொழிபெயர்ப்பதில் தடுமாற்றம் வந்தது. பாதாளச் சாக்கடை என்பது போன்றெல்லாம் மொழிபெயர்த்தனர். தமிழோடு தொடர்புடைய மலையாள மொழியில் பயன்படுத்திய புதைசாக்கடை என்ற சொல் பொருத்தமாக இருப்பதைக் கண்டனர். அதையே பயன்படுத்தவும் தொடங்கினர்.

Tele என்பது தொலை என்பதைக் குறிக்கிறது. ஆகவே *Telegraph, Television, Telephone, Telescope, Telemetry* முதலிய சொற்கள் மொழிபெயர்க்கப்படுகிறபோது தொலைவரி, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைநோக்கி, தொலைஅளவியல் என்றவாறு முன்ஒட்டுகளுடன் மொழிபெயர்க்கப்பட்டன. இதற்கு மாறாக, *Transcribe, Transfer, Transform, Transact* ஆகியவற்றை மொழிபெயர்க்கும் போது படியெடுத்தல், மாறுதல், உருமாற்றுதல், செயல்படுத்துதல் என்றவாறு மொழிபெயர்க்கப்படுகின்றன. இங்கு *Trans* என்ற முன்ஒட்டை வைத்து மொழிபெயர்க்கவில்லை. இவ்வாறு இடம்பார்த்து மொழிபெயர்ப்பு, முறையாகச் செய்யப்பட வேண்டும்.

பல்துறை வளர்ச்சி

இன்றைக்குப் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. மொழிபெயர்ப்பு இல்லை எனில் உலகை எல்லாம் வலையாகப் பிடித்திருக்கிற ஊடகத்தின் வளர்ச்சி இல்லை. தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழிபெயர்ப்பால்தான் வளர்ச்சி பெறுகின்றன. விளம்பர மொழிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. திரைப்படங்கள் தொலைக்காட்சித் தொடர்கள் ஆகியன வேற்று மொழிமாற்றம் செய்யப்பட்டு அனைத்து மொழி பேசும் மக்களையும் அடைகின்றன. இதனால் புதுவகையான சிந்தனைகள் மொழிக்கூறுகள் பரவுகின்றன.

மொழிபெயர்ப்பு – பயன்

இது மொழிபெயர்ப்புக் காலம். காலையில் எழுந்தவுடன் நாளிதழ்ப்படிப்பு, மொழிபெயர்ப்பு மூலமே நமக்குச் சாத்தியமாகிறது. இரவு தொலைக்காட்சியில் காணும் கேட்கும் செய்திகளும் மொழிபெயர்ப்பு மூலமே கிடைக்கின்றன. இடையில் நம் பணிகள் பலவற்றிலும் மொழிபெயர்ப்பின் துணை இருந்துகொண்டே இருக்கிறது.

10th_Tamil_Unit 5.indd 103 13-02-2023 15:42:15

- இன்றைய வளரும் நாடுகளில் அறிவியலை உருவாக்க – அரசியலை உருவாக்க – பொருளியலை உருவாக்க – சமூகவியலை உருவாக்க – இலக்கியத்தை உருவாக்க மொழிபெயர்ப்பே உதவுகிறது. மொழிபெயர்ப்பு, மனிதர்களையும் நாடுகளையும் காலங்களையும் இணைக்கிற நெடுஞ்சாலையாக இருக்கிறது; காலத்தால் இடத்தால் மொழியால் பிரிக்கப்பட்ட மானுடத்தை இணைக்கிறது; கடந்த காலத்தை எதிர்காலத்துடன் இணைக்கும் அது மனிதவாழ்வின் ஒரு பகுதியாகவே இருக்கிறது; பல மொழிகளிலும் காணப்படும் சிறப்புக்கூறுகளை எல்லாம் ஒருங்கு சேர்த்து அனைவருக்கும் பொதுமையாக்குகிறது. ஜெர்மனியில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள்வரை மொழிபெயர்க்கப்படுகின்றன. புள்ளிவிவரப்படி அதிகமான தமிழ்நூல்கள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில் முதலிடம் ஆங்கிலம்; இரண்டாமிடம் மலையாளம்; அதைத் தொடர்ந்து அடுத்தடுத்த நிலைகளில் முறையே தெலுங்கு, இந்தி, கன்னடம், வடமொழி, ரஷ்யமொழி, வங்கமொழி, மராத்தி மொழி போன்றவை இடம்பெறுகின்றன.

மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறியமுடிகிறது. அதிலிருந்து நல்லனவற்றை நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது; பிறமொழி இலக்கிய அறிவு கிடைக்கிறது. அதன்மூலம் நம் இலக்கியத்தை வளப்படுத்த முடிகிறது. உலகப்புகழ் பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கியப் படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்கள். மொழிபெயர்ப்பு மூலம் ஒரு நாட்டின் வரலாற்றிலும் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

மொழிவளர்ச்சி

நல்ல மொழிபெயர்ப்பாளன் சில மொழி மீறல்களைச் செய்வான். இதன்மூலம் புதிய இலக்கண விதிகளின் தேவையை உருவாக்குவான். செய்யுளையே தன் வெளியீட்டு வடிவமாகக் கொண்டிருந்த தமிழ், அச்சு இயந்திரத்தின் வருகையை ஒட்டி மொழிபெயர்ப்பை எதிர்கொண்டபோது உரைநடை வளர்ச்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அப்போது தமிழ், ஆங்கிலத் தொடரமைப்புகளையும் கூறுகளையும் ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. மொழிபெயர்ப்பு இத்தகைய மொழிப் பிரச்சினைகளைக் கடந்து, அதன் தீர்வாக மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

எதை மொழிபெயர்ப்பது?

எந்த மொழிபெயர்ப்பாக இருப்பினும் எதை மொழிபெயர்ப்பது என்ற முன்னுரிமை வேண்டும். ஒரு மொழியின் குப்பைகள் இன்னொரு மொழிக்குப் போய்விடக் கூடாது. பழைய நூல்களையே அறிமுகப்படுத்தும் போக்கை விட்டுப் புதுப்புது நூல்களையும் அறிமுகப்படுத்தும் நிலை வளர வேண்டும். ஒரு குறிப்பிட்ட சிறு குழுவில் பேசப்படும் மொழியில் இருப்பவையும் கூட நம்மை வந்தடைய வேண்டும். சிறு குழுவினர் பேசும் ஆப்பிரிக்க மொழிகளின் படைப்பாளர்கள் நோபல் பரிசு பெறுகிறார்கள். ஆனால் அந்தப் படைப்புகள் நம்மை எட்டுவதில்லை. தமிழின் தொன்மையான இலக்கியங்கள் முன்னரே மொழிபெயர்க்கப்பட்டு அறிமுகமாகியிருந்தால் தமிழின் பெருமை உலகெங்கும் முறையாகப் பரவியிருக்கும். ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கை அத்தகைய பணிகளில் ஈடுபட வேண்டும். தமிழுக்கு அத்தனை அறிவுச் செல்வங்களும் கிடைக்க வேண்டும். இதனை குலோத்துங்கன்,

"காசினியில் இன்று வரை அறிவின் மன்னர் கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணி பேசி மகிழ் நிலை வேண்டும்"

என்று குறிப்பிடுகிறார்.

10th_Tamil_Unit 5.indd 104 13-02-2023 15:42:16

செய்ய வேண்டுவன

மொழிபெயர்ப்பு நிறுவனங்களை அமைப்பதும் மொழிபெயர்ப்பைக் கல்வி ஆக்குவதும் மொழிபெயர்ப்புக்கு உதவும் சொற்களஞ்சியங்களை உருவாக்குவதும் ஒரு மொழியின் சிறப்புக் கூறுகளுக்கு இணையான சமன்பாடுகளை உருவாக்குவதும் பட்டறைகள் நடத்துவதும் நூல் வெளியிடுவதும் செய்யப்பட வேண்டும். சாகித்திய அகாதெமி நிறுவனமும் தேசிய புத்தக நிறுவனமும் பல மொழிகளிலிருந்து நல்ல படைப்புகளை எல்லா இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளன. வெவ்வேறு படைப்புகள் மட்டுமன்றி, துறைசார்ந்த நூல் மொழிபெயர்ப்புகளையும் மேற்கொள்ள வேண்டும். அவ்வகையில் தமிழில் பல நூல்கள் உருவாக்கப்பட வேண்டும்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்று பாரதி கூறுவதைத் தமிழுலகம் செயல்படுத்த வேண்டும். அங்கிருந்து கொணர்ந்து சேர்ப்பதோடு அவர் கூறுவது போல,

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்."

செப்புமொழிகள் பலவாக இருப்பினும் சிந்தனை ஒன்றுடையதாக உலகம் ஆக்கப்பட வேண்டும். இதற்கு மொழிபெயர்ப்புக் கல்வி இன்றியமையாதது..



எத்திசையும் புகழ் மணக்க.....

பிரான்சு தேசிய நூலகத்தில் தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும்

பிரான்சு "தேசிய நூற்கூடத்தில் (*Bibliothque Nationale*) ஏறக்குறைய ஆயிரம் பழைய தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள. இவற்றுள் சில இந்தியாவிலேயே கிடைக்காத படிகளும் ஏடுகளுமாம். பண்டைக் காலத்தில் முதன்முதலாக ஐரோப்பியர் யாத்த இலக்கணங்களும் கையெழுத்துப் பிரதிகளும் இந்நூற்கூடத்தில் இருக்கின்றன. அங்கிருக்கும் தமிழ் நூல்களின் பட்டியலைப் படித்தபொழுது இன்றும் அச்சிடப்பெறாத நூல்கள் சிலவற்றின் தலைப்பைக் கண்டேன். "மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ், சரளிப்புத்தகம், புதுச்சேரி அம்மன் பிள்ளைத் தமிழ்" முதலிய நூல்களும் அங்கு உள."

– தனிநாயக அடிகள்



கற்பவை கற்றபின்...

1. தாகூரின் கீதாஞ்சலி தமிழ்மொழிபெயர்ப்புப் பாடல் ஒன்றையும் கலீல் கிப்ரானின் கவிதை ஒன்றின் மொழிபெயர்ப்பையும் நூலகத்தில் படித்து எழுதி வருக.

2. மொழிபெயர்ப்புச் சிறுகதை ஒன்றைப் படித்து அதன் கதைச்சுருக்கத்தையும் உங்கள் கருத்துகளையும் வகுப்பறையில் கூறுக.

10th_Tamil_Unit 5.indd 105 13-02-2023 15:42:16

கவிதைப் பேழை

கல்வி



கற்றவர் வழி அரசு செல்லும் என்கிறது சங்க இலக்கியம். தோண்டும் அளவு ஊறும் நீர்போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும் என்கிறது திருக்குறள். கல்வியைப் போற்றுவதைப் புறநானூற்றுக் காலத்திலிருந்து தற்காலம்வரை தொடர்கின்றனர் தமிழர். பூக்களை நாடிச் சென்று தேன் பருகும் வண்டுகளைப் போல, நூல்களை நாடிச் சென்று அறிவு பெறவேண்டும்.

நீதிவெண்பா

– கா.ப.செய்குதம்பிப் பாவலர்

*அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று. *



பாடலின் பொருள்

அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே அதைப் போற்றிக் கற்க வேண்டும்.

சதாவதானம்

'சதம்' என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண்அறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம்.

நூல் வெளி



'சதாவதானம்' என்னும் கலையில் சிறந்து விளங்கிய செய்குதம்பிப் பாவலர் (1874 – 1950), கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர்; பதினைந்து வயதிலேயே செய்யுள் இயற்றும் திறன் பெற்றவர்; சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவர்; 1907 மார்ச் 10ஆம் நாளில் சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி 'சதாவதானி' என்று பாராட்டுப்பெற்றார். இவர் நினைவைப் போற்றும் வகையில் இடலாக்குடியில் மணிமண்டபமும் பள்ளியும் உள்ளன. இவரது அனைத்து நூல்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.



கற்பவை கற்றபின்...

எதிர்காலத்தில் நீங்கள் பயில விரும்பும் கல்வி குறித்து வகுப்பறையில் கலந்துரையாடிக் குறிப்புரை உருவாக்குக.

10th_Tamil_Unit 5.indd 106 13-02-2023 15:42:16

கல்வி

ரு

திருவிளையாடற் புராணம்

– பரஞ்சோதி முனிவர்




கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புச் செய்வது தமிழ்கூறும் நல்லுலகம். அரசரும் புலவருக்குக் கவரி வீசுவர்; கண்ணுக்கு எட்டிய திசை வரை தெரியும் நிலங்களைப் புலவருக்குக் கொடை கொடுத்து மகிழ்வர்; இறைவனும் அறிவைப் போற்றுபவன்; அறிவாய் நிற்பவன்; அறிவிற் சிறந்த புலவருக்காகத் தூது சென்றவன்; புலவரது அறிவுப் பெருமையை உணர்த்துபவன்.

R94K6

காண்டம் : திரு ஆலவாய்க் காண்டம்(3)

படலம் : இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் (56)

படலச் சுருக்கம்



பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்த குலேசபாண்டியன் என்னும் மன்னன் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கினான். கபிலரின் நண்பரான இடைக்காடனார் என்னும் புலவர், தாம் இயற்றிய கவிதையினை மன்னன் முன்பு பாட,அதைப் பொருட்படுத்தாமல் மன்னன் புலவரை அவமதித்தான். மனம் வருந்திய இடைக்காடனார், இறைவனிடம் முறையிட்டார். மன்னனின் பிழையை உணர்த்துவதற்காக இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி, வடதிருஆலவாயில் சென்று தங்கினார். இதை அறிந்த மன்னன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டி, இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான். இறைவனும் கோவிலுக்குத் திரும்பினார்.

இடைக்காடனார் மன்னனின் அவையில் கவிதை படித்தல்

1. கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல் மொழிந்து அரசன் தனைக் காண்டும் எனத் தொடுத்த பனுவலொடு மூரித் தீம் தேன் வழிந்து ஒழுகு தாரானைக் கண்டு தொடுத்து உரைப்பனுவல் வாசித்தான் ஆல். (2615)

சொல்லும் பொருளும் : கேள்வியினான் – நூல் வல்லான், கேண்மையினான் – நட்பினன்

10th_Tamil_Unit 5.indd 107 13-02-2023 15:42:17

மன்னன் தன் புலமையை மதிக்காமை குறித்து இறைவனிடம் முறையிடல்

2. *சந்நிதியில் வீழ்ந்து எழுந்து தமிழ் அறியும் பெருமானே தன்னைச் சார்ந்தோர்*
நல் நிதியே திரு ஆலவாய் உடைய நாயகனே நகுதார் வேம்பன்
பொன் நிதி போல் அளவு இறந்த கல்வியும் மிக்கு உளன் என்று புகலக் கேட்டுச்
சொல் நிறையும் கவி தொடுத்தேன் அவமதித்தான் சிறிது முடி துளக்கான் ஆகி. (*2617*)

சொல்லும் பொருளும் : தார் – மாலை, முடி – தலை

3. *என்னை இகழ்ந்தனனோ சொல் வடிவாய் நின்இடம் பிரியா இமையப் பாவை*
தன்னையும் சொல் பொருளான உன்னையுமே இகழ்ந்தனன் என் தனக்கு யாது என்னா
முன்னை மொழிந்து இடைக்காடன் தணியாத முனிவு ஈர்ப்ப முந்திச் சென்றான்
அன்ன உரை திருச்செவியின் ஊறுபாடு என உறைப்ப அருளின் மூர்த்தி. (*2619*)

சொல்லும் பொருளும் : முனிவு – சினம்

இறைவன் கோவிலைவிட்டு நீங்குதல்

4. *போனஇடைக் காடனுக்கும் கபிலனுக்கும் அகத்துவகை பொலியுமாற்றான்*
ஞானமய மாகியதன் இலிங்கவுரு மறைத்துஉமையாம் நங்கை யோடும்
வானவர்தம் பிரானெழுந்து புறம்போய்த்தன் கோவிலின்நேர் வடபால் வையை
ஆனநதித் தென்பாலோர் ஆலயங்கண்டு அங்கு இனிதின் அமர்ந்தான் மன்னோ. (*2620*)

சொல்லும் பொருளும் : அகத்து உவகை – மனமகிழ்ச்சி

கோவிலைவிட்டு நீங்கிய காரணம் அறியாது மன்னன் இறைவனை வேண்டுதல்

5. *அல்லதை என் தமரால் என் பகைஞரால் கள்வரால் அரிய கானத்து*
எல்லை விலங்கு ஆதிகளால் இடையூறு இன் தமிழ் நாட்டில் எய்திற்றாலோ
தொல்லை மறையவர் ஒழுக்கம் குன்றினரோ தவம் தருமம் சுருங்கிற்றாலோ
இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ யான் அறியேன் எந்தாய்! எந்தாய்!. (*2629*)

சொல்லும் பொருளும் : தமர் – உறவினர்

இறைவனின் பதில்

6. *ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும்*
நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு
தீங்கு உளை அல்லை காடன் செய்யுளை இகழ்தலாலே
ஆங்கு அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேம் என்னா. (*2637*)

சொல்லும் பொருளும் : நீபவனம் – கடம்பவனம்

மன்னன் தன் பிழையைப் பொறுத்து அருளுமாறு இறைவனிடம் வேண்டுதல்

7. *பெண்ணினைப் பாகம் கொண்ட பெருந்தகைப் பரம யோகி*
விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ
எண்ணிய பெரியோர்க்கு என்னா ஏத்தினான் இறைஞ்சி னானே. (*2638*)

சொல்லும் பொருளும் : மீனவன் – பாண்டிய மன்னன்

10th_Tamil_Unit 5.indd 108 13-02-2023 15:42:17

மன்னன், புலவருக்கு மரியாதை செய்தல்

8. *விதிமுறை கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம்*
புதியதோர் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த மன்றல்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் தன்னை மங்கல அணிசெய் தேற்றி. (*2641*)

சொல்லும் பொருளும் : கவரி – சாமரை (கவரிமாவின் முடியில் செய்த விசிறியாகிய அரசச் சின்னம்)

மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்

9. **புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்*
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
*தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா. ** (*2644*)

சொல்லும் பொருளும் : நுவன்ற – சொல்லிய, என்னா – அசைச் சொல்

பாடலின் பொருள்

1. 'குலேசபாண்டியன் என்னும் பாண்டிய மன்னன் மிகுந்த கல்வியறிவு மிக்கவன்' எனக் கற்றோர் கூறக் கேட்டார் இடைக்காடனார் என்னும் புலவர். கலைகளை முழுவதும் உணர்ந்த நண்பர் கபிலனின்மேல் அன்புகொண்ட அப்புலவர், மிகவும் இனிய தேன் ஒழுகும் வேப்பமாலையினை அணிந்த பாண்டியனின் அவைக்குச் சென்று, தான் இயற்றிய கவிதையைப் படித்தார்.
2. இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, "தமிழறியும் பெருமானே! அடியார்க்கு நல்நிதி போன்றவனே! திருஆலவாயிலில் உறையும் இறைவனே! அழகிய வேப்பமலர் மாலையை அணிந்த பாண்டியன், பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் எனக் கூறக்கேட்டு, அவன் முன் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்" என்றார்.
3. இடைக்காடனார் இறைவனிடம், "பாண்டியன் என்னை இகழவில்லை, சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் கூறிச் சென்றார். அவரது சொல் வேற்படைபோல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.
4. கோவிலை விட்டு வெளியேறிய இடைக்காடனாருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சி உண்டாக்க நினைத்தார் இறைவன். ஞானமயமாகிய தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடும் திருக்கோவிலைவிட்டு வெளியேறி நேர் வடக்கே வையை ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோவிலை ஆக்கி அங்குச் சென்று இருந்தார்.
5. "இறைவனே, என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ்நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? மறையவர் நல்ஒழுக்கத்தில் குறைந்தனரோ? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே யான் அறியேன்" என்று வேண்டினான் பாண்டிய மன்னன்.
6. இறைவன் மன்னனிடம், "சிறந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த கடம்பவனத்தை விட்டு ஒருபோதும் நீங்கமாட்டோம். இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம்" என்றார்.

10th_Tamil_Unit 5.indd 109 13-02-2023 15:42:17

7. வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொற்கேட்டுப் பாண்டிய மன்னன், "உமையை ஒரு பாகத்திற்கொண்ட மேலான பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா?" என்று தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டிப் போற்றினான்.

8. மன்னனது மாளிகை, வாழையும் கமுகும் சாமரையும் வெண்ணிற மேல்விதானமும் விளக்கும் உடையது; அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை பூரண கும்பம் கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது; போற்றத்தக்க ஒளியுடைய மணிகள் பதிக்கப் பெற்றது. அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்.

9. பாண்டியன், "புண்ணிய வடிவான புலவர்களே, நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று பணிந்து வணங்கினான். புண்ணிய கேள்வியறிவுடைய புலவர்களும், "மன்னா, நீ கூறிய அமுதம்போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது" என்றனர்.

இலக்கணக் குறிப்பு

கேள்வியினான் – வினையாலணையும் பெயர்

காடனுக்கும் கபிலனுக்கும் – எண்ணும்மை

பகுபத உறுப்பிலக்கணம்

தணிந்தது – தணி + த்(ந்) + த் + அ + து

தணி – பகுதி, த் – சந்தி

த்(ந்) – ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அ – சாரியை, து – படர்க்கை வினைமுற்று விகுதி

சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன்

ஏடாளும் புலவரொருவர் நாடாளும் மன்னரைக் காண அரண்மனை சென்றார். களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்தார்; அரச குற்றமான அச்செயலைச் செய்த புலவருக்குத் தண்டனை வழங்காமல் கவரி வீசினார் மன்னர். உறங்கிய புலவர் மோசிகீரனார். கவரி வீசிய மன்னர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை. கண்விழித்த புலவர் மன்னரின் செயலைக் கண்டு வியந்து பாமழை பொழிந்தார். அப்பாடல் இதோ...

"மாசற விசித்த வார்புறு வள்பின் ..." புறம் 50

நூல் வெளி



திருவிளையாடற் கதைகள் சிலப்பதிகாரம் முதற்கொண்டு கூறப்பட்டு வந்தாலும் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணமே விரிவும் சிறப்பும் கொண்டது. இந்நூல் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று காண்டங்களும் 64 படலங்களும் உடையது; பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் (வேதாரண்யம்) பிறந்தவர்; பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்; சிவபக்தி மிக்கவர். வேதாரண்யப் புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி முதலியன இவர் இயற்றிய வேறு நூல்களாகும்.



கற்பவை கற்றபின்...


இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தை நாடகமாக்கி வகுப்பில் நடித்துக் காட்டுக.

10th_Tamil_Unit 5.indd 110 13-02-2023 15:42:17

கல்வி

புதிய நம்பிக்கை

– கமலாலயன்



வரலாற்றில் மனிதர்கள் வருகிறார்கள்; சிலர் வரலாறாகவே இருக்கிறார்கள். இவர்கள் பாதையே இல்லாத இடத்தில் தங்கள் காலடிகளால் ஒற்றையடிப் பாதையிட்டு அதையே பெருஞ்சாலையாக ஆக்குகிறார்கள்; பலரின் பயணங்களுக்கு வழிவகுக்கிறார்கள்; கல்வி அறிவற்ற இருட்சமூகத்தில் ஒற்றைச் சுடராக வந்து ஓராயிரம் சுடர்களை ஏற்றுகிறார்கள். இவர்கள் வாழ்க்கையை அறிவது கல்வி வரலாற்றை அறிவதாகும்.



ஒவ்வொரு நாளும் காலை ஐந்து மணி அவர்கள் விழித்து எழும் நேரம். அவர்களுக்குப் பகல் முழுவதும் பருத்திக் காட்டில் வேலைகள் இருந்தன. ஒரு நாளில் ஒரே ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்கி விடக்கூடாது என்று நினைக்கும் குடும்பம் அது.

பருத்திக் காட்டில் இருந்து பகலில் அம்மா பாட்ஸி மட்டும் வீட்டிற்குத் திரும்புவாள், தனது குடும்பத்தினருக்கு உணவு சமைக்க. உணவு தயாரானதும் ''பசியார வாங்க செல்லங்களே'' ஓங்கிக் கூப்பிடுவார், வீட்டு வாசலிலிருந்து. ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு உயரமுமாக இருந்த அந்தக் குடும்பத்தார் வயல்வெளியிலிருந்து வியர்வை சொட்டச் சொட்ட வீட்டினுள் நுழைவர்.

''ஓ.. மேரி.. மெதுவா மெதுவா.. மற்றவர்களை முந்திக்கொண்டு அவள் வீட்டு வாசலைத் தொட்டுவிட்டாள். மேரியின் தந்தை சாம் சிரித்துக்கொண்டார். தனது பிள்ளைகளில் மேரிஜேன் மிகவும் வித்தியாசமான பெண்ணாக இருக்கிறாள் என்பதைப்பற்றி அவர் எண்ணிக் கொண்டார்.

அந்தக் குடும்பம் உணவு உண்டு முடித்ததும் மறுபடியும் வயலுக்குத் திரும்பியது. மேரி தனது வேலையை முடித்துவிட்டுப் பாட்டியிடம் ஓடினாள். அவளுக்கு மாலைப்பொழுதில் மிக மகிழ்ச்சி நிறைந்தது இந்த நேரம்தான். அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து பாடுவதும் பிரார்த்தனை செய்வதும் இந்த நேரத்தில்தான்.

மேரியின் மென்குரல், சூரிய வெப்பத்தை ஊடறுக்கும் குளிர் நீரோடையைப் போல் சன்னமாக ஒலிக்கும். அவள், தானே பேசிக் கொள்வாள். ''பருத்திச் செடி வளர்வதற்கு ஏன் இவ்வளவு காலம் எடுத்துக் கொள்கிறது?''

பருத்திச் செடிகளை அவள் மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு. பருத்திச் செடியில் அரும்புகின்ற முதல் பூ மொட்டைப் பார்க்கிற முதல் ஆளாக, தானே இருக்க வேண்டும் என்ற விருப்பம்தான் அது.

முதல் பூவை மேரி பார்த்துவிட்டாள்! ஒரு கணம் திகைத்தாள்.

''ஹே..ய்! முதல் பூ, முதல் பூ.. இங்கே.. இங்கே!''
''எங்கே..? எங்கே..?'' ''
நான்தான் முதலில் பார்த்தேன்.

நான்தான், நான்தான்!'' என்று கத்தினாள். எல்லோரும் அந்த முதல் பூவைப் பார்க்க

10th_Tamil_Unit 5.indd 111 13-02-2023 15:42:18

ஓடிவந்தார்கள். அவர்களுக்குத் தெரியும். இனி மூன்றே வாரங்களில் பருத்திப் பூக்களின் செந்நிறத்தினால் வயல்கள் பூராவும் சிவப்பாகிவிடும். அடுத்த ஆறு வாரங்களில் புதுப் பருத்தி நிறைந்துவிடும்.



மேரி இந்தக் கோடைக் கால இரவுகளை மிகவும் விரும்பினாள். தெளிந்த நிர்மலமான வானம். பருத்திப் பூக்களைப் பார்த்துக் கண்சிமிட்டும் நட்சத்திரங்கள். இவற்றைப் பார்த்தவாறே சும்மா இலக்கற்றுச் சிந்தித்தபடி இருப்பது அவளுக்குப் பிடித்தமானதாயிருந்தது!

அடுத்த நாள், காலை உணவு முடிந்தது. மேரியின் அம்மா பாட்ஸி துவைத்துத் தேய்த்த துணிகள் நிரம்பிய கனத்த கூடையைத் தலையில் தூக்கிக் கொண்டார். மேரியும் அம்மாவுடன் ஒட்டிக் கொண்டாள். புழுதி படிந்த சாலையில் வெள்ளை முதலாளிகளின் வீடுகளை நோக்கி இருவரும் நடந்தனர்.

அந்த மாளிகை வீடு பென் வில்ஸனுடையது. பாட்ஸியும் மேரியும் பின் கதவுப் பக்கமாகச் சென்றனர். கருப்பின மனிதர்களுக்கு முன்புற வாசலில் அனுமதி கிடையாது. கதவு திறக்கப்பட்டது. பாட்ஸி வீட்டினுள் சென்றுவிட்டார். மேரி வெளியிலேயே இருந்தாள்.

சற்றுத் தூரத்தில் மற்றொரு சிறிய வீடு இருந்ததை மேரி கண்டாள். அது வெள்ளைக் குழந்தைகள் சும்மா ஓடி விளையாடுவதற்கென்றே கட்டப்பட்ட ஒன்று. ''ஹலோ மேரி! உள்ளே வர விரும்புகிறாயா?'' ஒரு வெள்ளைச் சிறுமி கேட்டாள். மேரி தயங்கினாள். தயக்கத்தை ஆவல் வென்றபோது அவள் மெதுவாக வீட்டினுள் நுழைந்திருந்தாள். அங்கிருந்த அழகுமிக்க விளையாட்டுப் பொருட்களையெல்லாம் ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''எங்களோடு சேர்ந்து விளையாட விரும்புகிறாயா..?''

'' ஆமாம்.." மேரி பதில் சொன்னாள்.

வீட்டினுள் விளையாடியபடி சுற்றி வந்தபோது ஓர் ஓரத்தில் கிடந்த சிறிய மேசையும் அதன் மீதிருந்த ஒரு பொருளும் மேரியின் கவனத்தை ஈர்த்தன. அந்தப் பொருள் பைண்டிங் செய்யப்பட்ட ஒரு புத்தகம். மேலட்டை ஓவியத்தையும் அச்சிடப்பட்ட புத்தகத் தலைப்பையும் பார்த்து ஆர்வமுற்ற மேரி அதைத் தன் கையில் எடுத்துக்கொண்டாள்.

அதைப் புரட்டத் துவங்கியபோது வில்ஸனின் இரு பெண் குழந்தைகளுள் சிறுமியாக இருந்தவள், "புத்தகத்தை என்னிடம் கொடு! நீ இதை எடுக்கக்கூடாது! உன்னால் படிக்க முடியாது..!'' என்று மேரியிடமிருந்து புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள்.

முதலில் மேரிக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு

''சும்மா, அதைப் பார்த்துவிட்டுத் தருகிறேன். நான் ஒன்றும் அதை சேதப்படுத்தி விடமாட்டேன். பத்திரமாக வைத்திருப்பேன்."

''எனக்கு அது எப்படித் தெரியும்? புத்தகங்கள், படிக்க முடியாதவர்களுக்காக இல்லை! தெரிந்து கொள்...!''

"பத்திரமாக வைத்திருப்பேன்."

"முடியாது''

"அப்படியானால் உன்னால் அதைப் படிக்க முடியுமா..?" மேரி கேட்டாள்.

"நிச்சயமாக நான் படிக்க முடியும். விளையாட்டுச் சாமான்களையும் என்னிடம் கொடு" என்று சொல்லிக்கொண்டே அந்தச் சிறுமி விளையாட்டுச் சாமான்களை மேரியிடமிருந்து பிடுங்கினாள். மேரி மனம் துவண்டாள். நட்புணர்வு அற்ற அந்த இடத்திலிருந்து உடனே வெளியேறினாள். கண்ணீர் பொங்கியது. வெளியே தெளிவாய் ஒளிர்ந்து கொண்டிருந்த காலை வெளிச்சம் அவளுக்கு ஆதரவாக இருந்தது. அவள் அப்படி என்ன பெரிய தவறைச் செய்துவிட்டாள்..?

10th_Tamil_Unit 5.indd 112 13-02-2023 15:42:18

ஒரு புத்தகத்தைத் தொட்டிருக்கிறாள்... அவ்வளவு தானே..?அதற்குப் போய் இப்படியா... வெடுக்கென்று பிடுங்கிவிட்டாளே...! மேரி மனம் கசந்தாள். அந்த நாள் முழுவதும் இனி அவள் துயரம் மேலிட்டு இருக்கப் போகிறாள்.

இந்தக் கொந்தளிக்கும் யோசனைகளுக்கு நடுவே மேரி ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். அவள் உதடுகள் அதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டன.

''ஆம், நான் படிக்க வேண்டும்! நான் வாசிக்கக் கற்றுக் கொள்ளப் போகிறேன். நான் எழுதப்படிக்கப் போகிறேன்!''

தனக்குத் தானே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டாள். அன்று நாள் முழுவதும் இந்த வார்த்தைகளை எத்தனையோ முறை சொல்லிக் கொண்டாள்.

''அன்பு நிறைந்த கடவுளே! இந்த வயல்களிலிருந்து என்னை வெளியே அழைத்துக்கொண்டு போ... நான் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டும்... நான் வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இது எப்படியாகினும் நடக்க வேண்டும்.''

அது உணவுக்கான நேரம். குடும்பம் பருத்திக்காட்டைவிட்டுக் கிளம்பியது. மேரி தனது தந்தையுடன் சேர்ந்துகொள்வதற்கு ஓடிச் சென்றாள்.

''நான் பள்ளிக்கூடத்திற்குப் போக முடியுமாப்பா?''

''அடடே! மேரிச்செல்லம் இங்கே நமக்கென்று பள்ளிக்கூடமே கிடையாதேம்மா!'' அப்பாவின் குரல் வருத்தத்தில் தளர்ந்து ஒலித்தது.

''நான் படிக்கணும் அப்பா... எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளணும்னு விரும்பறேன்.'' சாம் மெக்லியோட் பதில் எதுவும் கூறவில்லை.

விரைவில், பருத்தி எடுப்பதற்கான காலமும் வந்தது. இந்த ஆண்டு பருத்தி நல்ல விளைச்சல். நல்ல விலையும் கிடைத்தது. ஆனால், மேரிஜேனுக்கு இந்த முறை அவற்றில் ஈடுபாடு வரவில்லை. காரணம், அவள் ஒரே ஒரு விசயத்தைப் பற்றி மட்டுமே தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்ததுதான்: 'எப்படி, எப்போது நான் வாசிக்கக் கற்றுக் கொள்ளப் போகிறேன்?'

ஆனால், அங்கே எந்த ஒரு பள்ளியும் கிடையாது. புத்தகங்கள் இல்லை. எந்த ஓர் ஆசிரியரும் இல்லை. அங்கிருந்ததெல்லாம் பருத்தி விளையும் பருவகாலம்தான். ஒரு பருவம் முடிந்து இன்னொன்று. அது முடிந்து மற்றொன்று... பின்... இன்னும் ஒன்று!

''நான் படிக்க விரும்புகிறேன். நான் படிக்க விரும்புகிறேன்.' மேரி தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.அந்த வார்த்தைகள் எப்பொழுதும் அவளைச் சுற்றிக்கொண்டே திரிந்தன. பதினோரு வயதே ஆன அச்சிறு பெண் வயலிலிருந்து வீட்டை நோக்கிச் சென்று அந்தக் கனமான பருத்திப் பொதியைத் தனது முதுகிலிருந்து இறக்கி வைக்கும் போதுதான், தனக்கு அறிமுகமே இல்லாத ஒரு பெண் தன் முன்னால் நிற்பதைக் கண்டாள். அந்தப் பெண் புன்னகைத்தார்.

''நான்தான் மிஸ் வில்ஸன்..''

உன்னைப் போன்ற குழந்தைகள் படித்தாக வேண்டும். உன்னுடைய இந்தப் பருத்தி எடுப்பு வேலைகள் முடிந்த உடனேயே எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக மேயெஸ்வில்லிக்கு வரவேண்டும். சரியா.. மேரிக்குட்டி.. வருவாய்தானே?''

மேரி பதில் சொல்ல நா எழாமல் வாயடைத்து நின்றாள்.

பருத்தி எடுக்கும் தங்களின் வேலையைத் தொடர்வதற்காக அனைவரும் வயல்களுக்குத் திரும்பிச் சென்றனர். மேரியும் ஓடினாள். "இப்போதே வாருங்கள், சீக்கிரம்..! அதோ அந்த மூலையில்; பிறகு இங்கே, பருத்தியை எடுங்கள். மசமசவென்று நிற்காதீர்கள்.. நான் பள்ளிக்கூடத்திற்குப் போயாகவேண்டும்!'' எல்லோரையும் அவசரப்படுத்தினாள். திடுமென்று அவள் ஒரு புதிய மனுசியாக ஆகி விட்டதைப் போல மற்றவர்கள் உணர்ந்தனர்.

''அந்தப் புத்தகத்தை என்னிடம் கொடு! உன்னால் படிக்க முடியாது!'' என்று மேரியின் காதுகளில் இத்தனை நாள் ஒலித்துக் கொண்டிருந்த இந்த வார்த்தைகள் அவளுடைய

10th_Tamil_Unit 5.indd 113 13-02-2023 15:42:18

ஆத்மாவில் இருந்து என்றென்றைக்குமாகத் துடைத்தெறியப்படப் போகின்றன.

புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது. மேரி என்றொரு பெண் குழந்தை அந்த வீட்டிலிருந்து வெளியே போய் முதன்முறையாகப் படிக்கப் போகிறாள் என்ற நம்பிக்கை! அந்தத் தலைமுறையில் படிக்கப்போகும் முதல் ஆளும் அவள்தான்.

அந்த வீட்டில் ஜன்னல் ஓரமாக கீழ்ப்பக்கம் இருந்த மேசையின்மீது தலைமுறைக் காலமாக பைபிள் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தக் குடும்பத்தில் எந்த ஒருவரும் எந்தக் காலத்திலும் அதைப் படிப்பதற்கு முடிந்ததே இல்லை. காரணம் யாருக்கும் படிக்கத் தெரியாது.

"இந்த பைபிளையும் இனி படித்துவிடுவேன். எல்லோருக்கும் படித்துக் காட்டவும் செய்வேன்." மேரி தனக்குத்தானே முணுமுணுத்தாள்.

மேயெஸ்வில்லியில் பெரிய கடை அது.

"உனக்கு என்ன வேண்டும் மேரிம்மா..?" சாம் அவளைக் கேட்டார்.

"எழுதுவதற்குப் பிரயோசனமான ஏதாவது ஒன்று வாங்கிக் குடுங்கப்பா."

கடைக்காரர் ஒரு சதுர வடிவ, கடினமான கறுப்புப் பலகை ஒன்றை அவர்களிடம் எடுத்துக் காட்டினார்.

''இதுதான் சிலேட். இந்தச் சிறிய வெள்ளை சாக்பீஸ் துண்டினால் நீங்கள் இந்தப் பலகையின் மீது எழுதலாம்".

இனி சிலேட்டின் மீது வெள்ளை சாக்பீஸைக் கொண்டு அவளால் கோடுகளை, படங்களை வரைய முடியும். பிறகு, எப்படி எழுதுவது என்று அவள் அறிந்துகொண்ட நிமிடத்திலிருந்து அவள் எழுதமுடியும்.. எழுதுவாள்.. எழுதுவாள்..!

அப்பாவும், மகளும் வீட்டுக்கு வந்தபோது, அனைவரும் அடுத்து வரப்போகிற நாள் குறித்தே பேசிக்கொண்டிருந்தார்கள். நாளை மேரிஜேன் பள்ளிக்கூடம் செல்லப்போகும் முதல் நாள்...!

மேரியின் சகோதரர்களும் சகோதரிகளும் சொன்னார்கள்:

"நீ எங்களுக்கும் சொல்லித்தர வேண்டும், சரியா?"

''ஓ யெஸ்..! நான் கற்றுக்கொண்டதை எல்லாம் உங்களுக்கும் சொல்லித் தருகிறேன்..!" அவள் உறுதியளித்தாள்.

அடுத்தநாள் அதிகாலையில் சீக்கிரமாகவே அவள் புறப்படத் தயாராகி விட்டாள். அப்பாவும் கூடச் சென்றார்.

மேயெஸ்வில்லிக்குப் போய்ச்சேர மேரி நடக்க வேண்டிய தூரம் ஐந்து மைல்கள். அந்தப் புழுதிபடிந்த சாலையில் ஒவ்வொரு நாளும் வீடு திரும்ப மேலும் ஐந்து மைல்கள் அவள் நடக்க வேண்டும்.

மேரிஜேன் தான் பெற்ற புதிய கல்வியினால் முக்கியமான ஒரு நபராக மாறிக்கொண்டிருந்தாள். அவளால் இப்போது கணக்குப் பார்க்கமுடியும். அவளுடைய அக்கம் பக்கத்தவர் கறுப்பின மக்கள் வெள்ளை நிற மக்கள் இருவருமே சம்பளக்கணக்கோ, கொடுக்கல் வாங்கல் குழறுபடியோ எதுவென்றாலும் மேரியிடமே கொண்டுவந்தார்கள்.

கறுப்பர்களுக்கு எழுதவோ படிக்கவோ தெரியவில்லை. தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் உண்மையில் நியாயமான தொகைதானா என்று கூடக் கணக்கிடத் தெரியவில்லை. வெள்ளைக்காரர்கள் எதைக் கொடுக்கிறார்களோ அதை வாங்கிக்கொள்ள வேண்டியவர்களாகவே இருந்தார்கள் கறுப்பர்கள்.

மேரி தனது பள்ளியில் மேலும் புதிது புதிதாய்க் கற்றுக்கொண்டு வந்தாள். தனது பாதையில்தான் மெதுவாக உயர உயரப் போய்க் கொண்டிருக்கிறோம் என்று மனதில் அசை போடுவாள்...!

பள்ளிக்கூடத்தில் சில வருடங்கள் ஓடி மறைந்தன. அந்த வருடத்தின் கடைசியில் மேரிக்குப் பட்டமளித்தல் இருந்தது. இதுதான் தங்கள் வாழ்க்கையில் காணும் முதன்முதல் பட்டமளித்தல் விழா என்பதால்

10th_Tamil_Unit 5.indd 114 13-02-2023 15:42:18

மேயெஸ்வில்லியின் மக்களுக்கு அது மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்தது.

இந்தப் பட்டமளிப்பு விழாவின் மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்பது டிப்ளொமாக்களை வழங்குவது. மதிப்புமிக்க வெள்ளைத்தாள் சுருள்களில், 'இந்தப் பட்டம் பெறும் மாணவர்கள் எழுதவும் படிக்கவும் கூடியவர்கள்' என்று எழுதப்பட்டிருக்கும்.

மேரியின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். மேரி தன்னுடைய டிப்ளொமாவை வாஞ்சையுடன் பெற்றுக்கொண்டாள். பூப்போல அதை ஏந்தி, தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். மேஜையிலிருந்த புத்தகத்தை, தான் கையில் எடுத்த போது அதை ஒரு சிறுமி பிடுங்கிக் கொண்ட அந்த நாள் நினைவில் ஆடியது. "உன்னால் படிக்க முடியாது" என்று அவளைத் துயரப்படுத்துவதற்கு இனி எந்த ஒருவராலும் ஒருபோதும் முடியாது என்பதில் அவள் பெருமகிழ்ச்சியடைந்தாள்.

விழா முடிந்தது. இரைச்சலும் சந்தோசமும் நிறைந்த சூழலில் மிஸ் வில்ஸன் மேரிஜேனை தோளோடு அணைத்தபடி

"மேரிஜேன்,

இப்போது நீ என்ன செய்யப் போகிறாய்?"

''எனக்குத் தெரியவில்லை மிஸ். நான் என்னுடைய படிப்பைத் தொடர விரும்புகிறேன். கருப்பர்கள் எப்போதாகிலும் கல்லூரிக்குப் போயிருக்கிறார்களா..?"

''இல்லை, மிக அபூர்வம்தான். ஆனால், நீ போக முடியும். அதற்கு நீ முதலில் உயர்நிலைப்பள்ளிக்குப் போயாக வேண்டும்..."

மேரி தங்களுடைய சின்னஞ்சிறு வீட்டிற்குத் திரும்பியதும் தனது படிப்பை எப்படியாகிலும் தொடர்ந்தாக வேண்டுமென்று சொல்லிக்கொண்டாள். மேரி இப்போது எழுதப்படிக்கத் தெரிந்தவள்.'' உன்னால் படிக்க முடியாது" என்று யாராவது அவளைப் பார்த்துச் சொன்னால் இப்போது அவள் உடனே அதற்குச் சரியான பதிலடி கொடுக்க முடியும். இந்தப் பெருமித உணர்வுடனே மேரி மற்றவர்களுடன் சேர்ந்து பருத்திக்காட்டுக்கு வேலைக்குத் திரும்பினாள்.

நாட்கள் போயின. ஒருநாள், பருத்தி வயல்களை நோக்கி ஒரு பெண் வருவதைத் தூரத்திலிருந்து மேரி பார்த்தாள்." மேரி" அந்த குரலைக் கேட்டதும் தெரிந்துவிட்டது, வந்தவர் மிஸ் வில்சன் என்பது.

''உனக்கு ஒரு நல்ல செய்தி வைத்திருக்கிறேன் மேரி. மேற்குப் பகுதியில் வாழ்கிற ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி ஒரு கருப்பினக் குழந்தையின் படிப்பிற்காகப் பணம் அனுப்பியிருக்கிறார். அதைப் பெறுவதற்குரிய ஆளாக நீதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாய். நீ மேல்படிப்பிற்காக டவுனுக்குப் போகவேண்டும் தயாராகு"என்றார் வில்ஸன்.

மேரி சந்தோசத்தில் குதித்தாள். வீட்டைப் பார்த்து ஓடினாள். ''நான் மேல்படிப்புக்காக டவுனுக்குப் போகப்போகிறேன். பக்கத்து வீடுகளில் எல்லாம் ஓடி ஓடிச் சொன்னாள்.

பருத்தி வயல்களில் மேரிஜேனின் நாட்கள் முடிவுக்கு வந்தன.

அடுத்த பள்ளி ஆண்டின் தொடக்கம் வரப்போகிறது. இன்னும் சில நாட்களே உள்ளன. மேரி தயாரானாள். குடும்பத்தாரும் அக்கம்பக்கத்தவரும் மேரியைக் குறித்துப் பெருமிதம் அடைந்தார்கள். அவள் புறப்பட வேண்டிய நாளும் வந்தது.

''வாங்க, சீக்கிரம்..! ரயிலுக்கு நேரமாகிவிடும்.. நான் தாமதமாகப் போக விரும்பவில்லை.." வீட்டின் வாயிற்படியில் பொறுமையிழந்து தவித்து நின்றாள் மேரி. அவர்கள் எல்லோருமாக வீட்டை விட்டுப் புறப்பட்டதும் அண்டை வீட்டுக்காரர் ஒருவர் தனது பண்ணை வாகனத்துடன் வந்து சேர்ந்தார்.

" வண்டியில் ஏறுங்கள்..!" அவர் அன்புக் கட்டளையிட்டார்.

"இந்த மாதிரி ஒரு முக்கியமான நாளில் நீங்கள் நடந்து போகக்கூடாது..!" பாட்ஸியும் சாமும் இதை எதிர்பார்க்கவேயில்லை. வண்டி புறப்பட்டது. ஒவ்வொரு தெருவிலும் சில பேர்

10th_Tamil_Unit 5.indd 115 13-02-2023 15:42:18

வந்து கூடச் சேர்ந்துகொண்டார்கள். "சாம், கொஞ்சம் பொறு. இதோ நாங்கள் வருகிறோம்." மேலும் சிலர் புறப்பட்டனர். அந்தக் குழு மென்மேலும் பெரிதாகிக்கொண்டே சென்றது. அவர்கள் ரயில் நிலையத்தை அடைந்தபோது அங்கு இன்னும் பலரும் காத்திருந்தார்கள்.

வண்டி போய் நிலையத்தில் நின்றதுதான் தாமதம். மேரி தாவிக் குதித்து இறங்கினாள்.

"மிஸ் வில்ஸன்,மிஸ் வில்ஸன்..! இதோ, நான் இங்கே இருக்கிறேன்..!"

மேரியை அணைத்துக்கொண்ட மிஸ் வில்ஸன் அவள் செல்ல வேண்டிய இடம், சந்திக்கவேண்டிய ஆசிரியர் பற்றிய குறிப்புகளை விளக்கிச் சொன்னார்.

அந்த கௌரவத்திற்குரிய சிறுமியைச் சுற்றி ஒவ்வொருவரும் கூடி நின்றார்கள். புகைவண்டி வந்து கொண்டிருக்கிறது என்பதை மேலெழுந்து தெரிந்த புகையும் சத்தமும் அவர்களுக்குத் தெரிவித்தன.

"குட் பை மேரி"," குட் பை "

"வெற்றி உண்டாகட்டும்"

"குட் பை மேரி"

வாழ்த்தொலிகள் வந்துகொண்டே இருந்தன. எல்லோருக்கும் கை அசைத்து விடை பெற்றாள். ரயில் வேகமெடுத்தது.

நூல் வெளி



புத்தகம் ஒன்று ஒரு சிறு பெண்ணுடன் வாழ்க்கை நெடுகப் பேசிக்கொண்டே வருகிறது. "உனக்குப் படிக்கத் தெரியாது" என்ற கூற்றால் உள்ளத்தில் பெற்ற அடி, பிற்காலத்தில் சமையல் செய்தும் தோட்டமிட்டும் பொது இடங்களில் பாட்டுப்பாடியும் சிறுகச்சிறுகப் பணம் சேர்த்துக் குப்பை கொட்டும் இடத்தில் ஒரு பள்ளியை உருவாக்கிடக் காரணமானது. உலகெங்கும் மூலை முடுக்குகளில் உள்ள ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட சமூகங்களின் ஒரு குரலாக இருந்தவர் அமெரிக்க கறுப்பினப் பெண்மணி மேரி மெக்லியோட் பெத்யூன்.

இம் மாபெரும் கல்வியாளரின் வாழ்க்கையை "உனக்குப் படிக்கத் தெரியாது" என்ற தலைப்பில் நூலாகப் படைத்துள்ளார் கமலாலயன். இவரின் இயற்பெயர் வே. குணசேகரன். வயதுவந்தோர் கல்வித்திட்டத்தில் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.



முன்தோன்றிய மூத்தகுடி

"கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை"

ஐங்குறுநூறு 188 : 2

தூத்துக்குடி மாவட்டத்தின் கொற்கை



கற்பவை கற்றபின்...

1. கல்வி வாய்ப்பற்ற சூழலில் ஒற்றைச் சுடராக வந்து ஒளியேற்றினார் மேரி மெக்லியோட் பெத்யூன். அதுபோலத் தமிழகத்தில் கல்வி வாய்ப்பற்றவர்களின் வாழ்வில் முதற்சுடர் ஏற்றியவர்களுள் யாரேனும் ஒருவர் குறித்த செய்திகளைத் தொகுத்துச் சில படங்களுடன் குறும்புத்தகம் ஒன்றைக் குழுவாக உருவாக்குக.
2. கல்விக் கண் திறந்தவர்களுக்கிடையில் கைவிடப்பட்ட பெண்களுக்காக உழைத்த தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி பற்றிய ஒரு தொகுப்பேட்டினை உருவாக்கி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

10th_Tamil_Unit 5.indd 116 13-02-2023 15:42:19

கற்கண்டு

கல்வி

ரு

வினா, விடை வகைகள், பொருள்கோள்

VNKP1

பல்வேறு சூழல்களில் வினாக்கள் வினவுகிறோம்; விடைகள் கூறுகிறோம். மொழியின் வளர்ச்சி என்பது வினவுவதிலும் விடையளிப்பதிலும்கூட இருக்கிறது. அவற்றைப் பற்றி நன்னூலார் விளக்கியிருக்கிறார்.

வினாவகை

அறிவினா, அறியா வினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா என்று வினா ஆறு வகைப்படும்.

அறிவினா	தான் விடை அறிந்திருந்தும், அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது.	மாணவரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று ஆசிரியர் கேட்டல்.
அறியா வினா	தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது.	ஆசிரியரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று மாணவர் கேட்டல்.
ஐய வினா	ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது.	'இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?' என வினவுதல்.
கொளல் வினா	தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது.	'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?' என்று நூலகரிடம் வினவுதல்.
கொடை வினா	பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது.	'என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசனின் கவிதைகள் இருக்கிறதா?' என்று கொடுப்பதற்காக வினவுதல்.
ஏவல் வினா	ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது.	"வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல்.

அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார்

– நன்னூல்,385

"சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்ற(து) உரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனும்எண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்ப"

– நன்னூல்,386

10th_Tamil_Unit 5.indd 117 13-02-2023 15:42:19





விடைவகை

சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை என்று விடை எட்டு வகைப்படும்.

முதல் மூன்று வகையும் நேரடி விடைகளாக இருப்பதால் வெளிப்படை விடைகள் எனவும் அடுத்த ஐந்து விடைகளும் குறிப்பாக இருப்பதால் குறிப்பு விடைகள் எனவும் கொள்ளலாம்.

சுட்டு விடை	சுட்டிக் கூறும் விடை	**'கடைத்தெரு எங்குள்ளது?'** என்ற வினாவிற்கு, **'இப்பக்கத்தில் உள்ளது'** எனக் கூறல்.
மறை விடை	மறுத்துக் கூறும் விடை	**'கடைக்குப் போவாயா?'** என்ற கேள்விக்குப் **'போகமாட்டேன்'** என மறுத்துக் கூறல்.
நேர் விடை	உடன்பட்டுக் கூறும் விடை	**'கடைக்குப் போவாயா?'** என்ற கேள்விக்குப் **'போவேன்'** என்று உடன்பட்டுக் கூறல்.
ஏவல் விடை	மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை.	**இது செய்வாயா?"** என்று வினவியபோது, "நீயே **செய்"**என்று ஏவிக் கூறுவது
வினா எதிர் வினாதல் விடை	வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது.	**'என்னுடன் ஊருக்கு வருவாயா?'** என்ற வினாவிற்கு **'வராமல் இருப்பேனா?'** என்று கூறுவது.
உற்றது உரைத்தல் விடை	வினாவிற்கு விடையாக ஏற்கெனவே நேர்ந்ததைக் கூறல்.	**'நீ விளையாடவில்லையா?'** என்ற வினாவிற்குக் **'கால் வலிக்கிறது'** என்று உற்றதை உரைப்பது.
உறுவது கூறல் விடை	வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறல்.	**'நீ விளையாடவில்லையா?'** என்ற வினாவிற்குக் **'கால் வலிக்கும்'** என்று உறுவதை உரைப்பது.
இனமொழி விடை	வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறல்.	**"உனக்குக் கதை எழுதத் தெரியுமா?"** என்ற வினாவிற்குக் **"கட்டுரை எழுதத் தெரியும்"** என்று கூறுவது

10th_Tamil_Unit 5.indd 118 13-02-2023 15:42:20

பொருள்கோள்

செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்குப் 'பொருள்கோள்' என்று பெயர். பொருள்கோள் எட்டு வகைப்படும்.

அவை ஆற்றுநீர்ப் பொருள்கோள், மொழிமாற்றுப் பொருள்கோள், நிரல்நிறைப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள் ஆகியன. இவற்றுள் ஆற்றுநீர்ப் பொருள்கோள், நிரல் நிறைப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள் ஆகியவற்றை அறிந்து கொள்வோம்.

1. ஆற்றுநீர்ப் பொருள்கோள்

எ.கா. 'சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே'. – *சீவகசிந்தாமணி*

நெற்பயிர், கருவுற்ற பச்சைப் பாம்பின் வடிவம்போல் கருக்கொண்டு, பின்பு கதிர்விட்டு, செல்வம் சேர்ந்தவுடன் பண்பற்றமக்கள் பணிவின்றித் தலை நிமிர்ந்து நிற்பதுபோல் குத்திட்டு நின்று, முடிவில் கதிர் முற்றியவுடன் கற்றவர்கள் வணங்குதல் போல் வளைந்து காய்த்தன.

'நெல்' என்னும் எழுவாய் அதன் தொழில்களான இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்களைப் பெற்றுக் 'காய்த்தவே' என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

பாடலின் தொடக்கம்முதல் முடிவுவரை ஆற்றுநீரின் போக்கைப்போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்ததால் இது 'ஆற்றுநீர்ப் பொருள்கோள்' ஆகும்.

'மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்
அற்று அற்று ஒழுகும் அஃது யாற்றுப் புனலே.' –*நன்னூல்: 412*

2. நிரல்நிறைப் பொருள்கோள்

ஒரு செய்யுளில் சொற்கள் முறை பிறழாமல் நிரல்நிறையாக (வரிசையாக) அமைந்து வருவது 'நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும்.

இது முறை நிரல்நிறைப் பொருள்கோள், எதிர் நிரல்நிறைப் பொருள்கோள் என இருவகைப்படும்.

(அ) முறை நிரல்நிறைப் பொருள்கோள்

செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச்சொற்களை வரிசையாக நிறுத்தி, அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல் 'முறை நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும்.

எ.கா. 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'. –*குறள்: 45*

இக்குறளில் அன்பு, அறன் என்ற இரு சொற்களை வரிசைப்படுத்தி, அவற்றிற்குரிய விளைவுகளாக பண்பு, பயன் என்று வரிசைப்படுத்தி உள்ளார். அவற்றை இல்வாழ்க்கையின் பண்பு, அன்பு என்றும் அதன் பயன், அறன் என்றும் பொருள்கொள்ள வேண்டும். எனவே, அன்புக்குப் பண்பும் அறத்துக்குப் பயனும் பயனிலைகளாக - நிரல்நிறையாக - நிறுத்திப் பொருள்கொள்வதால், இப்பாடல் 'முறை நிரல்நிறைப் பொருள்கோள்' எனப்படும்.

10th_Tamil_Unit 5.indd 119 13-02-2023 15:42:20

(ஆ) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்

செய்யுளில் எழுவாய்களை வரிசைப்படுத்தி அவை ஏற்கும் பயனிலைகளை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளுதல் 'எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும்.

எ.கா. 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.' –*குறள்: 410*

இக்குறளில் முதல் அடியில் விலங்கு, மக்கள் என்று எழுவாய்களை வரிசைப்படுத்திவிட்டு, அடுத்த அடியில் பயனிலைகளாகக் கற்றார், கல்லாதார் (ஏனையவர்) என வரிசைப்படுத்தியுள்ளார். அவற்றைக் கற்றார் மக்கள் என்றும், கல்லாத ஏனையவர் விலங்குகள் என்றும் எதிர் எதிராகக் கொண்டு பொருள்கொள்ள வேண்டும். எனவே, இக்குறள் 'எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும். –*நன்னூல்: 414*.

3. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப் பொருள்கோளாகும்.

எ.கா. ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு. – மயிலைநாதர் உரை

மேற்கண்ட பாடலில் ஆலத்து மேல் குவளை என்றும் குளத்தில் வாலின் நெடிய குரங்கு என்றும் பொருள் கொண்டால் பொருத்தமற்றதாகிவிடும். இதில் ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை – என்று கருத்தைக் கொண்டு அங்குமிங்கும் கொண்டு பொருள்கோள் அமைந்திருப்பதால் இது கொண்டுகூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை
ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே –*நன்னூல்: 417*



கற்பவை கற்றபின்...

1. வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக.

- "காமராசர் நகர் எங்கே இருக்கிறது? "இந்த வழியாகச் செல்லுங்கள்." – என்று விடையளிப்பது.
- "எனக்கு எழுதித் தருகிறாயா?" என்ற வினாவுக்கு, "எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" என்று விடையளிப்பது.

2. உரையாடலில் இடம்பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக.

பாமகள்: வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே? (அறியா வினா)

ஆதிரை: ஆமாம்! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக்கொண்டிருக்கிறேன்.(.....)

பாமகள்: அப்படியா! என்ன தலைப்பு? (.....)

ஆதிரை: கல்வியில் சிறக்கும் தமிழர்! (.....). நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களோ? மாட்டீர்களோ? (.....)

பாமகள்: ஏன் வராமல்? (.....)

10th_Tamil_Unit 5.indd 120 13-02-2023 15:42:20

திறன் அறிவோம்

பலவுள் தெரிக.

1. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

   அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

   ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

   இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

   ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

2. அருந்துணை என்பதைப் பிரித்தால்.....

   அ) அருமை + துணை ஆ) அரு + துணை

   இ) அருமை + இணை ஈ) அரு + இணை

3. 'இங்கு நகரப் பேருந்து நிற்குமா?' என்று வழிப்போக்கர் கேட்டது ..... வினா.

   'அதோ, அங்கே நிற்கும்.' என்று மற்றொருவர் கூறியது ..... விடை.

   அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ)அறிவினா, மறை விடை

   இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

4. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி

   மருளை அகற்றி மதிக்கும் தெருளை"

   – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

   அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

5. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ..... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் .....

   அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

   இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

குறுவினா

1. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்"

   –இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

2. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

3. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

10th_Tamil_Unit 5.indd 121 13-02-2023 15:42:20

4. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது?

இதோ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?

மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

சிறுவினா

1. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

2. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

3. **ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு**

ஐ.நா.அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்துகொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது; ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா.அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணிகேட்பியில் (Headphone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக்கொண்டு அவரது மொழியில் புரிந்துகொள்வார்.

இப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக.

4. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை

இன்மை புகுத்தி விடும்.

இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

நெடுவினா

1. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

2. 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

3. தமிழின் இலக்கிய வளம் – கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள் – பிறதுறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை –

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

10th_Tamil_Unit 5.indd 122 13-02-2023 15:42:20



மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி
யாரம் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)

– பாரதியார்

It gave Valluva the Great
For all the world to have;
And the fame rose sky high
Of our Tamil – Land
It made a necklace of gems,
Named 'The Lay of the Anklet'
Which grips enraptured hearts
In our Tamil – Land.

-The voice of Bharati

மொழிபெயர்ப்பு

ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக.

யாழிசை	It's like new lute music
அறைக்குள் யாழிசை *ஏதென்று சென்று* *எட்டிப் பார்த்தேன்;* *பேத்தி,* *நெட்டுருப் பண்ணினாள்* *நீதிநூல் திரட்டையே.* பாரதிதாசன்	Wondering at the lute music Coming from the chamber Entered I to look up to in still My grand-daughter Learning by rote the verses Of a didactic compilation. *Translated by* Kavignar Desini

lute music – *யாழிசை*
chamber – .....
to look up – .....
grand-daughter – .....
rote – .....
didactic compilation – .....

அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.

வேர்ச் சொல்	எழுவாய்த் தொடர்	பெயரெச்சத் தொடர்	வினையெச்சத் தொடர்	விளித் தொடர்	வேற்றுமைத் தொடர்
ஓடு	அருணா ஓடினாள்	ஓடிய அருணா	ஓடி வந்தாள்	அருணா ஓடாதே!	அருணாவிற்காக ஓடினாள்
சொல்	அம்மா சொன்னார்		சொல்லிச் சென்றார்		கதையைச் சொன்னார்
தா		தந்த அரசர்	தந்து சென்றார்	அரசே தருக!	
பார்	துளிர் பார்த்தாள்		பார்த்துச் சிரித்தாள்		துளிருடன் பார்த்தேன்
வா	குழந்தை வந்தது	வந்த குழந்தை		குழந்தையே வா!	

தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

எ.கா. *அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.*

1. *மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.*
2. *வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.*
3. *கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.*
4. *குழந்தைகள் தனித்தனியே எழுதித்தரவேண்டும்.*

10th_Tamil_Unit 5.indd 123 13-02-2023 15:42:20

மதிப்புரை எழுதுக.

பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/கட்டுரை/சிறுகதை/கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்பு – நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு- நூல் ஆசிரியர்

படிவத்தை நிரப்புக.

நூலக உறுப்பினர் படிவம்

_____ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் _____

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் **உறுப்பினர் எண்**

1. பெயர் _____

2. தந்தை பெயர் _____

3. பிறந்த நாள் _____

4. வயது _____

5. படிப்பு _____

6. தொலைபேசி எண் _____

7. முகவரி _____
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) _____

நான் _____ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ_____, சந்தா தொகை ரூ_____ ஆக மொத்தம் ரூ. _____ பணமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :
நாள் : **தங்கள் உண்மையுள்ள**

திரு / திருமதி / செல்வி / செல்வன்_____ அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை

பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

10th_Tamil_Unit 5.indd 124 13-02-2023 15:42:20

மொழியோடு விளையாடு

புதிர்ப்பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க.

தார்போன்ற நிறமுண்டு கரியுமில்லை
பார் முழுதும் பறந்து திரிவேன் மேகமுமில்லை
சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன் பள்ளியுமில்லை
சோர்ந்து போகாமல் வீடமைப்பேன் பொறியாளருமில்லை
வீட்டுக்கு வருமுன்னே, வருவதைக் கூறுவேன். *நான் யார்?*

தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் _____ யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் _____ நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும். (புதையல்; புதைத்தல்)
2. காட்டு விலங்குகளைச் _____ தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் _____ திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)
3. காற்றின் மெல்லிய _____ பூக்களைத் தலையாட்டவைக்கிறது. கைகளின் நேர்த்தியான _____ பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல், தொடுதல்)
4. பசுமையான _____ஐக் _____ கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
5. பொதுவாழ்வில் ____ கூடாது. ____இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)

அகராதியில் காண்க.

மன்றல், அடிச்சுவடு, அகராதி, தூவல், மருள்

செயல்திட்டம்

"பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்" – குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கித் தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துக.

காட்சியைக் கவிதையாக்குக.



10th_Tamil_Unit 5.indd 125 13-02-2023 15:42:21

நிற்க அதற்குத் தக...

பள்ளியில் நான்	வீட்டில் நான்
நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன்.	வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன்.
உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன்.	

கலைச்சொல் அறிவோம்

Emblem – சின்னம் *Intellectual* – அறிவாளர்

Thesis – ஆய்வேடு *Symbolism* – குறியீட்டியல்

அறிவை விரிவு செய்

சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று – தமிழில் வல்லிக்கண்ணன்

குட்டி இளவரசன் – தமிழில் வெ.ஸ்ரீராம்

ஆசிரியரின் டைரி – தமிழில் எம்.பி. அகிலா



இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/ta/courses-degree-p202-p2021-html-p202162-28161

http://www.tamilhindu.com/2009/10/gu_pope_and_thiruvasagam/

http://www.tamilsurangam.in/literatures/pathinen_keezhkanakku/thirikadugam.html

10th_Tamil_Unit 5.indd 126 13-02-2023 15:42:21

இயல் ஆறு

கலை,
அழகியல், புதுமை

நிலா முற்றம்



இசைக்கலைஞர்கள், 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடை மருதூர்.

கற்றல் நோக்கங்கள்

- கலைகளில் பன்முக வல்லவராகத் திகழ்ந்த ஆளுமை ஒருவரைப் பற்றி அறிவதன் வாயிலாகச் சமூகத்திற்குத் தம்மால் இயன்ற பங்களிப்பை அளிக்க முன்வருதல்.
- எளிய சொற்களும் கருத்துகளும் கவிதைப்பொருளாகும் திறமறிந்து தானே கற்றல்.
- கவிநயம் நனிசொட்டச் சொட்டப் பாடப்பட்ட பாடல்களைக் கற்று மகிழ்வதுடன் அவை போன்ற பாடல்களைத் தேடித் தேர்ந்து படித்தல், படைத்தல்.
- சந்த நயமும் தொடைநயமும் கொண்ட பாடல்கள் மனனத்திற்கு எளிதானவை. அவற்றைப் பயின்று நாநெகிழ், நாபிறழ் பயிற்சிகளில் ஆற்றல் பெறுதல்.
- கதைகளைப் படித்து மையக் கருத்துணர்தல், கதைகள் குறித்துக் கலந்துரையாடல்.
- தமிழரின் அகப்பொருள் இலக்கணம் அறிதல்வழி இயற்கையுடன் ஒன்றியிருந்த வாழ்க்கை முறைகளைப் புரிந்து கொள்ளுதல்.

10th_Tamil_Unit 6_ Folder.indd 127 02/03/2024 12:16:45

கலை

சூ

பன்முகக் கலைஞர்



இயற்பெயர் மறைந்து இட்டபெயர் நிலைக்கும் அளவுக்குக் கலைஞர் மு.கருணாநிதி அவர்களை அடையாளப்படுத்தித் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது கலை! அவரைப்பற்றிப் பேராசிரியர் அன்பழகனார்,"கலைஞர்பகுத்தறிவுக்கொள்கைபரப்பும்சிந்தனையாளர்; பழமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர்; படித்தவரைக் கவரும் ஆற்றல்கொண்ட எழுத்தாளர்; கலைத்துறையில் வாகைசூடிய படைப்பாளர்; தொட்டது துலங்கத் துறைதோறும் தம் முத்திரை பதிக்கும் திறமையாளர்; முத்தமிழிலும் வல்ல வித்தகர்; செந்தமிழுக்கொரு தீமை எனில் தம்முயிரும் தந்திடத் துணியும் தியாகத் திருவுருவம்!" என்பார்.

குழந்தை உள்ளக் கலைஞர்

"நானும் தங்கையும் மழையைக் கண்டாலே மயில் போலக் குதிப்போம் முன்பெல்லாம். மழைத்துளிகளிலே நிற்பதைவிட ஆனந்தம் வேறு இல்லை என்று எண்ணுவோம். 'உடம்புக்கு ஆகாது. உள்ளே வாங்க' என்று பாட்டி அன்பாகக் கோபிக்கிற வரையிலே மழையிலே நனைந்துகொண்டு ஆடுவோம்; பாடுவோம். வீட்டுக்குள்ளே வந்துவிட்டால்கூட, திண்ணையிலே அமர்ந்து மழையை இரசிப்போம். தெருவிலே சிறுசிறு வாய்க்கால்கள் போல நெளிந்தோடும் மழைத் தண்ணீரிலே நாங்கள் மிதக்க விட்டிருக்கிற காகிதப் படகுகள் – எவ்வளவு!"

தாம் எழுதிய புதையல் என்னும் புதினத்தில் குழந்தை உள்ளத்துடன் இவ்வாறு பதிவு செய்திருப்பார் கலைஞர். படிக்கும் வாசகர் மனமும் கூடவே மழையில் நனையும்!

இசை முகிழ்த்த புலமும் வேளாண் செழித்த நிலமுமான திருவாரூர் மாவட்டத்தின் எழில் சூழ்ந்த சிற்றூர் திருக்குவளை. அவ்வூரில் 1924ஆம் ஆண்டு சூன் திங்கள் 3ஆம் நாள், ஏரால் நிலத்தையும் நாவால் தமிழையும் பண்படுத்திய விவசாயக்கவிஞர் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மூன்றாவது மகவாகப் பிறந்தார் கலைஞர் கருணாநிதி.

போராட்டக் கலைஞர்

தாம் பிறந்த திருக்குவளையில் தொடக்கக் கல்வியை நிறைவுசெய்த கலைஞர், திருவாரூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். அங்குதான் தமக்கு அரசியல் அரிச்சுவடியாக அமைந்த ஒரு புத்தகத்தைத் துணைப்பாடமாகப் படித்தார் மாணவர் கலைஞர். 1921இல் சென்னை மாகாணத்திற்கு நீதிக்கட்சியின் சார்பில் முதல் அமைச்சராக இருந்த பனகல் அரசரின் சாதனைகளைக் கூறும் நூல் அது.

பள்ளி முடிந்த மாலைவேளைகளில் தாம் எழுதிய 'வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்!' என்று தொடங்கும் பாடலை முழங்கியபடி, இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட மாணவர்களைத் திரட்டித் திருவாரூர் வீதிகளில் ஊர்வலம் வந்தபோது அவருக்கு வயது பதினான்கு.

போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்! அந்தப் போராட்டப் பண்பே அவருக்குள் இருந்த கலைத்தன்மையை வளர்த்தது.

பேச்சுக் கலைஞர்

இளமைப்பருவத்திலேயே தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகள் கலைஞரை ஈர்த்தன; பட்டுக்கோட்டை அழகிரி, அறிஞர் அண்ணா ஆகியோரின் பேச்சாற்றல் அவரைக் கவர்ந்தது. மேடைப்பேச்சினில் பெருவிருப்பம் கொண்ட அந்தக் கிராமத்து இளைஞர், 'நட்பு' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு பலராலும் பாராட்டப்பட்டது. பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்குப் பேச்சுப்பயிற்சி அளிப்பதற்காகச்

10th_Tamil_Unit 6_ Folder.indd 128 02/03/2024 12:16:46

'சிறுவர் சீர்திருத்தச் சங்கம்', மாணவரிடையே ஒற்றுமையுணர்வை வளர்த்தெடுக்கத் 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' ஆகிய அமைப்புகளைத் தொடங்கினார்.

தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற சிந்தனையிலேயே தம் ஆயுளைச் செலவிட்ட கலைஞர், தாம் சென்றவிடமெல்லாம் செறிவாகத் தமிழ் பேசித் தன்மானத்தை, தமிழ் உணர்வை, தமிழிலக்கியத்தை, பகுத்தறிவை, மத ஒருமைப்பாட்டை, சமூக நல்லிணக்கத்தை நமக்கெல்லாம் ஊட்டினார்.

"இளைய தலைமுறையே; எழுவாய்! செயப்படுபொருள் பயனிலையேல் விழுவாய்! அறிவில் மூத்தோரைத் தொழுவாய்! அரிய பயன் காண ஆழ உழுவாய்!" என்று தமக்கேயுரிய நடையில் பேசுவது கலைஞருடைய முத்தான பேச்சுக்கு ஒரு முத்திரை.!

நாடகக் கலைஞர்

தமக்கே உரிய தனிநடையால் தமிழரை மேடை நாடகங்களின் பக்கம் ஈர்த்தார் கலைஞர். அவர் எழுதிய 'பழநியப்பன்' என்னும் முதல் நாடகம், 1944ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து 'சாம்ராட் அசோகன், மணிமகுடம், வெள்ளிக்கிழமை, காகிதப்பூ' உட்பட பல நாடகங்களை எழுதினார். தான் எழுதிய 'தூக்குமேடை' என்னும் நாடகத்தில் நடிகர் எம்.ஆர்.இராதாவின் வேண்டுகோளுக்காக மாணவர் தலைவராகக் கருணாநிதி நடித்தார். அந்நாடகத்திற்கான பாராட்டுவிழாவில்தான் அவருக்குக் 'கலைஞர்' என்னும் சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது. அதுவே பின்னாளில் மக்கள் அவரை அன்புடன் அழைக்கும் பெயரானது.

திரைக் கலைஞர்

கலைஞரின் திறமையை உணர்ந்த இயக்குநர் ஏ.எஸ்.ஏ.சாமி, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். முதன்முதலாக நடித்த 'ராஜகுமாரி' (1947) படத்துக்கான முழுவசனத்தையும் எழுதச் சொன்னார். படத்தின் தொடக்கத் தலைப்புகளில் வசன உதவி – மு.கருணாநிதி என்று போடப்பட்டிருந்தது. படம் மிகப்பெரிய வெற்றி அடைந்தது; திரைக்கலை உலகில் இரண்டு பெரிய நட்சத்திரங்கள் உதித்தன.

கலைஞரின் கதை, வசனத்தில், எம்.ஜி.ஆரின் நடிப்பில், 'மருதநாட்டு இளவரசி', 'மந்திரிகுமாரி', 'நாம்', 'மலைக்கள்ளன்' முதலான படங்கள் தொடர்ந்து வெளிவந்தன. கலைஞரின் வசனங்கள் "சொல் புதிது சுவை புதிது" என்று கேட்போர் வியக்கும் வண்ணம் அமைந்தன. எம்.ஜி.ஆர். உச்ச நட்சத்திரம் ஆனார்; கலைஞரும் உச்சாணிக் கொம்புக்கு உயர்ந்தார். இருவருக்குமான கலைஉறவு நீண்டகாலம் தொடர்ந்தது.

தமிழ்த் திரையுலகின் திருப்பு முனையாகப் பாவலர் பாலசுந்தரம் கதை எழுதிய 'பராசக்தி'க்குத் திரைக்கதை, வசனம் எழுதினார் கலைஞர். படம் வெளிவந்த மறுநாள், பாரெங்கும் பராசக்தி பற்றித்தான் பேச்சு! தமது முதல் படத்திலேயே புகழின் உச்சத்தைத் தொட்டார் சிவாஜிகணேசன்! இந்தப் படத்தினால் தாம் ஏற்கெனவே ஏறிய புகழ்மலையின் சிகரத்தைத் தொட்டார் கலைஞர்! நீதிமன்றக் காட்சி உட்பட அவரது கருத்தாழமிக்க, கலைநயமிக்க வசனங்களுக்குத் தம் நடிப்பாலும் உச்சரிப்பாலும் உயிர்கொடுத்தார் சிவாஜி.

அதன் பிறகு, சிவாஜிகணேசனின் நடிப்பில் உருவான 'திரும்பிப் பார்', 'மனோகரா', ராஜாராணி முதலிய திரைப்படங்களும் கலைஞரின் கதை, வசனத்தில் தொடர்ந்து வெளிவந்து, வெற்றிப் படங்களாக அமைந்தன. அறிஞர் அண்ணாவின் 'ரங்கோன் ராதா' கதைக்குக் கலைஞரின் வசனங்களைப் பேசி நடித்தார் சிவாஜிகணேசன். இந்தப் படத்தில் டி.ஆர். பாப்பா இசையில் இடம்பெற்ற பதினொரு பாடல்களில் நான்கினை எழுதினார் கலைஞர். மந்திரிகுமாரி தொடங்கிப் பல படங்களில் கலைஞர் எழுதிய திரைப்படப் பாடல்களும் புகழ் அடைந்தன. 'மறக்க முடியுமா?' என்னும் திரைப்படத்தில் அமைந்த 'காகித ஓடம் கடல் அலை மேலே' என்னும் பாடல், காலத்தால் மறக்க முடியாத, மக்கள் மனத்தில் இடம்பெற்றுள்ள பாடலாகும்.

வெறும் அடுக்குமொழி வசனங்களால் மட்டுமே புகழடைந்தாரல்லர் கலைஞர். அவரது வசனங்கள் கேட்பவர்களுக்கு மொழி இன்பத்தைக் கூட்டுபவை; முற்போக்குச்

10th_Tamil_Unit 6_ Folder.indd 129 02/03/2024 12:16:46

சிந்தனைகளைக் கொண்டிருப்பவை. இன்றைய இளைஞர்களையும் வசீகரிக்கும்வகையில் கலைஞரது கதை, வசனங்கள் அமைந்திருப்பது சிறப்பு.

கலைஞரின் கதை, வசனங்களில் பகுத்தறிவு பேசிய படங்கள்: பராசக்தி, ராஜகுமாரி, மலைக்கள்ளன்.

சமூகக்கருத்துகளைப் பேசிய படங்கள்: மருதநாட்டு இளவரசி, பணம், நாம், திரும்பிப் பார்.

பெண்கள் முன்னேற்றம் பேசிய படங்கள்: மணமகள், ராஜாராணி, இருவர் உள்ளம், பாசப் பறவைகள்.

அரசியல் பேசிய படங்கள்: புதுமைப்பித்தன், குறவஞ்சி, அரசிளங்குமரி, வண்டிக்காரன் மகன்.

இலக்கியம் பேசிய படங்கள்: அபிமன்யு, பூம்புகார், உளியின் ஓசை.

'மனசாட்சி உறங்கும்போது மனக்குரங்கு ஊர்சுற்றக் கிளம்பிவிடுகிறது' என்னும் பூம்புகார் வசனமும் ராஜாராணி படத்தில் சாக்ரட்டீஸ் கதாபாத்திரம் பேசுவதாக வரும், 'நாற்றமெடுத்த சமுதாயத்தில் நறுமணம் கமழ்விக்க இதோ, சாக்ரட்டீஸ் அழைக்கிறேன், ஓடி வாருங்கள்' என்ற வசனமும் 'பொறுத்தது போதும் மனோகரா! பொங்கி எழு' என்ற மனோகரா படத்தின் வசனமும் கலைஞரின் எழுத்துக்கூர்மையைக் காலத்திற்கும் எடுத்துச் சொல்லக்கூடியவை.

1947ஆம் ஆண்டு, தன் 23ஆம் வயதில் திரைப்படங்களுக்கு எழுதத் தொடங்கிய கலைஞர், 2011இல் தொலைக்காட்சிக்காக எழுதிய 'இராமானுஜர்' தொடர்வரையிலும் நிறைவாய் எழுதினார். அப்போது அவருக்கு வயது தொண்ணூற்று இரண்டு.

இதழியல் கலைஞர்

திராவிட இயக்கத் தலைவர்கள் பெரும்பாலோர் இதழாசிரியர்களாக இருந்திருக்கின்றனர். அவ்வகையில் இளம் வயதிலேயே கலைஞர் 'மாணவ நேசன்' என்னும் கையெழுத்து ஏட்டை நடத்தினார். அப்பயிற்சி தந்த ஊக்கத்தால், அண்ணாவின் 'திராவிட நாடு' இதழில் தம் முதல் கட்டுரையை எழுதினார். அப்போது அவருக்கு வயது பதினெட்டு. அதே ஆண்டில், 'முரசொலி வெளியீட்டுக்கழகம்' என்ற பெயரில் நிறுவனம் ஒன்றைத் தொடங்கினார். 'முரசொலி' ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி, வாரஇதழாக்கி, நாளேடாக்கினார். இன்றளவும் அது தொடர்ந்து நடத்தப்படுகிறது. 'சேரன்' என்ற புனைபெயரில் அவர் பல கட்டுரைகளை எழுதினார்.

எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு அதன்மீது அளவற்ற நம்பிக்கை கொண்ட தலைவராகத் திகழ்ந்தவர் கலைஞர். தமது எண்ணங்களை, தமது விருப்பத்தை, கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டுசெல்லும் ஏற்பாடாக அவர் கருதியது, 'உடன்பிறப்புகளுக்கு' எழுதிய கடிதங்களை! கலைஞரின் உரையை நேரில் கேட்டுச் சுவைத்தவர்கள், எத்தகைய உணர்வினை அடைவார்களோ, அதே உணர்வினை அடையும்வகையில் அவரது கடிதங்களும் அமைந்திருக்கும். படிப்பவர்களை வசப்படுத்தும் ஆற்றல் பெற்ற எழுத்துகள் அவை! தமிழ்நாட்டின் வரலாற்றை ஆய்வுசெய்ய நினைப்போரின் கருவூலங்கள் அவை!

இயற்றமிழ்க் கலைஞர்

மலேசிய மண்ணில், சுபாஷ் சந்திரபோசின் இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டு வீரர் 'மலேயா கணபதி' என்பவர், ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டு இறந்ததை அறிந்து கலைஞர் 'கயிற்றில் தொங்கிய கணபதி' என்ற சிறிய கட்டுரை நூலை எழுதியபோது அவருக்கு வயது இருபத்து இரண்டு. அனைத்து இந்தியருக்கும் இருந்த ஆங்கிலேய எதிர்ப்புணர்வு, கலைஞருள்ளும் இருந்தது என்பதைக் காட்டும் நூல் இது.

தமிழ் மீது தீராத பற்றுகொண்ட கலைஞர், இலக்கியத்திலும் பெரும்பங்காற்றினார். நளாயினி, சித்தார்த்தன் சிலை, சந்தனக் கிண்ணம், தாய்மை, புகழேந்தி, அணில்குஞ்சு உள்ளிட்ட பல சிறுகதைகளையும் ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச்சிங்கம், ஒரே ரத்தம் உள்ளிட்ட புதினங்களையும் எழுதியுள்ளார். தம் வாழ்க்கை வரலாற்றை 'நெஞ்சுக்கு நீதி' என்னும் தலைப்பில் ஆறு பாகங்களாக எழுதி வெளியிட்டுள்ளார். புனைவுகளில் மட்டும் அல்லாது தம் தமிழார்வம் காரணமாகப் பழந்தமிழ் இலக்கியங்களுக்கும் அவர் உரை எழுதியுள்ளார். அவற்றுள் சங்கத்தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

10th_Tamil_Unit 6_ Folder.indd 130 02/03/2024 12:16:46

இலக்கண நூலுக்கு இலக்கியச் சுவை தோன்றுமாறு அமைந்த புதுமை நூலே கலைஞரின் 'தொல்காப்பியப் பூங்கா'. பெயருக்குப் பொருத்தமாக, 142 தொல்காப்பிய நூற்பாக்களை மட்டும் எடுத்துக்கொண்டு, 100 தலைப்புகளில் 100 மலர்களாக உரையினை எழுதியுள்ளார். கலைஞருக்கே உரித்தான இனிய எளியநடையும் படிப்பவர்க்குக் கற்பனையாய்த் தோன்றும் காட்சியின்பமும் வெளிப்படுமாறு, பூங்காவிற்குள் நம்மைக் கையைப்பிடித்து அழைத்துச் செல்கிறார். மேலும், 150க்கும் மேற்பட்ட உவமைகளைக் கலைஞர் தம் உரையில் கையாண்டுள்ளார். அவற்றுள் ஒன்று...

"நெல்லுக்குள் இருந்து அரிசி தலைகாட்டுவதுபோல, வெள்ளை விழிகள் இமைகளின் இடுக்குகளில் ஒளிகாட்டிய வண்ணமிருந்தன."

அது மட்டும் அல்லாமல் "வல்லினம், மெல்லினம், இடையினம் ஒன்றுபட்டுத் தமிழ் என்றே தகத்தகாய ஒளிபரப்பிடும்போது தமிழர்கள் பலகூறுகளாகப் பிளவுபட்டுப் பாழ்பட்டுக் கிடப்பது நியாயந்தானா?" என எழுத்துகளின் ஒற்றுமையைக் கூறவந்த இடத்தில், தமிழர்கள் தமக்குள் பிளவுபட்டு இருப்பதைக் கூறியவிதம் கலைஞரது செம்மை மனத்தைச் சிறப்புடன் காட்டும்.

கவிதைக் கலைஞர்

"கவியரங்குகளே தனக்கு இளைப்பாறும் இன்னிழல் சோலைகளாயின!" என்பார் கலைஞர். அறிஞர் கூடும் கவியரங்கத்தை, மக்கள் கூடும் கவியரங்கமாக்கியவர் அவர். பாமரரும் புரிந்துகொள்ளும் எளிமையும் இதயம் தொடும் இனிய சந்தமும் வாய்ந்தவை கலைஞரின் கவிதைகள். கலைஞர் இயற்றியுள்ள கவிதைகள், ஒன்பது தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 'புறநானூற்றுத்தாய்' என்னும் தலைப்பிலமைந்த வசன கவிதையும் புகழ்பெற்ற ஒன்று.

சிலப்பதிகாரத்தைப் பற்றிக் கலைஞர் எழுதிய பின்வரும் கவிதையைக் கண்ணால் காணும்போதே நெஞ்சில் சந்தம் எழும். சிறுசிறு சொற்களால் அமைந்த கவிப்பூ இது!



"இந்த
எட்டுச்சுவை
பிட்டுத்தமிழ்
கட்டித்தயிர்
வட்டில்நிறை
கொட்டித்தரப்
பட்டுக்கொடிக்
கொற்றக்குடை
முத்துச்சரச்
சோழனூர்வருவீரே!"

அறிஞர் அண்ணா மறைந்தபின், வானொலியில் கலைஞர் பாடிய இரங்கற்பா, படிப்போரின் உள்ளத்தை உருக்கும்.

... கண்மூடிக்கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்... இன்று
மண்மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை?
கொடுமைக்கு முடிவு கண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்;
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா
எழுந்து வா எம் அண்ணா!
வர மாட்டாய்; வர மாட்டாய்,
இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா
நீ இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா...
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா!

என முடியும் அந்த நீள்கவிதை!

மக்களை மகிழச்செய்யும் கற்பனை வளத்தோடு, அகராதியைப் புரட்டத் தேவையற்ற சொற்களைப் பெய்து எதுகை, மோனை என்னும் தொடைநயம் அமைத்து, ஒலிநயம் காட்டும் உணர்ச்சிகளைக் கவின் செறிந்த கவிதைகளாக வடித்தார் கலைஞர்.

கட்டுமான ஆர்வலர் கலைஞர்

ஐயன் திருவள்ளுவர்மீது அவருக்கிருந்த தீராத பற்றின் காரணமாக, தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் வள்ளுவர் கோட்டமும் தெற்கெல்லையான குமரியில் வள்ளுவர் சிலையும் அமைத்தார். வள்ளுவர் கோட்டத்தில் திருவாரூர்க் கோவில் தேரின்

10th_Tamil_Unit 6_ Folder.indd 131 02/03/2024 12:16:47

மாதிரியில் கட்டப்பட்டுள்ள சிற்பத்தேர் பலரையும் கவர்வதாகும். இத்தேரினுள் திருவள்ளுவரின் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதன் கருவறை வாயிலில் திராவிடக் கட்டடக்கலைப் பாணியில் தூண்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள அரங்கம், குறள் மணிமாடம் எனப் பெயரிடப்பட்டு, அதில் 1330 குறட்பாக்கள் செதுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நில்லாது, அழிந்துபோன பூம்புகாரை அதே பொலிவுடன் காண, கண்ணகி வாழ்ந்த ஊரில் உருவாக்கப்பட்டதே 'பூம்புகார்க் கலைக்கூடம்'. இங்கே சிலப்பதிகாரக் காட்சிகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. நூல்கள் வாசிப்பதில் தீராத ஆர்வம் கொண்ட அண்ணாவின் 102ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 2010ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாளில் அன்றைய முதல்வர் கலைஞரால் திறந்துவைக்கப்பட்டது அண்ணா நூற்றாண்டு நூலகம்.

சென்னை அறிஞர் அண்ணா நினைவிடம் முதல் கன்னியாகுமரி காமராஜர் நினைவு மண்டபம் ஈறாகக் கலைஞர் எழுப்பிய கட்டுமானங்களை ஒன்றன்பின் ஒன்றாகப் பரப்பிவைத்தால் தமிழ்நாட்டின் வரைபடம் முழுமையாகக் கிடைத்துவிடும் என்பர்.


செம்மொழிக் கலைஞர்

தமிழ்மொழிக்குக் கலைஞர் ஆற்றிய தொண்டு குறித்து ஒன்பதாம் வகுப்பிலேயே பயின்றுள்ளோம். அவ்வகையில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் தன் முத்திரை பதித்ததால் 'முத்தமிழ் அறிஞர்' என்று போற்றப்பட்டார். அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த காலத்தில் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கும் பல பணிகளை மேற்கொண்டார். குறிப்பாக, மனோன்மணீயம் சுந்தரனாரின் 'நீராருங் கடலுடுத்த' என்னும் பாடலை அரசு விழாக்கள் அனைத்திலும் தொடக்கப்பாடலாகப் பாடுவதற்கு வழிவகுத்தார். அத்துடன், கல்வித்துறையைப் பள்ளிக்கல்வி, உயர்கல்வி என இரண்டாகப் பிரித்ததோடு தமிழ் வளர்ச்சித்துறை எனப் புதிதாக ஒரு துறையை உருவாக்கி அதற்குத் தமிழறிஞர் ஒருவரையே அமைச்சராக்கி அழகு பார்த்தார்.

2010ஆம் ஆண்டு கோவையில், தமிழ்நாடு அரசின் சார்பில் கலைஞர், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்தியபோது தமிழின் பெருமிதங்களை விளக்கிச் 'செம்மொழியான தமிழ்மொழியாம்' எனத் தொடங்கும் பாடலையும் இயற்றினார். இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துப் பல்வேறு இசை வடிவங்களை ஒன்றிணைத்த இப்பாடலில், மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த இசைக்கலைஞர்கள் பங்கேற்றனர். இம்மாநாட்டின் இலச்சினையில் இருந்ததுபோலவே குமரியில் நிறுவப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையின்கீழ், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் தமிழரின் முதன்மை விழுமியத்தைப் பொறிக்கச் செய்தார்.

என்றுமுள தமிழில் இன்றுமுள கலைஞர்

தமிழின் பெருமிதங்களையும் விழுமியங்களையும் மீட்டெடுக்க எண்ணிய கலைஞர், அதற்கான பணிகளைத் தம் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தார். இலட்சக்கணக்கான பக்கங்கள் எழுதியதும் ஆயிரக்கணக்கான மேடைகளில் பேசியதும் அவர் அளவுக்குச் செயல்பட்டதுமான தலைவர்கள் மிகக்குறைவு. இவ்வாறு, 'உடல் மண்ணுக்கு; உயிர் தமிழுக்கு' என்னும் கூற்றுக்குச் சான்றாக வாழ்ந்த கலைஞர், 2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் நாள் தம் 94ஆம் வயதில் தமிழர் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும் காவியமானார்.





கற்பவை கற்றபின்...

1. பாடத்தில் இடம்பெற்றுள்ள கவிதைக்கலைஞர் தலைப்பிலான பகுதியை மேடையில் பேசுவதுபோல உரிய குரல் ஏற்றஇறக்கத்துடன் படித்துக்காட்டுக.
2. பன்முகக்கலைஞரின் கலைப்பண்புகளுள் உங்களுக்குப் பிடித்த கலைப்பண்பு குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

10th_Tamil_Unit 6_ Folder.indd 132 02/03/2024 12:16:47

கவிதைப் பேழை

கலை

சூ

பூத்தொடுத்தல்

–உமா மகேஸ்வரி



கலைகள் மனித வாழ்விற்கு அழகூட்டுபவை. அழகியல், மண்ணுயிர்கள் அனைத்தையும் தம் வாழ்வியல் சூழலுடன் பிணைத்துக் கொண்டுள்ளது. தத்தித் தாவும் குழந்தை முதல் தள்ளாடும் முதியவர் வரை யாவரும் அழகுணர்ச்சி மிக்கவர்களே! நாரெடுத்து நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வளைவிலும் அழகு சிரிப்பதை அடையாளம் காணுகிறார் கவிஞர் ஒருவர்.



இந்தப் பூவைத் தொடுப்பது எப்படி?

சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்.
இறுக்கி முடிச்சிட்டால்
காம்புகளின் கழுத்து முறியும்.
தளரப் பிணைத்தால்
மலர்கள் தரையில் நழுவும்.
வாசலில் மரணம் நிற்பதறிந்தும்
வருந்தாமல் சிரிக்கும்
இந்தப் பூவை
எப்படித் தொடுக்க நான்–
ஒருவேளை,
என் மனமே நூலாகும்
நுண்மையுற்றாலொழிய.



நூல் வெளி

கவிஞர் உமா மகேஸ்வரி மதுரை மாவட்டத்தில் பிறந்தவர். தற்போது தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் வாழ்ந்து வருகிறார். இவர், நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை உள்ளிட்ட கவிதைத் தொகுதிகளைப் படைத்துள்ளார்; கவிதை, சிறுகதை, புதினம் என்று பல தளங்களில் படைத்து வருகிறார்.



கற்பவை கற்றபின்...

ஒவ்வொரு நாளும் நீங்கள் பார்க்கும் காட்சிகளில்/எதிர்கொள்ளும் நிகழ்வுகளில் கண்டுணரும் அழகை மூன்று நிமிடங்கள் சொற்களில் விவரிக்க.

10th_Tamil_Unit 6_ Folder.indd 133 02/03/2024 12:16:47

கவிதைப் பேழை

கலை சூ

முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

–குமரகுருபரர்

நுழையும்முன்

சந்தத்துடன் உள்ள பாடலில் உயிர்ப்பு அதிகம் இருக்கும்; கேட்போருக்கு ஈர்ப்பும் இருக்கும். தொடக்கம் முதல் தமிழிலக்கியத்தில் சந்தத்தை ஊட்டிய, இசை நாட்டியப் பாடல்கள் மொழிக்குப் பெருமை சேர்த்தன. ஏற்றம் இறைத்தலுக்கு ஏற்ற சந்தத்தை கொண்டிருக்கிறது நாட்டுப்புறத்தமிழ்! குழந்தையின் தலை அசைத்தலுக்கும் சந்தம் அமைத்துத் தருகிறது பிள்ளைத்தமிழ்!



ஆடுக செங்கீரை!

*செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக ணாடுக செங்கீரை *

செங்கீரைப் பருவம், பா.எண்.8

சொல்லும் பொருளும்

பண்டி – வயிறு
அசும்பிய – ஒளிவீசுகிற
முச்சி – தலையுச்சிக் கொண்டை

பாடலின் பொருள்

திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடட்டும். இடையில் அரைஞாண் மணியோடு ஒளிவீசுகின்ற அரைவடங்கள் ஆடட்டும். பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடட்டும். பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பதிந்தாடட்டும். கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்தாடட்டும். உச்சிக் கொண்டையும் அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளிமிக்க முத்துகளோடு ஆடட்டும். தொன்மையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளிய முருகனே! செங்கீரை ஆடி அருள்க! இவற்றுடன் அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட, செங்கீரை ஆடுக.

இலக்கணக்குறிப்பு:

குண்டலமும் குழைகாதும் – எண்ணும்மை
ஆடுக – வியங்கோள் வினைமுற்று

பகுபத உறுப்பிலக்கணம்:

பதிந்து – பதி +த்(ந்) + த் + உ;
பதி – பகுதி
த் – சந்தி (ந்–ஆனது விகாரம்)
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

10th_Tamil_Unit 6_ Folder.indd 134 02/03/2024 12:16:48

செங்கீரைப் பருவம்

செங்கீரைச்செடி காற்றில் ஆடுவது போன்று குழந்தையின் தலை 5-6 ஆம் மாதங்களில் மென்மையாக அசையும். இப்பருவத்தைச் செங்கீரைப் பருவம் என்பர். இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி, ஒருகாலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்தும் முகமசைந்தும் ஆடும்.



அணிகலன்கள்

சிலம்பு, கிண்கிணி - காலில் அணிவது
அரைநாண் - இடையில் அணிவது
சுட்டி - நெற்றியில் அணிவது
குண்டலம், குழை - காதில் அணிவது
சூழி - தலையில் அணிவது

நூல் வெளி

குமரகுருபரர் இயற்றிய முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவத்தின் எட்டாம் பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது. 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத்தமிழ். இதில் இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர். பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்தியம்புவது பிள்ளைத்தமிழ். பத்துப் பருவங்கள் அமைத்து, பருவத்திற்குப் பத்துப்பாடல் என நூறு பாடல்களால் இது பாடப்பெறும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகையாகப் பாடப்பெறும்.

குமரகுருபரரின் காலம் 17ஆம் நூற்றாண்டு. இவர் தமிழ், வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர்; கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் – காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்) – சிற்றில், சிறுபறை, சிறுதேர்

பெண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்) – கழங்கு, அம்மானை, ஊசல்

கற்பவை கற்றபின்...

சந்தநயமிக்க குழந்தைப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து, வகுப்பறையில் பாடி மகிழ்க.

10th_Tamil_Unit 6_ Folder.indd 135 02/03/2024 12:16:48


கவிதைப் பேழை

கலை

சூ

கம்பராமாயணம்


– கம்பர்



உள்ளதை உணர்ந்தபடி கூறுவது கவிதை. கவிஞனின் உலகம் இட எல்லை அற்றது; கால எல்லை அற்றது; கவிஞனின் சிந்தைக்குள் உருவாகும் காட்சியைச் சொல்லைக்கொண்டு எழுப்புகிறான். அவன் கண்ட காட்சிகள் அதற்குத் துணைபுரிகின்றன; கேட்ட ஓசைகள் துணைபுரிகின்றன; விழுமியங்கள் துணைபுரிகின்றன; ஒப்புமைகள் துணைபுரிகின்றன; கலையின் உச்சம் பெறுவதுதான் அவன் எல்லையாகிறது; கம்பன் அப்படிப்பட்ட கவிஞன். அதனால்தான் 'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று பாரதி பெருமைப்படுகிறார்.

பாலகாண்டம் – ஆற்றுப்படலம்

(ஆறு இயற்கையின் தோற்றமாக இல்லாமல் ஓர் ஓவியமாக விரிகிறது. அதை உயிரெனக் காணும் அந்த அழகுணர்ச்சி கவிதையாகி ஓடி நெஞ்சில் நிறைகிறது.)



தா துகு சோலை தோறுஞ் சண்பகக் காடு தோறும்
போ தவிழ் பொய்கை தோ றும் புதுமணற் றடங்க டோறும்
மா தவி வேலிப் பூக வனம்தொ றும் வயல்க டோறும்
ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே. (31)

பாடலின் பொருள்

மகரந்தம் சிந்துகின்ற சோலைகள், மரம் செறிந்த செண்பகக் காடுகள், அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள், புதுமணல் தடாகங்கள், குருக்கத்தி, கொடி வேலியுடைய கமுகந்தோட்டங்கள், நெல்வயல்கள் இவை அனைத்திலும் பரவிப் பாய்கிறது சரயுஆறு. அது, ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் பல இடங்களில் பாய்கிறது.

பாலகாண்டம் – நாட்டுப்படலம்

(இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன்கவி காட்டுகிறது.)

**தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்*
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ. * (35)

கவிதை, கவிஞன்மூலம் தன்னையே வெளிப்படுத்திக் கொள்கிறது. அது எப்படி வருகின்றதோ அதை மாற்றினால் அழகு குன்றும். மீண்டும் மீண்டும் மறிதரும் சந்தம் உணர்வுகளை நம்முள் செலுத்துகிறது. உள்ளம் சூறையாடப்படுகிறது.

10th_Tamil_Unit 6_ Folder.indd 136 02/03/2024 12:16:49

பாடலின் பொருள்

குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆட, விரிதாமரை மலர்கள், ஏற்றிய விளக்குகள் போல் தோன்ற, சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழ, மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பதுபோல் காண, நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிய, மகர யாழின் தேனிசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதம் வீற்றிருக்கிறது.

பாலகாண்டம் – நாட்டுப்படலம்

(ஒன்றின் இருப்பால் இன்னொன்று அடையாளப்படுத்தப்படுகிறது என்ற மெய்யியலைக்கொண்டு, ஒரு நாட்டின் பெருமையைப் புலப்படுத்தும் கம்பனின் உத்தி போற்றத்தக்கது.)

வண்மை யில்லையோர் வறுமை யின்மையாற்
றிண்மை யில்லையோர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால். (84)

கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால், கொடைக்கு அங்கே இடமில்லை; நேருக்குநேர் போர் புரிபவர் இல்லாததால், உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை; பொய்மொழி இல்லாமையால், மெய்மை தனித்து விளங்கவில்லை; பல வகைக் கேள்விச் செல்வம் மிகுந்து விளங்குவதால் அங்கு அறியாமை சிறிதும் இல்லை.

அயோத்தியா காண்டம் – கங்கைப்படலம்

(இராமனுடைய மேனியை வருணிக்கும் கம்பன், மை, மரகதம் என்றெல்லாம் உவமை சொல்லி, நிறைவாகச் சொல்ல இயலவில்லை என்பதை 'ஐயோ' என்ற சொல்லில் வைப்பதன் வாயிலாக அதை இயன்றதாக்குகிறான்.)

*****வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்*
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
*ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான். ** (1926)

பாடலின் பொருள்

பகலவன் பட்டொளி இராமனின் நீலமேனி ஒளியில் பட்டு இல்லையெனும்படி மறைந்துவிட, இடையே இல்லையெனும்படியான நுண்ணிய இடையாள் சீதையொடும், இளையவன் இலக்குவனொடும் போனான். அவன் நிறம் மையோ? பச்சைநிற மரகதமோ? மறிக்கின்ற நீலக் கடலோ? கார்மேகமோ? ஐயோ! ஒப்பற்ற அழியாத அழகினை உடைய வடிவு கொண்டவன் இராமன்.

அயோத்தியா காண்டம்– கங்கை காண் படலம்

(கவிதைகள் மூலம் பெறும் இன்பங்கள் எத்தனையோ! அதில் ஒன்று சந்த இன்பம். பொருள் புரியாவிடினும் சந்த இன்பம் மகிழ்ச்சியூட்டுகிறது. 'ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா' என்று பாரதி சொல்வதை இதில் உணரமுடியும்.)

ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ. (2317)

10th_Tamil_Unit 6_ Folder.indd 137 02/03/2024 12:16:49

பாடலின் பொருள்

ஆழமும் பெரிய அலைகளையும் உடைய கங்கை ஆற்றை பரதன் முதலானோர் கடந்து செல்வார்களா? யானைகள் கொண்ட சேனையைக்கண்டு, புறமுதுகு காட்டி விலகிச் செல்கின்ற வில்வீரனோ நான்! தோழமை என்று இராமர் சொன்ன சொல், ஒப்பற்ற சொல் அல்லவா? தோழமையை எண்ணாமல் இவர்களைக் கடந்து போகவிட்டால் அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் என்னைப் பழி சொல்ல மாட்டார்களா?

யுத்த காண்டம் – கும்பகருணன் வதைப் படலம்

(உலக்கையால் மாறிமாறி இடிக்கும் ஒத்த ஓசையில் அமைந்த சந்தம், கும்பகருணனை எழுப்பும் காட்சியைக் கண்முன் நிறுத்துகிறது.)

உறங்கு கின்ற கும்ப கன்ன வுங்கண் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்று காணை ழுந்தி ராயெ ழுந்திராய்
கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே
உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய். (7316)

பாடலின் பொருள்

உறங்குகின்ற கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்குவதற்குத் தொடங்கிவிட்டது. அதனைக் காண்பதற்காக எழுந்திடுவாய்! எழுந்திடுவாய்! காற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் இனிப் படுத்து உறங்குவாயாக!

நூல் வெளி



கம்பர், இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி "இராமாவதாரம்" எனப் பெயரிட்டார். இது கம்பராமாயணம் என வழங்கப்பெறுகிறது. இது ஆறு காண்டங்களை உடையது. கம்பராமாயணப் பாடல்கள் சந்தநயம் மிக்கவை. அவற்றுள் அழகுணர்ச்சிமிக்க சில கவிதைகள் பாடப்பகுதியாக அமைந்துள்ளன.

"கல்வியில் பெரியவர் கம்பர்", "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" போன்ற முதுமொழிகளுக்கு உரியவர் கம்பர்; சோழ நாட்டுத் திருவழுந்தூரைச் சார்ந்தவர்; திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர்; "விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்" என்று புகழ்பெற்றவர்; சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், ஏரெழுபது, சிலையெழுபது முதலிய நூல்களை இயற்றியவர்.



கற்பவை கற்றபின்...

கம்பராமாயணக் கதைமாந்தர்களுள் எவரேனும் ஒருவர் குறித்து வகுப்பில் உரையாற்றுக.

10th_Tamil_Unit 6_ Folder.indd 138 02/03/2024 12:16:49


விரிவானம்

கலை

சூ

பாய்ச்சல்

– சா. கந்தசாமி



உண்மைக் கலைஞன் தன் கலையில் முழு ஈடுபாட்டைக் காட்டுவான். கலைநிகழ்வின் ஊடாக அவன் பெருமிதம், வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். தன்னொத்த கலைஞர்களிடமிருந்து வேறுபட்டுத் தனக்கெனத் தனித் தன்மைகளையும் காட்டுவான்; இவற்றின் மூலம் மற்றவரையும் ஈர்ப்பான். கலை ஈடுபாட்டில் அவனுக்கு வயதோ உடற்சோர்வோ பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. தன் கலையைப் பின்பற்ற, தகுந்த வாரிசு உருவாகிறபோது அவன் கொள்கிற மகிழ்ச்சி அளப்பரியது.

தெருமுனையில் ஏதோ சப்தம். ஆளோடித் தூணைப் பிடித்துச் சுற்றிக் கொண்டிருந்த அழகு, தலையை நீட்டிப் பார்த்தான். இவனையொத்த சிறுவர்கள் புழுதி பறக்க ஓடிக் கொண்டிருந்தார்கள். என்னவோ நடக்கிறது என்று நினைத்துச் சாலைக்கு வந்தான். தெருவின் முனையில் பெரிய கூட்டம். மேளம் கடகடவென்று இரைந்து கொண்டிருந்தது. ஊருக்கு இவன் புதிதாகையால் என்ன நடக்கிறது என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை.

நாதசுரமும் மேளமும் ஒன்றாக இழைந்து ஒலித்தன. இவன் குனிந்து பார்த்தான். இரண்டு கால்கள் மின்னல் வெட்டி மறைவது போலத் துள்ளிப் பாய்ந்து சென்றன. அந்தக் கால்கள் மனிதக் கால்களிலிருந்து மாறுபட்டு, பச்சையா நீலமா என்று தீர்மானிக்க முடியாத நிறத்திலிருப்பதை இவன் கண்டான்.

ஆள் உயரக் குரங்கு ஒன்று மரத்தின் மேலிருந்து கீழே இறங்குவது தெரிந்தது. தான் கண்டதை இவனால் நம்ப முடியவில்லை. கண்ணுக்குத் தெரிந்தது நிஜமா என்கிற தவிப்பு.

இப்போது தான் கண்டது குரங்கல்ல, இது—

அனுமார் நினைவு இவனுக்கு வந்தது. இது அனுமார்தான். மனத்தில் அனுமாரைக் காணும் ஆவல் பெருக முண்டியடித்துக் கொண்டு கூட்டத்திற்குள் நுழைந்தான்.

அனுமார் வலது காலையும் இடது காலையும் மாறி மாறித் தரையில் உதைத்து வேகமாகக் கைகளை வீசி நடக்க ஆரம்பித்தார்.

இவனும் கூட்டத்தோடு பின்னால் நடந்தான்.

கொஞ்சதூரம் சென்றதும் அனுமார் ஒரு கடையில் தொங்கிய வாழைத்தாரிலிருந்து பழங்களைப் பறித்து எட்டியவர்களுக்கெல்லாம் கொடுத்தார். இவனுக்கும் அதிலொன்று கிடைத்தது. பழத்தைப் பையில் வைத்துக்கொள்வதா என்பதை இவனால் தீர்மானிக்க முடியவில்லை. யோசித்துக் கொண்டிருக்கையில் கூட்டம் வட்டமாக மாறியது. இவன் பின்னால் கொஞ்சம் நகர்ந்து மேளக்காரன் பக்கத்தில் நின்றான்.

சதங்கையும் மேளமும் நாதசுரமும் ஒன்றாக இழைந்தன. அனுமார் தாவிக் குதித்துக் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து சென்றார், நீண்ட வால் மேலே சுழன்று சரேலென்று தரையில் படர்ந்து புழுதியைக் கிளப்பியது.

சப்தத்தையும் ஆட்டத்தையும் தாங்கிக்கொண்டு இவனால் நிற்க

10th_Tamil_Unit 6_ Folder.indd 139 02/03/2024 12:16:49

இயலவில்லை. உடம்பே தன் வசமிழந்து போவது போலிருந்தது. கைகளை மார்போடு இறுக அணைத்துக்கொண்டான். தானே அனுமாராக மாறுவது போல இவனுக்குத் தோன்றியது. கால்களைத் தரையில் அழுத்தி ஊன்றி அனுமாரைப் பார்த்தான்.

அனுமார் 'கீச் கீச்' என்று கத்திக் கொண்டே பந்தல் காலைப் பற்றி மேலே சென்றார். அனுமார் சப்தம் ஏதுமில்லாமல் மரத்தின் மேலே ஏறிப் பந்தலில் மறைந்தார். சிறிது நேரம் அனுமார் தென்படவில்லை.

திடீரென்று மேளமும் நாதசுரமும் துரித கதியில் ஒலிக்கத் தொடங்கின. எதற்கென்று தெரியாமல் கூட்டம் திகைத்துப் பந்தலை நோக்குகையில் பெருங்குரல் எழுப்பியபடி அனுமார் பந்தல் கால் வழியாகக் கீழே குதித்தார். அனுமார் வாலில் பெரிய தீப்பந்தம். ஜ்வாலை புகைவிட்டுக் கொண்டு எரிந்தது. கூட்டம் தானாகவே பின்னால் நகர்ந்தது.

அனுமார் கால்களைத் தரையில் பதித்து உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கினார். தீயின் ஜ்வாலை மடிந்து அலை பாய்ந்தது. கைகளைத் தரையில் ஊன்றி அனுமார் கரணமடித்தார். சுருண்ட வால் இவன் பக்கமாக வந்து விழுந்தது. கூட்டம் அச்சத்தோடு கத்தியபடி அலைக்கழிந்தது. அனுமார் பெரிதாகச் சிரித்துக்கொண்டு நின்றார். அனுமார் நின்றதும் கூட்டம் கொஞ்சம் அமைதியுற்றது; முன்நோக்கி நகர்ந்து வந்தது. அனுமார் நேசப்பான்மையோடு சிரித்து வாலை மேலே தூக்கிச் சுற்றினார். தீ வட்டமாகச் சுழன்றது. வேகம் கூடக்கூட, கூட்டம் இன்னும் முன்னால் நகரந்து வந்தது. இவன் நெருங்கி அனுமார் பக்கம் சென்றான்.

தீயின் ஜ்வாலை மெல்ல மெல்லத் தணிந்தது. கீழே புரண்ட வாலை இவனை ஒத்த இரண்டு பேர் தூக்கி வந்தார்கள்.

அழகு அவர்கள் அருகில் சென்றான். வெகு நேரமாக வால் சுமந்து வருவது ஒருவனுக்குக் கஷ்டமாக இருந்தது போலும். அருகில் அழகு சென்றதும் வாலைக் கொடுத்துவிட்டுக் கைகளை நன்றாக உதறியவாறு, 'ஒம் பேரு' என்றான்.

'அழகு'

'கூட வரேல்ல'

இவன் தலையசைத்தான்.

'செத்த வச்சுக்க; வந்துடறேன்'

இவன் கைகள் மொசு மொசுப்பான வாலைத் தடவிவிட்டன.

அனுமார் நடையில் வேகம் கூடிற்று. அவருக்கு இணையாக வாலைத் தூக்கிக் கொண்டு இவனால் நடக்க முடியவில்லை. அனுமார் கூடவே ஓடினான்.

வயிறு வலிக்க இனி ஓட முடியாது என்று இவன் நினைக்கையில் அனுமார் நின்றார். இவன் தோளிலிருந்து வாலை இறக்கிப் போட்டுவிட்டு வெட்கத்தோடு கையை உதறிக் கொண்டான்.

கார் ஒன்று ஹாரன் அடித்துக்கொண்டு வந்தது. ஒருவன் கைகளை நீட்டிக் காரை வழி மறித்தான். அனுமார் எரிச்சலுற்றவர் போல வாலைச் சுருட்டி மேலே வீசி அவனைப் பின்னுக்கு இழுத்தார். கூடியிருந்தவர்களெல்லாம் விசில் அடித்துக் கை தட்டினார்கள். அழகு தரையிலிருந்து எம்பி எம்பிக் குதித்தான். அனுமார் செயல்களிலேயே அது ரொம்பவும் சுவாரசியமாகவும் களிப்பூட்டுவதாகவும் இவனுக்கு இருந்தது.

கார் வேகம் குறைய மெல்ல ஊர்ந்து முன்னே வந்தது. அனுமார் பின்னுக்கு நகர்ந்து சென்றார். காரிலிருந்தவன், பணத்தை எடுத்து அனுமார் பக்கமாக நீட்டினான். அனுமார் மேளக்காரனைப் பார்த்தார். அவன் அவசர அவசரமாக முன்னே வந்து பணத்தை வாங்கி மடியில் கட்டிக் கொண்டான். கார் செல்லக் கூட்டம் சிதற அனுமார் தெற்காக நடக்க ஆரம்பித்தார். இவன் ஓடிப்போய் வாலைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டான்.

ஆட்டமில்லாமல் அனுமார் நடக்கநடக்கத் தொடர்ந்து வந்த கூட்டமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. வாலைத்

10th_Tamil_Unit 6_ Folder.indd 140 02/03/2024 12:16:50

தோளுக்கு ஏற்றி அனுமாரையே பார்த்துக் கொண்டிருந்தான். இருந்தாற்போல இருந்து அனுமார் துள்ளிப் பாய்ந்தார். இவன் தோளிலிருந்து வால் நழுவித் தரையில் விழுந்தது. அதைப் பிடிக்க இவன் குனிந்தான்.

அனுமார் இன்னொரு பாய்ச்சல் பாய்ந்து வேகமாக ஆட ஆரம்பித்தார். வர வர ஆட்டம் துரிதகதிக்குச் சென்றது. பதுங்கியும் பாய்ந்தும் ஆடினார். ஆட ஆட, புழுதி புகை போல எழுந்தது. கழுத்துமணி அறுந்து கீழே விழுந்தது. ஒன்றையும் பொருட்படுத்தாமல் ஆட்டத்தில் தன்னை இழந்தவராக ஆடினார். மேளமும் நாதசுரமும் அவர் ஆட்டத்தோடு இணைந்து செல்லமுடியவில்லை. தடுமாறிவிட்டது. மேல் மூச்சு வாங்க அனுமார் ஆட்டத்தை நிறுத்தினார். மேளமும் நாதசுரமும் நின்றன.

அயர்ச்சியோடு மேளக்காரன் தோளிலிருந்து தவுலை இறக்கிக் கீழே வைத்தான். ஆட்டம் முடிந்தது. தீர்மானமாகியது போல எஞ்சி இருந்த கூட்டமும் அவசர அவசரமாகக் கலைய ஆரம்பித்தது.

அனுமார் வாயால் மூச்சு விட்டுக்கொண்டு ஆலமரத்தில் சாய்ந்துகொண்டார். மேளக்காரன் ஆட்டத்தில் சேர்ந்த பணத்தைக் கணக்குப் பார்த்துப்பிரித்தான். அனுமாரிடம் அவர் பங்கை நீட்டினான். அவர் ராமுவிடம் கொடுக்கும்படி சைகை காட்டினார். மேளக்காரன் ஒருமுறைக்கு இரண்டு முறையாக எண்ணி ராமுவிடம் பணத்தைக் கொடுத்தான்.

மரத்தில் சாய்ந்து நின்றிருந்த அனுமார் நடக்க ஆரம்பித்தார். ராமு புழுதியில் புரண்ட வாலை அவசரம் இல்லாமல் வந்து மெல்லத் தூக்கினான். சுமைதாங்கிக் கல் மீது உட்கார்ந்திருந்த அழகு, அனுமார் போவதைப் பார்த்து வேகமாகக் கீழே குதித்து வந்து வாலை எடுத்துத் தோளில் வைத்துக் கொண்டான்.

ஆற்றங்கரையையொட்டிச் சின்னக் கோயில்; என்ன கோயில் என்று இவனுக்குத் தெரியவில்லை. கோயில் தூணில் சாய்ந்துகொண்டு அனுமார் உட்கார்ந்தார். இவன் ராமுவோடு வாலைக்கீழேபோட்டுவிட்டு, கையை மாறி மாறி உதறிக்கொண்டான். அனுமார் கால்களை நீட்டி நன்றாகத் தூணில் சாய்ந்து பெரிதாகக் கொட்டாவி விட்டார்.

அனுமார் நிமிர்ந்து உட்கார்ந்து வாலைப் பிடுங்கிப்போட்டார். அப்புறம் வாய், இடுப்பு வேட்டி, மார்புக்கச்சை, ராமர் படம், கால் சதங்கை, கைச் சதங்கை – ஒவ்வொன்றையும் எரிச்சலோடு வீசியெறிவதுபோல இவனுக்குத் தோன்றியது.

அனுமாருக்கு என்ன ஆகிவிட்டது என்று தன்னையே கேட்டுக்கொண்டான். இருமல் வந்தது. விட்டு விட்டு இருமி இருமிக் காறி உமிழ்ந்தார். இவனுக்கு அழுகை வருவது போல இருந்தது. இவனைப் பார்த்தார். இவன் அனுமாரைப் பார்த்துச் சிரித்தான். கிட்ட வரச் சொல்லிச் சைகை காட்டினார். மெதுவாக அருகே சென்றான். கையைப் பற்றிக் கொண்டு, 'ஆட்டமெல்லாம் பாத்தியா?' என்றார்.

'பாத்தேங்க; ரொம்ப ஜோருங்க'

'வால்ல நெருப்பு வச்சுக்கிட்டப்ப ஊரே எரியப்போவுதுன்னு நெனச்சேன்'

அனுமார் கையைத் தரையில் அடித்துப் பெரிதாகச் சிரித்தார். சிரிப்பு இருமலாக மாறியது. இரும இருமக் கண்களில் நீர் முட்டியது.

'எனக்குக்கூட ஒங்கள மாதிரி ஆடணுமுன்னு ரொம்ப ஆசைங்க'

'உம், அப்படியா... எங்க, ஒரு சின்ன ஆட்டம் ஆடிக்காட்டு. ஒனக்கு வருமான்னு பாக்கறேன்'

எழுந்து தரையில் கிடந்த வாலை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு சதங்கையை எடுத்தான். அனுமார் எழுந்து நின்று பெரிதாக இவனுக்குப் பயம் உண்டாகும் வரையில் சிரித்தார். கையிலிருந்த சதங்கை கீழே நழுவ அச்சத்தோடு அனுமாரைப் பார்த்தான்.

அனுமார் தூணில் சாய்ந்து, 'பரவாயில்ல, கட்டிக்கிட்டே ஆடு' என்றார்.

காலில் சதங்கையைச் சுற்றிக்கொண்டு அனுமார் மூஞ்சியை எடுத்து மாட்டிக் கொண்டு—தான் கண்டதையெல்லாம்

10th_Tamil_Unit 6_ Folder.indd 141 02/03/2024 12:16:50

மறுபடியும் மனத்தில் இருத்தி ஆட்டத்தை ஆட ஆரம்பித்தான். முதலில் மரத்திலிருந்து கீழே குதிக்கும் ஆட்டத்தை ஆடினான். இவன் ஆட்டம் தாளகதிக்கு ரொம்பவும் இணங்கி வருவது அனுமாருக்கு மகிழ்ச்சியளித்தது. உம்—உம் என்று தலையசைத்தார். ஆனால் நேரம் ஆக ஆக அடி தப்பியது. தன் போக்கில் ஆடினான். அனுமார் முகத்தைச் சுளித்தார். இவன் ஆட்டம் பொறுக்க முடியாததாகப் பட்டது.

'இங்க பாரு'. அனுமார் தாவிக் குதித்து முன்னே வந்து மெல்ல அடிபோட்டு ஆடத் தொடங்கினார். லேசாக ஆரம்பமான ஆட்டம் சில நொடிகளிலேயே துரிதகதியில் இறங்கியது. இவன் கண்ணிமைக்காமல் ஆட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

துள்ளியும் பாய்ந்தும் பெருங்குரலில் ஊர் நடுங்கக் கூச்சலிட்டும் ஆடிய அனுமார் வெற்று வெளியில் ஒரு சின்னப் பையன் முன்னே ஆடுவதைத் திடீரென்று உணர்ந்து வெட்கமுற்றவர் போல ஆட்டத்தை நிறுத்திவிட்டு 'என்ன, பார்த்துக்கிட்டீயா?' என்று கேட்டார்.

பேச்சின் தொனி மாறியிருப்பதைக் கண்ட அழகு தலையசைத்தான்.

'எங்க, இப்ப ஆடு பாக்கலாம்'

அழகு ரொம்ப நிதானமாக ஆடினான்.

அனுமார் தன்னை மீறிய சந்தோஷத்தோடு 'பேஷ், பேஷ்—உடனே பிடுச்சுக்கிட்டீயே' என்றார்.

அவர் உற்சாகம் இவனைக் களிப்புற வைத்தது. துள்ளி முன்னே வந்தான்.

'வால்ல பந்தம் கட்டி ஆடுற ஆட்டம் ஆடு'

அழகு சாய வேட்டியை வாலின் நுனியில் சுற்றி நெருப்பு வைத்தான். சாய வேட்டி கருகி அணைந்தது. வாயால் ஊதி நெருப்பைக் கனிய வைத்துப் பெரிதாகக் கத்திக்கொண்டு அனுமாரை நோக்கிப் பாய்ந்தான்.

கண்களை மூடி வாயால் மூச்சுவிட்டுக்கொண்டிருந்த அனுமார் திடுக்கிட்டதுபோலக் கண் விழித்தார். அழகு கைகளை முன்னே நீட்டிச் சிரித்தான். இவன் சிரிப்பு அவருக்கு எரிச்சல் ஊட்டியது.

'உம். ஆடுலே'

மாறாத புன்னகையோடு துள்ளித் துள்ளி, கையும் காலும் குழைந்து நெளிய ஆடினான். அனுமார் அவனை உற்றுப் பார்த்தார். மனம்



10th_Tamil_Unit 6_ Folder.indd 142 02/03/2024 12:16:50

தன்னிலை இழந்தது. கையைத் தரையில் ஓங்கியடித்தார். அழகு முன்னே வந்து பாய்ந்து பின்னால் காற்றில் மிதப்பது போலச் சென்றான்.

அனுமாரால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்து அம்புபோல முன்னால் பாய்ந்தார். இவன் ஒரு கணம் நிதானித்து, விரிந்த அனுமார் கை இடுக்கில் புகுந்து வெளியே சென்றான். பாய்ந்த வேகத்தில் கீழே விழப்போன அனுமார் தரையில் கையூன்றிச் சமாளித்து நின்று வெறுமை நிறைந்த மனத்தோடு இவனைத் திரும்பிப் பார்த்தார்.

அழகு பற்களெல்லாம் வெளியே தெரியச் சப்தமாகச் சிரித்துக் கைகளை ஆட்டி எம்பி எம்பிக் காற்றில் மிதப்பது போல முன்னே வந்தான்.

அனுமார் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அருகில் வந்த அவன் தலையை ஒயிலாக ஒரு வெட்டு வெட்டிப் பின்னுக்குச் சென்றான்.

'என்னாடாலே, எனக்கா பாச்சக் காட்டுற'. அனுமார் கத்திக்கொண்டே அவனைப் பிடிக்கப் பாய்ந்தார். அவன் குனிந்து பிடியில் சிக்காமல் நழுவ—அனுமார் கால்கள் பின்னிக்கொள்ளத் தரையில் விழுந்தார்.

அழகு அனுமார் விழுந்ததைக் கவனிக்காமல், தன் ஆட்டத்தில் மூழ்கியவனாகக் களிப்பும் உற்சாகமும் பொங்க வேகமாக ஆடிக் கொண்டிருந்தான்.

நூல் வெளி



'தக்கையின் மீது நான்கு கண்கள்' என்ற சிறுகதை தொகுப்பில் பாய்ச்சல் என்னும் கதை இடம்பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் சா.கந்தசாமி. இவர் மயிலாடுதுறை நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவர் எழுதிய சாயாவனம் புதினத்தால் எழுத்துலகில் புகழ்பெற்றார். விசாரணைக் கமிஷன் என்னும் புதினத்திற்கு சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுள்ளார். சுடுமண் சிலைகள் என்ற குறும்படத்திற்கு அனைத்துலக விருதையும் பெற்றுள்ளார். நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் பதினொன்றுக்கும் மேற்பட்ட புதினங்களையும் எழுதியுள்ளார். தொலைந்து போனவர்கள், சூர்யவம்சம், சாந்தகுமாரி முதலியவை இவர் எழுதிய புதினங்களுள் சில.

முன்தோன்றிய மூத்தகுடி



"ஓங்கு இரும் பரப்பின்
வங்க ஈட்டத்து தொண்டியோர்"

சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, 107 –108

இராமநாதபுரம் மாவட்டத்தின் தொண்டி



கற்பவை கற்றபின்...

1. உங்கள் தெருக்களில் கண்டு மகிழ்ந்த பகல் வேடக் கலைஞர்களைப் போல வேடமிட்டு ஆடல் நிகழ்த்திக் காட்டுக.
2. மேடைக் கலைஞர்களும் பகல் வேடக் கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்து வகுப்பறையில் விவாதிக்க.

10th_Tamil_Unit 6_ Folder.indd 143 02/03/2024 12:16:51

கலை சூ

அகப்பொருள் இலக்கணம்

[தமிழாசிரியரை மாணவிகள் சந்திக்கின்றனர்]

மாணவிகள் : வணக்கம் அம்மா.

தமிழாசிரியர் : வணக்கம். என்னம்மா?

மாணவிகள் : முத்தமிழ் மன்றக் கட்டுரைப் போட்டிக்கு "அன்பின் ஐந்திணை" என்ற தலைப்பில் கட்டுரை அனுப்பச் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்த அடிப்படையான செய்திகளைச் சொல்லுங்கள். மேலும் அதுசார்ந்து நாங்கள் நூலகத்திற்குச் சென்று குறிப்புகளை எடுத்துக் கொள்கின்றோம்.

தமிழாசிரியர் : அப்படியா!

பொருள் என்பது ஒழுக்கமுறை. நம் தமிழர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்வியலை அகம், புறம் என வகுத்தார்கள். இதனைப் பொருள் இலக்கணம் விளக்குகிறது.

மாணவிகள் : மகிழ்ச்சியம்மா. அகப்பொருள் என்பது...

தமிழாசிரியர் : அன்புடைய தலைவன் தலைவி இடையிலான உறவுநிலைகளைக் கூறுவது அகத்திணை.

மாணவிகள்: அம்மா அகத்திணையில் வகைகள் உள்ளனவா?

தமிழாசிரியர் : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை ஆகிய ஏழும் அகத்திணைகள் ஆகும். இவற்றுள் முதல் ஐந்தும் அன்பின் ஐந்திணைகள்.

மாணவிகள்: சரிங்க அம்மா.

தமிழாசிரியர் : முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன ஐந்திணைகளுக்கு உரியன.

மாணவி 1: முதற்பொருள் என்பது எதைக் குறிக்கிறது அம்மா?

தமிழாசிரியர் : நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும்.

மாணவி 2: நிலம் என்பது வயல்தானே?

தமிழாசிரியர் : பொறு. பொறு.. நிலம் ஐந்து வகைப்படும்.

ஐவகை நிலங்கள்	
குறிஞ்சி	மலையும் மலைசார்ந்த இடமும்
முல்லை	காடும் காடு சார்ந்த இடமும்
மருதம்	வயலும் வயல் சார்ந்த இடமும்
நெய்தல்	கடலும் கடல்சார்ந்த இடமும்
பாலை	சுரமும் சுரம் சார்ந்த இடமும்.

மாணவி 1 : சரி அம்மா. பொழுது என்பது...?

தமிழாசிரியர் : பொழுது, பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும்..

மாணவி 2: பெரும்பொழுது, சிறுபொழுது பற்றிக் கூறுங்கள்.

தமிழாசிரியர் : ஓராண்டின் ஆறு கூறுகளைப் பெரும்பொழுது என்று நம் முன்னோர் பிரித்துள்ளனர்.

10th_Tamil_Unit 6_ Folder.indd 144 02/03/2024 12:16:51

பெரும்பொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்)

1. கார்காலம் – ஆவணி, புரட்டாசி
2. குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை
3. முன்பனிக் காலம் – மார்கழி, தை
4. பின்பனிக் காலம் – மாசி, பங்குனி
5. இளவேனிற் காலம் – சித்திரை, வைகாசி
6. முதுவேனிற் காலம் – ஆனி, ஆடி

மாணவி 1: சிறுபொழுதுகள் அம்மா..

தமிழாசிரியர் : ஒரு நாளின் ஆறு கூறுகளைச் சிறுபொழுது என்று பிரித்துள்ளனர்.

சிறுபொழுது (ஒரு நாளின் ஆறு கூறுகள்)

1. காலை – காலை 6 மணி முதல் 10 மணி வரை
2. நண்பகல் – காலை 10 மணி முதல் 2 மணி வரை
3. எற்பாடு – பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை
4. மாலை – மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை
5. யாமம் – இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை
6. வைகறை – இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை.

மாணவி 2 : எற்பாடு என்றால்...

தமிழாசிரியர் : 'எல்' என்றால் ஞாயிறு, 'பாடு' என்றால் மறையும் நேரம். எல்+பாடு = எற்பாடு.

மாணவி 1: ஐந்து நிலங்கள் இருக்கின்றன அனைத்துக்கும் பொழுது ஒன்றுபோல வருமா அம்மா?

தமிழாசிரியர் : நல்ல வினா...

ஒவ்வொரு நிலத்திற்கும், பெரும்பொழுதும் சிறுபொழுதும் ஒன்றுபோல வாரா.

மாணவி 2 : கருப்பொருள் என்றால் என்ன அம்மா?

திணையும் பொழுதும்

திணை	பெரும்பொழுது	சிறுபொழுது
குறிஞ்சி	குளிர்காலம், முன்பனிக்காலம்	யாமம்
முல்லை	கார்காலம்	மாலை
மருதம்	ஆறு பெரும்பொழுதுகள்	வைகறை
நெய்தல்	ஆறு பெரும்பொழுதுகள்	எற்பாடு
பாலை	இளவேனில், முதுவேனில், பின்பனி	நண்பகல்

தமிழாசிரியர் : ஒரு நிலத்தின் தெய்வம், மக்கள், தொழில், விலங்கு இவையெல்லாம் கருப்பொருள்கள். குறிஞ்சி நிலமிருக்கிறதல்லவா?

மாணவிகள் : ஆம் அம்மா!

தமிழாசிரியர் : குறிஞ்சி நிலத்திற்குத் தெய்வம் இருக்கும், மக்கள் இருப்பர், உணவு இருக்கும். இதே போல ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனியே தெய்வம் முதலாகத் தொழில் வரையில் தனித்தனியே இருக்கும். கவிதையில் உரிப்பொருளை இக்கருப்பொருள் பின்னணியில் அமைத்துப் பாடுவது நம் மரபு. ஒரு அட்டவணை தருகிறேன். நீங்கள் அதை வைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

மாணவிகள் : அகப்பொருள் பற்றிய அடிப்படைகளைத் தெரிந்துகொண்டோம். நன்றி அம்மா.

10th_Tamil_Unit 6_ Folder.indd 145 02/03/2024 12:16:51

கருப்பொருள்	குறிஞ்சி	முல்லை	மருதம்	நெய்தல்	பாலை
தெய்வம்	முருகன்	திருமால்	இந்திரன்	வருணன்	கொற்றவை
மக்கள்	வெற்பன், குறவர், குறத்தியர்	தோன்றல் ஆயர். ஆய்ச்சியர்	ஊரன், உழவர், உழத்தியர்	சேர்ப்பன், பரதன், பரத்தியர்	எயினர், எயிற்றியர்
உணவு	மலைநெல், தினை	வரகு, சாமை	செந்நெல், வெண்ணெல்	மீன், உப்புக்குப் பெற்ற பொருள்	சூறையாடலால் வரும் பொருள்
விலங்கு	புலி, கரடி, சிங்கம்	முயல், மான், புலி	எருமை, நீர்நாய்	முதலை, சுறா	வலியிழந்த யானை
பூ	குறிஞ்சி, காந்தள்	முல்லை, தோன்றி	செங்கழுநீர், தாமரை	தாழை, நெய்தல்	குரவம், பாதிரி
மரம்	அகில், வேங்கை	கொன்றை, காயா	காஞ்சி, மருதம்	புன்னை, ஞாழல்	இலுப்பை, பாலை
பறவை	கிளி, மயில்	காட்டுக்கோழி, மயில்	நாரை, நீர்க்கோழி, அன்னம்	கடற்காகம்	புறா, பருந்து
ஊர்	சிறுகுடி	பாடி, சேரி	பேரூர், மூதூர்	பட்டினம், பாக்கம்	குறும்பு
நீர்	அருவி நீர், சுனைநீர்	காட்டாறு	மனைக்கிணறு, பொய்கை	மணற்கிணறு, உவர்க்கழி	வற்றிய சுனை, கிணறு
பறை	தொண்டகம்	ஏறு கோட்பறை	மணமுழா, நெல்லரிகிணை	மீன் கோட்பறை	துடி
யாழ்	குறிஞ்சி யாழ்	முல்லை யாழ்	மருத யாழ்	விளரி யாழ்	பாலை யாழ்
பண்	குறிஞ்சிப்பண்	முல்லைப்பண்	மருதப்பண்	செவ்வழிப்பண்	பஞ்சுரப்பண்
தொழில்	தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல்	ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல்	நெல்லரிதல், களை பறித்தல்	மீன் பிடித்தல், உப்பு விளைத்தல்	வழிப்பறி, நிரை கவர்தல்



கற்பவை கற்றபின்...

பண்டைத் தமிழரின் திணைநிலை வாழ்க்கை முறையையும் இன்றைய தமிழரின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு ஒவ்வொருவர் கருத்தையும் பதிவு செய்து பொதுக் கருத்தை அறிக.

10th_Tamil_Unit 6_ Folder.indd 146 02/03/2024 12:16:52

திறன் அறிவோம்

பலவுள் தெரிக.

1. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .....

   அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

   இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

2. கூற்று 1 : போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.
   கூற்று 2 : அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.

   அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு

   இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி

3. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?

   அ) அள்ளி முகர்ந்தால். ஆ) தளரப் பிணைத்தால்.

   இ) இறுக்கி முடிச்சிட்டால். ஈ) காம்பு முறிந்தால்.

4. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டுவிழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது – இத்தொடருக்கான வினா எது?

   அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்?

   ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?

   இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா?

   ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?

5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

குறுவினா

1. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

2. "கலைஞர், பழமரக்கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர். படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" - பேராசிரியர் அன்பழகனார். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.

3. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'
   காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்'
   கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

4. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
   சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

5. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
   உழவர்கள் மலையில் உழுதனர்.
   முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

10th_Tamil_Unit 6_ Folder.indd 147 02/03/2024 12:16:52

சிறுவினா

1. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

2. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.

இறுக்கி முடிச்சிட்டால் காம்புகளின் கழுத்து முறியும். தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும். வாசலில் மரணம் நிற்பதறிந்தும் வருந்தாமல் சிரிக்கும் இந்தப் பூவை எப்படித் தொடுக்க நான் **நவீன கவிதை**	கையாலே பூவெடுத்தா – மாரிக்குக் காம்பழுகிப் போகுமின்னு விரலாலே பூவெடுத்தா – மாரிக்கு வெம்பி விடுமென்று சொல்லி தங்கத் துரட்டி கொண்டு – மாரிக்குத் தாங்கி மலரெடுத்தார் **நாட்டுப்புறப் பாடல்**

3. 'கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன.' – காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.

4. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.

நெடுவினா

1. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

2. போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

3. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி... தண்டலை மயில்கள் ஆட...

இவ்வுரையைத் தொடர்க!



மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

சிறு நண்டு மணல்மீது படமொன்று கீறும் சிலவேளை அதைவந்து அலை கொண்டு போகும் கறிசோறு பொதியோடு தருகின்ற போதும் கடல்மீது இவள் கொண்ட பயமொன்று காணும்.	வெறுவான வெளி மீது முகில் வந்து சூழும் வெறி கொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும் நெறிமாறு பட நூறு சுழிவந்து சூழும் நிலையான கரை நீரில் அலைபோய் உலைந்தாடும் – மகாகவி (இலங்கை)

10th_Tamil_Unit 6_ Folder.indd 148 02/03/2024 12:16:52

மொழிபெயர்க்க.

Kalaignar Karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover a wide range: poems, letters, screenplays, novels, biographies, historical novels, stage-plays, dialogues and movie songs. He has written Kuraloviam for Thirukural, Tholkaappiya Poonga, Poombukar, as well as many poems, essays and books. Apart from literature, Karunanidhi has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuraloviyam, in which Kalaignar wrote about Thirukkural, through the construction of Valluvar Kottam he gave an architectural presence to Thiruvalluvar, in Chennai. At Kanyakumari, Karunanidhi constructed a 133-foot-high statue of Thiruvalluvar in honour of the scholar.

தொடர்களை அறிவோம், தொடர்ந்து செய்வோம்

ஒரு தனிச்சொற்றொடரில் ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ இருந்து ஒரு பயனிலையைக் கொண்டு அமையும்.

எ.கா.

அ) மேரி பேருந்திற்காகக் காத்திருந்தார். ஆ) மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்.

தொடர்சொற்றொடர், ஒன்றுக்கும் மேற்பட்ட பயனிலைகளைக் கொண்டிருக்கும்.

எ.கா.

அ) இனியநிலா பேச்சுப்போட்டியில் பங்கேற்றார்; வெற்றி பெற்றார்; பரிசைத் தட்டிச் சென்றார்.

ஆ) அன்வர் அரங்கத்திற்கு வந்து, நாடகம் பார்த்து, மகிழ்ச்சி அடைந்தார்.

கலவைச் சொற்றொடரில் கருத்து முழுமை பெற்ற ஒரு முதன்மைத் தொடரும் கருத்து முழுமை பெறாத துணைத் தொடர்களும் கலந்து வரும்.

எ.கா.

அ) மழை கொட்டிக்கொண்டிருந்தாலும் பகலவன் பள்ளிக்கு நடந்துவந்தான்.

பகலவன் பள்ளிக்கு நடந்துவந்தான் – முதன்மைத் தொடர்

மழை கொட்டிக்கொண்டிருந்தாலும் – துணைத் தொடர்

தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.

எ.கா.

அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.

(தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)

அழைப்புமணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.

1. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கிவைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.

   (தொடர் சொற்றொடராக மாற்றுக.)

2. கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு வாழ்ந்தார். கலைஞர், எழுத்துவழியாகத் தமது எண்ணங்களைக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார்.

   (கலவைச் சொற்றொடராக மாற்றுக.)

3. முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி வாரஇதழாக்கி, நாளேடாக்கினார் கலைஞர்.

   (தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.)

10th_Tamil_Unit 6_ Folder.indd 149 02/03/2024 12:16:52

4. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. (தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.)

பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றி எழுதுக.

புதிர்

உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள ஒரு தராசை இரு முறைகள் மட்டுமே யூஸ் பண்ணி வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும்.

விடை

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை வையுங்கள். இரண்டு தட்டுகளும் ஈக்வலாக இருந்தால், கையில் மிச்சம் உள்ள பிஸ்கட்டே வெயிட் குறைவானது. பட், ஒரு பக்க தராசுத் தட்டு உயர்ந்தால் அதில் உள்ள மூன்று பிஸ்கட்களில் ஒன்று வெயிட் குறைவானது. அந்த மூன்று பிஸ்கட்டுகளை மட்டும் எடுத்துவைத்துக்கொள்ளுங்கள். இரண்டு தட்டுகளிலும் ஒரு ஒரு பிஸ்கட்டைப் போட்டு இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்! ஆல் தி பெஸ்ட்!

பிறமொழிச் சொல்	தமிழ்ச்சொல்	பிறமொழிச் சொல்	தமிழ்ச்சொல்
கோல்டு பிஸ்கட்	தங்கக் கட்டி		

பத்தியைப் படித்து வினாவிற்கு விடையளிக்க.



கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் கலைத்திறனோடு தந்து இன்றளவும் தொடர்வன நிகழ்த்துகலைகள். கிராமப்புற/சிற்றூர் மக்களின் கலை, அழகியல், பண்பாடு ஆகியவற்றின் எச்சங்களாக இருப்பவை இவை. வடிவங்களைக்கொண்டு நிகழ்த்துகலைகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

அ) கரகாட்டம், காவடியாட்டம் – தலையில் / தோளில் கருவியைச் சுமந்தபடி ஆடுபவை.

ஆ) மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், புலியாட்டம் – வேடம்கட்டி ஆடுபவை.

இ) ஒயிலாட்டம், தப்பாட்டம், தேவராட்டம், சேர்வையாட்டம் – குழுவாக ஆடுபவை.

ஈ) தெருக்கூத்து, தோற்பாவைக் கூத்து – கதையைத் தழுவி ஆடும் ஆட்டங்கள்.




தலையில் கரகம் என்னும் குடத்தை வைத்துக்கொண்டு ஆடும் கரகாட்டமும் தோளில் காவடியைச் சுமந்தவாறு ஒய்யாரமாக ஆடும் காவடியாட்டமும் மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைவடிவங்கள். மயில்வடிவக் கூட்டுக்குள் இருந்துகொண்டு, நையாண்டி மேளத்திற்கு ஏற்ப ஆடும் மயிலாட்டமும் குதிரைவடிவக் கூட்டுக்குள் இருந்து பாதத்துக்குக்கீழ் கட்டையைக் கட்டிக்கொண்டு 'டக்டக்' என்று ஆடும் குதிரையாட்டமும் புலி வேடமிட்டு ஆடும் புலியாட்டமும் காண்பதற்கு உற்சாகம் தரக்கூடிய நிகழ்த்துகலைகள். இசைக்கேற்ப துணியைவீசிக் குழுவாக ஆடும் ஒயிலாட்டம், தப்பு என்னும் தோற்கருவியின் தாளத்திற்கு ஆடும் தப்பாட்டம், தேவராட்டம், சேர்வையாட்டம் ஆகியவை கிராமியக்

10th_Tamil_Unit 6_ Folder.indd 150 02/03/2024 12:16:53



கலைஞர்களால் நிகழ்த்தப்படும் கலைவடிவங்கள். இவற்றுக்கெல்லாம் சிகரமாகத் திறந்தவெளிகளையும் தெருமுனைகளையும் மேடையாக்கி எளிய ஒப்பனைகளுடன் நிகழ்த்தப்படும் கலையாகத் தெருக்கூத்து விளங்குகிறது. கதையொன்றில் இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு ஆகியவை இணைந்தவடிவமே தெருக்கூத்து ஆகும். இதே கதை, பாடல், ஆடல்களுடன் தோலால் செய்த வெட்டு வரைபடங்களைத் திரைச்சீலையில் ஒளி ஊடுருவும்வகையில் பொருத்தி, அவற்றை நாடகம்போல நிகழ்த்துவது தோற்பாவைக் கூத்தாகும். குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை அனைவரையும் கவரும் கலையிது. ஊரக மக்களின் வாழ்வியலில் கலந்தவை நிகழ்த்துகலைகள். இவை உழைப்பாளிகளின் உணர்வு வெளிப்பாடு; வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடி; மக்களின் சமய வழிபாட்டிலும் வாழ்வியல் நிகழ்வுகளிலும் பிரிக்கமுடியாத பண்பாட்டுக்கூறு. இத்தகைய சிறப்புகளைக் கொண்டுள்ள நிகழ்த்துகலைகளை நாம் பாதுகாக்கவேண்டும்.



வினாக்கள்:

அ) நிகழ்த்துகலைகள் எத்தகைய சிறப்புகளைக் கொண்டவை?

ஆ) மரபார்ந்த கலைவடிவங்கள் யாவை?


இ) நிகழ்த்துகலைகளில் முத்தமிழும் உள்ளடங்கி உள்ளன- கருத்தை விளக்குக.

ஈ) பத்தியில் இருந்து இரண்டு வினாக்களை உருவாக்குக.

உ) நிகழ்த்துகலைகளைப் பாதுகாக்க நம்மால் செய்ய இயலும் எவையேனும் இரண்டு செயல்பாடுகளைக் குறிப்பிடுக.

YFLVK

யார் இவர்?



தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர். "நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர். இவர் தமிழ்நாட்டின் வழிவழி நாடகமுறையான கூத்துக்கலையின் ஒப்பனை முறை, கதை சொல்லும் முறைகளையும் எடுத்துக்கொண்டு புதுவிதமான நாடகங்களை உருவாக்கியவர். அதே வேளையில் நாடகத்தில் பயன்படுத்தும் நேரடி இசைமுறையை அறிமுகம்செய்து இசையிலும் மாற்றங்களை நிகழ்த்தியவர்.

இவரின் நாடகங்கள் பெரும்பாலும் சமூக அரசியல் மாற்றங்களைப் பேசின. இந்தியாவில் மட்டுமன்றி உலகின் பல்வேறு நகரங்களிலும் இவரது நாடகங்கள் நடத்தப்பட்டன. இந்திய அரசின் தாமரைத்திரு விருதையும் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் பெற்றார். இவர்தான் கூத்துப்பட்டறை ந. முத்துசாமி என்ற கலைஞாயிறு.

மனிதனுக்கும் மலருக்குமான மணம் வீசும் இந்த நயவுரையைத் தொடர்க.

வண்டுகளை ஈர்க்கும் வாசனையில்
பூக்களிடம் வசப்படுவது மனிதர்களே!
பூச்சியைக் கவரும் வண்ணங்களில்
பூக்களிடம் விழுவது மனிதர்களே!
……
……

10th_Tamil_Unit 6_ Folder.indd 151 02/03/2024 12:16:54

கட்டுரை எழுதுக.

உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத் திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

மொழியோடு விளையாடு

தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.

1. வானம் <u>கருக்கத்</u> தொடங்கியது. மழைவரும்போலிருக்கிறது.
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் .....
3. ..... மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் ..... புல்வெளிகளில் கதிரவனின் ..... வெயில் பரவிக் கிடக்கிறது.
5. வெயிலில் அலையாதே; உடல் .....

பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.


தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, பார்ப்பவர், விருது, தோற்பவர், கவிழும், விருந்து

1. விரட்டாதீர்கள் – பறவைக்கு மரம் வீடு
   வெட்டாதீர்கள் – மனிதருக்கு அவைதரும் ……
2. காலை ஒளியினில் மலரிதழ் ……;
   சோலைப் பூவினில் வண்டினம் ……
3. மலை முகட்டில் மேகம் …… – அதைப்
   பார்க்கும் மனங்கள் செல்லத் ……
4. வாழ்க்கையில் …… மீண்டும் வெல்வர் - இதைத்
   தத்துவமாய்ப் …… முயற்சி மேற்கொள்வர்.
5. கைதட்டலே கவிஞர்க்கு…… - அவையோரின்
   ஆர்வமே அவருக்கு ……

அகராதியில் காண்க.

தால், உழுவை, அகவுதல், ஏந்தெழில், அணிமை

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



10th_Tamil_Unit 6_ Folder.indd 152 02/03/2024 12:16:55

செயல் திட்டம்

கலைஞர் தம் வாழ்க்கை வரலாற்றை "நெஞ்சுக்கு நீதி" என்ற தலைப்பில் எழுதியுள்ளார். இதைப் போன்று தம் வாழ்க்கை வரலாற்றை நூலாக எழுதியுள்ள ஆளுமைகளின் பெயர்களையும் அந்நூல்களின் தலைப்புகளையும் படத்தொகுப்பாக்கி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

நிற்க அதற்குத் தக...

தமிழ், தமிழர், தமிழ்நாடு என்று வாழ்ந்து மறைந்தவர் கலைஞர். அவர் எழுதியது தமிழின் சுவையை; அவர் எண்ணியது தமிழரின் உயர்வை; அவர் உயர்த்தியது தமிழ்நாட்டின் கலைகளை! நீங்கள் படித்துமுடித்தப்பின் உங்கள் துறையின் அறிவைக்கொண்டு தமிழுக்குச் செய்யக்கூடிய தொண்டுகளை வரிசைப்படுத்துக.

1	என் துறையில் வல்லுநரானபின், அத்துறையினைப் பற்றிய நூல்களைத் தமிழாக்கம் செய்வேன்.
2	என் துறையில் இருக்கும் கலைச்சொற்களைத் தமிழில் மாற்றி மக்களின் பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவேன்.
3	
4	
5	

கலைச்சொல் அறிவோம்

Playwright	–	நாடக ஆசிரியர்	Screenplay	–	திரைக்கதை
Storyteller	–	கதை சொல்லி	Aesthetics	–	அழகியல், முருகியல்

அறிவை விரிவு செய்

தக்கையின் மீது நான்கு கண்கள் – சா. கந்தசாமி

திருக்குறள் - கலைஞர் உரை – கலைஞர் மு. கருணாநிதி

நாட்டார் கலைகள் – அ.கா. பெருமாள்





இணையத்தில் காண்க.

http://www.akaramuthala.in/uncategorized/அயல்-மோகத்தால்-அழிந்து-வ/

https://maduraivaasagan.wordpress.com/2011/09/08/நாட்டுப்புறக்கலைகள்-—-அக/

https://www.tamilvu.org/library/nationalized/pdf/29-a.srinivasan/kambanorusamudayaparivai.pdf
(கம்பனின் சமுதாயப் பார்வை)

10th_Tamil_Unit 6_ Folder.indd 153 02/03/2024 12:16:55

கலை

சூ



திருக்குறள்

TLHSJ

அமைச்சு (64)

1. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.

பொருள்: தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயலைச் செய்பவரே அமைச்சர் ஆவார்.

2. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

பொருள்: மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல் , நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவரே அமைச்சராவார்.

3. மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை.

பொருள்: இயற்கையான நுண்ணறிவும் நூலறிவும் உடைய அமைச்சர்களுக்கு முன், எந்த நுட்பமான சூழ்ச்சிகள் நிற்க முடியும்? (எந்த சூழ்ச்சியும் நிற்க இயலாது).

4. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல். *

பொருள்: ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருப்பினும், உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

பொருள்செயல் வகை (76)

5. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். *

பொருள்: ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வது செல்வம். அஃது அல்லாமல் உலகில் சிறந்த பொருள் வேறு இல்லை.

அணி: சொல் பின்வருநிலை அணி

6. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

பொருள்: முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்த்த பொருள் ஒருவருக்கு அறத்தையும் தரும்; இன்பத்தையும் தரும்.

7. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

பொருள்: மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாமல் ஈட்டும் பொருளை ஏற்றுக்கொள்ளாமல் நீக்கிவிடவேண்டும்.

10th_Tamil_Unit 6_ Folder.indd 154 02/03/2024 12:16:55

8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. *

பொருள்: தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது, மலைமேல் பாதுகாப்பாக நின்றுகொண்டு யானைப்போரைக் காண்பது போன்றது.

அணி: உவமை அணி

9. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்.

பொருள்: ஒருவர் பொருளை ஈட்ட வேண்டும்; அவருடைய பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் அதைவிட வேறு இல்லை.

கூடாநட்பு (83)

10. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

பொருள்: பகைவரின் தொழுது நிற்கும் கையின் உள்ளும், கொலைக்கருவி மறைந்து இருக்கும். அது போல் அவர்அழுத கண்ணீரின் உள்ளும் வஞ்சகம் மறைந்து இருக்கும் என்பதை உணர வேண்டும்.

பகை மாட்சி (87)

11. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு.

பொருள்: சுற்றத்தாரிடம் ஒருவர் அன்பு இல்லாமலும் பொருந்திய துணை இல்லாமலும், வலிமையில்லாமலும் இருந்தால் அவர் எப்படிப் பகைவரின் வலிமையை எதிர்கொள்வார்?

12. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு.

பொருள்: மனத்தில் துணிவு இல்லாதவராய், அறிய வேண்டியவற்றை அறியாதவராய், பொருந்தும் பண்பு இல்லாதவராய், பிறர்க்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்.

குடிசெயல் வகை (103)

13. ஆள்வினையும் ஆன்ற அறிவு மெனவிரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.

பொருள்: விடா முயற்சி, சிறந்த அறிவாற்றல் இவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குடி உயர்ந்து விளங்கும்.

14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. *

பொருள்: குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச்செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகக் கொண்டு போற்றுவர்.

10th_Tamil_Unit 6_ Folder.indd 155 02/03/2024 12:16:56

நல்குரவு (105)

15. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. *

பொருள்: ஒருவருக்கு வறுமையைப் போன்று துன்பம் தருவது எது என்றால் அது வறுமையே ஆகும்.

அணி: சொற்பொருள் பின்வருநிலை அணி

இரவு (106)

16. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்.

பொருள்: தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லாரைக் காணின் வறுமையின் கொடுமை முழுதும் கெடும்.

17. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து.

பொருள்: இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.

கயமை (108)

18. மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்.

பொருள்: கயவர் மக்களைப் போலவே இருப்பர்; கயவர்க்கும் மக்களுக்கும் உள்ள தோற்ற ஒப்புமையை வேறெதிலும் நாம் கண்டதில்லை.

19. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

பொருள்: தேவரும் கயவரும் ஒரு தன்மையர்; எவ்வாறு எனில் தேவர்களைப் போலக் கயவர்களும் தாம் விரும்புவனவற்றைச் செய்து ஒழுகுவர்.

அணி: வஞ்சப் புகழ்ச்சி அணி

20. சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

பொருள்: ஒருவர் தம் குறையைச் சொல்வதைக் கேட்டவுடனேயே உதவிசெய்வர் சான்றோர்; கரும்பைப் பிழிவது போல நெருக்கிப் பிழிந்தால்தான் பயன்படுவர் கயவர்.

அணி: உவமை அணி

10th_Tamil_Unit 6_ Folder.indd 156 02/03/2024 12:16:56



கற்பவை கற்றபின்...

1. புதுக்கவிதையையும் குறளையும் ஒப்பிட்டுப் பேசுக.

புதுக்கவிதை

தக்காளியையும் வெண்டைக்காயையும்
தள்ளுவண்டிக்காரர் தராசில் நிறுக்கையில்,
தள்ளி நிற்கும் பிள்ளை
அவசியமாகக் கேட்கும் ஆயிரம் ரூபாயை
எப்படிக் கொடுக்க என்றே அவர் மனம் யோசிக்கும்....
"அத்தனைக் காய்களையும் விற்றால்தான்
மீதி ஐந்நூறாவது மிஞ்சும்; என்ன செய்ய..."
காய்கறி வாங்கியவர்
கவனக் குறைவாகக் கொடுத்த
இரண்டாயிரம் ரூபாயைக்
கூப்பிட்டுத் தந்துவிட்டுப்
பிள்ளைக்கு உதவ யாரிடம் கேட்கலாம்
என்பதை அடுத்தபடி யோசிக்கும் அவர் மனம்!

குறள்

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

2. குறிப்புகள் உணர்த்தும் குறளின் கருத்துகள் குறித்துக் கலந்துரையாடுக.

அ) அவருக்கு அறிவும் அதிகம்; படிப்பும் அதிகம். யாராலும் அவருக்கெதிராகச் செயல்படமுடியாது.

ஆ) எச்சரிக்கையாக இரு. பழகுபவர்களில் யார் நல்லவர், யார் கெட்டவர் என்று கண்டுபிடிப்பது கடினம்.

இ) அவர் குடும்பம் முன்னேறியிருப்பதற்குக் காரணம் தொடர்ந்து முயல்வதும் தொழிலில் அவருக்கிருந்த அறிவும்.

ஈ) வாழ்க்கையில் நன்றாகப் பொருளீட்டு. அதுதான் உன்னைத் தாழ்வாக நினைத்தவர்களின் வாயை அடைக்கும்.

உ) அக்கம்பக்கத்தாரிடம் பழகாமல் ஒதுங்கியே இருந்தார்; துணைக்கும் யாரும் இல்லை. இப்போது உடம்பு சரியில்லாதபோது உதவ யாருமின்றித் திண்டாடுகிறார்.

குறுவினா

1. கரப்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக.
2. தஞ்சம் எளியர் பகைக்கு – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

10th_Tamil_Unit 6_ Folder.indd 157 02/03/2024 12:16:56

3. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

4. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.

பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்


சிறுவினா

1. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

2. பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?


இணையச் செயல்பாடுகள்


இனி எம்மொழியும் நம் மொழியே!




படிநிலைகள்

1. கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி, Google Play Store இல் செயலியைப் பதிவிறக்கி, நிறுவிக் கொள்க.
2. செயலியை நிறுவியதும் எந்த மொழியிலிருந்து எந்த மொழிக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்பதைத் தேர்வு செய்து கொள்க.
3. Write here your text என்பதில் தட்டச்சு செய்தோ, Mic மூலம் ஒலி வடிவில் பதிவு செய்தோ நாம் உள்ளீடு செய்ததன் மொழிபெயர்ப்பை அறிந்துகொள்ளலாம்.
4. Camera வைத் தேர்வு செய்து மொழிமாற்றம் செய்ய வேண்டிய பகுதியைப் புகைப்படம் எடுத்து, முழுமையாகவோ வேண்டிய சொற்களை மட்டுமோ மொழிமாற்றிக் கொள்ளலாம்.







செயல்பாட்டிற்கான உரலி
https://play.google.com/store/apps/details?id=com.google.android.apps.translate

கொடுக்கப்பட்டிருக்கும் படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

10th_Tamil_Unit 6_ Folder.indd 158 02/03/2024 12:16:58

இயல் ஏழு

நாகரிகம், நாடு, சமூகம்

விதை நெல்



மேற்கத்தியர் மேற்கொண்ட கடல்வழிக் குதிரை வணிகம், 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடைமருதூர்.

கற்றல் நோக்கங்கள்

- தன்வரலாறு என்னும் இலக்கிய வகைமையின் கருத்து வெளிப்பாட்டுத் தன்மையினைப் புரிந்து, அதுபோல எழுத முற்படுதல்.
- நாட்டின் பன்முக வளர்ச்சிக்கு வித்திட்ட பெண்களின் பங்களிப்பினைக் கலைநிகழ்ச்சி விவரிப்பாக வெளிப்படுத்தும் ஆற்றல் பெறுதல்.
- காப்பியம், மெய்க்கீர்த்தி ஆகிய இலக்கியங்களை அவற்றின் தனித்தன்மைகளுடன் படித்துச் சுவைத்தல்.
- பொருளிலக்கணத்தில் புறப்பொருள் பெறும் இடமறிந்து, அதனைச் செய்யுளில் கண்டறியும் திறன்பெறுதல்.


10th_Tamil_Unit 7.indd 159 2/23/2023 11:21:47 AM

நாடு

எ

சிற்றகல் ஒளி

– ம.பொ. சிவஞானம்



கதை கேட்கும் வழக்கம் சிறிய வயது முதல் அனைவருக்கும் இருக்கிறது. கேட்பது குறைந்துபோய்க் கதை படிப்பது அதன் அடுத்த படிநிலை. அதுவே ஒருவரைப் படிப்பாளியாகவும் படைப்பாளியாகவும் பக்குவப்படுத்துகிறது. அப்படியான ஒரு படைப்பாளி தன்னை முன்வைத்துத் தன் நாட்டின் வரலாற்றைக் கூறும்நிலை சிலருக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது. வரலாற்றின் போக்கினை மாற்றி வடிவமைத்தவர்களின் வாழ்க்கைக் கதையைத் தன் வரலாறாகப் படிப்பது, நம்மையும் அந்த வரலாற்றுப் பாத்திரமாக உணரவைக்கும்!



இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906ஆம் ஆண்டு, மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில்தான் காந்தியடிகள் சத்தியாக்கிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டைத் தனித்து நோக்கினாலும் வரலாற்றுச் சிறப்பிற்குரிய நிகழ்வுகள் பல அவ்வாண்டில் நடைபெற்றன. வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இத்தகைய சிறப்புள்ள ஆண்டில் ஜூன் 26ஆம் நாள், சென்னை ஆயிரம்விளக்கு வட்டம் சால்வன்குப்பம் என்னும் பகுதியில் நான் பிறந்தேன். நான் பிறந்த வட்டத்துக்கு ஆயிரம்விளக்கு எனப் பெயர் இருப்பினும் என்னைப் பெற்றெடுத்த குடும்பம் வறுமை என்னும் இருள் சூழ்ந்ததுதான். என் தந்தையார் பெயர் பொன்னுசாமி. அன்னையின் பெயர் சிவகாமி. பெற்றோர் எனக்கு இட்ட பெயர் ஞானப்பிரகாசம். ஆனால் சரபையர் என்ற முதியவர் ஒருவர் என்னுடைய பெயரை மாற்றி 'சிவஞானி' என்றே அழைத்தார். பின்னாளில் அவர் எனக்கிட்டு அழைத்த சிவஞானி என்னும் பெயரே சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைபெற்றது.

வறுமையால் இழந்த கல்வி

நான் பள்ளியில், மூன்றாம் வகுப்பில் நுழைந்த ஏழாம் நாளில், பகல் நேரத்தில் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுத் திரும்பவும் பள்ளிக்குப் போனேன். காலையிலேயே பாடப்புத்தகங்களோடு வராததற்காக ஆசிரியர் என்னைக் கண்டித்தார். பிற்பகலில் புத்தகங்களைக் கட்டாயம் கொண்டுவர வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார். கையில் புத்தகமின்றி இருந்த என்னைக் கண்ட ஆசிரியர் பள்ளியிலிருந்து விரட்டிவிட்டார். இது எனக்குப் பெருத்த அவமானமாக இருந்ததால் அழுதவண்ணம் வீட்டுக்கு வந்தேன்.

நான் அழுவதற்கான காரணத்தை அறிந்ததும், என் தந்தை என்னைக் கையோடு அழைத்துக்கொண்டு வகுப்பறைக்குள் நுழைந்தார். என்னை நல்ல வெயில் நேரத்தில் வீட்டிற்கு விரட்டியதற்காக, ஆசிரியரை என் தந்தையார் வாயார வைதார். அன்றோடு என் கல்வி முற்றுப் பெற்றது. மூன்றாம் வகுப்பிற்கு அந்த நாளில் தேவைப்பட்டவை ஆங்கிலம் – தமிழ் மொழிப் பாடப்புத்தகங்கள்தாம். இவற்றைக்கூட வாங்கிக்கொடுக்க என் குடும்பத்தின் வறுமை இடம் தரவில்லை.

10th_Tamil_Unit 7.indd 160 2/23/2023 11:21:49 AM

செவிச்செல்வம் பெற்றேன்

அன்னையார் இளமையிலே எனக்குப் பயிற்றுவித்த பாக்கள் எனது இலக்கியப் பயிற்சிக்கான பாலபாடங்களாக அமைந்தன. அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை ஆகிய அம்மானைப் பாடல்களைப் பாடுவார். அந்த நேரத்தில் என்னையும் சிறிது நேரம் அந்த நூல்களைப் படிக்க வைப்பார். அதனால், சந்த நயத்தோடும் எதுகை மோனையோடும் உள்ள அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடிப் பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்து வந்தேன். சித்தர் பாடல்களை நானாகவே விரும்பிப் படித்து மனனம் செய்வேன்.

சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாகவும் நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வேன். ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கு இரண்டு வழிகள் உள. ஒன்று கல்வி; மற்றொன்று கேள்வி. யான் முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலே மிகுந்த ஆர்வம் காட்டினேன். எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமையிலே திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே மிகுந்த பங்குண்டு.

புத்தகப்பித்தன்

எனக்கு உலகியல் அறிவு தோன்றிய நாள்தொட்டு இயன்றவரை தாய்மொழியிலேனும் நல்ல புலமை பெற்றிட வேண்டும் என்று விரும்பி, அதற்காக இடைவிடாது முயன்று வந்திருக்கிறேன். சுருங்கச்சொன்னால், என் அறியாமையுடன் கடும்போர் நடத்தியிருக்கிறேன்.

நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத குறையால் பழைய புத்தகங்கள் விற்கும் கடைகளுக்குச் சென்று, எனக்கு விருப்பமான புத்தகங்களை, மிக மிகக் குறைந்த விலைக்கு வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு, பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறேன். குறைந்த விலைக்கு நல்ல நூலொன்று கிடைத்துவிட்டால் பேரானந்தம் அடைவேன். என் வாழ்நாளில் நானாக முயன்று சேர்த்துவைத்துள்ள சொத்துகள் என்னிடமுள்ள பல்லாயிரக்கணக்கான நூல்களைத் தவிர வேறில்லை என்று உறுதியாகக் கூறுவேன்.

பேராயக் கட்சி (காங்கிரஸ் கட்சி)

1931இல் காந்தி – இர்வின் ஒப்பந்தக் காலத்திலே நாடு முழுவதிலுமிருந்த பேராயக் கட்சிக்காரர்கள் ஆக்கவழிப்பட்ட வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அந்நியத் துணிக்கடை மறியல், காந்தி – இர்வின் ஒப்பந்தப்படி அனுமதிக்கப்படவில்லை. ஆகவே தீண்டாமை விலக்கு, கதர் விற்பனை ஆகியவற்றிலே பேராயக் கட்சிக்காரர்களை ஈடுபடுத்தியது கட்சித்தலைமை. பேராயக் கட்சியால் நடத்தப்பட்ட ஊர்வலங்களிலும் கதர் விற்பனையிலும் தவறாமல் கலந்துகொள்வேன்.

ஆறுமாதக் கடுங்காவல்

30.09.1932இல் 'தமிழா! துள்ளி எழு' என்னும் தலைப்புடைய துண்டறிக்கை ஒன்றைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியதற்காக, நான் சிறையிலிடப்பட்டேன். பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். அவற்றை நானும் வேறு சில தோழர்களும் சேர்ந்து நூற்றுக்கணக்கான பிரதிகளைக் கையாலேயே எழுதினோம். எதிர்பார்த்தபடியே காவலர்கள் கைது செய்தனர். வழக்குத் தொடரப்பட்டு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையும் 300 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. கட்டத் தவறினால் மேலும் மூன்று மாதக் கடுங்காவல். நான் ஆறுமாதமும் கடுங்காவலை அனுபவித்தேன்.

சிறையில் வேளாவேளைக்கு எப்படியோ எனக்குச் சோறு கிடைத்து வந்தது. என்னளவில் தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கு வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டேன். 'சி' வகுப்புச் சோறுதான் என்றாலும், அடிக்கடி பட்டினியைச் சந்தித்தவனுக்கு அதுவே அமுதந்தானே! ஆனால், என் குடும்பத்தின் அவலநிலை நினைவுக்கு வந்தபோதெல்லாம் சிறையில் தரப்பட்ட உணவை மனநிறைவோடு உண்ண முடியாதவனானேன்.

1942 ஆகஸ்டு 8ஆம் நாள், இந்திய வரலாற்றில் பொன் எழுத்துகளால்

10th_Tamil_Unit 7.indd 161 2/23/2023 11:21:49 AM

பொறிக்கத்தக்க புனித நாளாகும். அன்றுதான் 'இந்தியாவை விட்டு வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானத்தைப் பம்பாயில் கூடிய அகில இந்திய பேராயக்கட்சி ஒரு மனதாக நிறைவேற்றியது. தேசம் முழுவதுமே அன்று புத்துயிர் பெற்றது. நாடெங்கும் தலைவர்கள் கைதான நிலையில் நானும் ஆகஸ்டு 13ஆம் நாள் வேலூர் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டேன். காமராசர், தீரர் சத்தியமூர்த்தி, பிரகாசம் உட்பட, தென்னகத்தின் முன்னணித் தலைவர்கள் பலரை அங்கு நான் கண்டேன். சில நாள்களுக்குப் பின் அங்கிருந்து அமராவதிச் சிறைக்கு மாற்றினர். சிறைச்சாலையில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் மேற்கூரை துத்தநாகத் தகடுகளால் வேயப்பட்டிருந்தது. கோடைக்காலத்தில் 120 பாகை அளவில் வெயில் காயக்கூடிய பகுதியில் மின்சார விசிறிகூட இல்லாமல் எங்களுடைய நிலை மிகவும் இரங்கத்தக்கதாக இருந்தது.

'தமிழகம்' பற்றிய கனவு

1947, ஆகஸ்டு பதினைந்தாம் நாளன்று சென்னை மாநகரில் விடுதலை விழாக் கொண்டாடி முடிந்ததும் மறுநாள் காலை நாங்கள் ஒரு குழுவாக வடக்கெல்லைக்குச் சென்றோம். இதுவே வடக்கெல்லை மீட்சிக்கான முதல் முயற்சியாக அமைந்தது. ஆசிரியர் மங்கலங்கிழார் என்ற சுமார் 55 வயதுடைய பெரியாரின் அழைப்பின் மீதே நாங்கள் வடக்கெல்லைக்குச் சென்றோம். அவர் சிறந்த தமிழறிஞர். இந்திய விடுதலைக்குப் பிறகு மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்தனர். அப்போது, ஆந்திரத் தலைவர்கள் சித்தூர் மாவட்டம் முழுவதையும் புதிதாக அமையவிருக்கும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க விரும்பினர். அச்சூழலில் வடக்கெல்லைத் தமிழ்மக்களை ஒருங்கிணைத்துத் தமிழுணர்வு கொள்ளச் செய்தவர் தமிழாசான் மங்கலங்கிழார். அவருடன் இணைந்து, தமிழரசுக் கழகம் சென்னையிலும் திருத்தணியிலும் தமிழர் மாநாடு நடத்தியது. சித்தூர், புத்தூர், திருத்தணி ஆகிய இடங்களிலும் வடக்கெல்லைப் போராட்டத்தைத் தொடங்கியது. போராட்டத்தில் ஈடுபட்ட நான், மங்கலங்கிழார், விநாயகம், ஈ.எஸ். தியாகராஜன், ரஷீத் என ஏராளமானோர் சிறைப்பட்டோம். போராட்டத்தில் ஈடுபட்டு இராஜமுந்திரி சிறையிலிருந்த திருவாலங்காடு கோவிந்தராசன், பழநி சிறையிலிருந்த மாணிக்கம் ஆகிய இருவரும் சிறையிலேயே உயிர் துறந்தனர்.

சர்தார் கே.எம். பணிக்கர் தலைமையில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட மொழிவாரி ஆணையம், சித்தூர் மாவட்டம் முழுவதையும் ஆந்திராவிற்குக் கொடுத்துவிட்டது. அதனை எங்களால் ஏற்க முடியவில்லை. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' என்று முழங்கினோம். மீண்டும் பெரும் போராட்டம் தொடங்கியது. அதன் விளைவாக படாஸ்கர் ஆணையம் அமைக்கப்பட்டு, திருத்தணிவரையுள்ள தமிழ்நிலங்கள் மீட்கப்பட்டன.

சென்னையை மீட்டோம்

ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர். அந்நாள் முதல்வர் இராஜாஜிக்கு நிலைமையின் தீவிரத்தை உணர்த்தியபோது, தலைநகர் காக்கத் தன் முதலமைச்சர் பதவியைத் துறக்கவும் அவர் முன்வந்தார். சென்னை மாகாணத்திலிருந்து பிரித்து ஆந்திரம் அமைவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையம், ஆந்திரத்தின் தலைநகராகச் சென்னை இருக்க வேண்டும் என்ற இடைக்கால ஏற்பாட்டினைப் பரிந்துரைத்திருப்பதாக அதிகாரப்பூர்வமற்ற கருத்துகள் நிலவின.

தெரிந்து தெளிவோம்

நான் சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டுசெல்ல விரும்பியதற்குக் காரணமுண்டு; திருக்குறளையோ, கம்பராமாயணத்தையோ விரும்பாதவனல்லன்; ஆயினும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில், தமிழினத்தை ஒன்றுபடுத்த எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பயன்படக்கூடிய ஓர் இலக்கியம் தமிழில் உண்டென்றால், அது சிலப்பதிகாரத்தைத் தவிர வேறில்லையென்று உறுதியாகக் கூறுவேன். இளங்கோ தந்த சிலம்பு, தமிழினத்தின் பொதுச்சொத்து. எனவேதான் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் சிலப்பதிகார மாநாடுகள் நடத்தினோம்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி

10th_Tamil_Unit 7.indd 162 2/23/2023 11:21:49 AM

இதையொட்டி, மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்றை அப்போதைய மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டி, சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து, "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று முழங்கினேன். தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டமை, நடுவணரசை அசைத்தது. கடைசியாக, 25.03.1953 அன்று நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு நடுவணரசின் சார்பில் அதிகாரப்பூர்வமான உறுதிமொழியொன்றை வெளியிட்டார். அதன்படி ஆந்திர அரசின் தலைநகரம் ஆந்திர நாட்டின் எல்லைக்குள்ளேயே அமையும் என்று உறுதியளிக்கப்பட்டது. சென்னை தமிழருக்கே என்பதும் உறுதியானது.

தெற்கெல்லைப் போராட்டம்

தாய்த்தமிழக மக்களில் பலர் தெற்கெல்லைக் கிளர்ச்சியோடு எனக்குள்ள தொடர்பை அறியமாட்டார்கள். நான் முதன்முதலில் ஈடுபட்டது தெற்கெல்லைக் கிளர்ச்சியில்தான். 1946 அக்டோபர் 25இல் நாகர்கோயில் நகரின் ஒரு பகுதியான வடிவீசுவரத்தில் வடிவை வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழாவில் பேசினேன். அதுதான் தெற்கெல்லைக் கிளர்ச்சி பற்றிய எனது முதல் பேச்சு. அந்நாளில் திருவிதாங்கூர் சமஸ்தானம் தனி அரசாக இருந்தது.

1953–54ஆம் ஆண்டுகளில் தெற்கெல்லைப் பகுதிகளைக் கேரள (திருவிதாங்கூர்) முடியாட்சியிலிருந்து மீட்கவும் போராடினோம். தமிழக வடக்கு – தெற்கு எல்லைக் கிளர்ச்சிகளைத் தமிழகம் தழுவிய அளவில் தொடங்கிவைத்தது தமிழரசுக் கழகம்தான் என்றாலும் அதனை நடத்துகின்ற பொறுப்பை எல்லைப்பகுதி மக்களிடமே விட்டுவைத்திருந்தேன். அவர்களுள் பி.எஸ். மணி, ம. சங்கரலிங்கம், நாஞ்சில் மணிவர்மன், பி.ஜே. பொன்னையா ஆகியோர் முதன்மையானவர்கள். தெற்கெல்லைக் கிளர்ச்சியில் திருவிதாங்கூர் ஆட்சி நடத்திய துப்பாக்கிச் சூடு காரணமாக உயிர்நீத்த தமிழரசுக் கழகத் தோழர்களான தேவசகாயம், செல்லையா ஆகிய இருவரையும் நாம் மறந்துவிடக் கூடாது. நதானியல், தாணுலிங்கம், காந்திராமன் போன்ற முதியவர்களும் என்பால் நம்பிக்கை வைத்திருந்தனர். இயற்கையாகவே போர்க்குணம்கொண்ட நேசமணி, தென் திருவிதாங்கூரில் மிகுந்த செல்வாக்குடையவர். அவருடைய வருகைக்குப் பிறகு போராட்டம் மேலும் வலுப்பெற்றது.

திருவிதாங்கூர் ஆட்சி அகன்று, கேரள மாநிலம் உருவானது. அப்போது தமிழர்கள் மிகுதியாக வாழக்கூடிய தேவிகுளம், பீர்மேடு, தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, நாகர்கோவில் ஆகிய பகுதிகள் தமிழகத்தோடு சேர வேண்டும் என்று தமிழரசுக் கழகம் போராட்டத்தைத் தொடங்கியது. ஆனால் மேற்சொன்ன பகுதிகளோடு தமிழகத்திலிருந்த கோவை மாவட்டத்தின் மேற்குப்பகுதி, நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர், உதகமண்டலம் ஆகியவற்றையும் பிரித்தெடுத்துக் கேரளத்துடன் இணைக்க வேண்டுமென்று கேரளத்தவர், பசல் அலி ஆணையத்திடம் விண்ணப்பித்தனர். பசல் அலி ஆணையம் நடுவண் அரசுக்குத் தந்த பரிந்துரை 1955 அக்டோபர் 10ஆம் நாள் வெளியானது. அந்தப் பரிந்துரையில், மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்து அமைக்கும் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டதோடு சென்னை மாநிலத்தில் உள்ள மலபார் மாவட்டத்தைக் கேரளத்தோடும் திருவிதாங்கூர் – கொச்சி இராஜ்யத்திலிருந்த கல்குளம், விளவங்கோடு, தோவாளை, அகத்தீசுவரம், செங்கோட்டை ஆகிய பகுதிகள் தமிழ்நாட்டோடும் இணைய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது. தேவிகுளம், பீர்மேடு நம் கைவிட்டுப் போயின.

புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கட

மார்ஷல் ஏ. நேசமணி

இளம்வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர்; வழக்கறிஞர். நாகர்கோவில் நகர்மன்றத் தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார். குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்; இதனால் மார்ஷல் நேசமணி என்று அழைக்கப்பட்டார். 1956 நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்து, தமிழகத்தின் தென் எல்லையாக மாறியது. இவருடைய நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு இவருக்கு நாகர்கோவிலில் சிலையோடு மணிமண்டபமும் அமைத்துள்ளது.

10th_Tamil_Unit 7.indd 163 2/23/2023 11:21:49 AM

மலையாகவும் தெற்கெல்லை குமரிமுனையாகவும் கூறப்படுவதனைப் படித்தபோது எனது நெஞ்சம் இறும்பூது எய்தியது. மலையும் கடலும் ஒரு நாட்டின் இயற்கை எல்லைகளாக அமைவதென்பது அந்த நாட்டின் தவப்பயனாகும். அந்தத் தெய்வீக எல்லைகளை ஓரளவேனும் தமிழகம் திரும்பப் பெற்றது என்பதே என் வாழ்நாள் மகிழ்ச்சியாகும்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே. . .

தமிழ்நாடு என்றால் வாய் மணக்கும்; காது இனிக்கும்; உள்ளம் துள்ளும்; 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே' என்கிறார் பாரதி. தமிழ்மொழி வழங்கும் நாடு, தமிழ்நாடு என்பது மரபு. தொல்காப்பியப் பாயிரம், 'தமிழ்கூறும் நல்லுலகம்' என்கிறதல்லவா? புறநானூறும், 'தண்தமிழ் வரைப்பு' என்கிறது. பரிபாடல், 'தண்தமிழ்வேலி தமிழ்நாடு' எனப் பகர்கிறது. சிலப்பதிகாரம், 'இமிழ் கடல்வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய' என்றுரைக்கிறது.

ஆனால், ஆங்கிலேயரின் ஆதிக்கக்காலத்தில் நம் மாநிலப் பகுதி, 'மதராஸ் ஸ்டேட்' ஆக்கப்பட்டது. விடுதலைக்குப் பின்னும் அதே பெயர் நீடித்தது. இதைத் தமிழர்கள் ஏற்கவில்லை; எதிர்த்தார்கள்; குரல் எழுப்பினார்கள்; திரு. சங்கரலிங்கனார் இன்னும் ஒருபடி மேலே சென்று உண்ணாநிலைப் போராட்டம் நடத்தி உயிர்துறந்தார்; தமிழ்நாடு என்ற வேலியைக் காக்க மடிந்த பயிரானார். இதற்கு விடிவு தந்தவர் பேரறிஞர் அண்ணா. 1967இல் அறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்ததும், மதராஸ் ஸ்டேட் என்ற பெயரைத் தமிழ்நாடு என்றாக்கினார். தமிழ்கூறும் நல்லுலகம், தமிழ்நாடு என இனிதே மலர்ந்தது.

"நும் நாடு யாது எனில் தமிழ்நாடு என்றல்" – இளம்பூரணர்.



எத்திசையும் புகழ் மணக்க.....

கடல்கடந்த தமிழ் வணிகம்

ஆஸ்டிரியா நாட்டுத் தலைநகரமான வியன்னாவில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் பேபிரஸ் தாளில் எழுதப்பட்ட அரிய கையெழுத்துச் சுவடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இச்சுவடி சேர நாட்டுத் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும் எகிப்து நாட்டின் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம். இது கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

நூல் வெளி



ம.பொ.சிவஞானத்தின் 'எனது போராட்டம்' என்னும் தன்வரலாற்று நூலில் இருந்து இக்கட்டுரை தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. சிலம்புச்செல்வர் என்று போற்றப்படும் ம.பொ.சிவஞானம் (1906 – 1995) விடுதலைப் போராட்ட வீரர்; 1952முதல் 1954வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் 1972முதல் 1978வரை சட்டமன்ற மேலவைத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்; தமிழரசுக் கழகத்தைத் தொடங்கியவர். 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் இவருடைய நூலுக்காக 1966ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றார். தமிழக அரசு திருத்தணியிலும் சென்னை தியாகராய நகரிலும் இவருக்குச் சிலை அமைத்துள்ளது.



கற்பவை கற்றபின்...

1. எவரேனும் ஓர் அறிஞர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் உங்களைக் கவர்ந்த ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.
2. நீங்கள் படித்துச் சுவைத்த வரலாற்றுக் கதைகள் பற்றி வகுப்பறையில் உரை நிகழ்த்துக.

10th_Tamil_Unit 7.indd 164 2/23/2023 11:21:49 AM

நாடு

எ

ஏர் புதிதா?

–கு.ப.ராஜகோபாலன்



சங்கத் தமிழரின் திணைவாழ்வு, வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது. உழுவோர் உலகத்தார்க்கு அச்சாணி எனப் போற்றப்பட்டனர். உழவே தலையான தொழில் என்றாயிற்று. உழவு, தொழிலாக இல்லாமல் பண்பாடாகவும் திகழ்ந்தது. இன்று உழுவோர் அச்சாணி என்ற கருத்தைப் புதுப்பிக்க வேண்டிய சூழல் எழுந்துள்ளது. உழவுண்டெனில் உயர்வுண்டு என்ற குரல் இன்றும் தொடர்கிறது. தமிழ் மரபின் 'பொன் ஏர் பூட்டுதல்' என்ற பண்பாட்டு நிகழ்வு பல்கிப் பெருக முன்னத்தி ஏராக நாம் முன்னிற்க வேண்டும்.

முதல்மழை விழுந்ததும்
மேல்மண் பதமாகிவிட்டது.
வெள்ளி முளைத்திடுது, விரைந்துபோ நண்பா!
காளைகளை ஓட்டிக் கடுகிச்செல், முன்பு!


பொன் ஏர் தொழுது, புலன் வழிபட்டு
மாட்டைப் பூட்டி
காட்டைக் கீறுவோம்.
ஏர் புதிதன்று, ஏறும் நுகத்தடி கண்டது,

காடு புதிதன்று, கரையும் பிடித்ததுதான்
கை புதிதா, கார் புதிதா? இல்லை.
நாள்தான் புதிது, நட்சத்திரம் புதிது!
ஊக்கம் புதிது, உரம் புதிது!

மாட்டைத் தூண்டி, கொழுவை அழுத்து
மண்புரளும், மழை பொழியும்,
நிலம் சிலிர்க்கும், பிறகு நாற்று நிமிரும்.
எல்லைத் தெய்வம் எல்லாம் காக்கும்;

கவலையில்லை!
கிழக்கு வெளுக்குது
பொழுதேறப் பொன்பரவும் ஏரடியில்
நல்லவேளையில் நாட்டுவோம் கொழுவை.

வேளாண்மை செழிக்கவும் மானுடம் தழைக்கவும் சித்திரைத் திங்களில் நடத்தப்படும் பொன்ஏர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம் ஆகும்.



நூல் வெளி



'ஏர் புதிதா?' எனும் கவிதை கு.ப.ரா. படைப்புகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

1902இல் கும்பகோணத்தில் பிறந்த கு.ப.ராஜகோபாலன் மிகச்சிறந்த சிறுகதை ஆசிரியர், கவிஞர், நாடக ஆசிரியர், மறுமலர்ச்சி எழுத்தாளர் எனப் பன்முகம் கொண்டவர். தமிழ்நாடு, பாரதமணி, பாரததேவி, கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவரின் மறைவுக்குப் பின்னர் இவரது படைப்புகள் நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.



கற்பவை கற்றபின்...


முதல் மழை விழுந்தது – தொடர்ந்து நிகழும் உழவுச் செயல்களை ஏர்புதிதா? கவிதை கொண்டு வரிசைப்படுத்திப் பேசுக.

10th_Tamil_Unit 7.indd 165 2/23/2023 11:21:50 AM

நாடு

எ

மெய்க்கீர்த்தி



அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பினார்கள்; அழியாத வகையில் அதனைக் கல்லில் செதுக்கினார்கள். சங்க இலக்கியமான பதிற்றுப்பத்துப் பாடல்களின் இறுதியிலுள்ள பதிகங்கள் இதற்கு முன்னோடி! பல்லவர் கல்வெட்டுகளிலும் பாண்டியர் செப்பேடுகளிலும் முளைவிட்ட இவ்வழக்கம், சோழர் காலத்தில் மெய்க்கீர்த்தி எனப் பெயர் பெற்றது; செப்பமான வடிவம் பெற்றது; கல்இலக்கியமாய் அமைந்தது.

இந்தி ரன்முதற் திசாபாலர் எண் மரும்ஒரு வடிவாகி
வந்தபடி யென நின்று மனுவாணை தனி நடாத்திய
படியானையே பிணிப்புண்பன
வடிமணிச்சிலம்பே யரற்றுவன
செல்லோடையே கலக்குண்பன
வருபுனலே சிறைப்படுவன
மாவே வடுப்படுவன
மாமலரே கடியவாயின
காவுகளே கொடியவாயின
கள்ளுண்பன வண்டுகளே
பொய்யுடையன வரைவேயே
போர்மலைவன எழுகழனியே
மையுடையன நெடுவரையே
மருளுடையன இளமான்களே
கயற்குலமே பிறழ்ந்தொழுகும்
கைத்தாயரே கடிந்தொறுப்பார்
இயற்புலவரே பொருள்வைப்பார்
இசைப் பாணரே கூடஞ்செய்வார்
என்று கூறி இவன்காக்கும் திருநாட்டி னியல்இதுவென
நின்றுகாவல் நெறிபூண்டு நெறியல்லது நினையாது
தந்தையில்லோர் தந்தையாகியுந் தாயரில்லோர் தாயராகியும்
மைந்தரில்லொரு மைந்தராகியும் மன்னுயிர்கட்குயிராகியும்
விழிபெற்ற பயனென்னவும் மெய்பெற்ற அருளென்னவும்
மொழிபெற்ற பொருளென்னவும் முகம்பெற்ற பனுவலென்னவும்
எத்துறைக்கும் இறைவனென்னவும் யாஞ்செய்....


இராசராசன் காலத் தமிழ் கல்வெட்டு, 11 ஆம் நூற்றாண்டு, பெரிய கோயில், தஞ்சாவூர்.

10th_Tamil_Unit 7.indd 166 2/23/2023 11:21:50 AM

பாடலின் பொருள்

இந்திரன் முதலாகத் திசைபாலகர் எட்டுப்பேரும் ஒருருவம் பெற்றதுபோல் ஆட்சி செலுத்தினான் சோழன். அவன் நாட்டில் யானைகள் மட்டுமே பிணிக்கப்படுவன (மக்கள் பிணிக்கப்படுவதில்லை). சிலம்புகள் மட்டுமே புலம்புகின்றன (மக்கள் புலம்புவதில்லை). ஓடைகள் மட்டுமே கலக்கமடைகின்றன (மக்கள் கலக்கமடைவதில்லை). புனல் மட்டுமே அடைக்கப்படுகின்றது (மக்கள் அடைக்கப்படுவதில்லை).

மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகின்றன (மக்கள் வடுப்படுவதில்லை). மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன (மக்கள் உரிமைகள் பறிக்கப்படுவதில்லை). காடுகள் மட்டுமே கொடியவனாய் – (கொடி உடையனவாக) உள்ளன (மக்கள் கொடியவராய் இல்லை). வண்டுகள் மட்டுமே கள் – (தேன்) உண்ணுகின்றன (மக்கள் கள் உண்பதில்லை). மலை மூங்கில் மட்டுமே உள்ளீடு இன்றி வெறுமையாய் இருக்கின்றது(மக்களிடையே வெறுமை இல்லை). வயலில் நெற்கதிர்கள் மட்டுமே போராக எழுகின்றன (வேறு போர் இல்லை).

நீண்ட மலைகளே இருள் சூழ்ந்தவையாயிருக்கின்றன (நாட்டில் வறுமை இருள் இல்லை). இளமான்களின் கண்களே மருள்கின்றன (மக்கள் கண்களில் மருட்சியில்லை). குளத்து மீன்களே பிறழ்ந்து செல்கின்றன (மக்கள் நிலை பிறழ்வதில்லை). செவிலித்தாயரே சினங் காட்டுவர் (வேறு யாரும் சினம் கொள்வதில்லை). புலவர் பாட்டில் மட்டுமே பொருள் (பொதிந்து) இருக்கின்றது (யாரும் பொருளை மறைப்பதில்லை). இசைப்பாணரே தெருவில் கூடி ஆடிப்பாடுவர் (தேவையற்று வேறு யாரும் அவ்வாறு செய்வதில்லை). இராசராசன் காக்கும் திரு நாட்டின் இயல்பு இது.

அவன் நெறியோடு நின்று காவல் காக்கின்றான். தந்தையில்லாதோருக்குத் தந்தையாய் இருக்கின்றான். தாயில்லாதோருக்குத் தாயாய் இருக்கின்றான். மகனில்லாதோருக்கு மகனாக இருக்கின்றான். உலகில் உயிர்களுக்கு எல்லாம் உயிராக இருக்கின்றான். விழிபெற்ற பயனாகவும் மெய் பெற்ற அருளாகவும் மொழி பெற்ற பொருளாகவும் புகழ் பெற்ற நூல் போலவும் அவன் திகழ்கிறான்; புகழ் அனைத்திற்கும் தலைவனாகி யாதும் புரிகின்றான்.

நூல் வெளி



கோப்பரகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி என்று பட்டங்கள் கொண்ட இரண்டாம் இராசராச சோழனது மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதி பாடமாக உள்ளது. இம்மெய்க்கீர்த்திப் பகுதியின் இலக்கிய நயம் நாட்டின் வளத்தையும் ஆட்சிச் சிறப்பையும் ஒருசேர உணர்த்துவதாக உள்ளது. இவருடைய மெய்க்கீர்த்திகள் இரண்டு. அதில் ஒன்று 91 அடிகளைக் கொண்டது. அதில் 16–33 வரையான அடிகள் பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளன. இப்பாடப் பகுதிக்கான மூலம் தமிழ் இணையக் கல்விக் கழகத்திலிருந்து பெறப்பட்டது.

முதலாம் இராசராசன் காலந்தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டுள்ளன. மெய்க்கீர்த்திகள் கல்வெட்டின் முதல்பகுதியில் மன்னரைப் பற்றிப் புகழ்ந்து இலக்கிய நயம்பட எழுதப்படும் வரிகள். இவை புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை.



கற்பவை கற்றபின்...

உங்கள் ஊரில் உள்ள பண்டைய வரலாற்றுச் சின்னங்களின் ஒளிப்படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பேடு ஒன்றை உருவாக்குக.

10th_Tamil_Unit 7.indd 167 2/23/2023 11:21:50 AM


கவிதைப் பேழை

நாடு

எ

சிலப்பதிகாரம்

–இளங்கோவடிகள்



இன்று 'எங்கும் வணிகம் எதிலும் வணிகம்'! பொருள்களை உற்பத்தி செய்வதைவிட சந்தைப்படுத்துவதில்தான் உலக நாடுகளும் தொழில் முனைவோரும் அதிக அக்கறை செலுத்துகிறார்கள். இன்று நேற்றல்ல; பண்டைக் காலந்தொட்டே வாணிகமும் தொழிலும் ஒழுங்கு முறையுடன் சிறந்திருந்ததை இலக்கியங்கள் காட்சிப்படுத்துகின்றன! அவற்றுள் ஒன்றே மருவூர்ப்பாக்கக் காட்சி!

மருவூர்ப் பாக்கம்

வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;

**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்*
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;

பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
*கூலம் குவித்த கூல வீதியும்; **

காழியர், கூவியர், கள்நொடை ஆட்டியர்,
மீன்விலைப் பரதவர், வெள்உப்புப் பகருநர்,
பாசவர், வாசவர், பல்நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்;


கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்
மரம்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்

கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டு ஆளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்

பழுதுஇல் செய்வினைப் பால்கெழு மாக்களும்;
குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்;

சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுஇன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்

இந்திரவிழா ஊரெடுத்த காதை (அடி 13–39)



10th_Tamil_Unit 7.indd 168 2/23/2023 11:21:54 AM

சொல்லும் பொருளும்

சுண்ணம் – நறுமணப்பொடி,
காருகர் – நெய்பவர் (சாலியர்),
தூசு – பட்டு, துகிர் – பவளம்,
வெறுக்கை – செல்வம், நொடை – விலை,
பாசவர் – வெற்றிலை விற்போர்,
ஓசுநர் – எண்ணெய் விற்போர்,
கண்ணுள் வினைஞர் – ஓவியர்,
மண்ணீட்டாளர் – சிற்பி, கிழி – துணி.

பாடலின் பொருள்

புகார் நகர மருவூர்ப்பாக்கத்தின் வணிக வீதிகளில் வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, குளிர்ந்த மணச்சாந்து, பூ, நறுமணப் புகைப்பொருள்கள், அகில் முதலான மணப்பொருள்கள் விற்பவர்கள் வீதிகளில் வணிகம் செய்து கொண்டிருக்கின்றனர்.

இங்குப் பட்டு, முடி, பருத்திநூல், இவற்றினைக் கொண்டு அழகாகப் பின்னிக் கட்டும் கைத்தொழில் வல்லுநரான நெசவாளர் வாழும் வீதிகள் உள்ளன. இங்குப் பட்டும் பவளமும், சந்தனமும் அகிலும், முத்தும் மணியும் பொன்னும் அளக்க முடியாத அளவிற்குக் குவிந்து கிடக்கும் வளம் நிறைந்த அகன்ற வணிக வீதிகளும் உள்ளன. மேலும் இவ்வீதிகளில் வேறு பலப்பல பண்டங்களின் விற்பனை நடைபெறுகின்றது. எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன.

மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில், பிட்டு வணிகம் செய்பவரும் அப்பம் சுடுபவரும் கள் விற்கும் வலைச்சியரும் மீன் விற்கும் பரதவரும் உள்ளனர். மேலும் வெண்மையான உப்பு விற்கும் உமணரும் வெற்றிலை விற்பவரும் ஏலம் முதலான ஐந்து நறுமணப் பொருள் விற்பவரும் பல வகையான இறைச்சிகள் விற்பவரும் எண்ணெய் வணிகரும் இங்கு வணிகம் செய்கின்றனர்.

இவற்றுடன் அத்தெருக்களில் பல்வகைப் பொருள்களை விற்கின்ற கடைகளும் உள்ளன. வெண்கலம், செம்புப் பாத்திரங்கள் செய்வோர், மரத்தச்சர், இரும்புக்கொல்லர், ஓவியர், மண் பொம்மைகள் செய்பவர், சிற்பிகள் ஆகியோர் உள்ளனர். பொற்கொல்லர், இரத்தின வேலை செய்பவர், தையற்காரர், தோல்பொருள் தைப்பவர், துணியாலும் கட்டைகளாலும் பொம்மைகள் செய்பவர் ஆகியோர் உள்ளனர்.

இவ்வாறாகப் பழுதின்றிக் கைத்தொழில் பல செய்யும் மக்கள் வாழும் பகுதிகள் இங்கு நிறைந்துள்ளன. குழலிலும் யாழிலும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளைக் (ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுரங்களை) குற்றமில்லாமல் இசைத்துச் சிறந்த திறமையைக் காட்டும் பெரும்பாணர்களின் இருப்பிடங்களும் உள்ளன.

இவர்களுடன் மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில் சிறுசிறு கைத்தொழில் செய்வோர், பிறருக்கு ஏவல் செய்வோர் வாழும் இடங்களும் உள்ளன. இவை அனைத்தும் குற்றமின்றிச் சிறப்புடன் அமைந்து விளங்கப் பரந்து கிடந்தன.

இலக்கணக் குறிப்பு

வண்ணமும் சுண்ணமும் – எண்ணும்மை
பயில்தொழில் – வினைத்தொகை

பகுபத உறுப்பிலக்கணம்

மயங்கிய – மயங்கு + இ(ன்) + ய் + அ
மயங்கு – பகுதி
இ(ன்) – இறந்தகால இடைநிலை; 'ன்' புணர்ந்து கெட்டது.
ய் – உடம்படுமெய்
அ – பெயரெச்ச விகுதி

ஐம்பெருங்காப்பிய முறைவைப்பு

"சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான் – நந்தா
வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
திளையாத குண்டலகே சிக்கும்"

–திருத்தணிகையுலா.

10th_Tamil_Unit 7.indd 169 2/23/2023 11:21:54 AM



தெரியுமா?

பெருங்குணத்துக் காதலாள் நடந்த பெருவழி

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கண்ணகியும் கோவலனும் திருவரங்கம் மற்றும் உறையூர் வழியாகக் கொடும்பாளூர் என்னும் இடத்தை அடைந்தனர். தென்னவன் சிறுமலையின் வலப்பக்கம் வழியாகச் சென்றால் மதுரையை அடையலாம்; இடப்பக்க வழியாகச் சென்றால் திருமால்குன்றம் (அழகர் மலை) வழியாக மதுரை செல்லலாம். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட வழியில், சோலைகள் மிகுந்த ஊர்களும் காடுகளும் உள்ளன. அவ்வழியாகச் சென்றால் மூன்று வழிகளும் சந்திக்கும் மதுரைப் பெருவழியை அடைந்து, மதுரை செல்லலாம். கோவலனையும் கண்ணகியையும் கவுந்தியடிகள் இடைப்பட்ட வழியிலேயே அழைத்துச் சென்றார்.

மதுரையில் கணவனை இழந்த கண்ணகி, மதுரையிலிருந்து வைகையின் தென்கரை வழியாக நெடுவேள் குன்றம்(சுருளி மலை) சென்று வேங்கைக் கானல் என்னுமிடத்தை அடைந்தாள்.

உரைப்பாட்டு மடை (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்)

உரைப்பாட்டு மடை என்பது சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை. இது உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு.

வாய்க்காலில் பாயும் நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது மடை. உரை என்பது பேசும் மொழியின் ஓட்டம். இதனைச் செய்யுளாகிய வயலில் பாய்ச்சுவது உரைப்பாட்டு மடை.

நூல் வெளி



சிலப்பதிகாரம், புகார்க்காண்டத்தின் இந்திரவிழா ஊரெடுத்த காதையிலிருந்து இப்பாடப்பகுதி எடுத்தாளப்பட்டுள்ளது.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இது முத்தமிழ்க்காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றும் சிறப்பிக்கப்படுகிறது; மூவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. இது புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது; கோவலன், கண்ணகி, மாதவி வாழ்க்கையைப் பாடுவது. மணிமேகலைக் காப்பியத்துடன் கதைத்தொடர்பு கொண்டிருப்பதால் இவையிரண்டும் இரட்டைக்காப்பியங்கள் எனவும்அழைக்கப்பெறுகின்றன.

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள், சேர மரபைச் சேர்ந்தவர். மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார் கோவலன் கண்ணகி கதையைக் கூறி, 'அடிகள் நீரே அருளுக' என்றதால் இளங்கோவடிகளும் 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச்செய்யுள்' என இக்காப்பியம் படைத்தார் என்பர்.




கற்பவை கற்றபின்...

1. *சிலப்பதிகாரக் கதைச் சுருக்கத்தை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.*
2. *சிலப்பதிகாரம் காட்டும் மருவூர்ப்பாக்கம் பற்றிய விவரிப்பை இன்றைய கடைத்தெருவுடன் ஒப்பிட்டு உரையாடுக.*

10th_Tamil_Unit 7.indd 170 2/23/2023 11:21:54 AM

நாடு எ

மங்கையராய்ப் பிறப்பதற்கே...



உலகம் பரந்து விரிந்த திடல்; அதில் ஆடுவாரும் உளர்; பாடுவாரும் உளர்: பிறதிறன் காட்டுவாரும் உளர்; இவர்களுள் வென்றாரே மிகுதி; இதனையே ஆளுமை என்கிறோம். அத்தகைய ஆளுமை மிக்க பெண்களுள் சிலர் இதோ...



பூம்பாறை, அரசு உயர்நிலைப்பள்ளி விழாக்கோலம் பூண்டிருந்தது. பெற்றோர் வருகையால் மாணவர்கள் மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர். சிறப்பு விருந்தினரான மாவட்ட ஆட்சியரின் உரைக்குப்பின், மாணவச் செல்வங்களின் கலை நிகழ்ச்சிகள் அரங்கேறிக் கொண்டிருந்தன. மாணவியர் பாட்டு, நடனம், நாடகம் எனக் கலைவிருந்து படைத்துப் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்திக் கொண்டிருந்தனர். இதன் தொடர்ச்சியாக மாறுவேட நிகழ்வு தொடங்கியது.

தொகுப்பாளர் – தமிழரின் பெருமையை உலக அரங்கான ஐ.நா. அவையில் பரப்பும் வகையில் அங்குத் தமிழ்நாட்டின் செவ்வியல் இசையைப் பாடியவர்; 'காற்றினிலே வரும் கீதமாய்' மக்கள் மனத்தில் நீங்கா இடம்பெற்றவர்; இசைப்பேரரசி என்று நேரு பெருமகனாரால் அழைக்கப்பட்ட எம்.எஸ். சுப்புலட்சுமியாகப் பேச வருகிறார் பத்தாம் வகுப்பு மாணவி முகில்நாச்சி.

10th_Tamil_Unit 7.indd 171 2/23/2023 11:21:56 AM

முகில்நாச்சி (எம்.எஸ்.சுப்புலட்சுமி) – நான் மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி. நான் இசைச் சூழலில் வளர்ந்தேன். வீணைக் கலைஞரான என் தாயே எனக்கு முதல் குரு. பத்து வயதில் இசைத்தட்டுக்காகப் பாடலைப் பாடிப் பதிவு செய்தேன். இசை மேதைகளின் வழிகாட்டுதல்களில் என்னை வளர்த்துக்கொண்டேன்.



ஐந்தாம் வகுப்பு வரைதான் கல்வி பயிலும் வாய்ப்புக் கிட்டியது. பதினேழு வயதில் சென்னை மியூசிக் அகாதெமியில் மேதைகள் பலர் முன்பு கச்சேரி செய்து பாராட்டைப் பெற்றேன். திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்பு என்னைத் தேடிவந்தது. எனக்கு மீரா திரைப்படம் மிகப்பெரிய வெற்றியைத் தந்தது. அது எனது கடைசித் திரைப்படமாகவும் அமைந்தது. இந்தியா முழுவதிலும் உள்ள பலரின் பாராட்டுகளையும் பெற்றேன். காற்றினிலே வரும் கீதம், பிருந்தாவனத்தில் கண்ணன் முதலிய பாடல்களுக்கு மிகப்பெரிய வரவேற்புக் கிடைத்தது. ஜவகர்லால் நேரு, சரோஜினி நாயுடு போன்ற பெரியோர் பாராட்டியதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

ஒருமுறை காந்தியடிகளைத் தில்லியில் சந்தித்தபோது 'இரகுபதி இராகவ இராஜாராம்' என்ற பாடலைப் பாடினேன். என்னைப் பாராட்டிய அண்ணல், மீரா எழுதிய பாடல் ஒன்றைக் குறிப்பிட்டுப் பாடச் சொன்னார். பின் சிறிது நாள்களில் முனைந்து அந்தப் பாடலைக் கற்றுப் பயிற்சி செய்தேன். சென்னை வானொலி, 1947இல் காந்தியடிகளின் பிறந்த நாளன்று அப்பாடலை ஒலிபரப்பியது. அப்பாடல் 'ஹரி தும் ஹரோ' என்னும் மீரா பஜன்.

1954இல் நான் தாமரையணி விருது பெற்றபோது, என்னைத் தொட்டுத் தடவிப் பாராட்டிய பார்வையிழந்த ஹெலன் கெல்லரை என்னால் மறக்கமுடியாது! 1963இல் இங்கிலாந்திலும் 1966இல் ஐ.நா. அவையிலும் பாடினேன்.

இதே ஆண்டில் என் குரலில் பதிவு செய்யப்பட்ட வெங்கடேச சுப்ரபாதம் திருப்பதியில் ஒலிக்கத்தொடங்கியது.

1974இல் நோபல் பரிசுக்கு இணையான மகசேசே விருது என் இசைக்குக் கிடைத்த மகுடம். இவ்விருது பெறும் முதல் இசைக் கலைஞராகவும் ஆனேன்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், மலையாளம், இந்தி, மராத்தி, குஜராத்தி ஆகிய இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும்கூடப் பாடியுள்ளேன். இந்தியா, மிக உயரிய விருதான 'இந்திய மாமணி' விருதளித்து என்னைச் சிறப்பித்தது.

என்னுடைய பல இசைக் கச்சேரிகள் ஏதாவது ஒரு அமைப்பின் நன்கொடைக்காக நடந்தவை என்பது எனக்குப் பெரும் மகிழ்வை அளிக்கிறது. ஒரு பெண் நினைத்தால், முயன்றால், முன்னேறலாம், வெல்லலாம். நீங்களும் முயலுங்கள்; முன்னேறுங்கள்; வெல்லுங்கள்.

தொகுப்பாளர் – தாழம்பூ குங்குமமிட்ட மலர்ச்சியான முகம், புன்னகை தவழ... நீலப் பட்டுப்புடவையின் ஒளியில்... வெள்ளிக்கம்பிகள் மின்னுவதுபோல் தலைமுடியில் இடையிடையே வெள்ளைமுடி... கையில் ஒலி வாங்கி... தம்புரா சுருதிகூட்ட ராகமாலிகாவில்,

குறையொன்று மில்லை மறைமூர்த்தி கண்ணா
குறையொன்று மில்லை கோவிந்தா...

என்று இசைத்துவந்து நம்முன் எம்.எஸ்.சுப்புலட்சுமியாகவே தோன்றிய மாணவிக்கு நன்றி.

நம் நிகழ்வில் அடுத்ததாக, பொதுவெளியில் ஆடுவது தண்டனைக்குரிய குற்றம் எனும் சட்டம் இயற்றப்பட்டிருந்த காலத்தில் நடன வாழ்வைத் தொடங்கியவர்; நாட்டியம் ஆடுவது கீழ்மையானது என்ற எண்ணம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பரவலாக இருந்து வந்த நிலையை மாற்றியவர்; இவர் இந்திய அரசின் தாமரைச் செவ்வணி விருது பெற்றவர்; அவர் யாரென்ற உங்கள் வினாவுக்கு விடையாக நம் பள்ளியின் பத்தாம் வகுப்பு மாணவி மோகனா, பாலசரசுவதியாக தோன்றுகிறார். (கரவொலி)

10th_Tamil_Unit 7.indd 172 2/23/2023 11:21:56 AM

மோகனா (பாலசரஸ்வதி) – வணக்கம்.



எனக்கு ஏழு வயதாக இருக்கும்போது காஞ்சிபுரத்தில் பரதநாட்டிய அரங்கேற்றத்திற்காக முதன்முதலில் மேடை ஏறினேன். பதினைந்து வயதில் சென்னையில் உள்ள சங்கீத சமாஜம் என்னும் அரங்கில் நடன நிகழ்ச்சி நடந்தது. எனது நடனத்தைப் பார்த்த பிறகே மரபுசார் நாட்டியத்தைப் பலரும் தீவிரமாக வரவேற்கத் தொடங்கினர்.

சென்னையில் என் நாட்டியக் கச்சேரியைப் பார்த்த பண்டிட் இரவிசங்கர் அவர்கள் மிகவும் பாராட்டினார். அவரது தம்பியின் மூலமாக வட இந்தியாவின் பல இடங்களில் நடனமாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கல்கத்தாவிலும் காசியில் நடந்த அனைத்திந்திய இசை மாநாட்டிலும் சென்னையில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் கண்காட்சியிலும் நம் நாட்டுப் பண்ணாகிய "ஜனகணமன" பாடலுக்கு மெய்ப்பாடுகளோடு ஆடினேன். நாட்டுப்பண்ணுக்கு நடனமாடியது அதுவே முதலும் இறுதியுமாகும்.

ஐரோப்பா, அமெரிக்கா முதலிய வெளிநாடுகளிலும் நடன நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளேன். டோக்கியோவில் உள்ள 'கிழக்கு மேற்குச் சந்திப்பு' நிகழ்வில் இந்தியாவின் சார்பாகக் கலந்துகொண்டு சிறப்பாக நடனம் ஆடினேன். இந்நிகழ்வு பரதநாட்டியத்திற்கு உலகளாவிய புகழைப் பெற்றுத் தந்தது. பரதநாட்டியக் கலையை முறையாக அணுகினால் ஆன்மிகப் பட்டறிவை நடனத்தால் வழங்க முடியும். இதை நானும் உணர்ந்து உலகிற்கும் உணர்த்தியுள்ளேன். நன்றி!

தொகுப்பாளர் – தமிழகத்தில் ஒரு காலத்தில் புறக்கணிக்கப்பட்ட கலைக்கு இந்திய அரங்கிலும் உலக அரங்கிலும் மதிப்பையும் ஏற்பையும் பெற்றுத் தந்தவர்; தமிழகத்தின் பெருமைக்குரிய கலைகளில் ஒன்றாகச் செவ்வியல் நடனம் திகழக் காரணமானவர்; அத்தகு பரதநாட்டியக் கலைஞர் பாலசரசுவதியாக வேடமிட்டு வந்த மாணவி மோகனாவிற்கு நன்றி!.

இனி, அடுத்தபடியாக ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து, பெண் என்ற வகையில் குடும்ப அமைப்பின் நெருக்கடிகளை எதிர்கொண்டு, தம்மை ஓர் இலக்கியவாதியாக அடையாளப்படுத்தியவர்; தமிழில் எழுதிய பெண்களில் முதன்முதலில் களத்திற்குச் சென்று மக்களிடம் செய்திகளைத் திரட்டிக் கதைகள் எழுதியவர்; புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், குறுநாவல், குழந்தை இலக்கியம், வரலாற்று நூல் என எழுத்துலகின் எல்லாத் தளங்களிலும் தடம் பதித்தவர்; வேருக்கு நீர் என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர்.

இத்தகைய பெருமைமிக்க எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனை நம் கண்களுக்குக் காட்சிப்படுத்த வருகிறார் ஒன்பதாம் வகுப்பு மாணவி வளர்மதி.

(கரவொலி)



வளர்மதி (ராஜம் கிருஷ்ணன்) – என் பள்ளிப் பருவத்தின் பசுமை மாறா நினைவுகள் நெஞ்சில் எழுகின்றன. வணக்கம்.

பெண்கள் என்றால் குடும்பக்கதை எழுதவேண்டும் என்ற படிமத்தை உடைத்துச் சமூகச் சிக்கல்களைக் கதைகளாக எழுதினேன். நான் கற்பனையாக எழுத விரும்பவில்லை. சமூகத்தில் இடர்ப்பட்ட மக்களைப் பற்றி எழுதும் முன்பு அந்த மக்கள் வாழும் பகுதிக்குள் சென்று களப்பணியாற்றிக் கதைகளாக உருவாக்கினேன்.

எப்போதும் ஓர் ஒலிப்பதிவுக் கருவியுடனேயே இருப்பேன். எனது கள ஆய்வுப் புதினங்கள் ஒவ்வொன்றும் மக்களைச் சேரவேண்டும் என்றே நினைப்பேன்.

நான் எழுதிய 'பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி' என்னும் பாரதியின் வரலாற்றுப் புதினம் அனைவராலும் பாராட்டப்பெற்ற ஒன்றாகும்.

தூத்துக்குடியில் பல மாதம் தங்கியிருந்து உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு

10th_Tamil_Unit 7.indd 173 2/23/2023 11:21:56 AM

வாழ்க்கையைக் "கரிப்பு மணிகள்" புதினமாக ஆக்கினேன். நீலகிரி, படுகர் இன மக்களின் வாழ்வியல் மாற்றங்களைக் குறித்து நான் பதிவு செய்ததே "குறிஞ்சித் தேன்" புதினம். கடலோர மீனவர் வாழ்வின் சிக்கல்களைப் பேசுவதே "அலைவாய்க் கரையில்" புதினம். அமைப்புசாரா வேளாண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவதைச் சுட்டிக்காட்டியவையே "சேற்றில் மனிதர்கள்", "வேருக்கு நீர்" ஆகிய புதினங்கள்.

உங்களைப் போன்ற குழந்தைகளைத் தீப்பெட்டித் தொழிலில் முடக்கி, தீக்குச்சிகளை அந்தப் பெட்டியில் அடைப்பதைப் போன்று, குழந்தைகளின் உடலையும் மனத்தையும் நொறுக்கும் அவல உலகைக் "கூட்டுக் குஞ்சுகள்" புதினமாக அளித்தேன்.

பெண்குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து எழுதியதே "மண்ணகத்துப் பூந்துளிகள்". இப்படிச் சமூக அவலங்களை உற்று நோக்கி எழுத்தின் வழியாகக் கட்டவிழ்த்து உலகிற்குக் காட்டியிருக்கிறேன். எழுத்துகளில் நேர்மையான சினம், அறச் சீற்றம் இருக்கவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

வாய்ப்புக்கு நன்றி!. வணக்கம்!.

தொகுப்பாளர் – கற்பனைக் கதைகளை எழுதுவதற்குப் பதிலாகக் களத்திற்குச் சென்று, உண்மையான நிகழ்வுகளை நூல்களாகத் தந்த ராஜம்கிருஷ்ணனைப் போன்று வேடமிட்டு வந்த மாணவி வளர்மதிக்கு நன்றியைக் கூறுகின்றோம்.

உள்ள வலுவுடன் இன்றுவரை களத்தில் நிற்கும் போராளி; மதுரையின் முதல் பட்டதாரிப்பெண்; இந்திய அரசின் தாமரைத்திரு விருது, சுவீடன் அரசின் வாழ்வுரிமை விருது, சுவிட்சர்லாந்து அரசின் காந்தி அமைதி விருது எனப் பல உயரிய விருதுகளைப் பெற்றுப் பெண்குலத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

அவர் யார்? என அறிய ஆவலோடு இருப்பீர்கள். அவர்தாம் கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன். இப்போது மாணவி அன்பரசி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதனாகப் பேச வருகிறார். (கரவொலி)

அன்பரசி (கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்) – வணக்கம்! நாட்டின் விடுதலைக்கு முன்பு கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் போராடிக் கற்றேன். கல்லூரிப்பருவத்தில் காந்தியச் சிந்தனையில் கவரப்பட்டேன். அவரது சர்வோதய இயக்கத்தில் களப்பணி ஆற்றினேன்.



ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கு பெற்றேன். நாட்டின் விடுதலைக்குப் பின் கணவருடன் இணைந்து "பூதான" இயக்கத்தில் பணிபுரிந்தேன்.

"உழுபவருக்கே நில உரிமை இயக்கம்" (LAND FOR THE TILLER'S FREEDOM – LAFTI) தொடங்கி வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறுபணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தேன்.

நான் சொல்ல விரும்புவது,

"உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள். உங்களால் எதையும் சாதிக்க இயலும்" என்பதுதான்.

தொகுப்பாளர் – காந்தியடிகளுடனும் வினோபாபாவேயுடனும் பணியாற்றி இன்னமும் நம் நாட்டுமக்களுக்காக உழைக்கும் கிருஷ்ணம்மாள் அம்மையாரைக் கண்முன்னே கொண்டுவந்த மாணவி அன்பரசிக்கு வாழ்த்துகள்.

இன்றைய மகளிர்நாள் விழா மிகச் சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. முத்தாய்ப்பாக இவ்விழாவை மேலும் மெருகேற்ற மண்ணின் மணம் கமழ வருகிறார்; பள்ளிப்பருவத்தில் பாடம் பயிலாவிட்டாலும் பட்டறிவால் இவர் கற்றுக்கொண்டவை ஆயிரமாயிரம். எழுதப் படிக்கத் தெரியாத இவரைப்பற்றி எழுதாத ஊடகங்களே இல்லை. முதுமைப் பருவத்தில் பயணித்தாலும் இவர் இன்னும் சின்னப்பிள்ளைதான்! ஆம்!

10th_Tamil_Unit 7.indd 174 2/23/2023 11:21:56 AM

சின்னப்பிள்ளை அம்மாவின் வேடம் ஏற்று வருபவர் நம் பள்ளியின் சின்னப்பிள்ளை ஒன்பதாம் வகுப்பு மாணவி மாதவி.

(கரவொலியுடன் மேடை ஏறுகிறார்.)

மாதவி (சின்னப்பிள்ளை) – இங்க கூடியிருக்கிற எல்லாருக்கும் வணக்கமுங்க. ரொம்ப நேரமா பார்த்துக்கிட்டு இருக்கிற எம்மனசுக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்குதுங்க. நான் பள்ளிக்கூடமெல்லாம் போனதில்லீங்க.



முதல்ல பெண்கள் எல்லாம் குழுவாச் சேர்ந்தோம். விவசாய நிலத்தக் குத்தகைக்கு எடுத்தோம். கூலி வேலைக்கு ஆளுகளைச் சேர்த்து, நடவு, களையெடுப்பு, அறுவடை போன்ற வேலைகளைச் செய்தோம். வர்ற கூலிய சரிசமமா பிரிச்சுக்கொடுத்தோம். இதுல வயசானவங்களையும் மாற்றுத் திறனாளிகளையும் சேர்த்து வேலை கொடுத்து அவங்க குடும்பத்துக்கும் உதவியா இருந்தோம். இதைப்பத்திக் கேள்விப்பட்ட மதுரை மாவட்ட ஆட்சியர் கண்மாய்ல மீன் பிடிக்கிற குத்தகைய எங்களுக்குக் கொடுத்தாரு. இரண்டாயிரத்து நாலாம் வருஷம் சுனாமி வந்து ஊரெல்லாம் பாதிப்பு அடஞ்சப்போ நாங்க குழுவா போயி மீட்புப் பணியெல்லாம் செஞ்சோம்.

காசு சேர்த்துக் குழு ஒண்ணு ஆரம்பிச்சு "களஞ்சியம்"னு பேர் வெச்சோம். பத்துப் பேரோட ஆரம்பிச்ச மகளிர் குழு இன்னக்கிப் பல மாநிலங்களுக்குப் போய் பல லட்சம் பேரோட வேலை செய்யுது. எத்தனையோ பேரோட குடும்பத்த இந்தக் குழுதான் தாங்கிக்கிட்டு இருக்கு. முப்பது ஆண்டுகளா முகம் சுளிக்காம வேலை செஞ்சிட்டு வர்றேன். வேற என்னத்த நான் சொல்ல? பொறப்புக்கு ஒரு பொருள் கிடைக்கிற மாதிரி வேலை செஞ்சாச்சு. நீங்க எல்லாம் நல்லாப் படிங்க. உங்க வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லது பண்ணுங்க!.

தொகுப்பாளர் – சின்னப்புள்ள அம்மா, உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்கலாமா? இந்தியாவின் முதன்மை அமைச்சரிடம் நீங்கள் விருது வாங்கியதைச் சொல்லவே இல்லையே!.

சின்னப்பிள்ளை – டெல்லியில விருது வாங்கும்போது, மதுரைச் சின்னப்பிள்ளைன்னு அவரு கூப்பிட்டவுடேன என் கண்ணுலேர்ந்து கண்ணீரே வந்துருச்சு. நாட்டுக்கே பெரிய தலைவர் அவரு, விருதைக் குடுத்துட்டுப் பொசுக்குனு எங்கால்ல விழுந்துட்டாரு. எனக்கு மேலுகாலெல்லாம் ஆடிப்போச்சு. நான் போயிட்டு வாரேன்! (கண்களைத் துடைத்துக் கொள்கிறார்)

தொகுப்பாளர் – நம் இந்திய நாட்டு நடுவண் முதன்மை அமைச்சராக இருந்த மாண்புமிகு. வாஜ்பாய் அவர்களின் கைகளால் பெண் ஆற்றல் விருது (ஸ்திரீ சக்தி புரஸ்கார்) பெற்றதோடு தமிழக அரசின் "ஔவை விருதையும்" தூர்தர்ஷனின் "பொதிகை விருதையும்" பெற்றுள்ளார். அண்மையில் "தாமரைத்திரு விருதையும்" பெற்றுத் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். இன்னும் மகளிரின் வாழ்வு மேம்படத் தொடர்ந்து பாடுபட்டு வருகின்ற சின்னப்பிள்ளை வேடமணிந்து வந்து தன் நடிப்பாற்றலை வெளிப்படுத்திய மாணவி மாதவிக்கு நன்றி!. சமுதாயத்திற்கு உழைத்த மகளிரைப்பற்றி மாறுவேடத்தில் அறிமுகப்படுத்திய நிகழ்வு இனிதே இத்துடன் நிறைவடைகின்றது.

கற்பவை கற்றபின்...

உங்கள் ஊரில் கடின உழைப்பாளர் – சிறப்புமிக்கவர் – போற்றத்தக்கவர் – என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்து வழங்குக.

குறிப்பு: பூ விற்பவர், சாலையோர உணவகம் நடத்துபவர்.....

10th_Tamil_Unit 7.indd 175 2/23/2023 11:21:57 AM

நாடு எ

புறப்பொருள் இலக்கணம்

(முதுகலைத் தமிழ் இலக்கியம் பயிலும் கிள்ளிவளவனும், பத்தாம் வகுப்பு மாணவன் சேரலாதனும் உரையாடுகின்றனர்).

கிள்ளிவளவன் : வா! சேரலாதா.. வா..

சேரலாதன் : வணக்கம் அண்ணா. எனக்கு நீங்கள் உதவ வேண்டும்.

கிள்ளிவளவன் : வணக்கம். நீ வந்தாய் என்றாலே தமிழ் இலக்கிய, இலக்கண உரையாடலுக்குத்தான் வருவாய். அப்புறம் என்ன உதவி என்கிறாய்!

சேரலாதன் : ஆமாம்மண்ணே! புறப்பொருள் பற்றிய செய்திகள் அறிய வந்தேன்.

கிள்ளிவளவன் : அகப்பொருள் பற்றி வேண்டாமா?

சேரலாதன் : வேண்டாம்மண்ணே! சென்ற திங்களில் தமிழாசிரியர் அகப்பொருள் பற்றி அருமையாகக் கூறினார்.

கிள்ளிவளவன்: அகப்பொருள் பற்றி நீ புரிந்து கொண்டதைக் கூறு.

சேரலாதன்: அகப்பொருள் அன்பின் ஐந்திணை பற்றியது அண்ணே.

கிள்ளிவளவன் : மகிழ்ச்சி. புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது புறத்திணை. புறத்திணைகள், வெட்சி முதலாகப் பன்னிரண்டு வகைப்படும்.

சேரலாதன் : வெட்சியென்றால் என்ன?

கிள்ளிவளவன் : மக்கள் சிறு குழுக்களாக வாழ்ந்த காலத்தில், ஆநிரைகளைச் (மாடுகளை) சொத்தாகக் கருதினர். ஒரு குழுவினரிடமிருந்து மற்றொரு குழுவினர் ஆநிரைகளைக் கவர்தல் வழக்கமாக இருந்தது. ஆநிரைகளைக் கவர்ந்துவர வெட்சிப் பூவினைச் சூடிக்கொண்டு செல்வர். எனவே, ஆநிரை கவர்தல் **வெட்சித் திணை** எனப்பட்டது.



அழகுச்செடியாக வீட்டுத் தோட்டங்களிலும் பூங்காக்களிலும் வளர்க்கப்படுகிற சிவந்த நிறமுடைய வெட்சிப்பூ, இட்லிப்பூ என்று அழைக்கப்படுகிறது.

சேரலாதன்: அழகு. அடுத்த திணை என்ன?

கிள்ளிவளவன்: **கரந்தைத் திணை.** கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மக்கள் மீட்கச்செல்வர். அப்போது கரந்தைப் பூவைச் சூடிக்கொள்வர். அதனால் கரந்தைத் திணை என்று பெயர் பெற்றது.



சிறிய முட்டை வடிவில் கொத்தாகப் பூக்கக் கூடிய கரந்தை ஒரு சிறிய செடி. நறுமணம் மிக்க இது செம்மை, நீலம், இளஞ்சிவப்பு, நீலம் கலந்த சிவப்பு ஆகிய நிறங்களில் பூக்கின்றது. இதனைக் 'கொட்டைக் கரந்தை' என்றும் கூறுவர்.

சேரலாதன்: அடுத்ததாக...

கிள்ளிவளவன் : **வஞ்சித்திணை.** மண் (நாடு) சொத்தாக மாறிய காலத்தில் மண்ணைக் கவர்தல் போராயிற்று. மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணை.




பளபளப்பான, மெல்லிய பூவின் இதழ்களில் வெள்ளிய பஞ்சு போன்ற நுண்மயிர் அடர்ந்துள்ளது வஞ்சி.

சேரலாதன்: அடுத்தது என்னண்ணே!

கிள்ளிவளவன்: **காஞ்சித் திணை.** தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணை.

10th_Tamil_Unit 7.indd 176 2/23/2023 11:21:57 AM



கொத்துக் கொத்தாகப் பூக்கும் நீலநிற மலர்கள் கொண்ட அழகான மணமுள்ள காஞ்சி என்பது ஒருவகைக் குறுமரம்.

சேரலாதன் : ஓ... அப்படியா! அடுத்து..

கிள்ளிவளவன்: **நொச்சித்திணை.** மண்ணைக் காக்கக் கோட்டைகள் கட்டப்பட்டன. கோட்டையைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே முற்றுகையிட்ட பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடிப் போரிடுவது நொச்சித்திணை.



மருத நிலத்துக்குரிய நொச்சி, கொத்துக் கொத்தான நீலநிறப்பூக்கள் கொண்டது. இதில் மணிநொச்சி, கருநொச்சி, மலைநொச்சி, வெண்ணொச்சி எனப் பலவகைகள் உள்ளன.

அடுத்தது **உழிஞைத் திணை** தம்பி. மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் அதனைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை.



வேலிகளில் ஏறிப்படரும் நீண்ட கொடியே உழிஞைக் கொடி. இதன் கூட்டிலைகளும் மலர்களும் சிறியவை; மலர்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இதனை முடக்கத்தான் (முடக்கொற்றான்) எனக் கூறுகின்றனர்.

சேரலாதன்: இனி என்ன இருக்கு அண்ணே!

கிள்ளிவளவன்: **தும்பைத் திணை.** பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, தம் வீரர்களுடன் தும்பைப் பூவைச்சூடிப் போர்க்களத்தில் ஒருவரோடு ஒருவர் போரிடுவது தும்பைத் திணை. போரிடுகின்ற அரசர்கள் இருவரும் தும்பைப் பூ மாலையையே சூடியிருப்பார்கள். போர்த்திணைகள் படிப்படியாக வளர்ந்த நிலையில், போரைத் தொடங்கும் நிகழ்வாக ஆநிரை கவர்தல் மேற்கொள்ளப்பட்டது.

சேரலாதன்: சிறப்பு... மிகச் சிறப்பு! அடுத்து..



எல்லா இடங்களிலும் வளரக் கூடிய தூய வெண்ணிற மலர்களைக் கொண்ட சிறிய செடி தும்பை.

கிள்ளிவளவன்: **வாகைத்திணை.** போரிலே வெற்றிபெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது, வாகைத்திணை. வாகை என்றாலே வெற்றிதானே!



மங்கிய வெண்ணிற நறுமணம் கொண்ட கொத்துக் கொத்தாக மலரும் வாகை பூ.

சேரலாதன்: எப்படி முறையாகப் போர் புரிந்திருக்கிறார்கள். தமிழனின் மாண்பே மாண்பு.

கிள்ளிவளவன் : பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, பாடாண்திணை (பாடு+ஆண்+திணை = **பாடாண்திணை).**

சேரலாதன்: ஆமாம், போரை மட்டும் சொல்லாது பிற மாண்புகளையும் பாடுகிறது இத்திணை. அருமை! அருமை!!

கிள்ளிவளவன்: அடுத்து... வெட்சி முதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது, **பொதுவியல் திணை.**

சேரலாதன் : கேட்கக் கேட்க இனிமை பயக்கிறது.

கிள்ளிவளவன்: **கைக்கிளை** என்பது ஒருதலைக் காமம்.

சேரலாதன்: அடுத்தது என்ன?

கிள்ளிவளவன்: **பெருந்திணை.** இது பொருந்தாக் காமத்தைக் குறிக்கிறது.

சேரலாதன்: அடடா... எப்படியெல்லாம் திணைகளை வகுத்திருக்கிறார்கள் மகிழ்ச்சி அண்ணே! நன்று அண்ணே!

கிள்ளிவளவன்: மகிழ்ச்சி தம்பி..

10th_Tamil_Unit 7.indd 177 2/23/2023 11:21:57 AM

திறன் அறிவோம்

YOMTN

பலவுள் தெரிக.

1. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

   அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

2. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே-

   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

3. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -

   அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

   இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

4. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ……..

   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

5. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது .....

   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

குறுவினா

1. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

2. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

3. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

4. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

5. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.

   பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி.

10th_Tamil_Unit 7.indd 178 2/23/2023 11:21:57 AM

சிறுவினா

1. 'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?
2. அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.
3. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
4. "பகர்வனர் திரிதிரு நகரவீதியும்;
   பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
   கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
   தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"

   அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?

   ஆ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.

   இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.

   ஈ) காருகர் – பொருள் தருக.

   உ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?

5 பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக.

பேரரசனது மெய்ப் புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி. பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக் கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.

சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை; ஏனைய பகுதிகள் உள்ளன.எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும் பின்வந்த மெய்க்கீர்த்திகளின் வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியள்ளன.

நெடுவினா

1. நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.
2. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.
3. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.
4. நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

மகளிர் நாள்விழா

இடம் – பள்ளிக் கலையரங்கம் நாள் – 08.03.2019

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் – தலைமையாசிரியரின் வரவேற்பு – இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை

10th_Tamil_Unit 7.indd 179 2/23/2023 11:21:57 AM

மொழியை ஆள்வோம்!

படித்தும் பார்த்தும் சுவைக்க.



ஏர்பிடிக்கும் கைகளுக்கே
வாழ்த்துக் கூறுவோம் – வறுமை
ஏகும்வரை செய்பவர்க்கே
வாழ்த்துக் கூறுவோம் ! – என்றும்
ஊர்செழிக்கத் தொழில்செய்யும்
உழைப்பாளிகள் – வாழ்வு
உயரும்வகை செய்பவர்க்கே
வாழ்த்துக் கூறுவோம்! – *கவி கா.மு ஷெரீப்.*

மொழிபெயர்க்க.

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.

வரப் போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்

எ.கா. இன்னும் சிறிது நேரத்தில் வரப் போகிறேன்

தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.

மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது.

கடிதம் எழுதுக.

நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் '*உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்*' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

10th_Tamil_Unit 7.indd 180 2/23/2023 11:21:58 AM

கவிதையை உரையாடலாக மாற்றுக.

மகள் சொல்லுகிறாள்:–

அம்மா என் காதுக்கொரு தோடு – நீ
அவசியம் வாங்கி வந்து போடு !
சும்மா இருக்க முடியாது – நான்
சொல்லி விட்டேன் உனக்கு இப்போது!

தாய் சொல்லுகிறாள் :–

காதுக்குக் கம்மல் அழகன்று – நான்
கழறுவதைக் கவனி நன்று
நீதர் மொழியை வெகுபணிவாய் – நிதம்
நீ கேட்டு வந்து காதில் அணிவாய்!

மகள் மேலும் சொல்லுகிறாள்:

கைக்கிரண்டு வளையல் வீதம் – நீ
கடன்பட்டுப் போட்டிடினும் போதும்!
பக்கியென் றென்னை யெல்லோரும் – என்
பாடசாலையிற் சொல்ல நேரும்!

தாய் சொல்லும் சமாதானம் :

வாரா விருந்து வந்த களையில் – அவர்
மகிழ உபசரித்தல் வளையல்!
ஆராவமுதே மதி துலங்கு – பெண்ணே
அவர்சொல்வ துன்கைகட்கு விலங்கு!

பின்னும் மகள் :

ஆபர ணங்கள் இல்லை யானால் – என்னை
யார் மதிப்பார் தெருவில் போனால்?
கோபமோ அம்மா இதைச் சொன்னால் – என்
குறைதவிர்க்க முடியும்

அதற்குத் தாய்:

கற்பது பெண்களுக்கா பரணம் – கெம்புக்
கல்வைத்த, நகைதீராத ரணம்!
கற்ற பெண்களை இந்த நாடு – தன்
கண்ணில் ஒற்றிக் கொள்ளுமன் போடு!

–பாரதிதாசன்



மொழியோடு விளையாடு

ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம், கோயம்புத்தூர், நாகப்பட்டினம், புதுச்சேரி, கும்பகோணம், திருநெல்வேலி, மன்னார்குடி, மயிலாப்பூர், சைதாப்பேட்டை

எ.கா. தஞ்சாவூர் – தஞ்சை

படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக


வீறுகொண்டு முன்னேறும் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை
17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடைமருதூர், திருநெல்வேலி.

அகராதியில் காண்க.

மிரியல், வருத்தனை, அதசி, துரிஞ்சில்

10th_Tamil_Unit 7.indd 181 2/23/2023 11:21:58 AM

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



கலைச்சொல் அறிவோம்

Consulate	–	துணைத்தூதரகம்	*Guild*	–	வணிகக் குழு
Patent	–	காப்புரிமை	*Irrigation*	–	பாசனம்
Document	–	ஆவணம்	*Territory*	–	நிலப்பகுதி

நிற்க அதற்குத் தக...

அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்தபவை.

அதுபோலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள்தானே? இவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள்..

கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன்.	அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்க மாட்டேன்.
கல்வெட்டுகள் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன்.	

அறிவை விரிவு செய்

என் கதை – நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்

வேருக்கு நீர் – ராஜம் கிருஷ்ணன்

நாற்காலிக்காரர் – ந. முத்துசாமி







இணையத்தில் காண்க.

http://www.maposi.in/ (ம.பொ.சி. யின் இணையத்தளம்)

http://www.tamilvu.org/slet/lA100/lA100pd2.jsp?bookid = 180&pno = 40 (கு.ப.ரா. கவிதைகள்)

http://www.varalaaru.com/design/article.aspx?ArticleID = 124 (வரலாற்றாய்வு – மெய்கீர்த்திகள்)


http://silapathikaram.com/blog/?tag = மருவூர்ப்பாக்கம்

10th_Tamil_Unit 7.indd 182 2/23/2023 11:21:59 AM

இயல் எட்டு

அறம்,
தத்துவம்,
சிந்தனை

பெருவழி



மன்னன் மக்களுக்குக் கொடை அளிப்பது – 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், சிதம்பரம்.

கற்றல் நோக்கங்கள்

- அறக்கருத்துகளை வேராகக் கொண்ட சங்க இலக்கியங்களின் மையப்பொருளறிதல்.
- கட்டுரை, நாடகம் போன்றவற்றின் வடிவங்களைப் படித்துணர்ந்து, சொல்லப்புகும் கருத்தினை வெளிப்படுத்த ஏற்ற வடிவத்தினைத் தேர்ந்தெடுத்து வலுவாகப் பயன்படுத்துதல்.
- தத்துவக் கருத்துகளைச் சொல்வதற்கு ஏற்ற மொழி தமிழ் என்பதைப் பாடல்கள் வழி உணர்ந்து சுவைத்தல்.
- தமிழின் நான்கு பாவகைகள் குறித்த அறிமுகம் பெற்று மேலும் கற்க ஆர்வம் கொள்ளுதல்.

பாடநூலில் இடம்பெற்றுள்ள வரலாற்றுச் சுவரோவியங்கள் மூல ஓவியத்தைத் தழுவி உருவாக்கப்பட்டவை.

10th_Tamil_Unit 8.indd 183 12/2/2022 5:36:50 PM

அறம்


அ

சங்க இலக்கியத்தில் அறம்

நுழையும்முன்

தமிழர் பொருள் ஈட்டி அறம்செய்து இன்புற்றனர்; இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர்; உலகே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்தனர்; சங்க காலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர்; சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம், சங்ககாலம்.

Z2ARL



மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒருதுளி. அவனுக்குள்ளே சமூகம் – சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொதுவிதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும்.

சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால், சங்க கால அறங்கள்

10th_Tamil_Unit 8.indd 184 12/2/2022 5:36:55 PM

இயல்பானவை.'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்று திறனாய்வாளர் ஆர்னால்டு கூறுகிறார். அந்த வகையில் சங்ககால வாழ்க்கையில் இருந்து உருவான அறங்களே சங்க இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளன. சங்க அறங்கள் சமயங்களிடமிருந்து இரவல் பெறப்பட்டவை அல்ல.

அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக்கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு கூடாது எனக் கூறப்பட்டது.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" – புறம்.

எனச் சங்ககால வள்ளல்களில் ஒருவரான ஆய் பற்றி ஏணிச்சேரி முடமோசியார் குறிப்பிட்டுள்ளார். நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

அரசியல் அறம்

சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்', 'அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்' மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப்பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது. குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார். அரசன் அறநெறியில் ஆட்சிசெய்வதற்கு அமைச்சரும் உதவினர். நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்கிறது மதுரைக்காஞ்சி. 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' என்று அமைச்சர்களை மாங்குடி மருதனார் போற்றுகிறார்.

அறங்கூறவையம்

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது; அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

போர் அறம்

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

எறியார் எறிதல் யாவணது எறிந்தோர்
எதிர்சென்று எறிதலும் செல்லான் – புறம் 301.

கொடை

வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி. அதாவது தன் மகிழ்ச்சியை மறப்பதுதான் மகிழ்ச்சி.

10th_Tamil_Unit 8.indd 185 12/2/2022 5:36:55 PM

செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே
(புறம் 189 :7–8)

என்றார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது. எழுவரின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன. பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது. புறநானூற்றின் கொடைப்பதிவும் குறிப்பிடத்தக்கது.

அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும் ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன. வள்ளல்கள் "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன் " என்றெல்லாம் போற்றப்பட்டனர். வழங்குவதற்குப் பொருள் உள்ளதா? என்று கூடப் பார்க்காமல் கொடுக்கும் பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தனை நக்கீரர் பாராட்டுகிறார். வள்ளலின் பொருள் இரவலனின் பொருள்; வள்ளலின் வறுமை இரவலனின் வறுமை என்று பெரும்பதுமனார் குறிப்பிடுகிறார்.

உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார். இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார். பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்கிறார் பரணர். தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தான் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாராட்டுகிறார்.

புற இலக்கியங்களில் மட்டுமன்றி அக இலக்கியங்களிலும் ஈதல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது.

வள்ளல்கள் மட்டுமன்றிப் புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை இலக்கியம் பதிவு செய்துள்ளது. தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பெருஞ்சித்திரனாரின் பேருள்ளம் புறநானூற்றில் புலப்படுத்தப்பட்டிருக்கிறது.

உதவி

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை' என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம்தானே எண்ணெய்யாக இருக்க முடியும்?

பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறன்அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன் (கலி.139)

என்று பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

'உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான்' என்கிறார் நல்வேட்டனார்.

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே (நற். 210)

உறவினர் கெட, வாழ்பவனின் பொலிவு அழியும் என்று பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார். இதனால்தான் 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவு' என்கிறது தமிழ் இலக்கியம். 'நிறைவடைகிறவனே செல்வன்'

10th_Tamil_Unit 8.indd 186 12/2/2022 5:36:55 PM

என்கிறது சீன நாட்டுத் தாவோயியம். உடல் உறுப்புகள் ஒன்றுக்கொன்று உதவுவது போலச் சமூக உறுப்புகளான மனிதர்களும் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ள வேண்டும். இதயம் இரத்தத்தை எல்லாம் தனக்கே வைத்துக் கொண்டால் என்ன ஆவது? இரைப்பை, உணவை அப்படியே தானே வைத்துக் கொண்டால் என்ன ஆவது? பிறருக்கு உதவாமல், மனிதத்திற்குக் கொடும்பாவி கட்டுவது சங்க காலத்தில் இல்லை.

வாய்மை

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா","பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். துன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய்பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.

'பிழையா நன்மொழி' என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது; இதற்கு மாறாகப் 'பொய் மொழிக் கொடுஞ்சொல்' என்று பொய்யைக் குறிப்பிடுகிறது. நிலம் புடைபெயர்ந்தாலும் பொய்சொல்லக் கூடாது என்பது பல பாடல்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது. வாய்மையைப் பற்றி, சங்ககால மக்கள் கொண்டிருந்த கருத்தழுத்தத்தை இப்பகுதிகள் புலப்படுத்துகின்றன. பொய்ச்சான்று கூறாமையும் வலியுறுத்தப்பட்டது.

சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும் சமூக உறுப்பினனாகவும் இயங்குவதற்கும் அவனது பண்பு நலனை உருவாக்குவதற்கும் உதவும் விதிமுறைகள் எனலாம்.

தாம் சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம் மூன்றாம் தரமானது. சிந்தித்து அறிந்து கொள்ளும் அறம் இரண்டாம் தரமானது. இயல்பாக அறியும் அறம் முதல் தரமானது. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இயல்பான முதல் தரமான அறங்கள் எனலாம்.



எத்திசையும் புகழ் மணக்க.....

போதிதர்மர்

கி.பி.(பொ.ஆ.) ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சி மாநகரத்துச் சிற்றரசர் ஒருவர் போதிதர்மர் என்னும் சமயப்பெயர்பூண்டு சீனாவுக்குச் சென்றார். பௌத்த சமயத் தத்துவத்தின் ஒரு பிரிவைப் போதித்தார். அதிலிருந்து உருவானதே "ஜென்" தத்துவம். இது, பின்னர் ஜப்பான் முதலிய நாடுகளுக்கும் பரவிச் செழித்து விளங்கியது. போதி தருமருக்குச் சீனர்கள் கோவில் கட்டி சிலை வைத்து இன்றளவும் வணங்கி வருவது குறிப்பிடத்தக்கது.



கற்பவை கற்றபின்...

1. பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அறக்கருத்துகளை வலியுறுத்தும் சங்க இலக்கியப் பாடலடிகள் ஐந்தினைத் தொகுத்து அவை கூறும் அறச் செய்திகளை எழுதுக.
2. கொன்றை வேந்தன் முதலான பிற்கால அறநூல்களின் பெயர்களை அறிந்து, அவற்றுள் ஏதேனும் ஒரு நூலின் அறக் கருத்துக்களை எடுத்துக் கொண்டு அவை இன்றும் பொருந்தி நிற்பது குறித்துக் கலந்துரையாடுக.


10th_Tamil_Unit 8.indd 187 12/2/2022 5:36:55 PM

அறம் அ

ஞானம்

– தி.சொ.வேணுகோபாலன்

CR2B7



இயக்கமே உலகம் நிலைத்திருப்பதற்கான அடிப்படை. இயங்குதலின்றி உலகில்லை, உயர்வில்லை. கடல் அலைகளைப்போல் பணிகளும் ஓய்வதில்லை. அலைகள் ஓய்ந்திடின் கடலுமில்லை. பணிகள் ஓய்ந்திடின் உலகமுமில்லை. தனக்கான பணிகளோ உலகிற்கான பணிகளோ அவை அறம் சார்ந்து வளர வேண்டும்.

சாளரத்தின் கதவுகள், சட்டம்;
காற்றுடைக்கும்,
தெருப்புழுதி வந்தொட்டும்.
கரையான் மண் வீடு கட்டும்.
அன்று துடைத்தேன்,
சாயம் அடித்தேன்,
புதுக்கொக்கி பொருத்தினேன்.
காலக்கழுதை
கட்டெறும்பான
இன்றும்
கையிலே
வாளித்தண்ணீர், சாயக்குவளை,
கந்தைத்துணி, கட்டைத் தூரிகை:
அறப்பணி ஓய்வதில்லை
ஓய்ந்திடில் உலகமில்லை!

கோடை வயல் – தொகுப்பு



நூல் வெளி

நம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்ட கவிதை தி.சொ.வேணுகோபாலனின் 'கோடை வயல்' என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இவர் திருவையாற்றில் பிறந்தவர்; மணிப்பால் பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் பேராசிரியராகப் பணியாற்றியவர்; 'எழுத்து' காலப் புதுக்கவிஞர்களில் ஒருவர். இவரின் மற்றொரு கவிதைத் தொகுப்பு மீட்சி விண்ணப்பம்.

கற்பவை கற்றபின்...

1. துளிப்பா ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அதில் வெளிப்படும் கருத்தினைப் பற்றி வகுப்பறையில் இரண்டு நிமிடம் உரை நிகழ்த்துக.
2. திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் தலைப்பினை எழுதி, அகர வரிசைப்படுத்தி அதன் பொருளினை எழுதுக.

10th_Tamil_Unit 8.indd 188 12/2/2022 5:36:55 PM

கவிதைப் பேழை

அறம்

அ

காலக்கணிதம்

– கண்ணதாசன்

நுழையும்முன்

கவிஞன் என்பவன் யார்? அவன் குணம் என்ன? அவன் பணி என்ன? மனம் என்னும் வயலில், சொல்லேர் உழவனாக, சிந்தனை விதையைத் தூவி, மடமைக் களை பறித்து, தத்துவ நீர் பாய்ச்சி, அறம் என்னும் கதிர் அறுப்பவன் கவிஞன். காலத்தைக் கணிப்பதால் காலத்தை வென்றவனாகிறான்.



கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!
செல்வர்தங் கையில் சிறைப்பட மாட்டேன்;
பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்!
பாசம் மிகுத்தேன்; பற்றுதல் மிகுத்தேன்!
ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்!
உண்டா யின்பிறர் உண்ணத் தருவேன்;
இல்லா யின்எமர் இல்லம் தட்டுவேன்
வண்டா யெழுந்து மலர்களில் அமர்வேன்
வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந் தருவேன்!
பண்டோர் கம்பன், பாரதி, தாசன்
சொல்லா தனசில சொல்லிட முனைவேன்!
புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது
இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது!
வளமார் கவிகள் வாக்குமூ லங்கள்
இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு!
கல்லாய் மரமாய்க் காடுமே டாக
மாறா திருக்கயான் வனவிலங் கல்லன்!
மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

10th_Tamil_Unit 8.indd 189 12/2/2022 5:36:56 PM

நூல் வெளி



'காலக்கணிதம்' என்னும் இப்பாடப்பகுதி கண்ணதாசன் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

'முத்தையா' என்னும் இயற்பெயரைக் கொண்ட கண்ணதாசன் இன்றைய சிவகங்கை மாவட்டத்தின் சிற்றூரான சிறுகூடல்பட்டியில் பிறந்தவர். இவரது பெற்றோர் சாத்தப்பன் – விசாலாட்சி ஆவர். 1949ஆம் ஆண்டு "கலங்காதிரு மனமே" என்ற பாடலை எழுதி, திரைப்படப் பாடலாசிரியரானார். திரையுலகிலும் இலக்கிய உலகிலும் சிறந்து விளங்கியவர் கண்ணதாசன். இவர் சிறந்த கவியரங்கக் கவிஞராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்தவர். தன் திரைப்படப் பாடல்கள் வழியாக எளிய முறையில் மெய்யியலை மக்களிடையே கொண்டு சேர்த்தவர். சேரமான் காதலி என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இவர் தமிழக அரசின் அரசவைக் கவிஞராகவும் சிறப்பிக்கப்பட்டிருந்தார்.



கற்பவை கற்றபின்...

கவிதைகளை ஒப்பிட்டுக் கருத்துரைக்க.

கவிச்சக்கரவர்த்தியும் கவியரசும்

நதியின் பிழையன்று
நறும்புனலின்மை அன்றே
பதியின் பிழையன்று
பயந்த நம்மைப் புரந்தான்
மதியின் பிழையன்று
மகன் பிழையன்று மைந்த
விதியின் பிழை நீ
இதற்கென்னை வெகுண்டதென்றன்

– கம்பன்

நதிவெள்ளம் காய்ந்து விட்டால்
நதிசெய்த குற்றம் இல்லை
விதிசெய்த குற்றம் இன்றி
வேறு – யாரம்மா!

– கண்ணதாசன்

10th_Tamil_Unit 8.indd 190 12/2/2022 5:36:56 PM

விரிவானம்

அறம்

அ

இராமானுசர் – நாடகம்

MFARD

நுழையும்முன்

நாளுக்கு ஒருமுறை மலர்வது சண்பகம். ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது பிரம்ம கமலம். பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது குறிஞ்சி. தலைமுறைக்கு ஒருமுறை மட்டுமே மலர்வது மூங்கில். அதைப்போல் நம் தலைமுறைக்கு ஒரு முறை பிறப்பவர்கள் ஞானிகள். அவ்வாறு வந்தவரைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்று, இதோ நாடகமாய்...



காட்சி – 1

இடம்: திருக்கோட்டியூர் பூரணர் இல்லம்

பாத்திரங்கள்: இராமானுசர் – கூரேசர் – முதலியாண்டான் – பூரணர்

முதலியாண்டான்: (இராமானுசரைப் பார்த்து) சுவாமிகளே! புனித திருமந்திரத் திருவருள் வேண்டி மீண்டும் இங்கு வந்துள்ளோம். இன்றாவது நமது விருப்பம் நிறைவேறுமா?

இராமானுசர்: முதலி, இதுவரை எத்தனை முறை வந்துள்ளோம்?

முதலியாண்டான்: பெரிய நம்பிகள் கூறினாரென்று பதினெட்டு முறை வந்துள்ளோம் சுவாமிகளே!

இராமானுசர்: வருந்த வேண்டாம் முதலியாண்டார். நம் விருப்பம் இன்று உறுதியாக நிறைவேறும்.

முதலியாண்டான்: எப்படிக் கூறுகிறீர்கள் சுவாமி?

இராமானுசர்: திருமந்திரத் திருவருள் பெறத் தண்டும், கொடியுமாக இராமானுசரை வரச் சொல்லுங்கள் என்னும் செய்தி, பூரணரால் திருவரங்கத்திற்கு அனுப்பப்பட்டதன் அடிப்படையிலேயே வந்துள்ளோம். மனம் தளர வேண்டாம். நமது வருகையை அவருக்குத் தெரிவியுங்கள்.

(வீட்டினுள்ளிருந்து வந்த பூரணர் வாசலில் மூவர் நிற்பதைப் பார்த்துத் திகைக்கிறார்)

கூரேசர்: சுவாமிகளே! வணக்கம்! தங்கள் கட்டளைப்படி புனித திருமந்திரத் திருவருளுக்காக வந்துள்ளோம்.

10th_Tamil_Unit 8.indd 191 12/2/2022 5:37:00 PM

பூரணர்: அடியவர்களே வணக்கம்! (இராமானுசரைப் பார்த்து) தண்டு, கொடியுடன் உங்களை மட்டும் தானே வரச் சொன்னேன்!

இராமானுசர்: ஆம் சுவாமி! தங்கள் கட்டளை கிடைத்த பின்பே புறப்பட்டோம்.

பூரணர்: பிறகெதற்குத் தாங்கள்உறவுகளை உடன் அழைத்து வந்துள்ளீர்கள்?

இராமானுசர்: சுவாமிகள் என்மேல் கோபம் கொள்ளக் கூடாது. தங்கள் விருப்பப்படியேதான் வந்துள்ளேன். தாங்கள் கூறிய தண்டு, கொடிக்கு இணையானவர்கள் இவர்கள். எனவே அடியவர்களாகிய எங்கள்மேல் கோபம் கொள்ளாது பரிவு கொண்டு திருவருள் புரிய வேண்டும்.

பூரணர்: உடையவர்களே! நான் கூறும் மந்திர மறைபொருள் திருவரங்கனின் திருவருளால் கிடைக்கப் பெற்றது. இது நமது பரம ஆச்சாரியார் ஆளவந்தார் அவர்களால் எனக்கு மட்டுமே கிடைத்த அரிய பொக்கிசம். இதை நான் உங்களுக்குக் கூறுகிறேன். இதை நீங்கள் நாள்தோறும் தியானிப்பதால், பிறவித்தளை நீங்கும். இறைவனடி செல்ல இயலும். இளையாழ்வாரே! இவர்களை நீங்கள் தண்டு, கொடி எனக் கூறியதால் உங்கள் மூவருக்குமாகத் திருமந்திரத்தைக் கூறுகிறேன்.

(மூவரும் வீட்டினுள் சென்று மூன்று மனைப்பலகையில் அமர, பூரணர் எதிர் மனைப்பலகையில் அமர்கிறார்)

இராமானுசர்: கோபம் கொள்ளாது திருவருள் கொண்டமைக்குத் தலைவணங்குகிறோம் சுவாமி!

பூரணர் : ஆண்டவனின் அடியவர்களுக்குத் திருமந்திரம் உரைப்பதில் நாம் உளம் மகிழ்கிறோம்.

(மூவரும் கைகூப்பி நன்றி கூறுகின்றனர்)

பூரணர்: நான் கூறுவதை நன்றாகக் கவனியுங்கள். கூறப் போகின்ற திருமந்திர மறைபொருள்கள் உங்கள் மூவருக்கு மட்டுமே தெரிய வேண்டும். வேறு யாரிடமாவது இதை நீங்கள் கூறுவீர்கள் எனில் அது ஆசிரியர் கட்டளையை மீறியதாகும். அப்படி நடந்தால் அதற்குத் தண்டனையாக நரகமே கிட்டும்.

(மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர்)

பூரணர்: ஆச்சாரிய நியமத்தை மீறிய பாவிகளாக நீங்கள் மாற மாட்டீர்கள் என்னும் நம்பிக்கையுடன் திருமந்திரத்தைக் கூறுகிறேன். செவிகளைக் கூர்மைப்படுத்திக் கேளுங்கள். நான் கூறும் திருமந்திரத்தை நீங்களும் சேர்ந்து சொல்லுங்கள்.

'திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன். திருவுடன் சேர்ந்த நாராயணனை வணங்குகிறேன்.'

(பூரணர் கூறிய திருமந்திரத்தை மூவரும் மூன்று முறை உரக்கச் சொல்கின்றனர்.)

பூரணர்: உங்கள் வாழ்வில் இன்றைய நாள் மிகவும் நல்ல நாள். இறைவனின் திருவருளால் இன்று திருமந்திரம் உமக்குக் கிடைத்தது.

இராமானுசர்: உங்கள் திருவருளும் அதில் உள்ளது சுவாமிகளே !

பூரணர்: நான் கூறிய கருத்தைக் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். ஆசிரியர் கட்டளையை மீறிவிட வேண்டாம்.

மூவரும்: நினைவில் உள்ளது சுவாமிகளே! ஆண்டவனின் அடியவர்களாகிய எங்களுக்கு, திருவருள் கொண்டு திருமந்திரம் கூறியமைக்கு மிக்க நன்றி சுவாமிகளே!

10th_Tamil_Unit 8.indd 192 12/2/2022 5:37:00 PM

காட்சி – 2

இடம் – திருக்கோட்டியூர் சௌம்ய நாராயணன் திருக்கோவில்

பாத்திரங்கள் : இராமானுசர், கூரேசர், முதலியாண்டான், பூரணரின் சீடர், பொதுமக்கள்

பொதுமக்களில் ஒருவர்: எல்லாரும் வேகமா எங்கே போறாங்க?

பொதுமக்களில் மற்றொருவர்: உமக்குச் சேதி தெரியாதா ? வைணவ சாமியாரு ஒருத்தரு பெறவிப் பிணிகளைத் தீர்க்குற மந்திரத்தெச் சொல்லப் போறாராம்.

பொதுமக்களில் இன்னொருவர்: அப்படியா சேதி ! வாங்க நாமும் போகலாம்.

(கோவிலின் மதில் சுவரின் மேல் இராமானுசர் நிற்க, கீழே பொதுமக்களுடன் கூரேசரும், முதலியாண்டானும் நிற்கின்றனர்)

இராமானுசர்: (உரத்த குரலில்) பெரியோர்களே! பக்தியால் முக்திக்கு வழிகாணத் துடிப்பவர்களே! அருகில் வாருங்கள் அனைவரும். இன்னும் அருகில் வாருங்கள். கிடைப்பதற்கரிய பிறவிப்பிணியைத் தீர்க்கும் அருமருந்தான திருமந்திரத்தை உங்களுக்குக் கூறுகிறேன். அனைவரும் இணைந்து மந்திரத்தைச் சொல்லுங்கள்.

(இராமானுசருடன் சேர்ந்து அனைவரும் மூன்று முறை கூறுகின்றனர்)

இராமானுசர்: எம்பெருமானே! நான் இன்று உளம் மகிழ்கிறேன். எளிய மக்களுக்குத் தங்களது பிறவிப்பிணியைத் தீர்க்கும் திருமந்திரத்தைக் கூறி அவர்களை உன் திருவடிகளைப் புகலாகப் பெறச் செய்துவிட்டேன்.

கூரேசர்: பார்த்தாயா முதலி, பிறர் நலமாக வாழ, தாம் வருந்திப் பெற்ற மந்திரத்தையும் கூறிவிட்டாரே!

முதலியாண்டான்: பூரணரின் கண்டிப்பையும் மீறிப் பொதுமக்கள் நலனுக்காகக் கூறியது, யாரும் செய்ய இயலாத செயல்.

(கூட்டத்திலிருந்த பூரணரின் சீடர், கைகளால் ஓசை எழுப்பி இராமானுசரைக் கீழே வருமாறு கூப்பிடுகிறார்).

பூரணரின் சீடர்: பூரணரின் வார்த்தையை மீறிவிட்டீர். இங்கு நடந்ததை அறிந்து அவர் கடும் கோபமாக உள்ளார். அவர் இல்லத்துக்குத் தங்களை அழைத்து வரச் சொன்னார்.

இராமானுசர்: உறுதியாக என்மீது கோபமாகத்தான் இருப்பார். வாருங்கள்! அவர் இல்லம் செல்வோம்.

(அனைவரும் பூரணர் இல்லம் நோக்கி நடக்கின்றனர்)

காட்சி 3

இடம் : பூரணர் இல்லம்

பாத்திரங்கள் : இராமானுசர், பூரணர், கூரேசர், முதலியாண்டான்

மூவரும்: வணக்கம் சுவாமிகளே !

பூரணர்: வாருங்கள் சுவாமி! வாருங்கள். நீங்கள் குருவிற்கு நம்பிக்கைக்கேடு செய்து விட்டீர்கள்! இதற்கு என்ன தண்டனை என்று தெரியுமா ?

இராமானுசர்: ஞான குருவே! முதலில் எம்மை மன்னித்தருளுங்கள். நாங்கள் செய்த இரண்டகத்திற்குக் கொடிய தண்டனையான நரகமே கிட்டும் சுவாமிகளே! நான் அதை மறக்கவில்லை.

பூரணர்: அது தெரிந்துமா, நீங்கள் பிழை செய்தீர்கள்?

இராமானுசர்: ஆம் சுவாமிகளே !

பூரணர்: தவறு எனத் தெரிந்தும் ஏன் செய்தீர்கள்?

10th_Tamil_Unit 8.indd 193 12/2/2022 5:37:00 PM

இராமானுசர்: கிடைப்பதற்கரிய மந்திரத்தைத் தங்களின் திருவருளால் நான் பெற்றேன். அதன் பயன் எனக்கு மட்டுமே கிட்டும். அந்த அருமந்திரத்தை அனைவருக்கும் கூறினால், துன்பத்தில் உழன்று பேதை வாழ்வு வாழ்ந்து வரும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களின் பிறவிப்பிணி நீங்கி பேறு பெறுவார்கள்.

இதனால் நான் மட்டுமே தண்டனை கிடைக்கப்பெற்று நரகத்தைச் சேர்வேன். ஆனால் என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும். எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள் சுவாமி!

பூரணர்: எம் பெருமானே! உங்களுக்கு இருந்த பரந்த அருள் உள்ளம் இதுவரை எனக்கு இல்லாமல் போனதே! நம் பரமாச்சாரியார் ஆளவந்தாரின் திரு உள்ளத்தை அறிந்தவர் தாங்கள் மட்டுமே! இறைவனின் திருவருளை உலகிற்கு உணர்த்தியவர் தாங்களே! நான் மகிழ்ச்சி பொங்கக் கூறிய 'எம் பெருமான்' என்னும் திருநாமம் என்றென்றும் உமக்கு நிலைத்து, நீங்கள் நீடூழி வாழ வேண்டும்.

இராமானுசர்: எம்மை மன்னித்தருளியமைக்கு நன்றி சுவாமிகளே! விடை தாருங்கள் !

பூரணர்: விடை தருவதற்கு முன்பு, நான் மற்றொன்றையும் அளிக்கிறேன். இதோ என் மகன் சௌம்ய நாராயணனைத் தங்களிடம் அடைக்கலமாக அளிக்கிறேன். ஏற்றுக்கொண்டு விடை பெறுங்கள் எம் பெருமானே!

இராமானுசர்: சுவாமிகளே! முன்பு கிடைப்பதற்கரிய திருமந்திரத்தை எமக்களித்தீர்கள். இன்றோ உங்களின் அன்புத் திருமகனையும் எமக்களித்துள்ளீர்கள். நான் பெரும்பேறு பெற்றவன் ஆகிவிட்டேன். மிக்க மகிழ்ச்சி. விடை தாருங்கள்! புறப்படுகிறோம்!

(பூரணர் விடை தர இராமானுசர் சௌம்ய நாராயணனுடன் முன் செல்லக் கூரேசரும் முதலியாண்டானும் பின் தொடரப் புறப்பட்டுச் செல்கின்றனர்.)



முன்தோன்றிய மூத்தகுடி

"கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
தேர்வண் பாரிதண் பறம்பு நாடே!"

புறநானூறு, 118 : 4–5

சிவகங்கை மாவட்டத்தின் பிரான் மலை (பறம்பு மலை)



கற்பவை கற்றபின்...

1. கருத்துகளை உரைநடையாகப் படிப்பதிலும் நாடகமாகப் படிப்பதிலும் நீங்கள் உணரும் வேறுபாடுகள் குறித்துக் கலந்துரையாடுக.

2. இந்நாடகம் வெளிப்படுத்துவது போன்று இராமானுசர் வாழ்க்கை நிகழ்வுகள் சிலவற்றைத் தொகுத்து, அவை குறித்த உங்களின் கருத்துகளை எடுத்துரைக்க.

10th_Tamil_Unit 8.indd 194 12/2/2022 5:37:01 PM

அறம்

அ

பா – வகை, அலகிடுதல்

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்று ஆறு உறுப்புகளைக் கொண்டது யாப்பு. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப் பாக்கள் உள்ளன. யாப்பின் உறுப்புகள் குறித்து கடந்த ஆண்டில் கற்றதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

பாக்களுக்கு உரிய ஓசைகளைப் பற்றி முதலில் அறிந்துகொள்வோம். பாக்களை ஓசைகளைக் கொண்டே அறியலாம். ஒவ்வொரு பாவும் ஓசையால் வேறுபட்டது. ஓசையானது செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் என்று நான்கு வகைப்படும்.

செப்பல் ஓசை

செப்பலோசை வெண்பாவிற்குரியது. அறம் கூறும், குறளும் நாலடியாரும் வெண்பாவில் அமைந்துள்ளன.

அகவல் ஓசை

அகவல் ஓசை ஆசிரியப்பாவுக்கு உரியது. இலக்கணக் கட்டுக்கோப்புக் குறைவாகவும் கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருப்பது அகவற்பா என்னும் ஆசிரியப்பா. சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய காப்பியங்களும் அகவற்பாவில் அமைந்தவை.

துள்ளல் ஓசை

செய்யுளில் இடையிடையே உயர்ந்து வருவது துள்ளல் ஓசை. இது கலிப்பாவுக்கு உரியது.

தூங்கல் ஓசை

தூங்கல் ஓசை வஞ்சிப்பாவுக்கு உரியது.

முன் வகுப்பில் கற்ற ஏழு வகைத் தளைகளையும் நீங்கள் நினைவுகூர்தல் நல்லது.

பா வகைகள்

குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்று ஐந்துவகை வெண்பாக்கள் உள்ளன.

நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என்று நான்கு வகை ஆசிரியப்பாக்கள் உள்ளன.

இனி வெண்பா, ஆசிரியப்பா ஆகியவற்றின் பொது இலக்கணத்தை அட்டவணையில் காணலாம்.

பொது இலக்கணம்	வெண்பா	ஆசிரியப்பா (அகவற்பா)
ஓசை	செப்பல் ஓசை பெற்று வரும்.	அகவல் ஓசை பெற்று வரும்.
சீர்	ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும்.	ஈரசைச் சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்.
தளை	இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டும் பயின்று வரும்.	ஆசிரியத் தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும்.
அடி	இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும். (கலிவெண்பா பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும்.)	மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும்.
முடிப்பு	ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.	ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு.

10th_Tamil_Unit 8.indd 195 12/2/2022 5:37:01 PM

மேற்சென்ன வற்றுள் குறள் வெண்பாவின் இலக்கணத்தையும் அலகிடும் முறையினையும் தெரிந்துகொள்வோம்.

குறள் வெண்பா என்பது வெண்பாவின் பொது இலக்கணம் அமையப்பெற்று இரண்டு அடிகளாய் வரும். முதலடி நான்கு சீராகவும் (அளவடி) இரண்டாம் அடி மூன்று சீராகவும் (சிந்தடி) வரும்.

அலகிடுதல்

செய்யுளின் சீரை அசை பிரித்து நேரசை, நிரையசை என்று பகுத்துக் காண்பதை முன் வகுப்பில் அறிந்துள்ளோம்.

அலகிடுதல் என்பது சீரைப் பிரித்து அசை பார்த்து, அசைக்கேற்ற வாய்பாடு காணுதல்.

யாப்போசை தரும் பாவோசை

1. செப்பலோசை – இருவர் உரையாடுவது போன்ற ஓசை
2. அகவலோசை – ஒருவர் பேசுதல் போன்ற – சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை
3. துள்ளலோசை – கன்று துள்ளினாற்போலச் சீர்தோறுந் துள்ளிவரும் ஓசை. அதாவது தாழ்ந்து உயர்ந்து வருவது.
4. தூங்கலோசை – சீர்தோறுந் துள்ளாது தூங்கிவரும் ஓசை. தாழ்ந்தே வருவது.

யாப்பதிகாரம், புலவர் குழந்தை

அலகிடுதல் எ.கா. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

வ . எண்	சீர்	அசை	வாய்பாடு
1	உல/கத்/தோ	நிரை நேர் நேர்	புளிமாங்காய்
2	டொட்/ட	நேர் நேர்	தேமா
3	வொழு/கல்	நிரை நேர்	புளிமா
4	பல/கற்/றும்	நிரை நேர் நேர்	புளிமாங்காய்
5	கல்/லார்	நேர் நேர்	தேமா
6	அறி/விலா	நிரை நிரை	கருவிளம்
7	தார்	நேர்	நாள்

நினைவில் கொள்க.

ஓரசைச் சீர்	ஈரசைச் சீர்	மூவசைச் சீர்	
நேர் – நாள்	நேர் நேர் – தேமா	நேர் நேர் நேர் – தேமாங்காய்	நேர் நேர் நிரை – தேமாங்கனி
நிரை – மலர்	நிரை நேர் – புளிமா	நிரை நேர் நேர் – புளிமாங்காய்	நிரை நேர் நிரை – புளிமாங்கனி
நேர்பு – காசு	நிரை நிரை – கருவிளம்	நிரை நிரை நேர் – கருவிளங்காய்	நிரை நிரை நிரை – கருவிளங்கனி
நிரைபு – பிறப்பு	நேர் நிரை – கூவிளம்	நேர் நிரை நேர் – கூவிளங்காய்	நேர் நிரை நிரை – கூவிளங்கனி



கற்பவை கற்றபின்...

1. பாடநூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளையும் அவற்றின் பாவகைகளையும் வகைப்படுத்திப் பட்டியல் இடுக.
2. வெண்பாவில் அமைந்த நூல்கள், ஆசிரியப்பாவில் அமைந்த இலக்கியங்கள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.

10th_Tamil_Unit 8.indd 196 12/2/2022 5:37:01 PM

திறன் அறிவோம்

பலவுள் தெரிக.

1. மேன்மை தரும் அறம் என்பது.....
   அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
   ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   இ) புகழ் கருதி அறம் செய்வது
   ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

2. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது .....
   அ) காலம் மாறுவதை
   ஆ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாது அறப்பணி செய்தலை
   ஈ) வண்ணம் பூசுவதை

3. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும்
   பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
   அ) உதியன்; சேரலாதன்
   ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
   இ) பேகன்; கிள்ளிவளவன்
   ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

4. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்.....
   அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது
   ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
   இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்
   ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

5. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் .....
   அ) அகவற்பா ஆ) வெண்பா
   இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

குறுவினா

1. 'கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
   உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'
   அ) அடியெதுகையை எடுத்தெழுதுக.
   ஆ) இலக்கணக் குறிப்பு எழுதுக – கொள்க, குரைக்க

2. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

10th_Tamil_Unit 8.indd 197 12/2/2022 5:37:01 PM

3. குறிப்பு வரைக – அவையம்.

4. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

5. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.

சிறுவினா

1. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

2. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

3. 'சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்' என்ற தலைப்பில், பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக. (குறிப்பு – சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும், ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்)

4. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை – இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

நெடுவினா

1. பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

2. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

– கண்ணதாசன்

3. குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.

மாணவன் – கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் – ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி .

10th_Tamil_Unit 8.indd 198 12/2/2022 5:37:01 PM

மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

மரம் தேடிய களைப்பு
மின்கம்பியில்
இளைப்பாறும் குருவி.

விற்பனையில்
காற்றுப் பொட்டலம்
சிக்கனமாய் மூச்சு விடவும்...

– நாணற்காடன்

– புதுவைத் தமிழ் நெஞ்சன்

மொழிபெயர்க்க.

Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city, "He is helped whom God helps". The Second beggar used to cry, "He is helped who the king helps". This was repeated by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him. The latter carried it home. When he cut the loaf of bread he found sparkling pieces of gold. Thanking God, he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar's behaviour, the Emperor summoned him to his presence and asked him, "What have you done with the loaf of bread that I had sent you lately?" The man replied, "I sold it to my friend, because it was heavy and did not seem well baked". Then the Emperor said, "Truly he whom God helps is helped indeed," and turned the beggar out of his palace.

மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

மரபுத்தொடர்

மனக்கோட்டை
அள்ளி இறைத்தல்

கண்ணும் கருத்தும்
ஆறப்போடுதல்

பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

"தம்பீ? எங்க நிக்கிறே?"

"நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது."

"அங்ஙனக்குள்ளயே டீ சாப்டுட்டு, பேப்பரப் படிச்சிக்கிட்டு இரு... நா வெரசா வந்துருவேன்"

"அண்ணே! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு!"

"அவம் பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்."

"ரொம்பச் சின்ன வயசுல பார்த்ததுண்ணே! அப்பம் அவனுக்கு மூணு வயசு இருக்கும்!"

"இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்! சரி, போனை வையி. நாங் கௌம்பிட்டேன்..."

"சரிங்கண்ணே"

கடிதம் எழுதுக.

உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன அதனால் இரவில் சாலையில் நடந்துசெல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

10th_Tamil_Unit 8.indd 199 12/2/2022 5:37:01 PM

நயம் பாராட்டுக.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.

– வள்ளலார்



மொழியோடு விளையாடு

கண்டுபிடித்து எழுதுக

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்கள் இடம் பெறும் திருக்குறளைக் கண்டுபிடித்து எழுதுக...

சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக.

1. கானடை 2. வருந்தாமரை 3. பிண்ணாக்கு 4. பலகையொலி

எ.கா. கானடை என்பதை,

கான் அடை – காட்டைச் சேர்

கான் நடை – காட்டுக்கு நடத்தல்

கால் நடை – காலால் நடத்தல்

இவ்வாறு மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் கூறலாம்.

செயல்திட்டம்

ஔவையாரின் ஆத்திசூடி, பாரதியாரின் ஆத்திசூடி ஆகிய இரண்டின் முதல் பத்துத் தொடர்களை ஒப்பிட்டு, நாள்தோறும் ஒரு தொடர் என்னும் அடிப்படையில் கருத்துகளைக் காலை வழிபாட்டு நிகழ்வில் வழங்குக.

அகராதியில் காண்க


ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி

கலைச்சொல் அறிவோம்

Belief	–	நம்பிக்கை	*Philosopher*	–	மெய்யியலாளர்
Renaissance	–	மறுமலர்ச்சி	*Revivalism*	–	மீட்டுருவாக்கம்

10th_Tamil_Unit 8.indd 200 12/2/2022 5:37:01 PM

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



நிற்க அதற்குத் தக...

நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன்பயில்பவருடனோ, உடன்பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது..... இந்தச் சமயத்தில் சினம்கொள்ளத் தக்க சொற்களைப் பேசுகிறோம்; கேட்கிறோம்; கைகலப்பில் ஈடுபடுகிறோம்; இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும்...

நாம் செய்யவேண்டுவன (அறங்கள்)	அறங்கள் தரும் நன்மைகள்
நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல்.	நல்ல நண்பர்களைப் பெறலாம்; எதிரிகளையும் நண்பராக்கலாம்.
ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல்.	
பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல்.	

அறிவை விரிவு செய்

அறமும் அரசியலும் – மு. வரதராசனார்

அபி கவிதைகள் – அபி

எண்ணங்கள் – எம்.எஸ். உதயமூர்த்தி







இணையத்தில் காண்க.

https://ta.wikipedia.org/wiki/சங்க_இலக்கியம்

http://tndipr.gov.in/memorials/tamil/kaviarasarkannadasanmanimandapam.html

http://www.ramanujam1000.com/2016/09/blog-post_16.html

10th_Tamil_Unit 8.indd 201 12/2/2022 5:37:02 PM

விதிகளை அறிவோம் ! விழிப்புணர்வு தருவோம் !

இந்த வயதில்தான் மிதிவண்டியை விட்டுவிட்டுப் பெட்ரோல் வண்டிகளை ஓட்டிப் பார்க்க மனம் ஆசைப்படும். அப்பாவிடம், அண்ணனிடம், தெரிந்தவர்களிடம் வண்டிகளை இரவல் வாங்கிச் சாலையில் வேகமாக ஓட்டத்தோன்றும். ஆனால் உரிய ஓட்டுநர் உரிமம் இன்றிச் சாலைகளில் வண்டிகளை ஓட்டக்கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

விதித்திருப்பதை அறிவோம்! அறிந்ததை மற்றவர்களுக்குச் சொல்வோம் – உரிய காலத்தில் பயன்படுத்துவோம்!

ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள்

- சாலைகளில் இடப்பக்கம் வண்டிகள் செல்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்! அதுதான் முதல் விதி.
- சாலையின் ஓரங்களில் இருக்கும் அடையாளப் பலகைகளைப் புரிந்து ஊர்திகளை இயக்கவேண்டும்.
- மகிழுந்தில் செல்பவர்கள் கட்டாயம் இருக்கைப்பட்டை அணியவேண்டும். அதுவே உயிர்ப் பாதுகாப்பு!
- காதுகளை அடைத்தவாறு காதணி பேசிகளை அணிந்துகொண்டு பாடல் கேட்கவேண்டுமானால் பின்னிருக்கையில் அமர்ந்து செல்லுங்கள் – ஊர்தியை இயக்கியவாறு அல்ல!
- சாலையில் இடப்பக்கம் திரும்ப, முடிந்த அளவு இடப்பக்கம் வந்த பிறகு, வண்டியின் இடப்புறச் சைகைவிளக்கை ஒளிரவிட்டவாறு, கண்ணாடியில் கண்காணித்துக்கொண்டே இடப்பக்கமாகத் திரும்பவேண்டும்.
- அதேபோல வலப்பக்கமாகத் திரும்புவதற்கு, முதலில் அதிகக் கவனத்துடன் சாலையின் நடுவில் வரவேண்டும். பிறகு எச்சரிக்கையுடன் வலப்புறச் சைகைவிளக்கை ஒளிரவிட்டவாறு கண்ணாடியில் கண்காணித்துக்கொண்டே திரும்ப வேண்டும்.
- சிலர் பந்தயங்களில் ஓட்டுவதைப்போலச் சாலையில் செல்லும் வண்டிகளை இடமாகவும் வலமாகவும் கடந்து, பின்னால் வருபவர்களுக்குக் கடும் அச்சத்தைக் கிளப்பியவாறு ஓட்டுவார்கள்! அதைப் பார்த்து நாமும் கிளர்ச்சி அடைந்து வேகமாக ஓட்ட முயலக் கூடாது. மித வேகம் – மிகுந்த பாதுகாப்பு!
- சாலையைப் பயன்படுத்தும் அனைவரும் தீயணைப்பு ஊர்திக்கும் பிணியாளர் ஊர்திக்கும் முன்னுரிமை தந்து வழிவிடவேண்டும்.
- சாலையில் இருபுறமும் நடந்துவருபவர்கள் அவர்களுக்குரிய சாலையைக் கடக்கும் இடங்களில் கடப்பதற்கு வழிவிடவேண்டும்.
- ஊர்திகளை அடுத்தவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தாதவாறு நிறுத்தவேண்டும்.
- சிவப்பு விளக்கைக் கண்டவுடன் சாலையில் நிறுத்தக் கோட்டுக்கு முன்பாக ஊர்தியை நிறுத்தவேண்டும்.

ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கையில் கட்டாயம் வைத்திருக்க வேண்டியவை :

- ஓட்டுநர் உரிமம்
- ஊர்தியின் பதிவுச் சான்றிதழ்
- ஊர்திக்குச் செலுத்திய வரிச் சான்றிதழ்
- ஊர்திக் காப்பீட்டுச் சான்றிதழ்
- மகிழுந்து, சரக்குந்து போன்ற வண்டிகள், அப்பகுதிகளில் ஓட்டுவதற்கான இசைவுச் சான்றிதழ்

- நமக்கும் சாலையில் பயணிக்கும் பிறருக்கும் விபத்து ஏற்படாவண்ணம் பாதுகாப்பாக ஊர்திகளை இயக்கவேண்டும்.
- விபத்துகளைக் கண்ணுற்றால் முதலுதவி, பிணியாளர் ஊர்தியை அழைத்தல் போன்ற நம்மால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டும்


அடுத்தவரின் வலியையும் வேதனையையும் திறன்பேசியில் படமெடுத்து சமூக வலைத்தளங்களில் போடுதல் போன்ற பொறுப்பற்ற செயல்களைக் கட்டாயமாகத் தவிர்க்கவேண்டும்.

10th_Tamil_Unit 8.indd 202 12/2/2022 5:37:02 PM

இயல் ஒன்பது

மனிதம், ஆளுமை

அன்பின் மொழி



கற்றல் நோக்கங்கள்

- மாற்றுச்சிந்தனைகள் சமூகத்தில் ஒருவரைத் தனித்து அடையாளம் காட்டுவதை உணர்ந்து, அதுபோன்று சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளுதல்.
- மனித மாண்புகளையும் விழுமியங்களையும் வெளிப்படுத்தும் வாயில்களான இலக்கியங்களின் உட்பொருளை அறிய முற்படுதல் .
- நேர்த்தியும் செப்பமும் கொண்ட கதைகளை ஆர்வத்துடன் படிக்கவும் எழுதவும் பழகுதல்.
- ஓர் ஆளுமையை மையமிட்ட கருத்துக்களைத் தொகுத்து முறைப்படுத்திச் சீர்மையுடன் இதழ் வடிவில் வெளிப்படுத்தும் திறன் பெறுதல்.
- அணியிலக்கணக் கூறுகளைச் செய்யுளுடன் தொடர்புபடுத்தி அதன் சுவையுணர்ந்து நயத்தல்.

10th_Tamil_Unit 9.indd 203 13-02-2023 15:43:51

ஜெயகாந்தம்

– நினைவு இதழ்

B8W0H

கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன். சமகாலக் கருத்துகளையும் நிகழ்வுகளையும் சமகால மொழியில் சமகால உணர்வில் தந்தவர் அவர்; சிறுகதை, புதினம், திரைப்படம், முன்னுரை, பேட்டி என எதைத் தொட்டாலும் தனிமுத்திரை பதித்தவர்; இலக்கியத்திற்கான பெரும் விருதுகளை வென்றவர். மனிதம் தோய்ந்த எழுத்தாளுமை மிக்கவர் ஜெயகாந்தன். அவரது காந்தத் தன்மையுடைய எழுத்தை நினைவூட்டும் வகையில் அவரது படைப்புப் புதையலிலிருந்து சில மணிகளைத் தொடுத்து ஜெயகாந்தம் என்னும் நினைவு இதழ் உருவாக்கப்பட்டுள்ளது.

உள்ளே...

- எதற்காக எழுதுகிறேன்? – ஜெயகாந்தன்
- இவர்கள் பார்வையில் ஜெயகாந்தன்
- ஈன்ற முத்துகளில் சில (எழுதிய நூல்கள்)
- திரைப்படமான படைப்புகள்
- முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன்
- இன்னுமொரு முகம் (கவிதை)
- தொடுத்த கேள்விகளும் கொடுத்த பதில்களும் (கேள்வி பதில்)
- தர்க்கத்திற்கு அப்பால் – கதை



24.04.1934 – 08.04.2015



விருதுகள்

- குடியரசுத் தலைவர் விருது (உன்னைப்போல் ஒருவன்– திரைப்படம்)
- சாகித்திய அகாதெமி விருது – சில நேரங்களில் சில மனிதர்கள் (புதினம்)
- சோவியத் நாட்டு விருது (இமயத்துக்கு அப்பால்)
- ஞானபீட விருது
- தாமரைத்திரு விருது

10th_Tamil_Unit 9.indd 204 13-02-2023 15:43:51



எதற்காக எழுதுகிறேன்? – ஜெயகாந்தன்

சமூக அமைப்பின் முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர். நேர்முக எதிர்முக விளைவுகளைப் பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபிமானத்தை வாசக நெஞ்சங்களில் விதைத்தவர். தன்னையறிதல் என்பதிலும் தன்னை உணர்த்துதல் என்பதிலும் முனைப்பாக இருந்தவர். அவர்தான் ஜெயகாந்தன்

நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு, என் எழுத்துக்கு ஒரு இலட்சியமும் உண்டு. நான் எழுதுவது, முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும் எனது தனிமுயற்சியின் பயனுமாகும்.

இந்த நாட்டில், வியாசன் முதல் பாரதி வரை எதற்காக எழுதினார்கள்? இவர்களில் யாராவது கலையைத் தாங்கிப் பிடிக்க என்று சொல்லிக்கொண்டதுண்டா? இவர்களைவிட கலையைத் தாங்கியவர்களும், காலம் காலமாய் வாழும், வாழப்போகும் கலா சிருஷ்டிகளைத் தந்தவர்களும் உண்டா?

தர்மார்த்தங்களை உபதேசிக்கவே வியாஸர் பாரதத்தை எழுதினார்.

தமிழ் இலக்கணமே நூலினியல்பாவது என்னவென்று சொல்லும் போது,

'நூலினியல்பே நுவலின் ஓரிரு

பாயிரந்தோற்றி மும்மை யினொன்றாய்

நாற்பொருட் பயத்தலொடு எழுமதந் தழுவி'

என்று நூலின் பயன் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு பயனுக்காக இருத்தல் வேண்டும் என்று சொல்லி அதன் பின்னர்தான் விளக்கங்களைக் கூறிச் செல்கிறது.

கலைத்தன்மைக்கு எந்தவிதக் குறைவும் வராமல், கலாதேவியின் காதற் கணவனாகவும் சமுதாயத் தாயின் அன்புப் புதல்வனாகவும் இருந்துதான் நான் எழுதுகிறேன்.

அர்த்தமே வடிவத்தை வளமாக்குகிறது அல்லவா? வெறும் வடிவம் மரப்பாச்சிதான். ஆகையினால் இவற்றைப் பிரித்துக்கொண்டு அவஸ்தைக்கு உள்ளாகின்றார். நமது அறியாமையால் அவஸ்தைகளுக்குள்ளாகி, பிறரையும் நமது அறியாமையால் அவஸ்தைக்கு உட்படுத்தாமல், சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன். கலைப்பணி என்றாலே அதனுள் சமூகப் பார்வை அடக்கம். பிரித்துப் பேசும் போக்கு வந்துவிட்டதால் பிரித்துச் சொல்கிறேன். அது சேர்ந்துதான் இருக்கிறது.

'எதற்காக எழுதுகிறேன்?' என்று நான் சொன்ன காரணங்களுக்குப் புறம்பாக நடந்தால் நான் கண்டிக்கப்படவும், திருத்தப்படவும் உட்பட்டிருக்கிறேன்.

இவர்கள் பார்வையில் ஜெயகாந்தன்



பள்ளிக்கல்வி அளவே படித்திருந்த ஜெயகாந்தன் தமிழிலக்கிய உலகில் மிகப் பெரிய ஆளுமையாகத் திகழ்கிறார். எல்லாத்தரப்பு மொழிகளையும் ஆண்ட வல்லமை அவருக்கிருந்தது.

- *"ஜெயகாந்தன், எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களைக் குறிப்பிடத் தவறுவதில்லை. துவேஷத்தைப் பரப்புவது, அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாதது. அவர் அரசியலில் தொடர்ந்து பங்கு பெறாமல் போனதற்கு இதுகூட காரணமாக இருந்திருக்கலாம்."*

  – அசோகமித்திரன்

- *கச்சிதமான உருவம், கனமான உள்ளடக்கம், வலுவான நடை, புதுக்கருத்துகள், புதுவிளக்கங்கள், ஆழம், கனம் இந்த அம்சங்களை இவருடைய சிறுகதைகளில் பூரணமாகக் காணலாம். அதுமட்டுமின்றிப் பலதிறப்பட்ட சூழ்நிலைகளையும் வெற்றிகரமாகச் சித்தரிப்பது இவருடைய அரிய சாதனை.*

  – வாசகர்களின் கருத்து – தீபம் இதழ் – 1967.

- *நேர் கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச் செருக்கு, கம்பீரமான குரல், வளமான, புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள் – இவை தாம் ஜெயகாந்தன் என்ற செம்மாந்த தமிழனின் சிறப்பான அடையாளங்கள். 'படிக்காத மேதை' என்று குறிப்பிடப்படும் அவர், முறையாகக் கல்லூரிகளில் படிக்கவில்லையே தவிர, தமிழ், இந்திய இலக்கியங்களை மட்டுமன்றி, சோவியத் பிரெஞ்சு இலக்கியங்களைத் தானே படித்து உணர்ந்தது மட்டுமன்றி, வாழ்க்கையையும் ஆழமாகப் படித்தவர் பிறகு அவற்றை வார்த்தைகளில் அழகுறப் படைத்தவர்.*

  – கா.செல்லப்பன்

♦ ♦ ♦ ♦ ♦ ♦

ஈன்ற முத்துகளில் சில (எழுதிய நூல்கள்)


சிறுகதைத் தொகுப்பு	குறும்புதினங்கள்	புதினங்கள்
❖ குருபீடம்	❖ பிரளயம்	❖ பாரீசுக்குப் போ!
❖ யுகசந்தி	❖ கைவிலங்கு	❖ சுந்தர காண்டம்
❖ ஒரு பிடி சோறு	❖ ரிஷிமூலம்	❖ உன்னைப் போல் ஒருவன்
❖ உண்மை சுடும்	❖ பிரம்ம உபதேசம்	❖ கங்கை எங்கே போகிறாள்
❖ இனிப்பும் கரிப்பும்	❖ யாருக்காக அழுதான்?	❖ ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
❖ தேவன் வருவாரா	❖ கருணையினால் அல்ல	❖ இன்னும் ஒரு பெண்ணின் கதை
❖ புதிய வார்ப்புகள்	❖ சினிமாவுக்குப் போன சித்தாளு	❖ ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்

மொழி பெயர்ப்புகள்

- வாழ்விக்க வந்த காந்தி (பிரெஞ்சு மொழியில் வந்த காந்தி வாழ்க்கை வரலாற்றின் தமிழாக்கம்)
- ஒரு கதாசிரியனின் கதை (முன்சி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறு)

♦ ♦ ♦ ♦ ♦ ♦

திரைப்படமான படைப்புகள்



10th_Tamil_Unit 9.indd 206 13-02-2023 15:43:52

முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன்

எழுத்தாளர், ஒருவருடைய படைப்பு நோக்கத்தையும் படைப்பு பாங்கையும் வாழ்க்கைச் சிக்கல்கள் குறித்த கண்ணோட்டத்தையும் உணர்த்துவதுதான் முன்னுரை. தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரைகள் எழுதிக்கொள்ளும் ஜெயகாந்தன், பின்னர் வரவிருக்கும் கேள்விகளுக்குத் தரும் பதில்களாக அவற்றை ஆக்கிவிடுவார்.

பாரீசுக்குப்போ ... புதினத்தின் முன்னுரை




"ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம்... ஓர் எழுத்தாளன் ஆத்ம சுத்தியோடு எழுதுகிறானே அது கேவலம் பிழைப்போ அல்லது ஒரு தொழிலோ அல்ல. அது ஒரு தவம். நீங்கள் கதை என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களே அது காலத்தின், ஒரு வாழ்க்கையின் சாசனம்" (1966)

♦ ♦ ♦ ♦ ♦ ♦

இன்னுமொரு முகம் (கவிதை)

ஜெயகாந்தன் சில கவிதைகளையும் திரைப்பாடல்களையும் படைத்திருக்கிறார். அவரது படைப்பாற்றலின் இன்னொரு பக்கம் அது. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிய அவரின் கவிதை இது

"எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் – ஏழை
கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்
பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் – பழைய
மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்"



♦ ♦ ♦ ♦ ♦ ♦

தொடுத்த கேள்விகளும் கொடுத்த பதில்களும்

உடனுக்குடன் அறிவார்ந்த எதிர்வினையாக ஜெயகாந்தன் அளிக்கும் பதில்களுக்கு முன்னால், கேள்விக்கணைகள் மழுங்கிவிடும்.

சிறுகதைகளைப் படைப்பதில் தங்களுடைய தனித்தன்மை வாய்ந்த திறமையை வாசகர்கள் கொண்டாடுகிறார்களே, இத்துறையில் தாங்கள் கடைப்பிடிக்கும் நுணுக்கங்கள் யாவை?

(பேட்டி – திரு. கிருஷ்ணமணி, 1966)

நுணுக்கமா? அப்படித் தனியாக நான் எதையும் கையாளுவதாக எண்ணிச் செய்வதில்லை. என் மனத்தால், புத்தியால், உணர்வால் நான் அறிந்து அனுபவப்படாத எதைப் பற்றியும் நான் எழுதினதில்லை. என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சினைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சினைகளே.

உங்கள் பார்வையில் சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை எது? மிகப் பெரிய சவால் எது?

மகத்தான சாதனை – பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தது. மிகப் பெரிய சவாலும் அதுவே.

இந்த வயதில், தேசம் செல்லும் பாதை, எழுத்துலகத்தின் போக்கு இவற்றை எல்லாம் பார்க்கும்போது எப்படி இருக்கிறது?

காலந்தோறும் மாற்றங்களை நாம் பார்க்கிறோம். நாமும் மாறிக்கொண்டே இருக்கிறோம்.

10th_Tamil_Unit 9.indd 207 13-02-2023 15:43:53

சிறுகதை

மனிதம் என்பது பரந்து விரிந்த வானம் போன்று எல்லைகளற்றது. இதை நம்மால் மேற்கொள்ள முடியாதென்று ஒதுங்கிவிடக்கூடாது. ஆறுதலளிக்கும் ஒரு புன்னகை, ஒரு தோள்தட்டல், இரண்டொரு அன்புச்சொற்கள், தன்னால் இயன்ற சிறு உதவி இவையெல்லாம் மனிதம்தான். மனிதத்தின் துளியளவு வெளிப்பாடு ஏதோ ஒரு வகையில் நமக்கு உதவக்கூடும்.

தர்க்கத்திற்கு அப்பால்

வெற்றி என்ற வார்த்தைக்குப் பொருளில்லை. நினைத்தது நடந்தால் வெற்றி என்று நினைத்துக் கொள்கிறோம். தோல்வி நிச்சயம் என்று எண்ணித் தோற்றால், அந்தத் தோல்வியே வெற்றிதான்.

ஒருகாலத்தில் எனக்கு இப்படிப்பட்ட 'வெற்றிகள், வாழ்க்கையில் நிறையவே சம்பவித்தன.



என் வாழ்க்கையையே நிர்ணயிக்கும் ஒரு முக்கிய காரியமாய்ப் பக்கத்து நகரத்துக்குப் போயிருந்தேன். வழக்கம்போல, 'தோல்வி நிச்சயம்' என்ற மனப்பான்மையுடன் போன நான், வழக்கத்திற்கு மாறாக அன்று தோற்றுப்போனேன். தோல்வி நிச்சயம் என்ற என் மனப்போக்கு தோற்றது. என் வாழ்க்கையே நிர்ணயிக்கப்பட்டுவிட்டது.

இந்தத் தோல்வியை, அல்லது வெற்றியைக் கொண்டாடித் தீரவேண்டும். ஊருக்குத் திரும்பிய பின்தானே? அல்ல; இப்போதே! நான் ரொம்ப அவசரக்காரன்.

கொண்டாடுவது என்பது பெரிய காரியமா? அது கொள்ளப்பட்ட உள்ளம் தன்னுள் லயித்துக் குதூகலிப்பது. அதன் விளைவாய் ஏற்படும் புற நிகழ்ச்சிகள் பெரிய காரியமன்று. கொண்டாடத்தக்கதைச் சிலர் வானத்தை வண்ணப்படுத்தும் வேடிக்கை நிகழ்த்திக் கொண்டாடுவார்கள். சிலர் நாலுபேருக்கு வயிறார உணவளித்துக் கொண்டாடுவார்கள். இன்னும் சிலர் அந்தப் பொழுதிலாவது தன் வயிறாரத் தான் உண்டு மகிழ்வார்கள். அதெல்லாம் அப்பொழுதிருக்கும் அவரவர் சக்தியைப் பொறுத்தது. எனினும், மனசில் ஏற்படும் அனுபவம் அனைவர்க்கும் ஒன்றுதான்.

இப்பொழுது என் நிலைமை... பையிலிருக்கும் ஒரு வெள்ளி ரூபாய் நாணயம்தான். அதற்கென்ன? இந்த ஒரு ரூபாயிலும் கொண்டாடலாமே! அதுதான் முடியாது. ஊருக்குப் போக முக்கால் ரூபாய் வேண்டும். அதனால்தான் என்ன? கால் ரூபாயில் கொண்டாட முடியாதோ? நிச்சயம் முடியும்.

சங்கரய்யர் ஹோட்டலில் புதுப்பால், புது டிகாக்ஷன், சர்க்கரை கம்மி, ஸ்ட்ராங்கா ஒரு கப் காபி இரண்டணாதான். காபி அருந்தியதும் உடம்பில் ஒரு தெம்பும், மனசில் ஒரு தனிக் குதூகலமும் பிறந்தன. ஊர்திரும்ப ஒதுக்கிவைத்த பன்னிரண்டணா போக, கையில் இருக்கும் இரண்டணாவை என்ன செய்யலாம்? 'கடைசிச் சல்லியையும் ஒரு ராஜாவைப் போல் செலவுசெய்' என்ற பழமொழி நினைவுக்கு வந்தது.

10th_Tamil_Unit 9.indd 208 13-02-2023 15:43:54

"ஐயா தருமதுரை... கண்ணில்லாத பிச்சைக்காரன் ஐயா..!" என்ற குரல். ஸ்டேஷனுக்குள் நுழையும் இடத்தில். ஒரு ஓரமாய் அந்தப் பார்வையற்ற பிச்சைக்காரன் உட்கார்ந்திருந்தான். கிழவன். அவன் எதிரே இருந்த அலுமினியப் பாத்திரத்தில் வெறும் செப்புக்காசுகளே கிடந்தன. அவற்றின் நடுவே நான் போட்ட இரண்டணா, வெள்ளைவெளேரென்று விழுந்தது அழகாகத்தான் இருந்தது. பார்வையற்றவன் அதை எடுத்துத் தடவிப் பார்த்தவாறே நான் இருப்பதாக அவன் நினைத்துக்கொண்ட திசைநோக்கிக் கரம் குவித்து, "சாமி, நீங்கபோற வழிக்கெல்லாம் புண்ணியமுண்டு" என்று வாழ்த்தினான். அதன்பிறகு, உண்மையிலேயே நாலணாவில் அந்த நல்லநாளைக் கொண்டாடிவிட்ட நிறைவு பிறந்தது எனக்கு.

புக்கிங் கவுண்டரின் அருகேபோய் என் சொந்தக் கிராமத்தின் பெயரைச் சொல்லிச் சில்லறையை நீட்டினேன். டிக்கெட்டை எதிர்பார்த்து நீண்டிருந்த என் கைக்குள் மீண்டும் சில்லறையே விழுந்தது.

"இன்னும் ஓரணா கொடுங்கள் ஸார்!"

"பன்னிரண்டணாதானே?"

"அது நேற்றோடு சரி. இன்னிலேருந்து அதிகம்."

என்கை சில்லறையுடன் வெளியே வந்தது. திடீரென்று பாதாளத்தில் வீழ்ச்சியுற்றது போன்ற திகைப்பில் நின்றுவிட்டேன். 'யாரிடம் போய் ஓரணா கேட்பது?'

'அதோ ஒரு பெரியவர் பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறாரே, அவரிடம்...' என்று நினைக்கும்போதே, 'ஓரணாதானே, கேட்டால்தான் என்ன' என்று நினைக்கும்போதே, கேட்டால் என்ன நடக்கும் என்பது தெளிவாகிக் கொண்டிருந்தது. அங்கே! யாரோ ஒருவன் அவர் அருகே சென்றான். அவன் என்ன கேட்டானோ..? அவர் சொன்ன பதில் உலகத்துக்கே கேட்டது. எனக்கும் உறைத்தது. இரண்டணா தர்மம் செய்து ஐந்து நிமிஷம் ஆகவில்லை... ஓரணாவுக்கு யாசிப்பதா என்று யோசிக்கும் நிலை வந்துவிட்டதை எண்ணும்போது, மனம்தான் வாழ்க்கையுடன் என்னமாய்த் தர்க்கம் புரிகிறது?

'அதோ, அந்த பார்வையற்றவனின் அலுமினியப் பாத்திரத்தில் செப்புக்காசுகளின் நடுவே ஒளிவிட்டுச் சிரிக்கிறதே இரண்டணா, அது என்னுடையது!'

'அது எப்படி உன்னுடையதாகும்? நீ கொடுத்துவிட்டாய்; அவன் வாழ்த்திவிட்டான்!'

'இப்ப சந்தியில் நிற்கிறேனே? அதில் ஓரணா கூடவா எனக்குச் சொந்தமில்லை? அவன் பாத்திரத்தில் கிடந்தாலும் அது என்னுடையது அல்லவா? கேட்டால் தருவானா? தரமாட்டான். அவனுக்கு எப்படித் தெரியும் அதைப் போட்டவன் நான் என்று!'

'எடுத்துக்கொண்டால்..? அதோ, ஒரு ஆள் ஓரணா போட்டுவிட்டு அரையணா எடுத்துக் கொள்கிறானே! அதுபோல ஓரணாவைப் போட்டுவிட்டு அந்த என்னுடைய இரண்டணாவை எடுத்துக் கொண்டால்..?'

'இது திருட்டு அல்லவா?'

'திருட்டா? எப்படியும் என் பக்கத்திலிருந்து தர்மமாக ஓரணா அவனுக்குக் கிடைக்குமே! அந்த ஓரணா புண்ணியம் போதும்; என் காசை நான் எடுத்துக் கொள்கிறேன்' என்று பொருளாதார ரீதியாய்க் கணக்கிட்டுத் தர்க்கம் பண்ணியபோதிலும், திருடனைப் போல் கை நடுங்குகிறது. ஓரணாவைப் போட்டேன்; இரண்டணாவை எடுத்துக்கொண்டு திரும்பினேன்.

"அடப்பாவி!" திரும்பிப் பார்த்தேன். பார்வையற்ற விழிகள் என்னை வெறிக்க, வாழ்த்தத் திறந்த வாயால் சபிப்பது போல் அவன் கேட்டான்...

"சாமி, இதுதானுங்களா தர்மம்? யாரோ ஒரு புண்ணியவான் இரண்டணா போட்டாரு, அதை எடுத்துக்கிட்டு, ஓரணா போடறியே? பார்வையற்றவனை ஏமாத்தாதே, நரகத்துக்குத்தான் போவே!"

10th_Tamil_Unit 9.indd 209 13-02-2023 15:43:54

சிறுகதை

நெருப்புக் கட்டியைக் கையிலெடுத்ததுபோல் அந்த இரண்டணாவை அலுமினியத் தட்டில் உதறினேன். இப்பொழுது என் கணக்கில் மூன்றணா தர்மம்.

'தெரியாம எடுத்துட்டேன்' என்று சொல்லும்போது, என் குரலில் திருட்டுத்தனம் நடுங்கியது.

ஒரு பெண் அரையணா போட்டுவிட்டுக் காலணா எடுத்துச் சென்றாள். பார்வையற்றவன் உடனே இரண்டணா இருக்கிறதா என்று தடவிப் பார்த்தான். அப்படிப் பார்த்தபோது அது இல்லாதிருந்துதான் நான் சிக்கிக்கொண்டேன் என்று புரிந்தது. அது அவனுக்குக் கிடைக்காமல் கிடைத்த செல்வம். விட மனம் வருமா?

நான் யோசித்தேன்.

'அது அவன் பணமா?'

'ஆமாம்!'

'நான்தானே தந்தேன்!'

'காசைத்தான் கடன் தரலாம்; தருமத்தைத் தரமுடியுமா? தருமத்தை யாசித்து, தந்தால்தான் பெறவேண்டும்.'

வெகுநேரம் நின்றிருந்தேன். நான் போகவேண்டிய ரயில் வந்து போய்விட்டது. அடுத்த வண்டிக்கு இன்னும் நேரமிருக்கிறது. தர்மத்தின் பலனை அடுத்த ஸ்டேஷன்வரை கால்வலிக்க நடந்து அனுபவித்தேன்.

சில வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஒரு கோர ரயில் விபத்தைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். அது, அன்று நான்போக இருந்து, தவறவிட்ட ரயில்தான். இந்த விபத்திலிருந்து நான் எப்படித் தப்பினேன்? தருமம் காத்ததா?

எனக்குத் தெரியாது. இதெல்லாம் தர்க்கத்திற்கு அப்பாற்பட்டது!

◆ ◆ ◆ ◆ ◆ ◆

நூல் வெளி

ஜெயகாந்தன் பேசி, 'எதற்காக எழுதுகிறேன்?' என்ற தலைப்பில் கட்டுரையாகத் தொகுக்கப்பட்ட பகுதியும் 'யுகசந்தி' என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'தர்க்கத்திற்கு அப்பால்' என்னும் சிறுகதையும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. தான் வாழ்ந்த காலத்தில் சிக்கல்கள் பலவற்றை ஆராய, எடுத்துச்சொல்ல, தன் பார்வைக்கு உட்பட்ட தீர்ப்பைச் சொல்ல அவர் மேற்கொண்ட நடவடிக்கையே படைப்பு. அவருடைய படைப்புகள் உணர்ச்சி சார்ந்த எதிர்வினைகளாக இருக்கின்றன. இதுவே அவருக்குச் 'சிறுகதை மன்னன்' என்ற பட்டத்தைத் தேடித்தந்தது. இவர் குறும்புதினங்களையும் புதினங்களையும் கட்டுரைகளையும் கவிதைகளையும் படைத்துள்ளார்; தன் கதைகளைத் திரைப்படமாக இயக்கியிருக்கிறார்; தலைசிறந்த உரத்த சிந்தனைப் பேச்சாளராகவும் திகழ்ந்தார்; சாகித்திய அகாதெமி விருதையும் ஞானபீட விருதையும் பெற்ற இவருடைய கதைகள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.



கற்பவை கற்றபின்...

- வகுப்பு மாணவர்களின் படைப்புகளைத் திரட்டிக் குழுவாக இணைந்து கையெழுத்து இதழ் ஒன்றை உருவாக்குக.

10th_Tamil_Unit 9.indd 210 13-02-2023 15:43:54

மனிதம்

கூ

சித்தாளு

– நாகூர்ரூமி

7HDK8



வானுயர்ந்த கட்டடங்களைப் பார்த்து வியக்கிறோம். அதிசயம் என்றும் போற்றுகிறோம் . அதை உருவாக்க உழைத்தவர், வியர்த்தவர், இடுப்பொடியப் பாடுபட்டவர்களை நினைத்ததுண்டா? அந்த ஏழைகளின் துயரை, ஏங்கிடும் அவர் வாழ்வை அவர்களின் பசிக்குறி முகங்களை நொடியேனும் நினைப்பதுண்டா? இன்னலிலே இருக்கும் தொழிலாளர்கள் நிலையைக் கவிஞர்கள் நினைக்கிறார்கள்.தொழிலாளர்களின் மனச்சுமையை அறியாத செங்கற்களைப் போலவே இருக்கும் கல்மனங்களுக்குள் மனிதத்தைப் புகுத்திவிடுகிறார்கள்.

பொற்காலமாக இருந்தாலும்
இவள் தலையில் எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும்.
தொலைந்ததே வாழ்வு என
தலையில் கைவைத்து
புலம்புவார் பூமியிலே
தன் வாழ்வு தொலைக்காமல்
தற்காத்து வைப்பதற்காய்
தலையில் கைவைக்கிறாள் இவள்.
வாழ்வில் தலைக்கனம்
பிடித்தவர் உண்டு.
தலைக்கனமே வாழ்வாக
ஆகிப்போனது இவளுக்கு.

அடுக்குமாடி அலுவலகம்
எதுவாயினும்
அடுத்தவர் கனவுக்காக
அலுக்காமல் இவள் சுமக்கும்
கற்களெல்லாம்
அடுத்தவேளை உணவுக்காக.
செத்தாலும் சிறிதளவே
சலனங்கள் ஏற்படுத்தும்
சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது.



நூல் வெளி



முகம்மதுரஃபி என்னும் இயற்பெயரைக் கொண்ட நாகூர்ரூமி தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்; இவர் எண்பதுகளில் கணையாழி இதழில் எழுதத் தொடங்கியவர். கவிதை, குறுநாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு எனப் பலதளங்களில் இவர் தொடர்ந்து இயங்கி வருபவர். மீட்சி, சுபமங்களா, புதிய பார்வை, குங்குமம், கொல்லிப்பாவை, இலக்கிய வெளிவட்டம், குமுதம் ஆகிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளியாகியுள்ளன. இதுவரை நதியின் கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல் ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன. மொழிபெயர்ப்புக் கவிதைகள், சிறுகதைத்தொகுதிகள் ஆகியவற்றுடன் 'கப்பலுக்குப் போன மச்சான்' என்னும் நாவலையும் படைத்துள்ளார்.



கற்பவை கற்றபின்...

- மனிதநேயத்தை வெளிப்படுத்தும் புதுக்கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.


10th_Tamil_Unit 9.indd 211 13-02-2023 15:43:55

மனிதம்

கூ

தேம்பாவணி


– வீரமாமுனிவர்



பசுந்தங்கம், புதுவெள்ளி, மாணிக்கம், மணிவைரம் யாவும் ஒரு தாய்க்கு ஈடில்லை என்கிறார் ஒரு கவிஞர். தாயின் அன்பை எழுத உலகின் மொழிகள் போதாது; தாயையிழந்து தனித்துறும் துயரம் பெரிது. மகிழ்ச்சியைப் பகிர்ந்தால் பெருகும்; துயரைப் பகிர்ந்தால் குறையும்; சுவரோடாயினும் சொல்லி அழு என்பார்களல்லவா? துயரத்தைத் தாங்கிக் கொள்ளும் மனங்கள் மனிதத்தின் முகவரிகள்! சாதாரண உயிரினங்களுக்கும் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளும் மனிதம் இருந்தால் எத்தனை ஆறுதல்!.

முன்நிகழ்வு

கிறித்துவிற்குமுன் தோன்றியவர் திருமுழுக்கு யோவான். இவரை அருளப்பன் என்றும் குறிப்பிடுவர். இவரே கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி. வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இவருக்குக் கருணையன் என்று பெயரிட்டுள்ளார். கருணையன் தன் தாயார் எலிசபெத் அம்மையாருடன் கானகத்தில் வாழ்ந்து வந்தார். அச்சூழலில் அவருடைய தாய் இறந்துவிட்ட போது கருணையன் அடையும் துன்பத்தில் இயற்கையும் பங்குகொண்டு கலங்கி ஆறுதல் அளிப்பதை இப்பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.



இரங்கி அழும் கருணையனுக்கு இரங்கும் இயற்கை

எலிசபெத் அம்மையார் அடக்கம், கருணையன் கண்ணீர்

1. *பூக்கையைக் குவித்துப் பூவே*
புரிவொடு காக்கென்று அம்பூஞ்
சேக்கையைப் பரப்பி இங்கண்
திருந்திய அறத்தை யாவும்
யாக்கையைப் பிணித்தென்று ஆக
இனிதிலுள் அடக்கி வாய்ந்த
ஆக்கையை அடக்கிப் பூவோடு
அழுங்கணீர் பொழிந்தான் மீதே. 2388

சொல்லும் பொருளும்

சேக்கை – படுக்கை
யாக்கை – உடல்
பிணித்து – கட்டி
வாய்ந்த – பயனுள்ள

10th_Tamil_Unit 9.indd 212 13-02-2023 15:43:55

2. *வாய்மணி யாகக் கூறும்*
வாய்மையே மழைநீ ராகித்
தாய்மணி யாக மார்பில்
தயங்கியுள் குளிர வாழ்ந்தேன்
தூய்மணி யாகத் தூவும்
துளியிலது இளங்கூழ் வாடிக்
காய்மணி யாகு முன்னர்க்
காய்ந்தெனக் காய்ந்தேன் அந்தோ. 2400

சொல்லும் பொருளும்

இளங்கூழ் – இளம்பயிர்
தயங்கி – அசைந்து
காய்ந்தேன் – வருந்தினேன்

3. *விரிந்தன கொம்பில் கொய்த*
வீயென உள்ளம் வாட
எரிந்தன நுதிநச்சு அம்புண்டு
இரும்புழைப் புண்போல் நோகப்
பிரிந்தன புள்ளின் கானில்
பெரிதழுது இரங்கித் தேம்பச்
சரிந்தன அசும்பில் செல்லும்
தடவிலா தனித்தேன் அந்தோ! 2401

சொல்லும் பொருளும்

கொம்பு – கிளை
புழை – துளை
கான் – காடு
தேம்ப – வாட
அசும்பு – நிலம்

4. *உய்முறை அறியேன்; ஓர்ந்த*
உணர்வினொத்து உறுப்பும் இல்லா
மெய்முறை அறியேன்; மெய்தான்
விரும்பிய உணவு தேடச்
செய்முறை அறியேன்; கானில்
செல்வழி அறியேன்; தாய்தன்
கைமுறை அறிந்தேன் தாயும்
கடிந்தெனைத் தனித்துப் போனாள். 2403

சொல்லும் பொருளும்

உய்முறை – வாழும் வழி
ஓர்ந்து – நினைத்து
கடிந்து – விலக்கி

இயற்கை கொண்ட பரிவு

5. **நவமணி வடக்க யில்போல்*
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே. * 2410

சொல்லும் பொருளும்

உவமணி – மணமலர்
படலை – மாலை
துணர் – மலர்கள்

10th_Tamil_Unit 9.indd 213 13-02-2023 15:43:55

பாடலின் பொருள்

1. கருணையன், தன் மலர் போன்ற கையைக் குவித்து, "பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக'' என்று கூறி, குழியினுள் அழகிய மலர்ப்படுக்கையைப் பரப்பினான். இவ்வுலகில் செம்மையான அறங்களையெல்லாம் தன்னுள் பொதிந்து வைத்து, பயனுள்ள வாழ்க்கை நடத்திய தன் அன்னையின் உடலை, மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன்மேல் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒரு சேரப் பொழிந்தான்.

2. "என் தாய், தன் வாயாலே மணிபோலக் கூறும் உண்மையான சொற்களையே மழைநீராக உட்கொண்டு, அத்தாயின் மார்பில் ஒரு மணிமாலையென அசைந்து, அழகுற வாழ்ந்தேன். ஐயோ! இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே தூய மணிபோன்ற தூவும் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்துவிட்டதைப்போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேனே!"

3. "என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப்போல வாடுகிறது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான, புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம். துணையைப் பிரிந்த ஒரு பறவையைப்போல நான் இக்காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன்; சரிந்த வழுக்கு நிலத்திலே, தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன்."

4. "நான் உயிர்பிழைக்கும் வழி அறியேன்; நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன்; உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன்; காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன்; என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன். என்னைத் தவிக்க விட்டுவிட்டு என்தாய் தான் மட்டும் தனியாகப் போய்விட்டாளே!"

5. நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்ததுபோன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன், இவ்வாறு புலம்பிக் கூறினான். அது கேட்டுப் பல்வேறு இசைகளை இயக்கியது போன்று, தேன்மலர்கள் பூத்த மரங்கள் தோறும் உள்ள, மணம்வீசும் மலர்களும் மலர்ந்த சுனை தோறும் உள்ள, பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டன.

இலக்கணக் குறிப்பு

காக்கென்று	–	காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம்
கணீர்	–	கண்ணீர் என்பதன் இடைக்குறை
காய்மணி உய்முறை செய்முறை	–	வினைத்தொகைகள்
மெய்முறை	–	வேற்றுமைத்தொகை
கைமுறை	–	மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

10th_Tamil_Unit 9.indd 214 13-02-2023 15:43:55

பகுபத உறுப்பிலக்கணம்

அறியேன் – அறி + ய் + ஆ + ஏன்

அறி – பகுதி

ய் – சந்தி

ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

ஒலித்து – ஒலி + த் + த் + உ;

ஒலி – பகுதி;

த் – சந்தி;

த் – இறந்தகால இடைநிலை;

உ – வினையெச்ச விகுதி

இஸ்மத் சன்னியாசி –தூய துறவி

வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக்கொண்டார். இவருடைய எளிமையையும், துறவையும் கண்டு வியந்த சந்தாசாகிப் இஸ்மத் சன்னியாசி என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு அளித்தார். இந்தப் பாரசீகச் சொல்லுக்குத் தூய துறவி என்று பொருள்.

நூல் வெளி





தேம்பா + அணி எனப் பிரித்து வாடாதமாலை என்றும், தேன் + பா + அணி எனப் பிரித்து தேன்போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்றும் இந்நூலுக்குப் பொருள் கொள்ளப்படுகின்றது. கிறித்துவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பர் என்னும் யோசேப்பினைப் (வளனை) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல் இது. இப்பெருங்காப்பியம் 3 காண்டங்களையும் 36 படலங்களையும் உள்ளடக்கி, 3615 பாடல்களைக் கொண்டுள்ளது.

17ஆம் நூற்றாண்டில் படைக்கப்பட்டது தேம்பாவணி. இக்காப்பியத்தை இயற்றியவர் வீரமாமுனிவர். இவரது இயற்பெயர் கான்சுடான்சு சோசப் பெசுகி. தமிழின் முதல் அகராதியான சதுரகராதி, தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்), சிற்றிலக்கியங்கள், உரைநடை நூல்கள், பரமார்த்தக் குருகதைகள், மொழிபெயர்ப்பு நூல்கள் ஆகியவற்றை இவர் படைத்துள்ளார்.



கற்பவை கற்றபின்...

1. *வீரமாமுனிவர் தமிழகத்தில் தங்கிப் பணிசெய்த இடங்களைப்பற்றியும் அங்கு அவர் ஆற்றிய தமிழ்ப்பணிகளைப் பற்றியும் நூலகத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டுக .*

2. *கண்ணதாசனின் இயேசு காவியத்தில் மலைப்பொழிவுப் பகுதியைப் படித்து அதில் வரும் அறக்கருத்துகளை எழுதுக.*

10th_Tamil_Unit 9.indd 215 13-02-2023 15:43:55

விரிவானம்

மனிதம்

கூ

ஒருவன் இருக்கிறான்

– கு. அழகிரிசாமி



துணையின்றி வாழும் நிலை இரங்கத்தக்கது! எப்படிப்பட்டவராக இருந்தாலும் பிறரது துணையைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. துணையே இல்லாதவர் என்று கருதி நாம் அலட்சியம் செய்பவருக்கும் துணையொன்று இருப்பதை அறியும்போது நமக்குக் குற்றவுணர்ச்சி தோன்றும் வாய்ப்பிருக்கிறது. எப்படிப்பட்டவருக்கும் ஒரு துணை இருக்கும். அந்தத் துணைதான் மனிதத்தின் வேருக்கு நீர். அதில் மனிதம் துளிர்க்கும்.

பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்னால் நான் ஆபீசிலிருந்து திரும்பி வீட்டுக்கு வந்தபோது அவன் வாசல் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். வயது இருபத்தைந்து இருக்கும். எலும்பும் தோலுமான உடம்பு. எண்ணெய் காணாத தலை, காடாக வளர்ந்து கிடந்தது. சட்டையும் வேஷ்டியும் ஒரே அழுக்கு. சட்டையில் ஒரு பொத்தான்கூட இல்லை. கால்களைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த அவன், இடது கையால் அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டிருப்பதையும் பார்த்தேன். என்னை ஒரு தரம் ஏறிட்டுப் பார்த்தான். காய்ந்துபோன விழிகள். அவற்றில் ஒரு பயம். தன் நிலையை எண்ணிக் கூசும் ஓர் அவமானம்.

"யாரப்பா நீ? எங்கே வந்தே?" என்று முகத்தில் வெறுப்பைப் பூரணமாகக் காட்டிக்கொண்டு கேட்டேன்.

கையை அடிவயிற்றிலிருந்து எடுக்காமலே ஒரு பெருமூச்சுவிட்டான். பிறகு பதில் சொன்னான். "தங்கவேலு வீட்டுக்கு வந்திருக்கிறேன்".

தங்கவேலு என் பக்கத்துக் குடித்தனக்காரர்.

மனைவியிடம், "வயித்துவலிக்காரன் வந்திருக்கிறான்போல் இருக்கிறது. பக்கத்து வீட்டுக்கு விருந்தாளியா!" என்று தமாஷாகச் சொன்னேன்.

"காஞ்சிபுரம். பக்கத்து வீட்டு அம்மாவுக்கு அக்கா மகனாம். வைத்தியம் பார்க்க வந்திருக்கிறான்" என்றாள் மனைவி.

இரவு தங்கவேலு வீடு திரும்பினார். ஒன்பது மணிக்கெல்லாம் அவன் ஒரு பழைய தலையணையையும் கிழிந்த போர்வையையும் எடுத்துக்கொண்டு வந்தான். தங்கவேலு அவனை அழைத்துக்கொண்டு வந்து, நான்கு குடித்தனங்களுக்கும் பொதுவான சிமிண்டு நடைபாதையில் படுத்துக்கொள்ளச் சொன்னார். அந்த இடம் என்னுடைய அறையின் மற்றொரு ஜன்னலுக்கு நேராக இருந்தது. அந்நோயாளி என் தலைமேல் வந்து உட்கார்ந்துகொண்டதாகவே நினைத்தேன். அதை ஆட்சேபிக்கவும் முடியவில்லை. தங்கவேலுவின் குடித்தனப் பகுதியில் அவன் படுத்துக் கொள்ளலாம் என்றால், அங்கே உண்மையிலேயே இடம் இல்லை.

எனக்கு மிகவும் கவலையாகப் போய்விட்டது. அதை மனைவியிடமும் சொன்னேன். "பாவம்! நோயாளியாய் இருக்கிறான். கிடந்துட்டுப் போகட்டும்" என்றாள் மிகுந்த இரக்கத்தோடு.

மறுநாள் தங்கவேலுவை விசாரித்தபோது அவனைப் பற்றி மேற்கொண்டு சில விவரங்கள் கிடைத்தன.

10th_Tamil_Unit 9.indd 216 13-02-2023 15:43:56

அவன் அவருடைய மனைவிக்கு அக்கா பிள்ளை என்பது உண்மைதான். தாய் தகப்பன் கிடையாது. அவனுக்கு இருந்த உறவு தங்கவேலுவின் மனைவியான அவனுடைய சித்தியும், காஞ்சிபுரத்திலேயே உள்ள தாய்மாமன் ஒருவனுந்தான். அந்த ஊரில் தாய்மாமன் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டு, ஒரு சைக்கிள் ரிப்பேர்க் கடையில் தினக்கூலியாக ஒன்றரையும் இரண்டும் வாங்கிக்கொண்டு வேலைசெய்து வந்தானாம். வயிற்றுவலி வந்து ஆறேழு மாதங்களாக வேலை இல்லை. சம்பாத்தியமும் இல்லை. நோயும் வேறு. இந்த நிலையில் தாய்மாமன் வீட்டிலிருந்து அவனை ஒரு வழியாக விரட்டிவிட்டார்கள். அங்கிருந்து, சித்தியை நம்பிச் சென்னைக்கு வந்திருக்கிறான், வைத்தியம் பார்ப்பதற்கு.

இவ்வளவு கதையையும் தங்கவேலு சொல்லிக்கொண்டிருக்கும் போது அவன் தெருத் திண்ணையில்தான் இருந்தான். நாங்கள் பேசியது அவனுக்கு நன்றாகக் கேட்டிருக்கும். கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் தங்கவேலுவும் குரலைச் சற்று உயர்த்தியே பேசினார். அவர் வாயிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு சொல்லும் அவனைக் குற்றம் சாட்டுவது போலவும், அவன் எதற்காக இங்கே வந்தான் என்று கேட்பதுபோலவும், அவன் வீட்டை விட்டு உடனே தொலைந்தால் நல்லது என்று கருதுவது போலவும் ஒலித்தது. எனக்கும் அது பிடித்திருந்தது.

தங்கவேலுவின் மனைவிக்கும் அவன் வந்திருப்பது பிடிக்கவில்லையாம்! என் மனைவி சொன்னதைப் பார்க்கும்போது, தங்கவேலுவை முந்திக்கொண்டு அவனை விரட்டுவதற்கு அவள் அவசரப்படுவதாகத் தெரிந்தது. எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

"தொலைகிற பீடை சீக்கிரமா தொலையட்டும்" என்று சொல்லி என் மனப் பாரத்தைச் சிறிது இறக்கி வைத்தேன்.

என் மனைவி அப்பொழுதும் அவனிடம் இரக்கம் காட்டிப் பேசினாள். "ஏன் இப்படிச் சொல்றீங்க? அவன் நம்மை என்ன செய்கிறான்? எதுக்கு ஓர் அனாதையைப் போய் இப்படிச் சொல்லணும்?" என்று என்னை இலேசாகக் கண்டிக்கவே ஆரம்பித்துவிட்டாள்.

நாளை நம் குழந்தைகளுக்கு ஏதாவது ஒண்ணுன்னா இவனா வந்து தாங்கப் போறான்?" என்று கோபத்தைக் காட்டிக்கொள்ளாமலே சொன்னேன்.

"அப்படி ஒண்ணும் வந்துடாது. இப்படிப் பயந்தால் உலகத்திலேயே வாழ முடியாது".

"சரி சரி, புத்திமதி நல்லாத்தான் இருக்கு. பேசாமல் போ" என்று அவள் வாயை அடைத்துவிட்டு, அவளோடு பேசப் பிடிக்காமல் வந்துவிட்டேன்.

ஏறக்குறையத் தினந்தோறும் இப்படி நாங்கள் முரண்படுவதும், நான் கவலையும் பயமும் கொள்ளுவதுமாக ஆகிவிட்டது.

மேலும் இரண்டு நாட்கள் கழிந்தன. ஒவ்வொரு நாள் இரவும் அவன் ஓலத்துடனும் என் கவலையுடனுந்தான் கழிந்தது. ஆறாம் நாள் தங்கவேலு நான் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவனை அழைத்துக்கொண்டு வெளியே கிளம்பினார். நான் போய் எட்டிப் பார்த்தேன். அவனைச் சர்க்கார் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடப் போவதாகத் தங்கவேலு சொன்னார். எனக்கு அப்போது ஏற்பட்ட மகிழ்ச்சியையும் நிம்மதியையும் இவ்வளவு அவ்வளவு என்று கூறுவதற்கில்லை.

"அதுதான் நல்ல யோசனை, அங்கே நல்லா கவனிப்பாங்க" என்று ஒப்புக்குச் சொன்னேன். அவன் என்னைப் பார்த்து, என் பூரண ஆசீர்வாதத்தை வேண்டி, கை எடுத்துக் கும்பிட்டு, "நான் போய்ட்டு வர்றேன்" என்றான்.

"போய்ட்டு வாப்பா. கடவுள் கிருபையால் சீக்கிரம் குணமாகட்டும், போய்ட்டு வா" என்று வாழ்த்தினேன்.

மனத்தில் நஞ்சாக வெறுத்துக்கொண்டு அவனை இப்படிப் பொய்யாக வாழ்த்தி அனுப்பியதை இன்று நினைத்தாலும் எனக்கு வெட்கமாக இருக்கிறது. அவன் என்னையும் மதித்து என் ஆசீர்வாதத்திலும் நம்பிக்கை வைத்துக் கும்பிட்டதை நினைத்துவிட்டாலோ, நெஞ்சில் ஈட்டி பாய்வது போல் இருக்கிறது.

10th_Tamil_Unit 9.indd 217 13-02-2023 15:43:56

தங்கவேலுவும் அவனும் டாக்ஸியில் ஏறிக்கொண்டு போனார்கள்.

"ஒரு பெரிய பாரம் நீங்கியது" என்று தங்கவேலுவின் மனைவி என் மனைவியிடம் சொன்னதைக் கேட்டேன். நான் சொல்ல நினைத்த வார்த்தைகள் அவை. என் மனைவி ஒன்றும் சொல்லவில்லை.

தங்கவேலு சொன்னபடியே அவனுக்கு அப்புறம் ஆபரேஷன் செய்யப்பட்டது. அதற்கு முன்பு ஒரு நாள் என் மனப்போக்கை அடியோடு மாற்றி, என்னை நினைத்து நானே வெட்கப்படும்படியாகவும், அவனை நினைத்து நான் கண்ணீர்விடும்படியாகவும் ஒரு சம்பவம் நடந்தது.

அன்று இரண்டாவது சனிக்கிழமை. எனக்கு விடுமுறை. வீட்டிலேயே இருந்தேன். தங்கவேலு எங்கோ வெளியே போயிருந்தார். அவருடைய மனைவி தன் இரு குழந்தைகளோடு பகல் காட்சி சினிமா பார்க்கப் பதினொரு மணிக்கே கியூவில் நிற்கப் போய்விட்டாள் என்று கேள்விப்பட்டேன். மத்தியானம் ஒரு மணிக்கு ஒருவன் வந்து, "குப்புசாமி இருக்கிறாரா?" என்று கேட்டான். அவனுக்குச் சுமார் முப்பது வயது இருக்கும்.

"குப்புசாமியா? அப்படி இங்கே யாரும் இல்லையே! நீ யார்?" என்று நான் கேட்டேன்.

"காஞ்சிபுரம். அங்கிருந்துதான் குப்புசாமி இங்கே வந்தாரு. இது தங்கவேலு வூடுதானே?"

"ஆமாம், ஆனால் குப்புசாமின்னு யாரும் இல்லையே இங்கே!"

"இங்கேதான் வந்தாருங்க – வவுத்து வலிக்கு மருந்து சாப்புடணும்னு ..."

இந்தச் சம்பாஷணையை உள்ளேயிருந்து கேட்ட என் மனைவி எழுந்து ஓடி வந்தாள்.

"குப்புசாமி அந்தப் பையன்தான்; ஆஸ்பத்திரியிலே சேர்த்திருக்கிற பையன்" என்றாள்.

"குப்புசாமியைப் பார்க்கத்தான் வந்தேங்க. ஊருக்கும் அவசரமா போகணும். அவங்க வர ரொம்ப நேரமாவுங்களா?... குப்புசாமி இங்கே வந்தாரா இல்லையா?" என்று கவலையோடு அவன் கேட்டான்.

அவன் குப்புசாமிக்கு நன்றாகத் தெரிந்தவனாம். முந்தின நாள் இரவு சென்னையில் உள்ள தன் சொந்தக்காரர் ஒருவரைப் பார்க்க வந்தவன், ஊர் திரும்பும் வழியில் அவசர அவசரமாகக் குப்புசாமியைப் பார்க்க வந்திருக்கிறான்.

குப்புசாமி வேலை செய்துவந்த சைக்கிள் கடைக்கு எதிரே ஒரு விறகுக் கடையில் அவன் கூலி வேலை செய்பவன். அவனுடைய பக்கத்து வீட்டுக்காரன் வீரப்பன் என்பவனும் குப்புசாமியும் ரொம்ப ரொம்பச் சிநேகமாம்.

குப்புசாமி நோய் காரணமாக வேலையை இழந்திருந்த சமயத்தில் தாய்மாமன் வீட்டில் துன்பப்பட்டுக்கொண்டிருந்தபோது வீரப்பன்தான் அவ்வப்போது அவனை அழைத்துவந்து சாப்பாடு போடுவானாம். வீரப்பன் வீடு கட்டுகிற ஒரு மேஸ்திரியிடம் சிப்பந்தியாக வேலை செய்பவன். சில நாட்கள் வேலையில்லாமல் போய், வரும்படியும் இல்லாமல் கஷ்டப்படுகிற ஏழையாக இருந்தாலும், கடன் வாங்கியாவது சிநேகிதனுக்கு உதவி செய்து வந்தானாம் வீரப்பன்.

காஞ்சிபுரத்துக்காரன் இதைச் சொல்லும்போது, 'இவனுக்கு (குப்புசாமிக்கு) இப்படி ஒரு நட்பா? இவன் உயிருக்கு இவ்வளவு மதிப்பு கொடுக்கிற ஓர் ஆத்மாவும் இந்த உலகத்தில் இருக்கிறதா?' என்று நான் வியந்துகொண்டிருந்தேன்.

காஞ்சிபுரத்தான் பேச்சை முடித்துக்கொண்டு, ஊருக்குப் புறப்படத் தயாரானான்.

"சரிங்க, அப்போ நான் போயிட்டு வர்ரேனுங்க. குப்புசாமி கிட்டக் குடுக்கச் சொல்லி வீரப்பன் ஒரு லெட்டர் குடுத்தான் இதைக் குடுத்துடுங்க. மூணு ரூபாயும் குடுத்தனுப்பினான்..."


10th_Tamil_Unit 9.indd 218 13-02-2023 15:43:56

சட்டைப் பையிலிருந்து கடிதத்தையும் மூன்று ரூபாயையும் எடுத்து, "குப்புசாமிகிட்டே குடுத்துடுங்க. இல்லே, தங்கவேலு கிட்ட வேணும்னாலும் குடுத்துடுங்க. இன்னொரு சமயம் பட்டணம் வந்தா ஆசுபத்ரிலே போயி பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டுக் கடிதத்தையும் ரூபாயையும் என்னிடம் கொடுத்தான். அப்புறம் ஒரு நிமிஷம் எதையோ யோசித்துப் பார்த்தான். மனசுக்குள் கணக்கு போடுகிறவன்போல் அவனுடைய முகபாவனையும் தலையசைப்பும் இருந்தன. மறு நிமிஷத்திலேயே, "இந்தாருங்க, இதையும் குப்புசாமிக்குக் குடுக்கச் சொல்லுங்க" என்று சொல்லித் தன் இடது கையில் தொங்கிய துணிப் பையிலிருந்து இரண்டு சாத்துக்குடிப் பழங்களை எடுத்துக் கொடுத்தான்.

"என் பசங்களுக்கு நாலு பழம் வாங்கினேன். போகட்டும். இவரு ஆசுபத்திரிலே இருக்கிறாரு. நாம்ப வேறு என்னத்தைச் செய்யப் போறோம்?"

இத்துடனும் அவன் நிறுத்தவில்லை! தன் உபயமாக ஒரு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து என்னிடம் கொடுத்து, குப்புசாமியிடமோ தங்கவேலுவிடமோ சேர்க்கச் சொன்னான். அவன் குப்புசாமிக்காகத்தான் கொடுத்தானோ, குப்புசாமிக்காகக் காஞ்சிபுரத்தில் இருந்துகொண்டு கண்ணீர் வடிக்கும் அந்த வீரப்பன், குப்புசாமியின் உயிருக்குக் கொடுக்கும் மதிப்பைக் கண்டுதான் கொடுத்தானோ?

என்னிடமும் என் மனைவியிடமும் விடைபெற்றுக்கொண்டு காஞ்சிபுரத்துக்காரன் போய்விட்டான்.



அவன் கொடுத்த கடிதத்தின் மடிப்பைப் பிரித்து வாசித்துப் பார்த்தேன். வீரப்பன் எழுதிய அந்தக் கடிதத்தில் எழுத்துப் பிழைகளையும் பிற தவறுகளையும் திருத்திக் கீழே கொடுக்கிறேன்.

"என் உயிர் நண்பன் குப்புசாமிக்கு எழுதிக்கொண்டது. நீ இங்கிருந்து போனதிலிருந்து என் உயிர் இங்கே இல்லை. சதா உன் ஞாபகமாகத்தான் இருக்கிறேன். கடவுள் அருளால் நீ உடம்பு சௌக்கியமாகி வரவேண்டும் என்று தினமும் ஒரு தடவை கோவிலுக்குப் போய்க் கும்பிடுகிறேன். எனக்கு இப்போது வேலை இல்லை. கொஞ்ச நாட்களாக வருமானம் இல்லாமல் இருக்கிறேன். நேற்று கட்டைத் தொட்டி ஆறுமுகம் பட்டணம் போவதாகச் சொன்னான். உடனே, ஓடி ஒருவரிடம் மூன்று ரூபாய் கடன் வாங்கி அவனிடம் கொடுத்தனுப்பியிருக்கிறேன். நானே வரலாம் என்று பார்த்தேன். வந்தால் இந்த மூன்று ரூபாயும் பஸ்ஸுக்குச் செலவாகிவிடும். உனக்குச் சமயத்தில் உதவியாக இருக்கும் என நினைத்து, நான் ரூபாயைச் செலவழித்துக்கொண்டு வராமல், ஆறுமுகத்திடம் கொடுத்தனுப்பி இருக்கிறேன். இன்னோர் இடத்திலும் பணம் கேட்டிருக்கிறேன். கிடைத்தால் நான் சீக்கிரம் உன்னைப் பார்க்க வருவேன். உன்னைப் பார்த்தால்தான் நான் தின்னும் சோறு, சோறாக இருக்கும்.

உன் நண்பன்
க. வீரப்பன்,
காஞ்சிபுரம்.

கடிதத்தைப் பார்த்துவிட்டு நிம்மதியோடு என்னால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. என் மனைவியின் எதிரே கண்ணீர்விடவும் வெட்கமாக இருந்தது. அவளிடம் கடிதத்தைக் கொடுத்து, "படித்துப் பார்" என்று அவசர அவசரமாகச் சொல்லிவிட்டு, குளிக்கும் அறைக்குள் போய் உண்மையிலேயே கண்ணீர் சிந்தி அழுதுவிட்டேன். முகத்தைக் கழுவிக் கொண்டு நான் வெளியே வந்தபோது, என் மனைவி வழக்கம்போல் இரக்கம் நிறைந்த குரலில், "பாவம்!" என்றாள். "ஏழைகள்தான் எவ்வளவு பிரியமாக

10th_Tamil_Unit 9.indd 219 13-02-2023 15:43:56

இருக்கிறார்கள்!" என்று பரவசத்துடனும் உணர்ச்சிப் பெருக்குடனும் சொன்னாள்.

"நாமும் தங்கவேலுவோடு இன்னிக்கு ஆசுபத்திரிக்குப் போகலாமா?" மனைவி ஆச்சரியப்பட்டாள் என்பதைவிட, என் சொற்களைக் கேட்டு ஆனந்தம் அடைந்தாள் என்றுதான் சொல்லவேண்டும்.

"போகலாமே. ஒரு டஜன் சாத்துக்குடி வாங்கிக் கொண்டால் நல்லது. சும்மாவா போவது?"

தனியாக உட்கார்ந்திருந்த நான் என்னை நினைத்தே வருந்தியதையும் வெட்கப் பட்டதையும் விவரிக்கவே முடியாது. காஞ்சிபுரத்தில் இருக்கும் வீரப்பனை, உலகமே வெறுத்து ஒதுக்கிய குப்புசாமியிடம் உயிரையே வைத்திருக்கும் அந்தப் புண்ணிய மூர்த்தியைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. 'குப்புசாமிக்கும் ஒருவன் இருக்கிறான். குப்புசாமிக்கு மட்டுமா? எனக்குமே ஒருவனாக அவன் இருக்கிறான்.'

பழங்கள் வாங்கக் கடைத்தெருவுக்குப் போனேன்.

(கலைமகள், பிப்ரவரி 1966)

முன்தோன்றிய மூத்தகுடி

"ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து
அரசு பட அமர் உழக்கி"

மதுரைக்காஞ்சி, 127–130

திருவாரூர் மாவட்டத்தின் ஆலங்கானம்

நூல் வெளி

ஒருவன் இருக்கிறான் கதை 'கு.அழகிரிசாமி சிறுகதைகள்' என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

கு.அழகிரிசாமி, அரசுப்பணியை உதறிவிட்டு முழுதாக எழுத்துப்பணியை மேற்கொண்டவர்; மென்மையான நகைச்சுவையும் சோக இழையும் ததும்பக் கதைகளைப் படைப்பதில் பெயர் பெற்றவர்; கரிசல் எழுத்தாளர்கள் வரிசையில் மூத்தவர் எனலாம். கி.ரா.வுக்கு இவர் எழுதிய கடிதங்கள் இலக்கியத்தரம் வாய்ந்தவை. படைப்பின் உயிரை முழுமையாக உணர்ந்திருந்த கு.அழகிரிசாமி பல இதழ்களில் பணியாற்றியவர்; மலேசியாவில் இருந்தபோது அங்குள்ள படைப்பாளர்களுக்குப் படைப்பு தொடர்பான பயிற்சி அளித்தவர். இவர் பதிப்புப் பணி, நாடகம் எனப் பலதுறைகளிலும் முத்திரை பதித்தவர். தமிழ் இலக்கியத்தில் ஆர்வம்கொண்டு திறனாய்வு நூல்களையும் படைத்தவர்.

கற்பவை கற்றபின்...

1. சமூகத் தொண்டு செய்து உயர்ந்த விருதுகளைப் பெற்ற ஆளுமைகளைப் பட்டியலிட்டு அவர்கள் செய்த சமூகப்பணி குறித்துக் கலந்துரையாடுக.
2. "அகநக நட்பதே நட்பு" – என்ற தலைப்பில் நண்பர்களுக்கு உதவிய சூழல்களைச் சுவைபட எழுதுக.

10th_Tamil_Unit 9.indd 220 13-02-2023 15:43:57

மனிதம்

கூ

அணி

மக்களுக்கு அழகு சேர்ப்பன அணிகலன்கள். அது போன்று செய்யுள்களுக்கு அழகு செய்து சுவையை உண்டாக்குவன அணிகள். அத்தகைய அணிகள் சிலவற்றைப் பற்றி இங்குக் காண்போம்.

தற்குறிப்பேற்ற அணி

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

எ.கா.

'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட'

பாடலின் பொருள்

கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பதுபோல, கை காட்டியது என்பது பொருள்.

அணிப்பொருத்தம்

கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால் இளங்கோவடிகள், கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக்கருதி அக்கொடிகள் கையை அசைத்து, 'இம்மதுரைக்குள் வரவேண்டா' என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாகத் தம் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றிக் கூறுகிறார். இவ்வாறு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

தீவக அணி

தீவகம் என்னும் சொல்லுக்கு 'விளக்கு' என்று பொருள். ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல, செய்யுளின் ஓரிடத்தில்நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்பட்டது.

இது முதல்நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என்னும் மூன்று வகையாக வரும்.

எ.கா.

சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்
ஏந்து தடந்தோள், இழிகுருதி – பாய்ந்து
திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்,
மிசைஅனைத்தும் புள்குலமும் வீழ்ந்து

(சேந்தன-சிவந்தன; தெவ்-பகைமை; சிலை-வில்; மிசை-மேலே; புள்-பறவை;)

பாடலின் பொருள்

அரசனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன; அவை சிவந்த அளவில் பகை மன்னர்களுடைய பெரிய தோள்கள்சிவந்தன; குருதி பாய்ந்து திசைகள் அனைத்தும் சிவந்தன;வலிய வில்லால் எய்யப்பட்ட அம்புகளும் சிவந்தன; குருதி மேலே வீழ்தலால் பறவைக் கூட்டங்கள் யாவும் சிவந்தன.

அணிப் பொருத்தம்

வேந்தன் கண் சேந்தன
தெவ்வேந்தர் தோள் சேந்தன
குருதி பாய்ந்து திசை அனைத்தும் சேந்தன
அம்பும் சேந்தன

10th_Tamil_Unit 9.indd 221 13-02-2023 15:43:57

புள் குலம் வீழ்ந்து

மிசைஅனைத்தும் சேந்தன

இவ்வாறாக முதலில் நிற்கும் 'சேந்தன' (சிவந்தன) என்ற சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருகிறது. அதனால் இது தீவக அணி ஆயிற்று.

நிரல்நிறை அணி

நிரல் = வரிசை; *நிறை* = நிறுத்துதல்.

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

எ.கா.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது. –குறள்: 45

பாடலின் பொருள்

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

அணிப்பொருத்தம்

இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால் இது நிரல் நிறை அணி ஆகும்.

தன்மையணி

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணியாகும். இதனைத் தன்மை நவிற்சி அணி என்றும் கூறுவர். இவ்வணி நான்கு வகைப்படும். பொருள் தன்மையணி, குணத் தன்மையணி, சாதித் தன்மையணி, தொழிற் தன்மையணி என்பனவாகும்.

எ.கா.

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்

கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் – வையைக்

கோன்

கண்டளவே தோற்றான், அக்காரிகைதன்

சொற்செவியில்

உண்டளவே தோற்றான் உயிர்.

சிலம்பு – வழக்குரை காதை வெண்பா

பாடலின் பொருள்

உடம்பு முழுக்கத் தூசியும் விரித்த கருமையான தலைமுடியும் கையில் ஒற்றைச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலேயே வையை நதி பாயும் கூடல் நகரத்து அரசனான பாண்டியன் தோற்றான். அவளது சொல், தன் செவியில் கேட்டவுடன் உயிரை நீத்தான்.

அணிப்பொருத்தம்

கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மை நவிற்சியணி எனப்படும்.

"எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்

சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்"

– தண்டியலங்காரம்: 27



கற்பவை கற்றபின்...

1. முன் வகுப்புகளில் கற்ற அணிகளை எடுத்துக்காட்டுகளுடன் தொகுத்து ஒப்படைவு ஒன்றை உருவாக்குக.
2. பாடப்பகுதியில் உள்ள திருக்குறளில் பயின்றுவரும் அணிகளைக் கண்டறிந்து வகுப்பறையில் விளக்குக.

10th_Tamil_Unit 9.indd 222 13-02-2023 15:43:57

திறன் அறிவோம்

பலவுள் தெரிக.

1. "பிரிந்தன புள்ளின் கானில்
பெரிதழுது இரங்கித் தேம்ப"
பாடலடிகளில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க.

அ) கிளை, துளை ஆ) நிலம், வாட

இ) காடு, வாட ஈ) காடு, நிலம்

2. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

3. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ..... வேண்டினார்.

அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக

இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

4. வாய்மையே மழைநீராகி – இத் தொடரில் வெளிப்படும் அணி

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

5. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் – இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது:

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

குறுவினா

1. தீவக அணியின் வகைகள் யாவை?

2. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு – இத்தொடரை இரு தொடர்களாக்குக.

3. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" – உவமை உணர்த்தும் கருத்து யாது?

4. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

10th_Tamil_Unit 9.indd 223 13-02-2023 15:43:57



5. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர்ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

சிறுவினா

1. "சித்தாளின் மனச்சுமைகள்
   செங்கற்கள் அறியாது" – இடஞ்சுட்டிப் பொருள் தருக.

2. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

3. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

4. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

நெடுவினா

1. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

2. ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

3. 'அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

10th_Tamil_Unit 9.indd 224 13-02-2023 15:43:58



மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

"எழுத்தால், பேச்சால், ஆற்றலால், அறிவால், தொண்டால், பண்பால், பணியால், கனிவால் தமிழக வரலாற்றில் குறிக்கப்படும்படியான அந்த அறிஞர் பெருமகனாரின் அருமைத் திருமுகத்தைக் கடைசியாகத் தரிசிக்க வழியெல்லாம் விழியெல்லாம் நீர்தேக்கி ஊர்வலத்தைப் பார்க்கக் காத்திருந்த மக்கள் எத்தனை லட்சம் பேர்! அண்ணாவின் பொன்னுடலை நன்றாகத் தாங்கி வந்த பீரங்கி வண்டி தூரத்தில் வந்தபோதே பொங்கிப் பொருமித் துடித்த உள்ளங்கள் எத்தனை எத்தனை லட்சம்! தமது வாழ்வுக் காலத்தையே ஒரு சகாப்தமாக்கி முடித்துவிட்டுச் சென்ற அந்தப் பேரறிஞர் திருமுகத்தைக் கண்டதும் குவிந்த கரங்கள் எத்தனை எத்தனை லட்சம்! கண்ணீரை அருவியாய்க் கொட்டிய கண்கள் எத்தனை எத்தனை லட்சம்! கண்ணுக்கு ஒளியாய்த் தமிழுக்குச் சுவையாய் மக்களுக்கு வாழ்வாய் அமைந்துவிட்ட அந்தத் தலைவரின் இறுதிப் பயணம் சென்ற வழியெல்லாம் மலர் தூவி மாலைகளை வீசிய கரங்கள் எத்தனை எத்தனை லட்சம்! அந்த அறிவுக் களஞ்சியத்தைத் தாங்கிய வண்டி தங்களை விட்டு முன்னோக்கி நகர்ந்தபோது இதயத்தையே, உயிர்மூச்சையே இழந்துவிட்டது போலக் கதறித் துடித்துத் தரையில் புரண்டு புரண்டு புழுவாய்த் துடித்தவர்கள் எத்தனை லட்சம் பேர்கள்!"

மொழிபெயர்க்க.

1. *Education is what remains after one has forgotten what one has learned in School.* – **Albert Einstein**
2. *Tomorrow is often the busiest day of the week.* – **Spanish Proverb**
3. *It is during our darkest moments that we must focus to see the light.* – **Aristotle**
4. *Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts.* – **Winston Churchill.**

உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.

1. தாமரை இலை நீர்போல
2. மழைமுகம் காணாப் பயிர்போல
3. கண்ணினைக் காக்கும் இமை போல
4. சிலை மேல் எழுத்து போல

பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.


சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

வாழ்த்துரை எழுதுக

உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டுநலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

10th_Tamil_Unit 9.indd 225 13-02-2023 15:43:58

குறுக்கெழுத்துப் போட்டி



இடமிருந்து வலம்

1. சிறுபொழுதின் வகைகளுள் ஒன்று (2)

2. நேர் நேர் – வாய்பாடு (2)

11. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று (5)

14. மக்களே போல்வர் _____ (4)

மேலிருந்து கீழ்

1. முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது (5)

2. மொழிஞாயிறு (9)

3. நல்ல என்னும் அடைமொழி கொண்ட தொகைநூல்……..(5)

4. கழை என்பதன் பொருள் (4)

7. மதியின் மறுபெயர், இது நிலவையும் குறிக்கும்(4)

10. குறிஞ்சித் திணைக்குரிய விலங்கு……..(4)

12……..என்பது புறத்திணைகளுள் ஒன்று(4)

வலமிருந்து இடம்

15. மருந்தே ஆயினும் விருந்தோடு உண் – ஆசிரியர் (4)

16. மதிமுகம் உவமை எனில் முகமதி ……..(5)

கீழிருந்து மேல்

5. விடையின் வகைகள் (3)

6. வீரமாமுனிவர் இயற்றிய நூல் (5)

8. பிள்ளைத்தமிழின் இரண்டாம் பருவம் (4)

9. முப்பால் பகுப்பு கொண்ட நூல்களுள் ஒன்று(6)

13. மன்னனது உண்மையான புகழை எடுத்துக் கூறுவது (7)

17. 96 வகைச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று (7)

18. செய்தவம் – இலக்கணக்குறிப்பு (5)

10th_Tamil_Unit 9.indd 226 13-02-2023 15:43:58

பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்
கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை
காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை
செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ

விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண்: நாள்: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

தேர்வின் பெயர்	பதிவு எண் – ஆண்டு	பாடம்	மதிப்பெண் (100)
		தமிழ்	
		ஆங்கிலம்	
		கணிதம்	
		அறிவியல்	
		சமூக அறிவியல்	
		மொத்தம்	

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ / மாணவியின் கையொப்பம்

10th_Tamil_Unit 9.indd 227 13-02-2023 15:43:58

நன்றியுரை எழுதுக.

பள்ளி வளாகத்தில் நடைபெற்ற 'மரம் நடுவிழாவுக்கு' வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் 'பசுமைப் பாதுகாப்புப் படை' சார்பாக நன்றியுரை எழுதுக.

மொழியோடு விளையாடு

விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க.



கீழ்க்காணும் நாள்காட்டியில் புதன் கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்டு தமிழெண்களால் நிரப்புக.

ஞாயிறு	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி
			க	உ		

அகராதியில் காண்க.

குணதரன், செவ்வை, நகல், பூட்கை

செயல் திட்டம்

விளையாட்டு உலகில் உங்களுக்குப் பிடித்த ஆளுமைத்திறன் மிக்க விளையாட்டு வீரர் பற்றிய செய்திகளைப் படத்துடன் தொகுப்பேடாக உருவாக்குக.

10th_Tamil_Unit 9.indd 228 13-02-2023 15:43:59

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



நிற்க அதற்குத் தக...

ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள்; உதவி பெற்றபடியும் இருக்கிறார்கள்; சில உதவிகள் அவர்கள் மீதுள்ள அன்பினால் செய்கிறோம்; சில உதவிகள் இரக்கத்தால் செய்கிறோம். தொடர்வண்டியில் பாட்டுப் பாடிவரும் ஒருவருக்கு நம்மையறியாமல் பிச்சை போடுகிறோம். தொல்லை வேண்டாம் என்று கருதி, வேண்டாவெறுப்போடு சில இடங்களில் உதவி செய்கிறோம்!

நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை...

உதவி	மனநிலை
வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவியபோது	இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு; அவருக்கு மனமகிழ்ச்சி!
உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவியபோது	கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு!

கலைச்சொல் அறிவோம்

Humanism	மனிதநேயம்	Cultural Boundaries	பண்பாட்டு எல்லை
Cabinet	அமைச்சரவை	Cultural values	பண்பாட்டு விழுமியங்கள்


அறிவை விரிவு செய்

யானை சவாரி – பாவண்ணன்

கல்மரம் – திலகவதி

அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் – ந. முருகேசபாண்டியன்



இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/ta/courses-degree-p101-p1011-html-p1011661-23897 (ஜெயகாந்தன்)

https://nagoori.wordpress.com/2010/02/04/நாகூர்-ரூமியும்-நானும்/

http://tamildigitallibrary.in/book-detail.php?id=jZY9lup2kZl6TuXGlZQdjZU3luMy#book1/ (இலக்கியச் சிற்பிகள் – கு.அழகிரிசாமி)

10th_Tamil_Unit 9.indd 229 13-02-2023 15:43:59

திருக்குறள்

எளிய உரை – டாக்டர் வ.சுப. மாணிக்கனார்

PSG1A

14. ஒழுக்கம் உடைமை

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்.
2. பரிந்துஓம்பிக் காக்க ஒழுக்கம்; தெரிந்துஓம்பித் தேரினும் அஃதே துணை.
3. ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்.
4. மறப்பினும் ஒத்துக் கொளலாகும்; பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.
5. அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை ஒழுக்கம் இலான்கண் உயர்வு.
6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து.
7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி.
8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்.
9. ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய வழுக்கியும் வாயால் சொலல்.
10. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்.

14. ஒழுக்கம் உடைமை – எளிய உரை

1. ஒழுக்கம் பெருஞ்சிறப்புத் தரும் ஆதலின் உயிர் கொடுத்தும் காக்க வேண்டும்.
2. எவ்வளவு வருந்தினாலும் ஒழுக்கமாக இரு; எவ்வளவு ஆராய்ந்தாலும் அதுவே துணை.
3. விடா ஒழுக்கமே உயர்ந்த குடிப்பிறப்பு; ஒழுக்கத்தை விடுவது விலங்குப் பிறப்பு.
4. கற்பவன் மறந்தாலும் படித்துக் கொள்ளலாம்; மானிட ஒழுக்கம் குறைந்தாலோ கெடுவான்.
5. பொறாமைப் பட்டவனுக்கு வளர்ச்சி உண்டோ? ஒழுக்கம் கெட்டவனுக்கு உயர்வுண்டோ?
6. உரமுடையவர் ஒழுக்கம் சிறிதும் தளரார்; தளரின் துன்பம் பல வருமென்று அறிவார்.
7. விடா ஒழுக்கத்தால் முன்னேற்றம் வரும்; விடுவதால் பொருந்தாப் பழி வரும்.
8. நல்லொழுக்கம் நன்மைக்கெல்லாம் வித்து; தீயொழுக்கத்தால் எந்நாளும் துன்பமே.
9. என்றும் ஒழுக்கம் உடையார் வாயிலிருந்து தவறியும் தீய சொற்கள் தோன்றா.
10. உலகத்தோடு ஒட்டி ஒழுகத் தெரியாதவர் பல கற்றிருந்தும் அறிவு இல்லாதவரே.

36. மெய் உணர்தல்

1. பொருள்அல் லவற்றைப் பொருள்என்று உணரும் மருளான்ஆம் மாணாப் பிறப்பு.
2. இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி மாசுஅறு காட்சி யவர்க்கு.
3. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணியது உடைத்து.
4. ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே மெய்உணர்வு இல்லா தவர்க்கு.
5. எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.
6. கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றுஈண்டு வாரா நெறி.
7. ஓர்த்துஉள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப் பேர்த்துஉள்ள வேண்டா பிறப்பு.
8. பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும் செம்பொருள் காண்பது அறிவு.
9. சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரும் நோய்.
10. காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய்.

36. மெய் உணர்தல் – எளிய உரை

1. பொய்ப்பொருள்களை மெய்ப்பொருள் என்று மயங்குவதால் பிறப்புத் தோன்றும்.
2. மயக்கம் விட்டுத் தெளிந்த அறிஞர்களுக்குப் பேதைமை இராது; பேரின்பம் உண்டாகும்.
3. ஐயம் இன்றி உண்மை கண்டவர்களுக்கு வீட்டுலகம் கிட்ட உள்ளது.
4. உண்மை யுணர்ச்சி இல்லாதவர்களுக்கு ஐம்புல அடக்கம் இருந்தும் பயனில்லை.
5. ஒரு பொருள் எத்தன்மையதாக இருப்பினும் அதன் உண்மையைக் காண்பதே அறிவு.
6. இப்பிறப்பில் கற்று உண்மை கண்டவரே திரும்பப் பிறவா வீட்டினை அடைவர்.
7. உள்ளம் உண்மையை உணர்ந்துகொண்டால் பின்னும் பிறப்புண்டோ என்று அஞ்சாதே.
8. பிறப்பாகிய பேதைமை நீங்குமாறு சிறப்பாகிய பொருளைக் காண்பதே அறிவு.
9. மெய்ப்பற்றை உணர்ந்து பொய்ப்பற்றை விடின் வருகின்ற நோய்கள் மீறி வாரா.
10. காமம், சினம், அறியாமை மூன்றும் அடியோடு கெடவே நோயும் கெடும்.

10th_Tamil_Unit 9.indd 230 13-02-2023 15:43:59

45. பெரியாரைத் துணைக்கோடல்

1. *அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை திறன்அறிந்து தேர்ந்து கொளல்.*
2. *உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்.*
3. *அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்.*
4. *தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாம் தலை.*
5. *சூழ்வார்கண் ஆக ஒழுகலான் மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.*
6. *தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச் செற்றார் செயக்கிடந்தது இல்.*
7. *இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே கெடுக்கும் தகைமை யவர்?*
8. *இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்.*
9. *முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம் சார்புஇலார்க்கு இல்லை நிலை.*
10. *பல்லார் பகைகொளலின் பத்துஅடுத்த தீமைத்தே நல்லார் தொடர்கை விடல்.*

45. பெரியாரைத் துணைக்கோடல் – எளிய உரை

1. அறமும் முதிர்ந்த அறிவும் உடையவரது நட்பைத் தெரிந்து பெற்றுக் கொள்க.
2. வந்த துயரைப் போக்கி வருமுன் காக்கும் திறமுடையவரைத் தழுவிக் கொள்க.
3. பெரியவர்களைப் போற்றி உறவு கொள்வதே அரிய செயல்களுள் எல்லாம் அரியது.
4. நம்மினும் பெரியவர் நம்மவராக நடப்பது எல்லா வன்மையினும் ஏற்றமானது.
5. அறிஞர்களே அரசன் கண்கள் ஆதலின் அவர்களை ஆராய்ந்து அனைத்துக் கொள்க.
6. பெரியவர்கள் துணையாக ஒழுகுபவனைப் பகைவர்கள் என்ன செய்ய முடியும்:
7. கடிந்துரைக்கும் நண்பர் உடையவரை யாரும் கெடுக்க முடியுமா?
8. கடிந்துரைப்பார் இல்லாத தனி மன்னன் பகைவர் இன்றியும் கெடுவான்.
9. முதல் இல்லாதவர்க்கு ஊதியம் உண்டோ? துணை இல்லாதவர்க்கு ஒரு நிலை உண்டோ?
10. நல்லவர் ஒருவர் நட்பை விடுவது பலரைப் பகைப்பதினும் பெருந் தீமை.

56. கொடுங்கோன்மை

1. *கொலைமேற் கொண்டாரின் கொடிதே அலைமேற்கொண்டு அல்லவை செய்துஒழுகும் வேந்து.*
2. *வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும் கோலொடு நின்றான் இரவு.*
3. *நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன் நாள்தொறும் நாடு கெடும்.*
4. *கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச் சூழாது செய்யும் அரசு.*
5. *அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை.*
6. *மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதுஇன்றேல் மன்னாவாம் மன்னர்க்கு ஒளி.*
7. *துளியின்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன் அளியின்மை வாழும் உயிர்க்கு.*
8. *இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா மன்னவன் கோல்கீழ்ப் படின்.*
9. *முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல்.*
10. *ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர் காவலன் காவான் எனின்.*

56. கொடுங்கோன்மை – எளிய உரை

1. குடிகளை வருத்தித் தீமை புரியும் வேந்தன் கொலையாளியினும் கொடியவன்.
2. கோலுடைய அரசன் குடிகளிடம் பொருள்கேட்டல் வேலுடைய திருடன் கெஞ்சுவதை ஒக்கும்.
3. நாள்தோறும் ஆராய்ந்து ஆளாத அரசனது நாளும் கெட்டுக்கொண்டே போகும்.
4. நீதிதவறி ஆராயாது செய்யும் அரசன் பொருளும் குடியும் ஒரு சேர இழப்பான்.
5. கொடுமை தாங்காது குடிகள் அழுத கண்ணீர் அரசை அடியோடு அழிக்கும் படையாகும்.
6. மன்னனுக்கு நிலை நல்லாட்சியால் உண்டாகும்; அது இன்றேல் அவன் அதிகாரம் நிலையாது.
7. மழையின்றேல் உலகம் என்னாகும்? அரசனது அன்பின்றேல் குடிகள் வாழுமா?
8. நீதியில்லா மன்னனது ஆட்சிக்கு உட்படின் பொருளின்மையினும் உடைமை கேடுதரும்.
9. மன்னவன் நீதிமுறையோடு ஆளாவிட்டால் மழை பருவமுறையோடு பெய்யாது போம்.
10. காத்தற்கு உரிய அரசன் காவாவிடின் பசு பயன்தாராது: எத்தொழில்களும் இரா.

10th_Tamil_Unit 9.indd 231 13-02-2023 15:44:00

58. கண்ணோட்டம்

1. கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை உண்மையான் உண்டுஇவ் வுலகு.
2. கண்ணோட்டத்து உள்ளது உலகியல்; அஃதுஇலார் உண்மை நிலக்குப் பொறை.
3. பண்என்னாம் பாடற்கு இயைபுஇன்றேல்; கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்?
4. உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால் கண்ணோட்டம் இல்லாத கண்?
5. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதுஇன்றேல் புண்என்று உணரப் படும்.
6. மண்ணோடு இயைந்த மரத்துஅனையர் கண்ணோடு இயைந்துகண் ணோடா தவர்.
7. கண்ணோட்டம் இல்லவர் கண்இலர்; கண்உடையார் கண்ணோட்டம் இன்மையும் இல்.
8. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு உரிமை உடைத்துஇவ் வுலகு.
9. ஒறுத்துஆற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப் பொறுத்துஆற்றும் பண்பே தலை.
10. பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்.

58. கண்ணோட்டம் – எளிய உரை

1. இரக்கம் என்னும் அழகிய பெரும்பண்பு இருத்தலால் இவ்வுலகம் இருக்கின்றது.
2. உலகியல் என்பது இரக்கப்பண்பில் உள்ளது: இரக்கமில்லார் இருப்பது பூமிக்குப் பாரம்.
3. பாட்டுக்குப் பொருந்தாத இசையாற் பயனென்? இரக்கம் காட்டாத கண்ணால் என்ன பயன்?
4. வேண்டும் அளவு இரக்கம் ஓடாத கண் முகத்தில் இருப்பதுபோல் காட்டுவது எதற்கு?
5. கண்ணிற்கு நகையாவது இரக்க உணர்வே: இரக்கமிலாக் கண்ணைப் புண்ணென்று கொள்க.
6. கண்ணோடிருந்தும் இரக்கம் இல்லாதவர் மண்ணோடிருந்தும் வளராத மரம் போல்வர்.
7. இரக்கம் இல்லாதவர் கண்ணில்லாதவர் கண்ணுடையவர் இரக்கம் உடையவர்.
8. காரியம் கெடாமல் இரக்கம் காட்டுவார்க்கு வயப்பட்டது இவ்வுலகம்.
9. தண்டிக்கும் ஆற்றல் இருப்பினும் மனமிரங்கிப் பொறுத்துக் கொள்ளும் பண்பே சிறந்தது.
10. யாவரும் விரும்பும் நாகரிகம் உடையவர் நேரே நஞ்சிடினும் உண்டு அடங்குவர்.

62. ஆள்வினை உடைமை

1. அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்.
2. வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.
3. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே வேளாண்மை என்னும் செருக்கு.
4. தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை வாள்ஆண்மை போலக் கெடும்.
5. இன்பம் விழையான் வினைவிழையான் தன்கேளிர் துன்பம் துடைத்துஊன்றும் தூண்.
6. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.
7. மடிஉளாள் மாமுகடி என்ப மடிஇலான் தாள்உளாள் தாமரையி னாள்.
8. பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று அறிவுஅறிந்து ஆள்வினை இன்மை பழி.
9. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்.
10. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித் தாழாது உஞற்று பவர்.

62. ஆள்வினை உடைமை – எளிய உரை

1. அரிய காரியம் என்று மலைக்க வேண்டாம்; முயற்சி எல்லாப் பெருமையும் தரும்.
2. எடுத்த வினையை அரைகுறையின்றிச் செய்க: கடமையை விட்டாரை உலகம் விட்டு விடும்.
3. பிறர்க்கு உதவும் பெருமித எண்ணம் உழைக்கின்ற பெரும்பண்பால் உண்டாகும்.
4. உழைப்பில்லாதவன் யார்க்கும் உதவ முடியுமா? பேடி பகைவர்முன் வாள் வீச முடியுமா?
5. இன்பம் நாடாது காரிய முடிவை நாடுபவன் சுற்றத்தின் துன்பம் தாங்கும் தூணாவான்.
6. உழைப்பு செல்வ நிலையை உண்டாக்கும்: உழையாமை வறுமையைத் தந்துவிடும்.
7. சோம்பேறியின் மடியில் இருப்பாள் மூதேவி உழைப்பவன் அடியில் இருப்பாள் சீதேவி.
8. உடல் ஊனம் யார்க்கும் பழியில்லை; அறிவை வளர்த்து முயலாமையே பழி.
9. தெய்வத்தால் ஒரு செயல் முடியாது போகினும் முயன்றால் அதற்குரிய கூலி உண்டு.
10. சோர்வின்றிக் காலம் தாழ்த்தாது உழைப்பவர் மாறான விதியும் ஓடக் காண்பர்.

10th_Tamil_Unit 9.indd 232 13-02-2023 15:44:00

64. அமைச்சு

1. *கருவியும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் மாண்டது அமைச்சு.*
2. *வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு.*
3. *பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்லது அமைச்சு.*
4. *தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு.*
5. *அறன்அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான்எஞ் ஞான்றும் திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை.*
6. *மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாஉள முன்நிற் பவை.*
7. *செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல்.*
8. *அறிகொன்று அறியான் எனினும் உறுதி உழைஇருந்தான் கூறல் கடன்.*
9. *பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர் எழுபது கோடி உறும்.*
10. *முறைப்படச் சூழ்ந்தும் முடிவுஇலவே செய்வர் திறப்பாடு இலாஅ தவர்.*

64. அமைச்சு – எளிய உரை

1. கருவி காலம் செய்யுந்தன்மை காரியம் இவற்றில் நன்கு சிறந்தவனே அமைச்சன்.
2. துணிவு, குடிபேணல், கல்வி, அறிவு, முயற்சி இவ்வைந்திலும் சிறந்தவனே அமைச்சன்.
3. பகைவரைப் பிரித்தல் நண்பரை அணைத்தல் பிரிந்தவரைக் கூட்டல் வல்லன் அமைச்சன்.
4. ஆராய்தல் தெளிந்து செய்தல் உறுதியாகச் சொல்லுதல் வல்லவனே அமைச்சன்.
5. அறமும் அமைந்த சொல்லும் திறமும் உடையவனே தெளிவுக்குத் துணையாவான்.
6. கூரிய அறிவும் நூலறிவும் உடையவர்க்குத் தீர்க்க முடியாத சிக்கல்கள் உளவோ?
7. நூல்சொல்லும் முறைகளை அறிந்திருந்தாலும் உலக நடைமுறைகளை அறிந்து செய்க.
8. சொன்னாலும் தன்னாலும் அறியான் எனினும் அரசனுக்கு உறுதிகூறல் அமைச்சன் கடன்.
9. கேடு சூழும் ஒரு மந்திரியினும் அருகே எழுபது கோடி பகைவர் நல்லவர்.
10. முறையாக எண்ணினும் முடியாதபடி செய்வர் செய்யும் திறமை இல்லாதவர்.

76. பொருள் செயல்வகை

1. *பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருள்அல்லது இல்லை பொருள்.*
2. *இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு.*
3. *பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும் எண்ணிய தேயத்துச் சென்று.*
4. *அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து தீதுஇன்றி வந்த பொருள்.*
5. *அருளொடும் அன்பொடும் வாராப் பொருள்ஆக்கம் புல்லார் புரள விடல்.*
6. *உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்.*
7. *அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும் செல்வச் செவிலியால் உண்டு.*
8. *குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று உண்டாகச் செய்வான் வினை.*
9. *செய்க பொருளை; செறுநர் செருக்கறுக்கும் எஃகுஅதனின் கூரியது இல்.*
10. *ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள் ஏனை இரண்டும் ஒருங்கு.*

76. பொருள் செயல்வகை – எளிய உரை

1. மதிப்பு இல்லாதவரையும் மதிப்பு உடையராகச் செய்யும் செல்வமே சிறந்த செல்வம்.
2. செல்வம் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர்; உடையவரை எல்லோரும் சிறப்புச் செய்வர்.
3. செல்வம் என்னும் அழியா ஒளி எவ்விடமும் சென்று இருளை ஓட்டும்.
4. நெறியோடு குற்றமின்றி ஈட்டிய பொருள் அறமும் தரும் இன்பமும் தரும்.
5. அருளும் அன்பும் பொருந்தாத செல்வத்தைத் தொடாது போகவிடுக.
6. வரியும் சுங்கமும் பகைவரின் திறையும் அரசனுக்கு வருவாய்ப் பொருளாம்.
7. அன்புத் தாய் பெற்ற அருட்குழந்தை செல்வத் தாதியால் வளரும்.
8. கையிற் பொருள்வைத்துக் காரியம் செய்தல் மலையேறி யானைப்போரைப் பார்ப்பது போலாம்.
9. ஈட்டுக பொருளை எதிரியின் இறுமாப்பை அறுக்கும் கருவி அதுபோல் வேறில்லை.
10. சிறந்த பொருளைத் திரளாக ஈட்டியவர்க்கு அறமும் இன்பமும் எளிதிற் கிடைக்கும்.

10th_Tamil_Unit 9.indd 233 13-02-2023 15:44:00

83. கூடா நட்பு

1. *சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை நேரா நிரந்தவர் நட்பு.*
2. *இனம்போன்று இனம்அல்லார் கேண்மை மகளிர் மனம்போல வேறு படும்.*
3. *பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர் ஆகுதல் மாணார்க்கு அரிது.*
4. *முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா வஞ்சரை அஞ்சப் படும்.*
5. *மனத்தின் அமையா தவரை எனைத்துஒன்றும் சொல்லினால் தேறல்பாற்று அன்று.*
6. *நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல் ஒல்லை உணரப் படும்.*
7. *சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம் தீங்கு குறித்தமை யான்.*
8. *தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார் அழுதகண் ணீரும் அனைத்து.*
9. *மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து நட்பினுள் சாப்புல்லல் பாற்று.*
10. *பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு அகநட்பு ஒரீஇ விடல்.*

83. கூடா நட்பு – எளிய உரை

1. உள்ளம் பொருந்தாது ஒழுகுபவர் நட்பு வாய்ப்பு வரின் அடிக்கும் பட்டறையாம்.
2. உறவுபோல நடிக்கும் வஞ்சகரின் நட்பு பரத்தை மனம்போல் மாறுபடும்.
3. நல்ல பல நூல்களைக் கற்றிருந்தாலும் வஞ்சகர்க்கு நல்ல மனம் வாராது.
4. முகத்திலே புன்சிரிப்புச் காட்டி அகத்திலே கொடிய வஞ்சகரை அஞ்ச வேண்டும்.
5. மனத்தில் ஒட்டாதவரை எந்த அளவிலும் சொல்லினால் நம்புதல் கூடாது.
6. நண்பர் போல நல்லன கூறினாலும் தீயவர் கருத்து உடனே தெரிந்து விடும்.
7. பகைவரின் சொற்பணிவு கண்டு ஏமாறாதே; வில்லின் வளைவு தீமைக்கு அறிகுறி.
8. பகைவர் தொழுத கைக்குள் படையிருக்கும்; அவர் அழுத கண்ணீரும் படையாகும்.
9. மிகவும் பழகி உள்ளே இகழ்பவருடன் நீயும் மகிழப் பேசி நட்பைக் குறைக்க.
10. பகைவன் நண்பனாக வரும் சமயம் முகத்தால் ஏற்று அகத்தால் நட்பை விடுக.

87. பகை மாட்சி

1. *வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா மெலியார்மேல் மேக பகை.*
2. *அன்புஇலன் ஆன்ற துணைஇலன் தான்துவ்வான் என்பரியும் ஏதிலான் துப்பு?*
3. *அஞ்சும் அறியான் அமைவுஇலன் ஈகலான் தஞ்சம் எளியன் பகைக்கு.*
4. *நீங்கான் வெகுளி நிறைஇலன் எஞ்ஞான்றும் யாங்கணும் யார்க்கும் எளிது.*
5. *வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான் பண்புஇலன் பற்றார்க்கு இனிது.*
6. *காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான் பேணாமை பேணப் படும்.*
7. *கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்துஇருந்து மாணாத செய்வான் பகை.*
8. *குணன்இலனாய்க் குற்றம் பலஆயின் மாற்றார்க்கு இனன்இலன்ஆம் ஏமாப்பு உடைத்து.*
9. *செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவுஇலா அஞ்சும் பகைவர்ப் பெறின்.*
10. *கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும் ஒல்லானை ஒல்லாது ஒளி.*

87. பகை மாட்சி – எளிய உரை

1. வலியவரோடு முரணுதலை விடுக; தன்னைக் காவாத எளியவரைப் பகைக்க.
2. அன்பும் பெருந்துணையும் வலியும் இல்லாதவன் பகைவன் வலியை எங்ஙனம் தாங்குவான்?
3. துணிவும் அறிவும் ஒழுங்கும் கொடையும் இல்லாதவன் பகைவர்க்கு எளியவன்.
4. பொறுமையும் உறுதியும் சிறிதும் இல்லாதவன் என்றும் யார்க்கும் எளியவன்.
5. வழியும் பொருத்தமும் பழியும் பாராதவன் பண்பும் இல்லாதவன் பகைவர்க்கு இனியவன்.
6. புரியாத சினமும் அளவிலாத காமமும் உடையவனது நிலையைப் பயன்படுத்திக் கொள்க.
7. பக்கத்திருந்தும் புரியாது செய்பவனது எதிர்ப்பை யாது கொடுத்தும் கொள்க.
8. குணமின்றிக் குற்றம் பல கொண்ட அரசன் துணையற்றவன் பகைவர்க்கு வாய்ப்பானவன்.
9. அறிவற்ற துணைவற்ற பகைவர் கிடைப்பின் பகைப்பவர்க்கு என்றும் நலம் உண்டு.
10. கல்லாதவனை சினப்பவனை, சிறிய முயற்சியால் பெரும்பொருளீட்டாதவனை அதிகாரம் அடையா.

10th_Tamil_Unit 9.indd 234 13-02-2023 15:44:00

101. நன்றிஇல் செல்வம்

1. *வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் ஃதுஉண்ணான் செத்தான் செயக்கிடந்தது இல்.*
2. *பொருளான்ஆம் எல்லாம்என்று ஈயாது இவறும் மருளான்ஆம் மாணாப் பிறப்பு.*
3. *ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர் தோற்றம் நிலக்குப் பொறை.*
4. *எச்சம்என்று என்எண்ணும் கொல்லோ ஒருவரால் நச்சப் படாஅ தவன்?*
5. *கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடிஉண் டாயினும் இல்.*
6. *ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்குஒன்று ஈதல் இயல்பிலா தான்.*
7. *அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம் பெற்றாள் தமியள்மூத் தற்று.*
8. *நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள் நச்சு மரம்பழுத் தற்று.*
9. *அன்புஒரீஇத் தன்செற்று அறம்நோக்காது ஈட்டிய ஒண்பொருள் கொள்வார் பிறர்.*
10. *சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி வறம்கூர்ந்து அனையது உடைத்து.*

101. நன்றிஇல் செல்வம் – எளிய உரை

1. இடமெல்லாம் பெரும்பொருளை ஈட்டிவைத்து உண்ணாது செத்தவனுக்கு உரிமை யாதுமில்லை.
2. எல்லாம் பொருளால் ஆகும் என்று கொடாது இறுக்கிய பேதைக்கு இழிபிறப்பு உண்டாகும்.
3. ஈட்டிய பொருளை இறுகப் பற்றிக்கொண்டு புகழ்விட்ட ஆடவர் பூமிக்குப் பாரம்.
4. ஒருவராலும் விரும்பப் படாத கஞ்சன் தனக்குப் பின் என்று எதனைக் கருதுகிறான்?
5. பிறர்க்கு வழங்கான் தானும் உண்ணான் இவனுக்குப் பலகோடி இருந்தால் என்ன?
6. தானும் நுகரான் ஏழைக்கும் ஈயான் இவன் பெருஞ்செல்வத்துக்கு ஒரு நோய்.
7. ஏழைக்கு யாதும் ஈயாதவனது செல்வம் அழகுள்ள குமரி மணவாது மூத்தது போலும்.
8. யாராலும் விரும்பப் படாதவனது செல்வம் நடுவூரில் நஞ்சுமரம் பழுத்தது போலாம்.
9. அன்பின்றித் தன் வாய்வயிற்றைக் கட்டிச் சேர்த்த பொருளை எடுத்துக்கொள்வார் யாரோ?
10. கொடைச் செல்வர்கள் சிலநாள் வறுமைப்படுதல் மேகம் வறுமைப்படுவது போலும்.

103. குடிசெயல் வகை

1. *கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும் பெருமையின் பீடுஉடையது இல்.*
2. *ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின் நீள்வினையால் நீளும் குடி.*
3. *குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத் தான்முந் துறும்.*
4. *சூழாமல் தானே முடிவுஎய்தும் தம்குடியைத் தாழாது உஞற்று பவர்க்கு.*
5. *குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் உலகு.*
6. *நல்ஆண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த இல்ஆண்மை ஆக்கிக் கொளல்.*
7. *அமர்அகத்து வன்கண்ணர் போலத் தமர்அகத்தும் ஆற்றுவார் மேற்றே பொறை.*
8. *குடிசெய்வார்க்கு இல்லை பருவம்; மடிசெய்து மானம் கருதக் கெடும்.*
9. *இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு?*
10. *இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்துஊன்றும் நல்ஆள் இலாத குடி.*

103. குடிசெயல் வகை – எளிய உரை

1. குடும்பக்கடமை செய்யப் பின்வாங்கேன் என்ற பெருமைபோலப் பெருமையுடையது வேறில்லை.
2. நீண்ட முயற்சியும் நிறைந்த அறிவும் என்ற இரண்டின் பெருஞ்செயலால் குடி பெருகும்.
3. குடும்பத்தை உயர்த்துவேன் என்பானுக்குத் தெய்வம் வரிந்து கட்டிக்கொண்டு முன்வரும்.
4. தன்குடும்பம் கீழாகாமல் உழைக்கின்றவனுக்கு இயல்பாக எல்லாம் தானே நிறைவேறும்.
5. குற்றமின்றிக் குடும்பம் காத்து வாழ்பவனைச் சுற்றமாக உலகம் சுற்றிக் கொள்ளும்.
6. ஒருவர்க்கு நல்லவீரம் என்பது தான்பிறந்த வீட்டுப் பொறுப்பைத் தனதாக்கிக் கொள்ளுவதே.
7. போரில் பொறுப்பு பெருவீரரையே சாரும்; வீட்டுச்சுமை தாங்கவல்லார் மேலே விழும்.
8. கடமை செய்வார்க்குக் காலம் என்பது இல்லை; சோம்பி வீண்பெருமை கருதின் குடிகெடும்.
9. குடும்பத்தைக் குற்றப்படாமல் காப்பவனது உடம்பு துன்பத்தின் உறைவிடமோ?
10. முட்டுக் கொடுக்கும் ஆளில்லாத குடும்பம் துன்பம் தாக்கினால் அடியோடு விழும்.

10th_Tamil_Unit 9.indd 235 13-02-2023 15:44:00

105. நல்குரவு

1. *இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின் இன்மையே இன்னா தது.*
2. *இன்மை எனஒரு பாவி மறுமையும் இம்மையும் இன்றி வரும்.*
3. *தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக நல்குரவு என்னும் நசை.*
4. *இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த சொல்பிறக்கும் சோர்வு தரும்.*
5. *நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத் துன்பங்கள் சென்று படும்.*
6. *நற்பொருள் நன்குஉணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வு படும்.*
7. *அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும் பிறன்போல நோக்கப் படும்.*
8. *இன்றும் வருவது கொல்லோ நெருநலும் கொன்றது போலும் நிரப்பு.*
9. *நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள் யாதுஒன்றும் கண்பாடு அரிது.*
10. *துப்புரவு இல்லார் துவரத் துறவாமை உப்பிற்கும் காடிக்கும் கூற்று.*

105. நல்குரவு – எளிய உரை

1. வறுமைபோலக் கொடியது ஒன்று உண்டா? அதுபோலக் கொடுமையுடையது அதுவே.
2. வறுமை என்ற பேர்பெற்ற பாவி எப்பிறப்பிலும் தொடர்ந்து வரும்.
3. வறுமைப்பிடி வழிவந்த குடிப்புகழையும் உடல் வனப்பையும் ஒருங்கே அழிக்கும்.
4. வறுமை உயர்குடிப் பிறந்தாருக்கும் தாழ்வான சொல்லைச் சொல்லச் செய்யும்.
5. வறுமையாகிய நெருக்கடியில் பல துன்பங்கள் வந்து சேரும்.
6. நல்ல பொருளை நன்றாகச் சொன்னாலும் வறியவர் சொல் ஏறாது.
7. வாழ்வுக்குப் பொருந்தாத வறுமை வரின் பெற்ற தாயும் யாரோ எனப் பார்ப்பாள்.
8. நேற்றும் வந்த கொலை போன்ற வறுமை இன்றும் என்னை வாட்டுதற்கு வருமோ?
9. நெருப்பிற்கூட உறங்கவும் செய்யலாம்; வறுமையில் சிறிதும் கண்மூட முடியாது.
10. வறியவர் முற்றும் துறவியாகாது இருத்தல் உப்புக்கும் கஞ்சிக்கும் தண்டம்.

106. இரவு

1. *இரக்க இரத்தக்கார்க் காணின்; கரப்பின் அவர்பழி தம்பழி அன்று.*
2. *இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை துன்பம் உறாஅ வரின்.*
3. *கரப்புஇலா நெஞ்சின் கடன்அறிவார் முன்நின்று இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து.*
4. *இரத்தலும் ஈதலே போலும் கரத்தல் கனவிலும் தேற்றாதார் மாட்டு.*
5. *கரப்புஇலார் வையகத்து உண்மையான் கண்நின்று இரப்பவர் மேற்கொள் வது.*
6. *கரப்புஇடும்பைஇல்லாரைக்காணின்நிரப்புஇடும்பை எல்லாம் ஒருங்கு கெடும்.*
7. *இகழ்ந்துஎள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துஉள்ளம் உள்ளுள் உவப்பது உடைத்து.*
8. *இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம் மரப்பாவை சென்றுவந் தற்று.*
9. *ஈவார்கண் என்உண்டாம் தோற்றம் இரந்துகோள் மேவார் இலாஅக் கடை?*
10. *இரப்பான் வெகுளாமை வேண்டும்; நிரப்புஇடும்பை தானேயும் சாலும் கரி.*

106. இரவு – எளிய உரை

1. கேட்கத் தக்கவரிடம் உதவி கேட்க; ஒளித்தால் அவர்க்குப் பழி, உனக்கு இல்லை.
2. கேட்ட பொருள்கள் கடினமின்றிக் கிடைப்பின் உதவி கேட்பதும் மகிழ்ச்சியைத் தரும்.
3. ஒளிக்காத மனமும் கடமையுணர்ச்சியும் உடையவர் முன்நின்று இரத்தலும் ஓர் அழகு.
4. ஒளிப்பதைக் கனவிலும் அறியாதாரிடம் சென்று கேட்பது கொடுப்பதை ஒக்கும்.
5. நேர்நின்று ஒருவர் இரக்க முற்படுவது ஒளிக்காதவர் உலகத்து இருப்பதால் அன்றோ?
6. ஒளிக்கும் துயரம் இல்லாரைக் கண்டால் வறுமைத் துயரம் எல்லாம் போய்விடும்.
7. இகழ்ந்து பேசாது கொடுப்பாரைக் கண்டால் உள்ளம் உள்ளுக்குள்ளே மகிழும்.
8. உதவிகேட்பார் இல்லாவிடின் இப்பேருலகம் மரப்பாவைபோல உணர்ச்சியற்று நடக்கும்.
9. இரந்து கொள்ள விரும்புவோர் இல்லாதபோது கொடுப்பவர்க்குப் பெருமிதம் என்ன உண்டு?
10. இரப்பவனுக்குக் கோபம் வருதல் கூடாது; தான் வறுமைப்படுவதே அதற்குச் சான்று.

10th_Tamil_Unit 9.indd 236 13-02-2023 15:44:00

108. கயமை

1. *மக்களே போல்வர் கயவர்; அவர்அன்ன ஒப்பார் யாம்கண்டது இல்.*
2. *நன்றுஅறி வாரின் கயவர் திருஉடையர்; நெஞ்சத்து அவலம் இலர்.*
3. *தேவர் அனையர் கயவர் அவரும்தாம் மேவன செய்தொழுக லான்.*
4. *அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின் மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.*
5. *அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம் அவாஉண்டேல் உண்டாம் சிறிது.*
6. *அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட மறைபிறர்க்கு உய்த்துஉரைக்க லான்.*
7. *ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுஉடைக்கும் கூன்கையர் அல்லா தவர்க்கு.*
8. *சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்.*
9. *உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண வற்றாகும் கீழ்.*
10. *எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால் விற்றற்கு உரியர் விரைந்து.*

108. கயமை – எளிய உரை

1. கயவர் மக்கள் போன்றே இருப்பர் அன்ன வடிவொற்றுமையை யாம் கண்டதில்லை.
2. மெய்யறிஞர் போலக் கயவரும் மகிழ்வுடையர்; ஏன்? மனத்தில் எதற்கும் கவலைப் படார்.
3. கயவர்கள் அரசர் போன்றவர்கள்; ஏன்? தாம் விரும்பியபடியே நடப்பார்கள்.
4. கயவர் தம்மினும் இழிந்தவரைக் கண்டால் அவரால் போற்றப்பட்டு இறுமாப்பர்.
5. அச்சமே கயவர்களின் இயல்பு; புகழாசை இருந்தால் சிறிது இருக்கலாம்.
6. கயவர் அறிவிக்கும் பறைபோல்வர்; ஏன்? மறைச்செய்தியைப் பிறரிடம் போய்க்கூறுவர்.
7. பல்லை உடைக்கும் கொடுங்கையர்க்கு அன்றிக் கயவர்கள் எச்சிற்கையும் உதறமாட்டார்கள்.
8. சொன்ன அளவிலே பயன்செய்வர் மேலோர்; கரும்புபோல் நசுக்கின் பயன்செய்வர் கீழோர்.
9. உண்டு உடுத்து நடப்பதைக் கண்டாலே அவர்கள்மேல் குற்றஞ் சுமத்துவான் கயவன்.
10. எதற்கு தகுதி கயவர்? ஏதும் கிடைப்பின் விரைந்து தன் மானத்தை விற்கத் தகுதி.

வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும்; அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் புதிய பாடத்திட்டத்தில் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

- திருக்குறளை நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் பொருளுடன் கூறலாம்.
- நாள்தோறும் ஒரு திருக்குறளைப் பொருளுடன் பள்ளியின் தகவல்பலகையில் காட்சிப்படுத்தலாம்.
- திருக்குறள் ஒப்பித்தல் போட்டியை வகுப்புவாரியாக நடத்தலாம்.
- திருக்குறள் கலைவிழாக்கள், ஓவியக் கண்காட்சிகள், நாடக விழாக்கள், குறளின் பொருளை வாழ்வியல் அனுபவங்களோடு பொருத்துதல், குறளை இசையமைத்துப் பாடுதல் போன்ற நிகழ்வுகளைப் பள்ளிகளில் ஒருங்கிணைக்கலாம்.
- இலக்கிய மன்றக் கூட்டங்களில் குறட்பாக்கள் தொடர்பான கதைகள் சொல்லலாம்; நாடகங்களை நடத்தலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து " வினாடி வினா" நடத்தலாம்.
- பள்ளி சார்ந்த அழைப்பிதழ்கள், பரிசுச் சான்றிதழ்களில் திருக்குறளை அச்சிட்டு வழங்கலாம்.
- உலகப் பொதுமறையாம் திருக்குறளில் இடம்பெற்றிருக்கும் நன்னெறிக் கருத்துகளின் அடிப்படையில் நீதிக்கதைகள், இசைப்பாடல்கள், சித்திரக் கதைகள், அசைவூட்டப் படங்கள் வாயிலாகத் திருக்குறள் வளங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கலாம்.

குறிப்பு: மாணவர்கள் எளிதில் படித்துப் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சொற்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன; அலகிடுவதற்கு அன்று.

10th_Tamil_Unit 9.indd 237 13-02-2023 15:44:00

பத்தாம் வகுப்பு – தமிழ்

ஆக்கம்

பாட வல்லுநர்கள்

முனைவர் **மு. சுதந்திரமுத்து,**
இணைப்பேராசிரியர் (ப. நி.), மாநிலக் கல்லூரி, சென்னை.

முனைவர் **நா. அருள்முருகன்,**
இணை இயக்குநர், ஒருங்கிணைந்த கல்வி, சென்னை

முனைவர் **ப. டேவிட் பிரபாகர்,** இணைப்பேராசிரியர்,
சென்னை கிறித்தவக் கல்லூரி, சென்னை.

முனைவர் **க. பலராமன்,** உதவிப்பேராசிரியர்,
நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரி, சென்னை

முனைவர் **கு. சிதம்பரம்,** உதவிப்பேராசிரியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

முனைவர் **இரா. வெங்கடேசன்,** இணைப்பேராசிரியர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

மேலாய்வாளர்கள்

முனைவர் **சிற்பி பாலசுப்பிரமணியம்,**
தமிழியல் துறைத்தலைவர் (ப. நி.), பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

முனைவர் **பொன். குமார்,**
இணை இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

முனைவர் **இராம. பாண்டுரங்கன்,**
இணை இயக்குநர் (ப. நி.), மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

முனைவர் **சா. பாலுசாமி,** பேராசிரியர் (ப. நி.),
சென்னை கிறித்தவக் கல்லூரி, சென்னை.

திரு. **மா. இராமகிருட்டிணன்,**
முதன்மைக்கல்வி அலுவலர், திருச்சி.

திரு. **து. கணேசமூர்த்தி,**
முதன்மைக் கல்வி அலுவலர், சேலம்.

கலை மற்றும் வடிவமைப்புக் குழு

ஓவியம் மற்றும் ஒளிப்படம்

திரு. **க. த. காந்திராஜன்**, ஆய்வு வளமையர்,
தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை.

திரு. **கா. புகழேந்தி**, பட்டதாரி ஆசிரியர்,
அரசுமேல்நிலைப் பள்ளி, கரம்பக்குடி, புதுக்கோட்டை.

திரு. **ஏ. ஜேம்ஸ்பாண்ட், ஓவிய ஆசிரியர்,**
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,அறந்தாங்கி, புதுக்கோட்டை.

திரு. **சி. தெய்வேந்திரன்,** ஓவிய ஆசிரியர்
அரசுஉயர் நிலைப்பள்ளி, மாங்குளம், மதுரை.

திரு. **கா. தனஸ் தீபக் ராஜன்**, ஓவியர்.

திரு. **கா. நளன் நான்சி ராஜன்**, ஓவியர்.

நன்றி

திரு. **கே. மாதவன்** (ஓவியர்)

திரு. **இளையராஜா**(ஓவியர்)

பக்க வடிவமைப்பு

காமாட்சி பாலன் ஆறுமுகம்

சி. பிரசாந்த், அருண் காமராஜ் பழனிசாமி

R. கோபிநாத்

தரக்கட்டுப்பாடு

கி. ஜெரால்டு வில்சன், ராஜேஷ் தங்கப்பன்

ஸ்டீபன் சந்தியாகு, P. பிரசாந்த்

அடிசன், சந்தோஷ்

அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம், சென்னை.

தட்டச்சர்

திரு. எஸ். தளபதி சண்முகம், சென்னை.

ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

முனைவர் **பூந்துறையான் இரத்தினமூர்த்தி,**
முதுநிலை பட்டதாரி ஆசிரியர் (ப. நி.), ஈரோடு.

முனைவர் **எம். செந்தில்குமார்,**
இணைப் பேராசிரியர்,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.

பாடநூல் உருவாக்கக் குழு

திருமதி. **ப. சுமதி,** விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

திருமதி. **பொ. சண்முகவடிவு,** விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திண்டுக்கல்.

திரு. **நா. ஹரிகுமார்,** பட்டதாரி ஆசிரியர்,
இராஜாமுத்தையா மேல்நிலைப்பள்ளி,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை.

திரு. **லூ. இக்னேஷியஸ் சேசுராஜா,** பட்டதாரி ஆசிரியர்,
அன்னை வேளாங்கண்ணி உயர்நிலைப்பள்ளி, வியாசர்பாடி, சென்னை.

திரு. **ச. பெல்லார்மின்,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, சுந்தர சோழவரம், திருவள்ளூர்.

திரு. **ந. கண்ணன்,** பட்டதாரி ஆசிரியர்,
எஸ். எம். பி. எம் உயர்நிலைப் பள்ளி, கம்பம் , தேனி.

திரு. **அ. இரவிச்சந்திரன்,** முதுநிலை ஆசிரியர்,
அரசு மகளிர் மேனிலைப்பள்ளி, மணப்பாறை, திருச்சி.

திரு. **மு. பாலகிருஷ்ணன்,** பட்டதாரி ஆசிரியர்,
எஸ். எஸ். என். அரசு மேல்நிலைப் பள்ளி, கொம்மடிக்கோட்டை, தூத்துக்குடி .

முனைவர் **கோ. நாராயணமூர்த்தி,**
பட்டதாரி ஆசிரியர், பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல்.

திரு. **இரா. கார்த்திக்,** பட்டதாரி ஆசிரியர்,
சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை, சென்னை.

திரு. **ந. பாலமுருகன்,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, பெத்தநாயக்கனூர், கோவை.

திருமதி. **ஜோ. பிரேமா கிறிஸ்டி,** பட்டதாரி ஆசிரியர்,
டி.இ.எல்.சி. மேக்தலின் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, புரசைவாக்கம், சென்னை.

ஒருங்கிணைப்பாளர்

முனைவர் **க. சு. சங்கீதா,** உதவிப் பேராசிரியர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

உதவி ஒருங்கிணைப்பாளர்

திருமதி. **டி. தே. சர்மிளா,** பட்டதாரி ஆசிரியர்,

விரைவுக் குறியீடு மேலாண்மைக்குழு

இரா. ஜெகநாதன், இ.நி.ஆ,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, கணேசபுரம்,
போளூர் , திருவண்ணாமலை மாவட்டம். .

சூ.ஆல்பர்ட் வளவன் பாபு, ப.ஆ ,
அ.உ.நி.பள்ளி, பெருமாள் கோவில் பரமக்குடி, இராமநாதபுரம்.

ம.முருகேசன், ப.ஆ,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, பெத்தவேளாண்கோட்டகம்,
முத்துப்பேட்டை, திருவாரூர்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

10th_Tamil_Unit 9.indd 238 13-02-2023 15:44:00